# அடிகள் அகற்றிய அல்லவை ஏழு

அறிஞர்

அ. சங்கரவள்ளிநாயகம்

அடிகள் அகற்றிய அல்லவை ஏழு

அடிகள் அகற்றிய அல்லவை ஏழு

அறிஞர் அ. சங்கரவள்ளி நாயகம்

# அடிகள் அகற்றிய அல்லவை ஏழு

அறிஞர் அ.சங்கரவள்ளி நாயகம்

அகரம்
மனை எண்.1, நிர்மலா நகர்
தஞ்சாவூர் - 613 007

அடிகள் அகற்றிய அல்லவை ஏழு / © அறிஞர் அ.சங்கரவள்ளி நாயகம் / முதற் பதிப்பு: டிசம்பர் 2007 / வெளியீடு : அகரம், மனைஎண்.1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613 007 / அச்சாக்கம் : மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி / விலை : ரூ.100/-

முனைவர் இரா.கா.மாணிக்கம்
முதல்வர் (பணிநிறைவு)
காமதேனு கலை அறிவியல் கல்லூரி
சத்தியமங்கலம்.
(தமிழ்த்துறைத் தலைவர் (பணிநிறைவு)
கோபி கலை அறிவியல் கல்லூரி)

13, சீனிவாச வீதி,
கோபி - 638 452.

## "யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு"

அறிஞர். பேரா.முனைவர் அ.சங்கரவள்ளிநாயகம் அவர்களின் இந்த நூலுக்குக் கருத்துரை வழங்குவது நான் பெற்ற பேறாகும். 1966 முதல் 1970 வரை கோயிற்பட்டி கோ.வெங்கடசாமி நாயுடு கல்லூரித் தமிழ்த்துறையில் அவருடைய இளவலாகப் பணிபுரிந்த காலம் எனது வாழ்நாளில் மறக்க முடியாத பகுதியாகும். அறிவார்ந்த ஆற்றல், செறிவார்ந்த சொல்திறம் ஆகியன இவரது சொத்துக்கள். பேச்சில் ஒரு வேகத்துடன் கூடிய விவேகம் - கருத்துரைகளில் வரலாறு, தமிழ் இலக்கியம் குறிப்பாகத் தமிழ்மறை இவற்றோடு ஆங்கில அறிவு ஆகியவற்றின் கதம்பமாலை இவரது தனித்திறன்கள்.

நல்லனவற்றின் நன்மைகளை அனுபவித்தவுடன், மறப்பது மனிதகுல வழக்கமாகும். இந்தப் பொது நிலைக்கு ஏற்ப நம் நாட்டுத் தந்தையாகிய மகாத்மாவும் மறக்கப்பட்டுக்கொண்டே வரப்படுகின்றார். ஆனால் மனித சமுதாயத்தின் இன்றைய இழிநிலைக்கும், இருட்டறைக்கும் விடிவெள்ளி - வழிகாட்டி அவரது கருத்துக்கள் என்பதையும் நாம் அவ்வப்போது சொல்லிக் கொள்கிறோம். இந்த நிலையைச் சுட்டுவதோடு மனிதகுலத்திற்கு மகாத்மா வாழ்வு மருந்தாக அமைவதையும் இந்த நூல் தெளிவாகக் காட்டுகிறது.

'அறம்' என்பதைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் பொருள், கீழான இச்சைகளுக்குத் தீனி என்பதையே கருவாகக் கொண்ட வாழ்வுமுறைப் படைப்புக்களே இன்றைய எழுத்துலகில் பெரும்பான்மைப் பக்கங்களாக உள்ளன. அறிவியல் கண்டு

பிடிப்பான கருத்துப்பரப்புச் சாதனங்கள் மேற்கண்டவற்றையே அரிதாரம் பூசி ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் 24 மணி நேரமும் அரங்கேற்றுகின்றன. இச்சூழலில் - சமுதாயம் பற்றிக் கவலைப்படாத எருக்கிலைக் குவியல்களுக்கு நடுவில் மலர்ந்து மணம் வீசும் பவளமல்லிகைக் கட்டுரைகள் இவை.

ஒரு நாட்டில் எந்தத் துறையும் கீழ்ப்பாய்ச்சலைக் கொண்டு விடலாம். ஆனால் கல்வித்துறை, காவல்துறை, நீதித்துறை இம்மூன்றோடு சமயத்துறையும் ஆணிவேராகவே நின்று சமுதாய மரத்தைத் தழைக்கச் செய்யவேண்டும். ஆனால் நமது அவலம் கீழான சாக்கடையாகப் போய்விட்ட அரசியலோடு கற்பிழக்கக்கூடாத மேற்சொன்னவையும் சோரம் போய் மனித வாழ்வை நரகக் குளம்பில் தள்ளிவிட்டுள்ளன. இதை எழுதுவதற்கு இன்றைய எழுத்தாளர்களுக்கு நேரமும் இல்லை; சமுதாயப் பார்வையும் இல்லை. மேலும் இதை எழுதினால் தமக்கு இடையூறுவரும் என்ற அச்சம் வேறு. இப்படிப்பட்ட முதுகெலும்பற்ற - நீர்த்துப்போன கூட்டத்திற்கிடையில் நக்கீரத் தைரியத்தோடு இவரால் சமூக அவலங்கள் தோலுரித்துக் காட்டப்படுகின்றன.

அரசியல் வா(வியா)திகள், வெள்ளைக்கார வணிகர்கள், இவர்களோடு சின்ன, பெரிய திரைகளின் கோர, அசிங்கமான முகங்கள் தோலுரிக்கப்படும்போதே சான்றுகளும் தரப்பட்டு அவை எவ்வளவு உண்மை என்பதையும் நிலைநிறுத்தும் வண்ணம் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகள் எளிய ஆனால் அழகான காம்பீரியச் சொற்களின் செம்மையான அடுக்குமாடிக் கட்டிடங்கள். சான்றாகச் சில: அறிவியல் கண்டுபிடிப்புப் பற்றி அதற்கு (அறிவியல்) மூளை மட்டுமே உண்டு; இதயம் இல்லை என்ற சொற்செதுக்கு,

'இவை சமுதாயப் பாவங்கள் அல்ல; சமுதாயப் பாதகங்கள்'

என்ற குத்தீட்டி வீச்சு என்றவற்றைச் சுட்டுவதோடு இவைபோன்ற எண்ணற்றவற்றை நம் இதயம் ஏற்பதை - ஏற்கப்படுவதைக் காணமுடியும். படைப்பு, கருத்துவளம் என்ற இரண்டும்

கட்டுரையின் இதயங்கள். இந்த இரண்டும் இவர்தம் பன்முகப் பல்துறை அறிவுசார்ந்த தெளிவான கண்ணோட்டத்தோடு சமுதாயச் சிந்தனையின் அடித்தளத்தில் எழுதப்படுகின்றன. எனவே, இவர் உலகியல் சீரழிவுகளைப் பற்றிக் கவலைப்பட்டு எழுதும் ஒரு மானுட உணர்வு எழுத்தாளர் என்பதை அவர் நிலைநாட்டுவதை நாம் அப்படியே ஏற்று மகிழமுடிகிறது.

இக்கட்டுரைகள் காந்தியச் சிந்தனையாளர்களுக்கு மகிழ்வைத் தரும்; இலக்கியவாதிகளுக்கு எப்படி எழுதுவது என்ற நெறி முறைகளைச் சுட்டும். சமுதாய எதிராளிகளுக்குச் சாட்டையடியாய் - சம்மட்டி அடியாய் விழும். நல்லவர்களுக்கு உதட்டில் புன்முறுவல் பூக்கச் செய்யும். மகிழ்வுதானே வாழ்க்கை; அந்த மகிழ்வை இந்நூல் பாரி வள்ளலாய் வாரி வழங்குகிறது.

முனைவர் இரா.கா.மாணிக்கம்

முனைவர் மா.பா.குருசாமி
முன்னாள் முதல்வர், ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்
இயக்குநர், குமரப்பா ஆராய்ச்சி நிறுவனம், திண்டுக்கல்.

# அணிந்துரை

தமிழ் மூதறிஞர் ஐயா திருமிகு அ.சங்கரவள்ளி நாயகம் வாழ்நாளெல்லாம் அயராது குறள் நெறி பரப்பிய செம்மல்; நல்லாசிரியராகத் திகழ்ந்த தமிழ் இலக்கியச் சிந்தனையாளர். துடித்தெழுந்து தமிழுக்குத் தொண்டு செய்தலை உயிர் மூச்சாகக் கொண்டிருக்கின்ற அப்பெருமகனார் தமிழன்னைக்கு அணிவிக்கின்ற மற்றுமொரு விலைமதிப்பற்ற மாணிக்க மணிமகுடம் இந்தப் புதிய சமுதாய இயல் கூறும், "அண்ணல் அகற்றிய அல்லவை ஏழு", என்னும் பொன்னான படைப்பு.

தமிழ் இலக்கியத்தையும், வாழ்வியல் நூல்களையும் ஆழ்ந்து, அகன்று கற்றுத் தெளிந்த பேராசிரியரின் நெஞ்சைக் காந்தியம் கவர்ந்து ஈர்த்ததின் விளைவே இந்நூல். இது ஒரு புதுமையான கொடை. வழிதடுமாறி, நிலை குலைந்திருக்கின்ற இன்றைய சமுதாயத்திற்கு வாழ்வாங்கு வாழத் தெளிவான வழிமுறையைக் காட்டுகின்ற அரிய பணியை முறையாக ஆசிரியர் இந்நூலின் மூலம் செய்கின்றார்.

அரிதான மானுட வாழ்விற்குப் பண்பும் பயனுமாக அன்பையும், அறத்தையும் கூறி வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் நமக்குக் கிடைத்த வாழ்க்கை இலக்கணம். அவருக்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்துப் பிறந்து வாழ்ந்த அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கை திருக்குறளுக்கு ஒரு தெளிவுரை; இறவாத இலக்கியம். அண்ணல் கூறிய தத்துவத்தின் மூலக் கருத்துக்கள் வள்ளுவத்தில் பரவலாகப் பொதிந்து கிடக்கின்றன.

வள்ளுவத்தையும் காந்தியத்தையும் நன்கறிந்த அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் காந்தியத்தின் சாற்றைப் பிழிந்து வள்ளுவத்தேன் கலந்து வழங்குகின்ற முறை தனித்துவமானது. அவர் எந்தக் கட்டுக் கோப்பிற்குள்ளும் தன்னை அடக்கிக் கொள்ளாமல், விட்டு விடுதலையாகி விண்ணில் பறக்கும் சிட்டுக்குருவி போல, பரந்து விரிந்த சமுதாய நிலைக்களனில் நின்று, சமுதாயம் மேம்படக் கருத்துக்களைக் கூறுகின்றார். அண்ணல் கூறிய "ஏழு சமுதாயப் பாவங்களை" மையமாகக் கொண்டு இந்நூலை ஆசிரியர் படைத்திருக்கின்றார்.

இற்றைச் சமுதாய அமைப்பினை, அதன் நடைமுறைச் செயல்பாட்டில் உள்ளடங்கிக் கிடக்கும் சீர்கேடுகளை முதலில் விரிவாக விளக்குகின்றார். இன்றுள்ள நிலைமையினை நுட்பமாகப் பார்த்து, நல்ல நஞ்சை நிலத்தில் நெல்லோடு மண்டிக் கிடக்கும் களைகளைப் போல, படிந்திருக்கின்ற சீர்கேடுகளை ஒவ்வொன்றாகப் புட்டு வைக்கின்றார். நடைமுறையில் நேரில் கண்டாலும் நம்மில் பலர் நலங்கெடுக்கும் நிகழ்வுகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. எண்ணிப் பார்ப்பவர்களும் அச்சத்தினால் அவற்றை வெளியில் கூறுவதில்லை. ஆனால் இங்குப் பேராசிரியர் அச்சமின்றி அவற்றை எடுத்துரைக்கின்றார்.

சமுதாயச் சீர்கேடுகளின் இயல்பையும், விளைவையும் உணர்த்தும் வகையில் மரபுவழி இலக்கியச் சான்றுகளோடு, தற்காலக் கவிஞர்களான சிற்பி, மேத்தா ஆகியோரின் முத்தான கவிதை வரிகளையும் மேற்கோள்களாகத் தருவது போற்றத்தக்கது. ஆசிரியர் எடுத்துத் தருகின்ற கவிதை வைர வரிகள் எரிதழல் மூச்சுக்கள். இன்றைய நிகழ்வுகளைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் புரட்சி மனக்கவிஞர்கள் படைத்தவை. அவற்றைச் சரியாக, பொருத்தமாகக் கையாள்கின்ற பொழுது ஆசிரியர் கூறும் கருத்துக்கள் புதுப்பொலிவும், வலுவும் பெற்றுத் திகழ்கின்றன.

இன்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு, காந்தியடிகள் அன்றைய சமுதாயத்தில் தாம் கண்ட சீர்கேடுகளைப் 'பாவங்கள்' என்று குறிப்பிட்டார். அதற்கு முன்பு வரை "பாவம்" என்ற சொல்லைச் சமயச் சான்றோர்கள் தனிமனிதர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தினர். சமய நெறிசார்ந்த பாவம் என்ற

சொல்லைச் சமுதாய நெறி சார்ந்த சொல்லாக்கியது காந்தியடிகளின் தனித் தன்மையைக் காட்டுகின்றது.

காந்தியடிகள் கூறிய ஏழு சமுதாயப் பாவங்களும் இன்றும் மறையாமல் புதிய வடிவோடும், இழி தன்மைகளோடும் இருப்பதனை அறிஞர் சங்கரவள்ளிநாயகம் காண்பதனால், அவற்றை மக்கள் உணரச் செய்யவும் காலப்போக்கில் அகற்றவும் இந்தத் தள்ளாத வயதிலும், உடல்நோவிலும், துள்ளுகின்ற மனத்தோடு இந்த நூலைப் படைத்திருக்கின்றார். ஆசிரியர் "அடிகள் அகற்றச் சொன்ன அல்லவை ஏழையும் சமுதாயப் பாதகங்கள்" என்று குறிப்பிடுகின்றார். அவர், "இவை சமுதாயப் பாவங்கள் அல்ல; சமுதாயப் பாதகங்கள் ஆகும். சில வேளைகளில் அறியாமையால் நிகழ்கின்ற தவறு பாவம் ஆகலாம்: அது பாதகம் ஆகாது. ஆனால் அறிந்தே செய்யும் தவறுகள் பாதகங்கள் ஆகும். ஏனென்றால் இவ் அல்லவை ஏழும் அறிந்தே செய்யப்படும் தவறுகளின் விளைவாகும்", என்று கூறுவதிலிருந்து ஆசிரியர் இவைபற்றி எவ்வளவு நுட்பமாக எண்ணிப் பார்த்திருக்கின்றார் என்பதை அறியலாம்.

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் அவர்கள் காந்தியடிகளை 'அறச்சுடர் அண்ணலாகக் காண்கின்றார். அவர் அண்ணலின் ஒட்டு மொத்த வாழ்க்கையை மதிப்பீடு செய்து, "காந்தியடிகள் ஒரு பெரும் சமுதாயப் புரட்சியாளர். மிக மென்மையாகத் தொடங்கிய அவர் வாழ்க்கை கண்மூடிப் பழக்கங்களை, சமுதாயச் சீர்கேடுகளை, பொருளாதாரச் சிறுமைகளை, அரசியல் அடிமைத்தனங்களை, சமய வேறுபாடுகளை மண்மூடச் செய்கின்ற புரட்சி வாழ்க்கையாக மாறியது. காந்தியடிகள் செய்த புரட்சியே மனித வாழ்க்கையில் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய முழுமையான புரட்சியாகும். மக்களின் நலனுடன் தொடர்புடைய ஒவ்வொரு துறையிலும் மாற்றங்களைக் கொண்டு வந்து எல்லோரும் இன்புற்றிருக்கின்ற சமுதாயத்தை அமைக்க விரும்பினார்", என்று கூறுவது எல்லோரும் மனம் கொள்ளத்தக்க கருத்து.

அண்ணல் பட்டியலிட்ட ஏழு சமுதாயப் பாவங்களையும் ஒவ்வொன்றாக ஆசிரியர் ஆராயும் பாங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு பாவமும் இப்பொழுது பல்கிப் பெருகி, பல்

முகங்களோடு, எளிதாக வெட்டி வீழ்த்த முடியாத அசுரர்களாகக் காட்சி தருவதைத் தக்க ஆதாரங்களோடு விரிவாக விளக்குகின்றார். அவர் மதிப்பீட்டில் தரம் தாழ்ந்தவற்றைத் துணிச்சலோடு சாடுகின்றார். அண்ணலின் கண்ணோக்கில் இன்றையச் சமுதாய நடைமுறைகளை ஆய்ந்து கூறுவது இந்நூலைப் படிப்பவர்களிடம் உறுதியாக விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

அண்ணல் கூறிய முதல் சமுதாயப் பாவமான கொள்கையற்ற அரசியல் "இன்று எப்படி கொடிகட்டிப் பறக்கின்றதென்பதை நடுநிலை நின்று ஆசிரியர் விளக்குகின்றார். தொண்டு செய்களமாக இருக்க வேண்டிய அரசியல் தன்னலம் கொண்டவர்களால் 'கொள்கை நழுவிய அரசியலாகி' எப்படிக் 'கொள்ளையர்களின் கூடாரமாகி' விட்டதென்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். "இன்றைய அரசியல் உலகம் பொய்யர்களையும், புரட்டர்களையும் கொண்டதாய் உள்ளது. கட்சி மாறிகள் இடம் பெற்றுள்ளனர்", என்று 'கொள்கை மாறிகளைக்' கொண்ட அரசியலை நம் கண்முன் காட்டுகின்றார். இன்றைய அரசியலாளர்கள் பின்பற்றுகின்ற வழிமுறைகளாக, "1) அகப்பட்டதைச் சுருட்டு; 2) ஆதாயம் என்றால் உதவி செய்; 3) ஊழல் செய்; 4) ஈவு இரக்கம் துறந்துவிடு; 5) உண்மையை ஒழித்து விடு; 6) ஊர்ப்பணத்தில் உலா வா; 7) எவ்வளவு கிடைக்கும் எனக் கணக்குப் பார்; 8) ஏழையிடமும் கை நீட்டு", என்று தொகுத்துக் கூறுவது அருமை.

அரசியல் என்பது மிகுதியாகப் பணம் தேடும் தொழிலாக மாறியிருப்பதை மாற்றி, மக்கள் தொண்டு செய்யும் வழிமுறையாக்க அண்ணல் காந்தி காட்டிய பரவல்முறை அரசியலே சிறந்ததென்பதைப் பல்வகைச் சான்றுகளோடு நிலை நிறுத்துகின்றார். "கிராமங்களுக்குத் தன்னாட்சி வழங்க வேண்டும். கிராமங்களில் தன்னிறைவிற்குத் தட்டுப்பாடு இருக்கக்கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் கிராமச் சட்டமன்றமாகவும், அறமன்றமாகவும் செயல்படவேண்டும் என்ற காந்தியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்", என்று ஆசிரியர் தம் கருத்தினை வலியுறுத்துகின்றார்.

இரண்டாவது சமுதாயப் பாவமான, 'உழைப்பற்ற செல்வத்தை' விளக்க, முதலில் அறவழியில் வரும் செல்வத்தின் சிறப்பினை வள்ளுவத்தையும் மற்றவற்றையும் ஆதாரமாகக்கொண்டு

விளக்குகின்றார். "கேடில் விழுச்செல்வத்தை" புரிந்துகொண்டால் "கேட்டின் வழிச் செல்வத்தை" அறியலாமல்லவா?

அல்லவையாக உழைப்பின்றியும், உழைப்புக்கு மேலும் இன்றைய சமுதாயத்தில் கிடைக்கின்ற செல்வத்தின் வழிமுறைகளை வகைப்படுத்தியும், விளக்கியும் கூறுகின்றார். இன்று நமது சமுதாயத்தில் காண்கின்ற வறுமை, ஏற்றத்தாழ்வுக்கான காரணியங்களில் முதன்மையானது உழைப்பற்ற செல்வம் என்பதை விளக்கி, அதனை விலக்கக் கோருகின்றார்.

அந்தப் பகுதியில் 'சமத்துவப் பொருளாதார முறையினை விளக்குகின்றார். 1. எளிய வாழ்க்கை; 2. உடைமையின்மை; 3. உடல் உழைப்பு; 4. தொண்டுப் பொருளாதாரம்; 5. சுதேசி ஆகிய அதன் அகக் கூறுகளை மனங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைக் கின்றார். அவை படிக்கவும், பின்பற்றவும் வேண்டியவை.

மூன்றாவது சமுதாயப் பாவமான அறமற்ற வாணிபத்தை முதலில் ஓவியமாகத் தீட்டிக் காட்டுகின்றார். "எப்படியும் வாழலாம்", என்கின்ற வணிகர்களின் போக்கால் வையகம் பயனுறத் தோன்றிய வாணிபம் ஒரு பாவ நடவடிக்கையாக மாறியிருக்கும் கொடுமையை உள்ளார்ந்த வேதனையோடு நூலாசிரியர் விளக்குகின்றார்.

அறமற்ற வாணிப நடவடிக்கைகளைத் துல்லியமாகச் சுட்டிக் காட்டுவதோடு கூட, வாணிப விளம்பரத்தின் மூலம் மக்களைக் கவர்வதையும், அதன் விளைவுகளையும், வாணிப நடைமுறை களையும், அவற்றின் சமுதாயப் பாதிப்பினையும் பல சான்றுகளோடு எடுத்துரைக்கின்றார். வாணிபக் கலப்படத்தைப் பற்றி ஓர் ஆய்வே நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எதில் எதனைக் கலப்படம் செய்கின்றனர் என்பதையும், விளைவுகளையும் ஒரு பட்டியலாக வடிவமைத்திருப்பது ஆசிரியரின் ஆய்வுக்கு ஓர் அடையாளம். மொத்தம் ஒன்பது வகைகளில் அறமற்ற வாணிபம் நடைபெறுவதை ஆசிரியர் இனங்கண்டு கூறுவது பாராட்டுக்குரியது.

அறமற்ற வாணிபத்தைப் போக்க மக்கள் நுகர்வோர் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

அண்ணல் நான்காவதாகக் குறிப்பிட்ட சமுதாயப் பாவம் "பண்பாடற்ற கல்வி"யாகும். அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் வாழ்நாளெல்லாம் கல்வித் தொண்டாற்றிய பேராசிரியர் என்பதால் இன்றையக் கல்வியின் இயல்பை, தரத்தை, செயல்பாட்டை, பயன்பாட்டை, மாணவர்கள், ஆசிரியர்கள் மனப்போக்கை, நோக்கை நன்கு அறிந்தவர். ஆதலால் தமது நூலறிவின் மூலமாகவும், பட்டறிவின் வாயிலாகவும் உணர்ந்த, அறிந்த கல்வியின் நிலை பற்றி மிகவும் துல்லியமாகக் கூறுகின்றார்.

பேராசிரியர், "இன்றையக் காலக்கல்வி நிறுவனங்கள் கல்விக் கூடங்களாக இல்லாமல் வணிகக் கூடங்களாக மாறிவருகின்றன. வழக்கறிஞர் தவறு செய்தால் ஒரு முழக்கயிற்றுக்குத்தான் இழப்பு. ஒரு மருத்துவர் தவறு செய்தால் ஆறடி நிலத்திற்குத்தான் இழப்பு. ஆனால் ஒரு ஆசிரியரின் தவறு ஒரு தலைமுறையையே இழக்கச் செய்யும்", என்று கூறுவது ஆசிரியர்கள் எண்ணிப்பார்க்கத் தக்க கருத்து.

மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக, பண்பாடுடைய வர்களாக, சமுதாய உணர்வாளர்களாக மிளிர ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமுதாயம் ஆகிய முப்பெரும் காரணிகளும் இணைந்து செயல்பட வேண்டுமெனக் கூறுகின்றனர். காந்தியச் சிந்தனையைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடமாகக் கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமெனக் கருதுகின்றார்.

காந்தியடிகளின் கருத்துப்படி, ஐந்தாவது சமுதாயப் பாவம் மனச்சான்றற்ற மகிழ்ச்சி. இது கூட்டு வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய கருத்து. நம்மைச் சுற்றியிருப்பவர்கள், உண்ண உணவின்றி, இருக்க இடமின்றித் துன்பமும் தொல்லையும் படுவதைக் கண்டு உள்ளம் கலங்காமல் தான் மட்டும் இன்பம்பெற முயல்வதும் அடைவதும் இழிசெயலாகும். இதனை நூலாசிரியப் பெருந்தகை விளக்குவதோடுகூட, "எல்லோரும் இன்புற்றிருக்க", வழிமுறையும் கூறுகின்றார். மகாகவியின், "பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்", என்ற பாடலின் மூலம் மேலான உணர்வுகளை இந்நூலைப் படிப்போர் பெற்றிடத் துணை செய்கின்றார்.

வாழும் வழிமுறையாக அருள்ஞானி டால்ஸ்டாய் கூறிய ஐந்து கருத்துக்களைத் தொகுத்துத் தந்திருப்பது சிறப்புடையதாகும்.

ஆறாவது பாவமான, "மனித நேயமற்ற அறிவியல்" கருத்தினை உணர்த்தச் சாதனையான அறிவியல் கண்டுபிடிப்புக்களையும், அவற்றின் வியத்தகு விளைவுகளையும் சுட்டிக்காட்டுகின்றார். மண்ணில் நல்ல வண்ணம் வாழத்துணை நிற்கவேண்டிய அறிவியல் மனித நேயமற்றுச் சிலர் வாழப் பலர்வாடக் காரணமாகிவிட்டதை மனக்கசப்போடு எடுத்துரைக்கின்றார். இன்று அறிவியல் ஓர் உண்மையாக, ஒரு சாத்தியமாக, ஒரு நம்பிக்கையாக 'ஒரு சிக்கலாக' - நான்கு தன்மைகள் கொண்டவையாக இருப்பதனை விளக்குகின்றார்.

ஏழாவது பாவமான "தியாகமற்ற வழிபாடு", எப்படி நமது சமுதாயத்தில் ஊடுருவி இருக்கின்றதென்பதை விளக்குகின்றார். இதில் இவரது புலமை வெளிப்படுகின்றது.

நமது சமயங்கள் உருவாக்கியவை கோவில்கள். சமயச் சான்றோர்கள் நமது உள்ளொளியைப் பெருக்கி, உயர்த்தி, மேம்படுத்த வழிபாட்டு முறைகளை உருவாக்கினர். உண்மையான வழிபாடு மக்கள் தங்களையும் உணரவும், தன்னலம் மறையப் பொதுநலம் பேணவும் கற்பிக்கும். இன்றைய நிலைமை தலைகீழாகி விட்டது. இதனை ஆசிரியர், "வேறுபாடுகளை மறந்து அன்பின் அடிப்படையில், ஆன்ம நேயத்தின் அடிப்படையில் இணைக்கத் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களே மனிதரிடத்தில் சச்சரவுகளுக்கும், சண்டைகளுக்கும் இன்னும் பெரிய அளவில் போர்களுக்குக்கூடக் காரணமாயின", என்று உணர்த்துகின்றார். சமயத்தில் சமயச் சமபாவம் இல்லாமையைச் சுட்டிக் காட்டுகின்றார். இன்றைய நிலையை மாற்றி வழிபாடு தொண்டு செய்யும் மனப்பான்மையை உருவாக்கவேண்டிய தேவையை வலியுறுத்துகின்றார்.

நூலின் முடிப்புரையாக நாம் சிந்திக்கவும் செயல்படவும் நம்முன் பல கருத்து மணிகளைப் படைக்கின்றார். தனிமனிதர்கள் எண்ணத்தில் திண்ணியர்களாக மாறினால், சமுதாய அவலங்களைப் போக்கிக் காந்தியடிகளைப் போன்று சாதனையாளர்களாக மாற

முடியுமென ஒரு நம்பிக்கைச் சுடரை நமக்குள் ஏற்றுவிக்கின்றார். இதனையே இந்நூலின் தலையாய பயனென்று கூறலாம்.

அண்ணல் அகற்றச்சொன்ன அல்லவை ஏழின் இடத்தில் நாம் உருவாக்க வேண்டியவற்றை, 1.அப்பழுக்கற்ற அரசியல் வளர்ப்போம்; 2. உழைப்பையே உயரிய செல்வமாய் போற்றுவோம்; 3. நெறிப்பட்ட வாணிபம் நிலைத்திடச் செய்வோம்; 4. ஒழுக்கக் கேடில்லா உயர்கல்வி பேணுவோம்; 5. மனச்சான்று பிறழாத மனமகிழ்ச்சி பெறுவோம்; 6. மனிதநேயம் மறக்காத அறிவியல் காண்போம்; 7. தியாகம் தழுவிய வழிபாடு செய்வோம் என்று ஆசிரியர் கூறுவது பின்பற்ற வேண்டிய உடன்பாட்டுக் கருத்து.

நூலில் பரக்க முத்துக்கள், மாணிக்கங்கள், பவளங்கள், வைரங்கள் போன்று சிந்திக்கச் செய்யும் குட்டிக்கதைகள், சான்றாக நிற்கும் வரலாற்று நிகழ்வுகள், படிக்கப் படிக்கச் சுவை கூட்டும் உவமைகள், உருவகங்கள் மின்னுகின்றன; நம்மைக் கவர்கின்றன.

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம் தமக்கேயுரிய தனித்தமிழ் நடையில் அருமையாக ஒரு நூலினைப் படைத்தளிமைக்குக் காந்திய உலகம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. எல்லோருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஒரு சிறந்த நூலினைப் படைத்தளித்திருக்கும் அறிஞர் பெருமகனை வாழ்த்துகின்றேன். இதனைப் போல இன்னும் பல நூல்கள் படைக்க ஆசிரியர் நெடுங்காலம் வாழ இறையருள் பொழிய வேண்டுகின்றேன்.

என்றும் வளர் அன்புடன்,

மா.பா.குருசாமி

திண்டுக்கல்,
*15.10.2007.*

பேராசிரியர் இரா. மோகன்
ஒப்பிலக்கியத் துறைத் தலைவர்,
தமிழியற் புலம் ஆட்சிக்குழு உறுப்பினர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை 625 021.

# *வாழ்வில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்த வல்ல நூல்*

"என்னென்று சொல்வேன், என்னென்று சொல்வேன்
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்"

என விதந்தும் வியந்தும் உரைப்பார் பாவேந்தர் பாரதிதாசன். அவரை அடியொற்றி நாமும், "என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன், திருவள்ளுவர் மன்றத்தால், மூதறிஞர் சங்கரவள்ளி நாயகம் தகுதி பெற்றதும், திருவள்ளுவர் மன்றம், மூதறிஞர் சங்கரவள்ளி நாயகத்தால் தகுதி பெற்றதும்" எனப் பெருமிதத்தோடு பறையறைந்து கூறலாம். 'தமிழால் உணர்வாள்வோம் குறளால் உலகாள்வோம்' என்னும் உயரிய குறிக்கோள் முழக்கங்களுடன் பல்லாண்டுக் காலமாகப் பாங்குடன் இயங்கிவரும் திருவள்ளுவர் மன்றத்தின் தனிப்பெருந் தலைவராக வீற்றிருந்து மூதறிஞர் சங்கர வள்ளிநாயகம் தமிழ்நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் ஆற்றியுள்ள அரும்பணிகள் வையை ஆற்று மணலினும் வானத்து மீனினும் பலவாகும். 'திருக்குறள் வேள்', 'குறள் நெறி பரப்பும் குரிசில்', 'குறள் பரப்பும் செம்மல்', 'வ.உ.சி. விருதறிஞர்', 'குறள் உரைச் செம்மல்', 'தமிழ் இலக்கியச் சிந்தனையாளர்', 'தமிழ்ப் பணிச் செம்மல்', 'பொதுமறை அறிஞர்', 'பாவாணர் பற்றாளர்', 'தமிழறிஞர்', 'மூதறிஞர்' என்றாற் போல் பல்வேறு புகழாரங் களுக்கும் விருதுகளுக்கும் சொந்தக்காரராக விளங்கி வருபவர்

பேராசிரியர் சங்கர வள்ளி நாயகம். கபிலருக்குப் பறம்பு மலை போல, இவருக்குக் கோயிற்பட்டி. சங்கத் தமிழில் குறிப்பிடுவது என்றால், 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் சங்கர வள்ளி நாயகம் வாழ்ந்து வரும் ஊர்' கோயிற்பட்டி. பேராசிரியரின் இல்லத்திலும் உள்ளத்திலும் எஞ்ஞான்றும் கொலு வீற்றிருக்கும் அருந்தமிழ்ப் பனுவல் 'திருக்குறள்'. 'அடுத்த பிறவியில் தமிழனாகப் பிறந்து திருக்குறளைத் தமிழ் மொழியில் பயில வேண்டும்' எனத் தம் விருப்பத்தை ஒருமுறை வெளியிட்டார் காந்தியடிகள். அந்த அளவிற்கு உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் - உலகத்துச் சான்றோர்களின் உள்ளங்களை எல்லாம் - ஒருங்கே கொள்ளை கொண்ட நூல் திருக்குறள். இப்போது நம் கைகளில் தவழும் 'அடிகள் அகற்றிய அல்லவை ஏழு' என்பது மூதறிஞர் சங்கரவள்ளி நாயகத்தின் சீரிய கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட சிந்தனை நூல் ஆகும்.

பேராசிரியர் வி.செல்வநாயகம் தம் 'உரைநடை வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுவது போல், 'கதை எழுத நிகழ்ச்சிகள் உதவுதல் போலக் கட்டுரை எழுதச் சிந்தனை உதவுகின்றது. ஒரு பொருளைப் பற்றிப் பரந்த அறிவும் சிந்தனையும் இருந்தாலன்றி அது பற்றிப் பல பக்கங்கள் கொண்ட ஒரு நூலை எழுதுதல் முடியாது. மற்றொன்று விரித்தல் என்னும் குற்றமின்றி, எடுத்துக்கொண்ட பொருளைப் பலவாறாகச் சிந்தித்து விரிந்த நூலாக அமைத்தல் எல்லார்க்கும் எளிதன்று' (ப.112), அத்தகைய நூல்கள் பலவற்றைத் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் எழுதியிருக்கின்றார். அவை யாவும் தண்ணென்ற ஓசை பொருந்திய இனிய தமிழில் அமைந்துள்ளன. அத்தகைய நூல்களை எழுதிய ஆசிரியர்களுள் முதலிடம் வகிப்பர் திரு.வி.க. அவர்கள் என்றே கூறலாம். இவ் வகையில் நோக்கும்பொழுது மூதறிஞர் சங்கரவள்ளி நாயகம் திரு.வி.க.வின் வழித்தோன்றலாகவே விளங்குகின்றார். பதச் சோறாக, இந்நூலில் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்தின் சிந்தனைத் திறம் சுடர்விட்டு நிற்கும் ஓர் இடம் வருமாறு:

"ஒருவன் தற்கொலை செய்துகொள்ள நினைத்து நஞ்சு அருந்தினான்; ஆனால் சாகவில்லை. நஞ்சால் பக்க விளைவுகள் ஏற்படாமல் இருக்க மருத்துவர் மூலம் மருந்து உண்டான். அந்தோ பரிதாபம்! அவன் இறந்துவிட்டான். உயிரைக் கொல்ல வல்ல

நஞ்சில் கூடக் கலப்படம் நிகழ்கிறது என்பது இன்றைய வாழ்வில் கலப்படத்தின் உச்சகட்டத்தைக் காட்டுவதாக இருக்கின்றது. அதாவது சாகவேண்டிய நஞ்சில் உயிர் பிழைத்து, வாழச் செய்ய வேண்டிய மருந்தில் சாகிறான் என்பதுதான் வேதனையான செய்தியாகும்".

இதுபோல் எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றிய பரந்த அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் விளங்கப் பேராசிரியர் எழுதிச் சென்றுள்ள இடங்கள் மிகப் பலவாகும்.

'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு என்பது போல், இந்நூலில் அங்கிங்கு எனாத படி எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுவது விழுமிய சிந்தனைகளின் அழகிய அணிவகுப்பு ஆகும். இவ்வகையில் உலக வரலாற்றில் முத்திரை பதித்த சான்றோர்களின் வாழ்வும் வாக்கும், பாரதி, பாரதிதாசன், சிற்பி, மீரா, மு.மேத்தா, வைரமுத்து முதலான கவிஞர்களின் வைர வரிகளும் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்திற்குப் பெரிதும் கை கொடுத்துள்ளன. சான்றாக, 'ஈடு இணையற்ற இந்தியக் குடியரசுத் தலைவர்கள்' என்னும் உட்தலைப்பில் பாரத மணித்திருநாட்டின் முன்னைக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் குறித்துப் பேராசிரியர் எழுதிச் சென்றிருக்கும் ஒரு பகுதியை இங்கே சுட்டிக் காட்டலாம். பயில்வார் நெஞ்சை அள்ளும் அப்பகுதி இதோ:

"அண்மையில் குடியரசுத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியுள்ள அப்துல் கலாமைப் பற்றிச் சிந்திப்போம்... அப்துல் கலாம் தம்முடைய பதவிக்காலம் முடிந்ததும் தில்லியில் அவுரங்கசீப் சாலையிலுள்ள ஒரு வீட்டில் குடியேற உள்ளார். தில்லியிலுள்ள வீட்டிற்குச் செல்லும்போது ஐந்து பெட்டிகள் மட்டுமே கலாம் கொண்டு செல்ல உள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் குடியரசுத் தலைவராக இருந்த அப்துல் கலாமுக்குக் கிடைத்த அத்தனை பரிசுப் பொருள்களையும் அவர் மாளிகையின் சேமிப்பு அறையிலேயே வைத்துவிட்டுச் செல்ல உள்ளார். 'பதவியில் இருப்பது பணம் பறிப்பதற்கு' என்ற நச்சுக் கொள்கை விரைவாக நடமிடும் இந்நாளில் 'பதவியில் இருப்பது என்பது பணம் துறப்பதற்கே' என்ற கொள்கையில் ஊன்றிப்போய் இருக்கும் அப்துல் கலாம் தமிழ் நாட்டவர் என அறிந்து மகிழ்ச்சி அடைவோம்".

இன்றைய சூழலில் நாட்டின் பொறுப்பான பதவியில் வீற்றிருப்போர் யாவரும் - பதவிக்கு வர விழைவோர் ஒவ்வொருவரும் - தம் மனங்களில் கல்வெட்டுப் போல் பொறித்து வைத்துக்கொள்ளவேண்டிய ஓர் அற்புதமான உண்மை நிகழ்வை இங்கே அழகாகப் பதிவு செய்துள்ளார் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம். இதுபோல், காந்தியடிகளால் இந்தியாவுக்கு வாய்த்த சிறந்த பொருளாதார வல்லுநரான குமரப்பா அவர்கள் எடுத்துரைத்துள்ள கொலை வாழ்க்கை, கொள்ளை வாழ்க்கை, முயற்சி வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை, தாய்மை வாழ்க்கை என்னும் ஐவகை வாழ்க்கை முறைகள் குறித்துப் பேராசிரியர் எழுதிச் சென்றிருக்கும் பகுதிகளும் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியவை ஆகும்.

பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்தின் மொழி நடைக்கு வண்ணமும் வனப்பும் சேர்த்திருப்பது ஆங்காங்கே அவர் கையாண்டிருக்கும் அழகிய உவமைகள் ஆகும். 'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' (உவமவியல், நூற்பா 8) என்றும் தொல்காப்பிய இலக்கணத்திற்கு ஏற்ப இவ்வுவமைகள் அமைந்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்தின் எழுத்துத் திறத்திற்கு கட்டியம் கூறும் முத்தான மூன்று உவமைகள் இதோ:

"சங்கிலியின் வலிமை அதன் ஒவ்வொரு கண்ணியிலும் மறைந்திருப்பது போலச் சமுதாயத்தின் மேம்பாடு ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விலும் அடங்கியுள்ளது".

"மிதிவண்டிச் சக்கரத்தில் மாட்டிய துணிபோல் பெற்றோர்கள் எனும் அரக்க இராட்டினத்தில் குழந்தைகள் சிக்கிச் சிதறி வருகின்றனர்".

"பரமகம்சருக்கு விவேகானந்தர் போல், விவேகானந்தருக்கு அன்னை நிவேதிதா போல், அன்னை நிவேதிதாவுக்குப் பாரதி போல், பாரதிக்குப் புரட்சிக் கவிஞர் போல், அடிகளுக்கு வினோபாவைப் போல் மக்களுக்கு நல்ல தலைவர்கள் - வழிகாட்டிகள் கிடைப்பாராகில் வாழ்க்கை குற்றம் குறையிலிருந்து நீங்கித் தெளிவு பெறும்".

இவ்வுவமைகளைப் பயின்ற பிறகு 'பரணிக்கோர் செயங்கொண்டான் என்பது போல, 'உவமைக்கோர் சங்கரவள்ளி நாயகம்' எனப் பேராசிரியரை அழைக்கலாம் போலத் தோன்றுகின்றது.

எதுகையும் மோனையும் களிநடம் புரியும் வண்ணம் அழகிய உட்தலைப்புக்கள் இடுவதில் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் 'சொல்லின் செல்வர்' ரா.பி.சேதுப் பிள்ளையின் படைப்பாக்க நெறியைப் பின்பற்றியுள்ளார். 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பது பழமொழி; 'ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி' என்பது பேராசிரியர் படைக்கும் புதுமொழி. 'முகமும் முகவரியும் தொலைத்த மாந்தர்', 'ஏதம் விளைக்கும் ஏற்றத்தாழ்வு', 'சான்றோர் வாழ்க்கை சரியான கைவிளக்கு', 'அடிகள் நிகழ்த்திய அரிய புரட்சி', 'சீர்மை குன்றாச் சீவா', 'எளிமையில் ஏற்றம்', 'தீண்டத் தகாத தீண்டாமை', 'நெறியற்ற சமய வெறி' - பேராசிரியரின் கை வண்ணத்தையும் கலை வனப்பையும் ஒருங்கே பறைசாற்றி நிற்கும் உட்தலைப்புக்கள் இவை. 'கருமமே கட்டளைக் கல்', 'வரமே சாபம்', 'கொள்கைமாறிகள்', 'ஆக்க அறிவியல்', 'காந்திய மாற்று', 'தொண்டே தவம்' என்றாற்போல் படைப்புத் திறம் விளங்கப் பேராசிரியர் இந்நூலில் சூட்டிச் சென்றிருக்கும் உட்தலைப்புக்களும் பற்பல உண்டு.

முன்னைப் பழமை மட்டுமன்று, பின்னைப் புதுமையும் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்திற்குக் கைவந்த ஒன்றே என்பதற்குத் 'திரைப்பட வரலாற்றில் அடிகள்' என்னும் உட்தலைப்பில் முடிப்புரையில் இடம்பெற்றிருக்கும் பகுதி தக்க சான்றாகும்.

முன்னோர் மொழிப் பொருளையும் அவர் சொல்லையும் பொன்னே போல் போற்றிக் கையாளுவதிலும் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் மோனையைப் போல் முன்னிற்கின்றார். உள்ளங்கவர் உதாரணம் ஒன்று இதோ:

"அரசியலில் யாமறிந்த மனிதரிலே காந்தியைப் போல் நேருவைப் போல் பட்டேலைப் போல் யாங்கணுமே காணவில்லை".

ஹைகூ கவிதையைப் போன்ற நறுக்-சுருக் நடையும் பேராசிரியருக்குக் கைவந்ததாக உள்ளது. இவ்வகை நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

" 'விளம்பரம் செய்ய வேண்டுமா? எங்களை நாடுங்கள்' என்று விளம்பரத்திற்கே விளம்பரம் செய்யக்கூடிய காலமிது".

பேராசிரியர் சங்கரவள்ளி நாயகத்தின் மொழி நடையில் கூரிய அங்கதமும் மெல்லிய நகைச்சுவையும் கை குலுக்கி நிற்கும் இடங்களும் உண்டு. "கள்ளச் சாராயம் காய்ச்சிக் கள்ளக் கடத்தல் செய்து, கள்ள ஓட்டுப் போட்டுக் கள்ளக் காதலியிடம் பெற்ற பிள்ளைக்குத் கள்ளழகன் என்று பெயரிடுவோரின் எண்ணிக்கை நாளும் பெருகுகின்றது" என வரும் பகுதி இவ்வகையில் நினைவு கூரத்தக்கதாகும்.

எழுத்திலும் பேச்சிலும் தடம் பதிக்க விரும்பும் இன்றைய இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டிய அனுபவ மொழிகள் - வாழ்வியல் பாடங்கள் - இந்நூலில் ஆங்காங்கே சுவைக் குறிப்புக்களாகவும் குறுங்கதைகளாகவும் உண்மை நிகழ்ச்சி களாகவும் இடம்பெற்றுள்ளன. 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்னும் கவியரசர் பாரதியின் கூற்றுக்கு ஏற்ப, இந்நூலின் ஒவ்வொரு பக்கத்தையும் - பத்தியையும் - இன்னும் கூர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒவ்வொரு வரியையுமே - எழுதிச் சென்றுள்ளார் பேராசிரியர். காட்டாக, 'ஐம்புல அடக்கத்தின் அருமைப்பாடு' என்னும் உட்தலைப்பில் பேராசிரியர் மேற்கோள் காட்டியிருக்கும் ஓர் உண்மை நிகழ்வை இங்கே சுட்டிக்காட்டலாம். அலெக்சாண்டர், டயோசினிசிடம் மக்கள் தன்னைவிட அவரை மதிப்பது ஏன் எனக் கேட்டானாம். 'நீ மண்ணை வென்றவன்', நான் என்னை வென்றவன் என்றாராம் டயாசினிசு. 'புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்ற ஔவையாரின் மேற்கோளினை இங்கே பொருத்தமாக எடுத்துக்காட்டியுள்ளார் பேராசிரியர். தனிமனிதர்களால் முடியாதது எதுவும் இல்லை. ஆனால் தனி மனிதன் தனது செயல்களால் தன்னோடு வாழும் மனிதர்களை ஒன்றிணைக்கவும் கூடி வாழும் மனிதர்கள் மீது அக்கறை கொண்டும் இருந்தால் அவனது செயல்களுக்கு ஆயிரம் கைகள் துணை செய்யக் காத்திருக்கின்றன'

என்றாற்போல் படிப்பவர் உள்ளத்துள் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும் வரிகள் இந்நூலில் பரக்கக் காணப்படுகின்றன.

நிறைவாக ஒரு கருத்து: மாணவர்களின் நல்ல நண்பர்கள் நூல்களே என அழுத்தம் திருத்தமாகவும் ஆழமாகவும் நம்புகின்றார் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம். அவரது பார்வையில், மாணவர்களைச் சீர்ப்படுத்தி மேம்படுத்துவதில் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களை விட முன்னிலையில் நிற்பன நூல்கள் ஆகும். 'விரிவான சன்னல் இருக்கிற அறை கதிரவ வெளிச்சத்தையும் - காற்றையும் தந்து நாளும் நம் உடல் நலத்தைப் பேணுதல் போலத் தரமான, தெளிவான சிந்தனை வளத்தை நூல்கள் நல்கும்' என்பது பேராசிரியரின் ஆணித்தரமான கருத்து. 'நல்ல நூல்' என்பதற்குத் தாம் வகுத்துத் தந்திருக்கும் வரைவிலக்கணத்திற்கு ஏற்பப் பேராசிரியர் சங்கரவள்ளி நாயகம் 'அடிகள் அகற்றிய அல்லவை ஏழு' என்னும் இந்நூலைப் படைத்துள்ளார். மனம் கலந்து படிப்பவர் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தை - நல்ல மாற்றத்தை - ஏற்படுத்த வல்ல நூல் இது என்பது நெற்றித் திலகம். சுருங்கக் கூறின், மனித மனங்களில் இருந்து அல்லவை அகல - அவர்களின் வாழ்வில் நல்லவை நிகழ - இந்நூல் நல்லதொரு வழித்துணை எனலாம்.

இரா.மோகன்

*மதுரை 625 019*
*16.12.2007*

# என்னுரை

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்திருந்த காலம் அது. ஒரு தொடர்வண்டிப் பயணத்தின்போது அவரது நண்பர் 'போலக்' ஒரு நூலைக் கொடுத்திருக்கின்றார். 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற அந்த நூலைப் புரிந்துகொள்வதே இடர்ப்பாடானது. அப்படிப்பட்ட நூலைப் பயணத்திலேயே படித்து முடித்துவிட்டார் காந்தியடிகள். அதன் சாரம் என்ன? அதை எப்படித் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதை உடனே புரிந்துகொண்டுதான் இறங்கவேண்டிய ஊர் வந்ததும் அந்த ஊருக்குப் போய் 'போனிக்ஸ் பண்ணை' என்ற ஒரு குடியிருப்பை நிறுவி நூலில்தான் படித்துப் புரிந்துகொண்டதை நடைமுறைப் படுதியிருக்கிறார். இதுதான் நமக்கும் மகாத்மா காந்திக்கும் உள்ள ஒரேயொரு வேறுபாடு.

காந்தி சிறுவனாக இருந்தபோது அரிச்சந்திர நாடகம் பார்த்து விட்டு இனிமேல் வாழ்நாளில் பொய் பேசுவது இல்லை என்று முடிவு செய்தார். அதன்படி நடந்தும் காட்டினார். அதனால்தான் அவர் மகாத்மா. நாமோ அரிச்சந்திரனுக்காக ஐயோ பாவம் என்று அனுதாபப்பட்டுவிட்டு அடுத்த கதை கேட்க கிளம்பிவிடுவோம். காந்தி தான் கேட்ட, படித்த நல்ல செய்திகள் எதுவாக இருந்தாலும் அதைத் தன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி இருக்கிறார். அவரது வீட்டுப் பணிப்பெண் இரம்பா, 'சிக்கல் வரும்போது இராமத் திருப்பெயரைச் சொல்வாயாக' என்று சொன்னதைத் தன் கடைசி மூச்சு வரை அவர் கடைப்பிடித்தார்.

நாம் கேட்காத நல்ல செயல்களா? நாம் படிக்காத நல்ல நூல்களா? ஏதாவது ஒரு நல்ல கருத்தை மையமாகக் கொண்டு காந்தி

உண்மையைப் பிடித்துக்கொண்டது போல் நம்மால் வாழமுடியுமா? வையத் தலைமை கொள்ள முடியுமா? மனத்தை வலிமைபெறச் செய்யமுடியுமா? இது பற்றிய இடையறாத சிந்தனையின் நல் விளைவுதான் இந்நூலாகும். வள்ளுவர் மன்ற ஒவ்வொரு ஆண்டு விழாவின் போதும் எனது நூலொன்றும் வெளியாக வேண்டும் என்ற கருத்து விடாப்பிடியாக ஈராண்டாக எனது நெஞ்சில் நின்று நிலைத்திருப்பதால் மன்றத்தின் 36வது ஆண்டு விழாவில் மகுட நிகழ்ச்சியாக இந்நூலில் வெளியீடு அமைந்துள்ளது.

இன்றைய சமூகத்தில் அப்பழுக்கான அரசியல், உழைப்புக் கலவாத வருவாய், நெறியற்ற வணிகம், பண்பாடற்ற கல்வி, மனச்சான்றைக் கொன்று ஏற்படுத்திக் கொள்ளும் மகிழ்ச்சி, மனித நேயமற்ற அறிவியல், தியாகமற்ற வழிபாடு என்பன சாய்ந்த கோபுரங்களாகச் சரிந்து இருக்கின்றன. அவை சரியானால் நல்லவை எழுந்து நடமாடும் என்ற நம்பிக்கை படிப்போரிடத்தே பதிய வேண்டும் என்ற நிலையில் இக்கருத்துக்களை இந்நூல் பதிவு செய்து உள்ளது.

இந்நூலைப் பயில்வார்க்கு அரசியல் பற்றிய விழிப்புணர்வு, உழைப்புப் பற்றிய உயர்சிந்தனை, வணிகம் பெறவேண்டிய நேர்மை, பண்பாடு எனப்படும் பயன்பாட்டுச் சிறகுகளைத் தாங்கிய கல்வி பற்றிய கருத்தழுத்தம், மனச்சான்றை மதிக்கும் மனப்பாங்கு, அறிவியலை மனித முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தும் பக்குவம், தியாகம் எண்ணையில் நனைத்தெடுத்த நல்வழிபாடு ஆகியவை பற்றி உரத்த சிந்தனை எழுமானால் இந்நூல் ஆக்கப்பட்டதற்குரிய குறிக்கோள் நிறைவேறும் என்ற மனநிறைவு இந்நூலாசிரியருக்கு எழும் என்பதில் ஐயம் எழாது.

பொருளாதாரச் சிந்தனையில் இன்றைய குமரப்பாவாக காட்சியளிப்பவரும் ஆதித்தனார் கல்லூரியின் மேனாள் முதல்வராகப் பணியாற்றியவரும் ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையின் தலைசிறந்த இயக்குநருமான அறிஞர். திருமிகு.மா.பா.குருசாமிக்கும் நான் பணியாற்றிய கல்லூரியில் சில்லாண்டுகள் என்னுடன் பணியாற்றியவரும் கோபிச்செட்டிக் கல்லூரியின் மேனாள் முதல்வரும் சில்லென்ற சிந்தனையை இன்றும் எனது உள்ளத்தில் உலவச் செய்பவருமான எனது அருமை

இளவல் அறிஞர்.திருமிகு.இரா.கா. மாணிக்கத்திற்கும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் தமிழியற்புலத் தலைவரும் திறனாய்வில் வல்லுநருமான அறிஞர் திருமிகு.இரா. மோகன் அவர்கள் நூலிற்கு அணி சேர்க்கும் அணிந்துரையை வழங்கியமைக்காக எனது நன்றியினைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

படி எடுப்பதில் துடிப்புடன் செயல்பட்ட மன்றச் செல்வங்களான திருமிகு.ஏ.முருகேசன், திருமிகு.இரா.மகாலிங்க ஈசுவரன், திருமிகு.பா.கண்ணன் ஆகியோருக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

சிறந்த சிந்தனைக் கவிஞரும் நாடறிந்த யாப்பறி புலவரும் அகரம் பதிப்பகத்தைத் தமிழர்க்கு அறிமுகப்படுத்தியவரும் எனது நினைவிற்கு என்றும் உரியவருமான நினைவில் வாழும் கவிஞர் திருமிகு.மீரா பெற்றெடுத்த பெருமைக்குரிய செல்வன் திருமிகு. இரா.கதிருக்கும் அவர் பதிப்பகத்திற்கும் நெஞ்சார்ந்த வாழ்த்தினை வழங்கி அந்நிறுவனம் மேன்மேலும் வளர, உயர எல்லாம் வல்ல என் தமிழன்னையை வழிபடுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க குறள்!

அறிஞர் அ.சங்கரவள்ளிநாயகம்,
தலைவர்,
திருவள்ளுவர் மன்றம்,
கோயிற்பட்டி.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இற்றைச் சமுதாய அமைப்பு | 27 |
| அறச்சுடர் அண்ணல் | 43 |
| அடிகள் அகற்றிய அல்லவை ஏழு | 53 |
| 1. கொள்கையற்ற அரசியல் | 63 |
| 2. உழைப்பற்ற செல்வம் | 83 |
| 3. நெறியற்ற வணிகம் | 100 |
| 4. பண்பாடற்ற கல்வி | 119 |
| 5. மனச்சாட்சியற்ற மகிழ்ச்சி | 138 |
| 6. மனிதநேயமற்ற அறிவியல் | 150 |
| 7. தியாகமற்ற வழிபாடு | 163 |

# இற்றைச் சமுதாய அமைப்பு

## தனிமனித வளர்ச்சியும் தகுதியான சமுதாய அமைப்பும்

தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் அடிப்படையாய் அமைவது சமுதாய அமைப்பு முறையாகும். மனிதனைச் சமுதாயத்தில் இருந்து தனித்துப் பிரித்துப் பார்க்க முயல்வது முயற்கொம்பாய் முடியும். தனிமரம் தோப்பு ஆகாது என்பதுபோல் சமுதாயத் தோப்பில் தனி மனிதன் காலூன்றியுள்ளான். அவனது இயல்பும் வாழ்க்கை நடைமுறைகளும் பாராட்டத்தகுந்த குறிக்கோள்களும் அவன் வாழ்கின்ற சமுதாயத்தையும் அதன் மரபையும் ஒட்டி அமைகின்றன. தனி மனிதர்களின் சிறப்பில்தான் சமுதாய மேம்பாடு அடங்கியுள்ளது. சங்கிலியின் வலிமை அதன் ஒவ்வொரு கண்ணியிலும் மறைந்திருப்பது போலச் சமுதாயத்தின் மேம்பாடு ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்விலும் அடங்கியுள்ளது. தனிமனித வளர்ச்சிக்குச் சமுதாயம் முட்டுக்கட்டையாக இருக்கின்றபோது மனிதன் சமுதாயத்துடன் முரண்படுகின்றான். இருக்கின்ற கட்டுக்கோப்பை உடைத்தெறியும் செயல்களில் அவன் ஈடுபடுகின்றான். தனிமனிதனின் நடவடிக்கைகள் சமுதாய நலனுக்கு மாறாக உருவாகின்றபொழுது சமுதாயம் தனி மனிதனின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தச் சட்டம் இயற்றவேண்டும். சட்டத்தைச் செயல்படுத்த ஓரளவு வன்முறையும் தேவைப் படுகின்றது. இத்தகைய தனிமனிதச் சமுதாயப் போராட்டம் மனித இனத்தின் வளர்ச்சியை அன்றிலிருந்து இன்றுவரை பாதித்திருக்கின்றது. ஆதலால் தனிமனிதர்களும் சமுதாயமும் போராட்டமின்றிக் கைகோர்த்து வாழ்கின்ற ஒரு சமுதாய அமைப்பை உருவாக்கினால் மனித இனத்தின் வளர்ச்சி விரைந்து நிகழும்.

## இனப்பாகுபாடும் சாதிப்பாகுபாடும்

கூட்டு வாழ்க்கையின் ஆட்சிமுறையை ஒட்டி ஆள்கின்றவன், ஆளப்படுபவன் என இரண்டு இனங்கள் தோன்றின. தனிச் சொத்துடைமை நடைமுறைக்கு வந்தபின் நிலப்பிரபு - பண்ணையார், முதலாளி - தொழிலாளி என்னும் இனப்பிரிவுகள் ஏற்பட்டன. இவை தவிரப் பிறப்பை ஒட்டிச் சாதிமுறை தோற்றுவிக்கப்பட்டது. இவையெல்லாம் மனிதர்களைப் பல உட்குழுக்களாகப் பிரித்து, அவை ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்கின்ற நிலையை ஏற்படுத்துகின்றன.

## வாழ்க்கையே ஒரு போராட்டம்

இன்றைய சமுதாயத்தில் எழுகின்ற பல செயல்களுக்குப் பல சிக்கல்களுக்குச் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள்தான் ஆணிவேராய் அமைந்துள்ளன. மனிதர்கள் தங்களுடைய நலன்கள் மறுக்கப்படுவதாக எண்ணித்தொடர்ந்து போராடிக்கொண்டு வருகிறார்கள். மனிதர்கள் எல்லாம் பணத்தில் பின் ஓடுகின்ற போக்குத் தோன்றி வளர்ந்து வருகிறது. பணத்தை மனிதன் ஆள்வது மாறி இன்று பணம் மனிதனை ஆள்கின்றது. பணத்தைத் தேடி ஆக வேண்டிய நிலைக்குத் தனது தேவைகளை மனிதன் பெருக்கிக் கொண்டு விட்டதால் தேவைகளை நேர்மையானமுறையில் நிறைவேற்றிக்கொள்ள இயலாத பொழுது வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் ‘இப்படித்தான் வாழவேண்டும்’ என்ற நெறி முறையைத் தகர்த்து ‘எப்படியும் வாழலாம்’ என்ற நிலைக்கு வருகின்றார். இந்நிலையில் வாழ்க்கையே போராட்டம் ஆகியுள்ளது.

## நகரக் கவர்ச்சியும் கிராம நலிவும்

அன்று சமுதாய முறையை அமைப்பதில் கிராமங்களே மிகப் பெரிய பங்கைப்பெற்றன. தொழில் புரட்சிக்குப் பின் பெரும் தொழில்களும் வாணிபமும் குவிதல் முறையில் பேரளவில் வளர்ந்ததால் நகரங்கள் விரைந்து வளர்ச்சி பெற்றன. பக்கத்தில் குடியிருப்பவர்கள் யார் என்றே தெரியாத நிலையில் பொருளைச் சேர்ப்பதிலும் வளர்ப்பதிலும் ஈடுபட்டவர்களிடம் மனிதநேயம்

இடம்பெறுவது இல்லை. பொருள் - முதல் வாழ்க்கை முதலிடம் பெற ஆன்மீக அறவாழ்க்கை அறவே அகன்றுவிட்டது. இற்றைய நகர நாகரிகம் கண்ணுக்குத் தெரியாத நோய்க்கிருமிகளைப் போலக் கிராமங்களிலும் பரவுகின்றது. இதன் விளைவாக மனித உறவுகள் உருக்குலைகின்றன. நகரங்கள் கிராமங்களைச் சுரண்டும் நிலையில் அமைந்துள்ளன. நகரங்களின் கவர்ச்சி கிராமத்தானை நகரங்களை நோக்கி நகரச் செய்கின்றது. "நிலத்தில் மனிதர்கள் அல்லறப்பட்டனர்; ஆனால் வாழ்ந்தனர். நகரங்களில் அவர்கள் செழிக்கின்றனர்; ஆனால் வாழ வீழ்கின்றனர்" என்று மில்லியம் பேர்டு என்ற சிந்தனையாளரின் கருத்து சிந்திக்கத்தக்கது.

அமைதியும் எளிமையும் உருவான கிராமங்கள் ஆரவாரமும் விரைவும் மிக்க நகரங்களின் வளர்ச்சியில் மலைத்துப்போய் நிற்கின்றன. ஒதுங்கி வாழ்ந்த பழைய கிராம வாழ்க்கை இன்று நகரங்களின் பொழுதுபோக்கில் திளைக்க விரும்புகின்றது. நகரத்தில் வாழும் நடுத்தர வர்க்கத்தின்மீது வணிக ஆதிக்கம் செலுத்தும் மேல்தட்டு வர்க்கமும் நகரம் சார்ந்ததாக உள்ளது. வேளாண்மை சார்ந்த கிராம வாழ்க்கை ஒருபுறம், கல்வி, தொழில் சார்ந்த நகர வாழ்க்கை ஒருபுறமாக இன்றைய வாழ்க்கைக் களம் அமைகின்றது. கிராமத்தில் இப்போது படித்துக் கொண்டிருக்கும் அல்லது படித்து முடித்து வேலை தேடிக்கொண்டிருக்கும் இளைஞர்கள் கூட்டம்தான் நகரப் பண்பாட்டினைக் கிராமங்களில் பரப்புகின்றவர்கள் ஆவர். இவர்களால் செய்ய முடியாததை நாளிதழ்களும் திரைஉலகமும் செய்து முடிக்கின்றன.

## கட்டுப்பாடற்ற வாழ்க்கைமுறை!

விடுதலைக்குப் பின் விளைந்த சமூக மாறுதல்கள் கரணியமாகப் பழைய நடைமுறைகள் இன்று நலிந்துவருகின்றன. சாதி சமயங்களின் பெயரால் நடக்கும் கொடுமைகளைச் சட்டத்தின் துணையுடன் எதிர்க்கக் கிராம மக்கள் இன்று பழகியிருக்கின்றனர். பழைய சமீன்தார் ஆட்சி மெல்ல மறைந்து அரசியல் செல்வாக்கு உள்ள புதிய தலைமை தோன்றியிருக்கின்றது. பொருளாதாரக் கரணியங்களால் குடும்பம், தனிமனிதன், சமூகம் ஆகிய பல்வேறு தளங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் கட்டுப்பாடு என்ற பெயரில் வந்த ஒற்றுமை இன்று இல்லை. நாற்பது

பேர் சேர்ந்து இலாட்டரிச் சீட்டு வாங்கும் ஒற்றுமைதான் இருக்கின்றது. பத்துப்பேர் சேர்ந்து சொத்தைப் பாழ்படுத்தும் ஒற்றுமைதான் இருக்கின்றது. கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள் ஆகியோரின் உறவுகளிலும் பொருளாதாரச் சிக்கல்கள் தலையிடுகின்றன. ஆண்களின் இல்லத் தலைமைக்குப் போட்டியாக வேலைக்குப் போகும் பெண்இனம் தழைக்கின்றது. இன்றைய வாழ்க்கையின் இன்னொரு குறிப்பிடத்தக்க கூறு விளம்பரமும் போட்டி மனப்பான்மையும் ஆகும். அரசியல், பக்தி, திருமணம், வேலைவாய்ப்பு என்று அனைத்துத் துறைகளிலும் ஒருமனிதன் கடும் போட்டியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

## அகமதிப்பீடுகளின் மாற்றம்

புறவாழ்க்கை நாட்டுமுறைக்கு ஏற்ப அகவாழ்க்கை மதிப்பீடுகளும் மாற்றம் பெற்று வருகின்றன. காதல், கற்பு போன்றவை புதிய விளக்கங்களையும் திறனாய்வுகளையும் பெற்று வருகின்றன. புறவாழ்க்கை மாற்றங்களுக்கும் அகவாழ்க்கை மதிப்பீடுகளுக்கும் ஏற்ப ஒழுக்க நெறியும் மாறிவருகின்றது. நேர்மை, கண்ணியம், விரிந்த சிந்தை, பொதுநலம் போன்ற ஒழுக்க மதிப்புக்கள் இன்று அர்த்தமற்றுப் போய்விட்டன. ஊழல், ஏமாற்று, கள்ளவாணிகம் போன்றவற்றிற்கு எதிரே சத்தியம், உண்மை, நேர்மை போன்ற மதிப்புக்கள் எள்ளிநகையாடப்படுகின்றன. அன்று இரக்கம், கனிவு ஆகிய மனித உணர்வுகளைக்கூடச் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இன்று மனிதன் இருக்கின்றான்.

## முகமும் முகவரியும் தொலைந்த மாந்தர்

இன்றைய மனிதன் எப்படி இருக்கிறான்? ஏழையாக இருக்கின்றான்; பணக்காரனாக இருக்கின்றான்; இரண்டும் கெட்ட நடுத்தரமாகவும் இருக்கின்றான். மகிழ்ச்சியாக இருக்கின்றான்; சோகமாக இருக்கின்றான்; இரண்டில் அர்த்தம் தெரியாதவனாகவும் இருக்கின்றான்; காலச்சுழற்சியின் அடிகளை விரும்பி வாங்கி ஏதுமறியாத மற்போர் வீரனாக இருக்கின்றான். அச்சமும் வெறுப்பும் கொண்டு ஒதுங்கி உயிர்க்கும் பொட்டுப் புழுவாகவும் இருக்கின்றான்.

மார்ச் சம்பளத்தில் போராடும் அலுவலக ஊழியனாக இருக்கின்றான்; அன்றாடம் உடல் உழைப்பையே நம்பி வாழும்

உழைப்பாளியாக இருக்கின்றான்; வேலை தேடித் திருமணம் செய்து குழந்தை பெற்று மனைவியுடன் கோயிலுக்குப் போய்க் குடும்பத்துடன் திரைப்படம் பார்த்துக் குழந்தைகளுக்குச் சொத்துச் சேர்த்து உண்டு உயிர்த்து மறையும் பொறித்தன்மையுடனும் இருக்கின்றான்; எளிமையனாக இருக்கின்றான்; விடுவிக்க இயலாத புதிராகவும் இருக்கின்றான்; மொத்தத்தில் இவன்தான் இன்றைய மனிதன் என்று சுட்டிக்காட்ட முகங்களற்ற மனிதனாக இருக்கின்றான். புதிய வாழ்க்கைக் களங்கள், சமூகப் பொருளாதார மாறுதல்கள், மாறிவரும் மனித உறவுகள், பண்பாட்டுச் சிக்கல்கள், புதிய சமூக ஒப்படைப்புக்கள், திரை உலகமும் நாளிதழும் ஏற்படுத்த நினைக்கும் மலிவான ஒழுகலாறுகள், நடைமுறை அரசியல் ஆகியவற்றில் இருந்து இன்றைய வாழ்க்கை பிறப்பெடுக்கின்றது.

## போலிச் சீர்திருத்தவாதிகள்

சமுதாயப் போலிகளைச் சுட்டுதற்குமுன் சமுதாயச் சீர்திருத்தம் பேசுபவர்களே போலியாக இருக்கின்றாரக்ள்.

> *"சமுதாயச் சீர்திருத்தம் பேசுவோர்கள்*
> *சகிக்காமல் ஊர்ஊராய் மலிந்துபோனார்*
> *சமுதாயச் சீர்திருத்தம் பேசு வோர்கள்*
> *தான்திருந்தி தான்உணர்ந்து நடந்தி டாமல்...."*

என்று கவிஞர் கலைக்கூத்தன் போலிச் சமுதாய வாதிகளைத் தோலுரித்துக் காட்டுகின்றார்.

> *"பணமென்ற திரைக்குள்ளே கிடப்பார் - நாளும்*
> *பழியென்ற சாலையிலே நடப்பார்*
> *மணம் தந்த சோலையினை அழிப்பார் - நெடு*
> *வையத்தை இருளாக்கிச் சிரிப்பார்*
> *அறிவிற்கு விலங்கிட்டுத் தடுப்பார் - தூய*
> *அன்பிற்கு நஞ்சிட்டுக் கெடுப்பார்*
> *வறுமைக்கு வித்தாகி நிற்பார்*
> *எங்கும் மானத்தை விலைகூறி விற்பார்"*

என்று இற்றைச் சமூகத்தின் இழிவினைக் கவிஞர் மோகனரங்கன் தம் பாடலில் உணர்த்தியுள்ளார். தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை

தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரதநாடு தன்னை வாழ்விக்க வந்த பாரதியாரையே இப்போது நாம் அரசியல் நாடகங்கள் ஆடுகின்ற பொதுமேடையாக ஆக்குகின்றோம் என்ற கவிஞர் வைரமுத்துவும் சீரிய வரிகளை நம் சிந்தையில் பதிய வைக்கின்றார். நமக்கு எது இருந்தால் நாம் உயர்வோம் என்ற வினாவிற்குக் கவிஞர் மீரா தம் பாடல்வழி விடை அளித்துள்ளார்.

"நிலம் திருடும் இழிகுணத்தான்
நீயா? ஆ! எங்கள்
பலம் திருடப் பார்த்தாய்
பகையா வா! என்றார்க்கு
வெள்ளையர் தம் ஆதிக்க
வேகத்துக் கணை போட்ட
உள்ளம் நமக்கி ருந்தால்
உயர்வோம்" (மீரா)

கவிஞர் மீரா இன்றைய வாழ்வு வகையான வாழ்வா என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையாகக் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

"ஒருவர் .......
மாடுபோல் பாரவண்டி இழுக்கிறார்!
கழுதைபோல் முதுகில் கனத்தைச் சுமக்கிறார்!
நாய்போல் எச்சில் நக்கித் திரிகிறார்!
பன்றிபோல் சாக்கடைப் பக்கம் படுக்கிறார்!
எனில் மற்றொருவன் இன்னொரு பக்கம்
எலிபோல் சுரண்டி எங்கோ ஒளிக்கிறான்!
ஓநாய்போல் பிறர் உழைப்பை குடிக்கிறான்!
ஒட்டகம்போல் ஒதுக்கிவைத் துண்கிறான்!
நரியைப் போல் நன்கு நடிக்கிறான்!
இப்படி
ஒருவன் வாட மற்றொருவன் வாட்ட
இருப்பதா வாழ்வு? இதுவா வாழ்வு" (மீரா)

மனிதன் வாழும் சரியான நாள் எது என்பதையும் மீராவின் கவிதை வரிகள் வெளிக்கொணர்கின்றன.

"என்றைக்கு
ஏழ்மை வறுமை இடுகா(டு) ஏகுமோ

*சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ*
*இலட்சிய வெறிகொண் டிளைஞர் பட்டாளம்*
*புதிய உலகுக்கு பூசை போடுமோ*
*பழைய பொய்ம்மைகள் பயந்தோ டிடுமோ*
*தன்னலம் மறந்து தாயகம் காத்த*
*மறவர் படைக்கு மரியாதை கிடைக்குமோ*
*தியாக உணர்வுத் தீக்குளித் திட்ட*
*வீரருக் கெங்கும் விழாக்கள் நடக்குமோ*
*அன்றே,*
*மனிதன் பிறக்கும்நாள்! மனிதன் வாழும் நாள்!"*

## ஏதம் விளைவிக்கும் ஏற்றத்தாழ்வு

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நாட்டு மக்களிடையே இடம் பெற்றிருக்கின்றன. பூவும் போர்ப்பண்பு பெற்றுப் புரட்சி நிகழும். மலையளவு செல்வத்தைக் குவியச் செய்துள்ள செல்வர்கள், வானத்தைக் கூரையாக்கி நிலத்தை அடித்தளமாகக் கொண்டு வீதி வாழ்க்கையர் என இரு பிரிவினைக் கொண்டதாக இற்றைக் காலச் சமுதாயம் அமைந்துள்ளது. சமன்நிலைச் சமுதாயம் அமையவில்லை எனில் சமுதாயத்தில் கீழ்த்தட்டில் இடம்பெற்றுள்ள ஏழை மக்களின் அவலங்களை அச்சமுதாயம் கொண்டிருக்கும். அத்தகைய மக்கள் படும் பாட்டினை,

*"அலுத்துச் சலித்து*
*வாழ்ந்து களைத்த*
*அவல உயிரினம்"*

எனக் கவிஞர் சிற்பி தம் பாட்டில் எடுத்துக்காட்டுகின்றார். அன்று தேவகுமாரர் சுமந்த சிலுவை போதாதென்று அன்றாடச் சிக்கல் எனும் சிலுவையை மனிதக் குமாரர்கள் நாளும் சுமக்கின்றார்கள் என்பது கவிஞர் சிற்பியின் சிந்திக்கத்தக்க கருத்தாகும்.

*"பாதை முள்*
*படுக்கை முள்*
*இருக்கை முள்*
*வாழ்க்கை முள்*
*ஆன மனிதர்களைப் பார்த்துச்*

*சிலிர்த்துக் கொண்டது*
*முள்ளம் பற்றி"*

என்ற வரிகளில் சிற்பி கையாலாகாத மனிதன் படும் பாட்டை உணரச் செய்துள்ளார்.

## ஆதிக்கச் சமுதாய அவலங்கள்

சமுதாயத்தின் ஒரு பிரிவினர் ஆதிக்கம் உடையவர்களாக அமையநேரின், அதன் மற்றொரு பிரிவினர் அவர்களின் கொடுமை களுக்கு ஆளாக வேண்டிய சூழல் எதிர்பாராமல் அவர்களுக்கு அமைந்து விடுகின்றது. சங்கிலியில் கட்டிக்கிடப்பதையே விரும்பும் அடிமைச் சனியன்கள், பட்டுச்சேலை மடிகளை விரும்பும் பொம்ம ரேனியன்கள், அப்பாவிகளின் ஆடு சதைகளைக் கவ்வும் அல்சேசியன்கள், காட்டிக் கொடுக்கும் ஈரமூக்குகள் என நாய்களின் பண்புகளைக் கொண்டு இன்றைய மனிதன் அடிமையில் உழல்வதைக் கவிஞர் சிற்பி பாடல் ஒன்றின் வழியாகப் புலப்படுத்துகின்றார்.

*"அகன்ற உலகு நான்*
*என்றது அகல்*
*அழகிய உடல் நான்*
*என்றது திரி*
*அசையும் உயிர் நான்*
*என்றது சுடர்*
*உழைப்பு வடித்த*
*உதிரத் துளிகளாய்த்*
*தேங்கிய எண்ணெய்*
*வாய்*
*திறக்கவே இல்லை"* *(சிற்பி)*

அடிமைத்தன்மையை உடைத்தெரிகின்ற உணர்வும் உரமும் கீழ்த்தட்டு மக்களுக்கு இல்லை. இன்று அறியாமையிலும் ஏழ்மையிலும் நாடு உழன்று கொண்டிருக்கின்றது. இச்சமயத்தில் நம் சமூகத்தில் நாற்சந்திகளிலும் முச்சந்திகளிலும் வாய்ப் பந்தலிட்டுப் பேசுபவர்களின் எண்ணிக்கை மிகுதியாகி வருகின்றது. கதிரவனுக்கு

நடுவில் நீச்சல்குளம் உருவாக்குபவர்கள், பசும்பாலில் இருந்து வைக்கோல் தயாரிப்பவர்கள், குருட்டு விழிக்கு இருட்டைக் காய்ச்சிக் கண்மருந்து செய்பவர்கள், அருந்தமிழ்ச் சொற்களை வார்த்துப் பசித்த வயிற்றுக்குக் கவசம் பூட்டுபவர்கள் என மக்களின் அறியாமையைத் தங்கள் வசதிக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளும் போலிகள் சமூகம் எங்கும் ஊடுருவியுள்ளனர். சாவைத் தீட்டிய போர் அமைதிச் சாசனங்கள், பசியின் கரிக்கோடுகள், கண்ணீர் உப்புக்கள், கவலைப் புதர்கள், சாதிப் புழுக்களின் சாக்கடை, வீதிமுனைகளில் விளங்கும் சமயத் தற்கொலைப் பீடங்கள் ஆகியவற்றால் இச்சமுதாயம் நிறைந்துள்ளதாகச் சிற்பி தம் பாடல் வழிக் காட்டுகின்றார். சமுதாயத்தில் வாய்மையின் நிலை பரிதாபமாக உள்ளது. நீதிமன்றங்களில் நியாயங்கள் கொலை செய்யப்படு கின்றன. அதனால் நிரந்தரத் துக்கம் மக்கள் கொண்டாடுகின்றனர். இவர்களின் வார்த்தைச் சங்கிலிகளிலும் நியாயங்கள் தத்தளிக்கின்றன. கீழ்த்தட்டுச் சமுதாயம் சார்ந்த மக்கள் எண்ணிக்கையில் மிகுந்திருந்தாலும் ஆதிக்கச் சமுதாயத்தின் கொடுமை காரணமாக வாழ்க்கையில் தன்னந்தனி மூங்கிலாகவே வாழ்கின்றனர். இது சரிசெய்யப்படாவிட்டால்,

"மெகாங்நதி வண்டலிட் டோடும்
பட்டுப் பூச்சிகளின் பூமியில்
அரக்கப் பறவைகள் விதைத்த
உருக்குத் துணுக்குகள்
ஒருநாள் பிறப்பெடுத்தன
கருக் கரிவாளும்
சம்மட்டியுமாக"

என்று சமுதாயப் புரட்சி விரைவாக வெடிக்கும் எனவும் சிற்பி அறிவுறுத்துகின்றார்.

ஆதிக்கச் சமுதாயம் தானாக உடையாது. கொடுமையை எதிர்க்கும் பேராற்றலை ஒவ்வொரு மனிதனும் பெற்றிருக்க வேண்டும்.

"எங்களுக்கு
மனுக்குலம் தழைக்க
மன்மதனும் வேண்டும்

*எதேச்சதி காரத்தின் முகத்தில்*
*காறி யுமிழ*
*நக்கீரனும் வேண்டும்"*

என்று கொடுமையை எதிர்க்கும் நக்கீர ஆற்றல் நமக்குத் தேவை என்பதையும் சிற்பி வலியுறுத்துகிறார்.

## சீரழிவில் சிதைந்த அமெரிக்கா

1933ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலகமக்களின் கனவுத்தேசமாகக் கொண்டாடப்படும் அமெரிக்காவுக்கு அரசியலில் மிகப்பெரிய நெருக்கடி ஏற்பட்டது. ஏறத்தாழ ஒன்றரைக் கோடி மக்களுக்கு வேலை இல்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் வேலையில்லை என்று அறிவிக்கும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள். வேலை மட்டுமா இல்லை? கடைகளில் பொருள்கள் இல்லை. பால் கூடத்தில் பால் இல்லை. வங்கிகளில் கூட்டம் இல்லை. மக்களுக்கு வீடு இல்லை. தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் நின்றுவிட்டன. அமெரிக்காவில் பொருளாதாரம் இருண்டு கிடந்தது. கருவூலத்தில் சல்லிக்காசு இல்லை. எதிர்காலம் என்ற ஒன்று இருக்கிறதா என்பதே கேள்விக்குறியாக மாறிவிட்டது. சுருண்டுவிட்டார்கள் அமெரிக்கர்கள்.

## வெளிவந்த ஓர் அறிவிப்பு

மிகச் சரியான இந்த நேரத்தில் ஓர் அறிவிப்பு வெளிவருகிறது. அந்த அறிவிப்பு இதுதான். ஒரு புதிய குடியரசுத் தலைவர். அமெரிக்காவில் பொறுப்பேற்றுக்கொள்ளப் போகிறார். அவர்தான் பிராங்க்ளின் ரூசுவெல்ட். மார்ச் 4ஆம் நாள் என்னதான் தரித்திரம் தாண்டவமாடினாலும் ஒரு புதிய குடியரசுத் தலைவர் பொறுப்பேற்றுக் கொள்வதை ஒரு விழாவாகக் கொண்டாடக் கூடாதா? அப்படித்தான் நடந்தது.

இதே வேறு சமயமாக இருந்திருந்தால் பட்டாசுகள் வெடித்துச் சாம்பெயின் தெளித்து, டாலர் மழையில் தொப்பலாக நனைந்தபடி இந்த வரலாற்று நிகழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருப்பார்கள். அன்றுதான் ஒரு தேநீர்க்கே யாருக்கும் வழியில்லையே! உண்மையில் சொல்லப்போனால் ஒரு புதிய அறிவிப்பை மக்கள் சட்டை

செய்யவே இல்லை. கையில் காசில்லாதபோது ரூசுவெல்ட் வந்தால் என்ன? ஹிட்லரே வந்தால் தான் என்ன? உள்ளுக்குள் புலம்பியபடிப் பதவியேற்பு விழாவிற்குச் சென்றார்கள்.

இப்போது குடியரசுத் தலைவர் ரூசுவெல்ட் உரையாற்றுவார் என்ற அறிவிப்பு வெளியாகின்றது. சுவையே இல்லாமல் தலை உயர்த்திப் பார்த்தார்கள் மக்கள். உள்ளுக்குள் ஒரு குறுகுறுப்பு. அமெரிக்கா நோஞ்சானாக மாறிவிட்டது. யாருமே எதிர் பார்த்திராத மிகப்பெரிய பொருளாதாரச் சரிவு. இந்தச் சமயத்தில் இவர் வந்திருக்கிறார். இவர் என்ன பேசப்போகிறார்? என்ன செய்யப் போகிறார்?

## மக்களை மலரச்செய்த மாபெரும் பேச்சு

ரூசுவெல்ட் தமக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த கூட்டத்தை உற்றுப் பார்த்தார். இத்தனைப் பெரிய கூட்டம் சிறுசத்தமும் எழுப்பாமல் அமைதியாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்கிறது என்றால் அது எத்தனை பெரிய சோகம். இதற்கு மத்தியில் தாம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறோம் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. மக்களின் சோகமும் வலியும் அவருக்குப் புரிந்திருந்தன. ஒலிபெருக்கியை நெருங்கினார் ரூசுவெல்ட். பெரிதாகப் பேசிக்கொண்டிருப்பது சலிப்பூட்டிவிடும். தவிரக் கேட்பதற்குச் சினம் வரலாம். இப்போது வேண்டியது சொற் பொழிவல்ல; ஒரு சொல். ஒரு நம்பிக்கை. தெளிவான குரலில் அவர் தொடங்கினார். நாலுவார்த்தை போதாது! அதுவே மிகுதி.

"எப்போதும் போலவே இந்த முறையும் இந்த உன்னதநாடு இந்தச் சிக்கலைச் சமாளித்தே தீரும். மறுமலர்ச்சி வெகுதூரத்தில் இல்லை. நாம் கட்டாயம் முன்னேறுவோம். இதுவே என் வாக்குறுதி". சிலிர்த்து எழுந்தார்கள் அமெரிக்கர்கள். சட்டென்று ஒரு தீப்பொறி போல் பற்றிக்கொண்ட அந்தத் திடீர் உற்சாகத்தை ரூசுவெல்ட் கவனித்தார். மேலும் சில வரிகள் பேசலாம் என்று முடிவு செய்தார்.

"நான் உங்களுக்கு நிச்சயமாக உறுதி கூறுவது ஒன்றைத்தான். நாம் அச்சப்பட வேண்டிய ஒரே செய்தி அச்சம் மட்டுமே. பெயரற்ற,

காரணமற்ற, தேவையற்ற அச்சங்கள் தேவையான முயற்சிகளை முடக்கிவிடுகின்றன. நாம் பின்வாங்குவதை விட்டுவிட்டு முன்னேற வேண்டும்". துள்ளிக் குதித்தது அமெரிக்கா. நாம் அச்சப்பட வேண்டிய ஒரே செய்தி அச்சம் மட்டுமே என்னும் அந்த ஒரு வரிதான் அமெரிக்காவைப் புரட்டிப் போட்டது. ஒவ்வொரு அமெரிக்கரும் இந்த வரியை ஒரு தாரக மந்திரமாக உச்சரிக்கத் தொடங்கினர். அழிவின் விளிம்பில் இந்த அமெரிக்கர்களை இந்த ஒற்றைவரி மீட்டெடுத்தது.

ரூசுவெல்ட்டின் வெற்றியா அல்லது அமெரிக்காவின் வெற்றியா என்றால் இந்த இரண்டுமே வெற்றிபெற்றன. அனைத்தையும்விடத் தங்களுக்குத் தேவைப்பட்டது நம்பிக்கை தான். அதைத்தான் ரூசுவெல்ட் கூர்மையாகக் கவனித்தார். அவர் நம்பிக்கையூட்டினார். அவரது நம்பிக்கையை மக்கள் காப்பாற்றினார்கள்.

## ஈடு இணையற்ற இந்தியக் குடியரசுத் தலைவர்கள்

இன்று இந்தியாவில் அண்மையில் நிகழ்ந்துள்ள குடியரசுத் தலைவர் போட்டியிலேயே குழப்பம், கொந்தளிப்பு; முயன்று பார்த்தும் முடியவில்லை. தோற்றுப்போனது மூன்றாவது அணி. இங்கும் நல்ல குடியரசுத் தலைவர்கள் இல்லாமல் இல்லை. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் இறக்கும் முன் வங்கிக்கணக்கில் வைத்துவிட்டுப்போன பணம் எவ்வளவு தெரியுமா? வெறும் 1432 ரூபாய்தான். அவர் மறைவுக்குப் பின் அவரின் வாரிசுகள் வெளியேறிப் போய்விட்டனர். அவர்களும் அவர் வங்கிக் கணக்கை முடித்துக்கொண்டு பணத்தைப்பெற இன்னும் வரவில்லை.

அண்மையில் குடியரசுத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகியுள்ள அப்துல்கலாமைப் பற்றிச் சிந்திப்போம். குடியரசுத் தலைவராக ஐந்து ஆண்டுகள் வகித்து அப்துல்கலாம் குடியரசுத் தலைவர் மாளிகையைக் காலிசெய்யும் போது தம்முடைய உடைமைகள் குறிப்பாக நூல்கள் தவிர வேறு ஒரு எந்தப் பொருளையும் எடுத்துச் செல்வதில்லை எனக் கூறியுள்ளார். அப்துல்

கலாம் தம்முடைய பதவிக்காலம் முடிந்ததும் தில்லியில் உள்ள அவுரங்கசீப் சாலையிலுள்ள ஒரு வீட்டில் குடியேற உள்ளார். இருப்பினும் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகத்தில் ஊதியம் பெறாத விரிவுரையாளராகவும் அவர் பணியாற்றி வருவார். சென்னையில் கலாம் தங்குவதற்காக அண்ணா பல்கலைக்கழகக் கல்வி இயக்குநர் பல்கலைக் கழகத்தில் தம்முடைய இரண்டு அறைகளைக் காலி செய்து கொடுத்துள்ளார். தில்லியிலும் சென்னையிலும் கலாம் தங்க உள்ள வீடுகளில் வைக்கவேண்டிய பொருள்கள் அனைத்தும் பெட்டிகளில் எடுத்துவைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கலாமின் பழைய ஆவணங்களும் சில முக்கியக் குறிப்புக்கள், 250 நூல்கள், வேட்டிகள், சூட்கள் என அவரின் சொந்தப் பயன்படு பொருள்கள் ஆகியவை அடுக்கிவைக்கப் பட்டுள்ளன.

தில்லியிலுள்ள வீட்டிற்குச் செல்லும்போது ஐந்து பெட்டிகள் மட்டுமே கலாம் கொண்டு செல்ல உள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் குடியரசுத் தலைவராக இருந்த அப்துல்கலாமுக்குக் கிடைத்த அத்தனைப் பரிசுப்பொருள்களையும் அவர் மாளிகையின் சேமிப்பு அறையிலேயே வைத்துவிட்டுச் செல்ல உள்ளார். பதவியில் இருப்பது பணம் பறிப்பதற்கு என்ற நச்சுக் கொள்கை விரைவாக நடமிடும் இந்நாளில் பதவியில் இருப்பது என்பது பணம் துறப்பதற்கே என்ற கொள்கையில் ஊன்றிப்போய் இருக்கும் அப்துல் கலாம் தமிழ் நாட்டவர் என அறிந்து மகிழ்ச்சி அடைவோம்.

## இன்றைய இழிவுச் சமுதாயம்

மூன்று பேரில் ஒருவர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் பல இலக்கவேட்டி, புடவை வழங்குவது இன்னும் தொடர்ந்து வருகின்றது. சமுதாய விடுதலை பெற்றபோது மலைச்சாதியினருக்கு இடஒதுக்கீடு செய்ய அரசியலமைப்புச் சட்டத்தின்படித் தீர்மானம் செய்யப்பட்டது. அதன்பின் பிற்பட்டவர் களுக்கான சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இடஒதுக்கீட்டின் அளவு உயர்ந்துகொண்டே செல்கின்றது. சில ஆண்டுகளுக்கு முன் 50 விழுக்காட்டுக்குக் கீழ் இருக்கக்கூடாது என உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. பல சாதியினர்

தம்மைப் பிற்படுத்தப்பட்டவர், மிகப்பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர் என்று அறிவிக்கப் போராடுகின்றார்கள். விடுதலைக்கு முன் அரசியல்வாதிகள் பிறர்க்கென வாழ்ந்தனர்; துன்புறுத்தப்பட்டனர்; உயிரையும் ஈந்தனர்; இன்று ஆதாயம் தேடுதலையே அடிப்படையாகக்கொண்டு இயங்கும் அமைச்சர்கள், முதலமைச்சர்கள் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்படுகின்றனர். இ.ஆ.ப. பயின்ற ஆட்சிநெறியாளர்களும் இ.கா.ப பயின்ற காவல் துறையினரும் இதற்கு விதிவிலக்கில்லை.

"மனைகள் தோறும் வேதாளங்கள்
மனங்கள் தோறும் பேய் பிசாசுகள்
ஒரு பழையநாடு தன் ஆன்மாவைத்
தொலைத்துவிட்டு அதைத் தேடிப்பெறும்
திராணி கூட இல்லாமல் உலக
வீதியில் தேம்பித்தேம்பி
அழுது நின்று கொண்டிருக்கிறது"

என்ற கவிதை இன்றைய இந்தியச் சமுதாய அமைப்பின் சீரழிவைச் சித்திரித்துக் காட்டுகின்றது.

## கலிகாலத் தொடக்கம்

ஒருவர் தம் தோட்டத்தை மற்றவருக்கு விற்பனை செய்தார். தோட்டத்தில் புதையல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அப்புதையலை வாங்கிக்கொள்ளுமாறு முதல் உரிமையாளரை நடுவர் வேண்டியும் அவர் வாங்க மறுத்தார். இரண்டாவது உரிமையாளரும் வாங்க மறுத்தார். நடுவர் திண்டாடிப்போனார். பதினைந்து நாள் கழித்துத் தம்மிடம் வருமாறு அவர்களை நடுவர் வேண்டினார். பதினைந்து நாள் கழித்தபின் வந்த முதல் உரிமையாளர் புதையல் தமக்கே சொந்தம் எனச் சாதித்தார். இரண்டாவது உரிமையாளரும் தமக்கே எனச் சாதித்தார். இதுதான் இன்றைய கலிகாலத் தொடக்கம்.

## பயன்படுத்தாத அறிவுச் சாவிகள்

உலகம் பிறந்தது. இன்பக்கோட்டை திறந்து இருந்தது; தன்னலம் வந்தது; கோட்டையை இழுத்துப் பூட்டுப் பூட்டியது. இன்பக்

கோட்டையின் பூட்டைத் திறக்கச் சாவிகொண்டு வந்தனர் வரலாற்று நாயகர்கள். ஏசுபிரான் ஒரு சாவி செய்தார். வள்ளுவன் ஒரு சாவி தந்தான். ஆதிசங்கரர் ஒரு சாவி கண்டார். கார்ல்மார்க்சு ஒரு சாவி தந்தார். அண்ணல் ஒரு சாவி கண்டார். பெரியார் ஒரு சாவி தந்தார். அச்சாவிகள் பயன்பட்டனவா? ஈயம், பித்தளை, பேரீச்சம் பழத்திற்கு எல்லாச் சாவிகளையும் முன்பே மக்கள் விற்று விட்டனர்.

## எத்தனைகோடித்துன்பம்!

இன்று வறட்சி, சாதிக் கலவரம், ஆங்காங்கே தீ, மதிப்பெண் பட்டியல் குளறுபடி, சேர்க்கைக் கவலை, பேருந்து வேலை நிறுத்தம், தொலைபேசி இடர்ப்பாடு, இத்தனைக்கும் நடுவில் திரைப்படக்காரர்கள் அடிக்கும் கூத்து, எங்குப்பார்த்தாலும் சிக்கல், குழப்பம், ஊழல்! எத்தனைகோடித் துன்பம் வைத்தாய் இறைவா! என்று வருந்தும் நிலைதான் வாழ்வாரிடத்தில் தங்கியுள்ளது. கண்ணகி சிலைக்குக் கீழ் கற்பழிப்புக்கள், காந்தி சிலைக்குக் கீழ் கள்ளச் சாராயம், காவல்நிலையத்தில் துப்பாக்கித் திருடர்கள் இதுதான் இன்றைய வாழ்க்கை நடைமுறை.

நிறைவாக நாம் இன்று பெற்றுள்ள விடுதலை பற்றிக் கவிஞர் ஒருவர் பாடிய பாட்டொன்றைக் காட்டி இற்றைச் சமுதாய அமைப்பின் சீர்கேட்டைச் சிந்தித்துப் பார்ப்போம்.

*"சும்மா இருப்பதற்கு*
*இங்கே*
*சுதந்திரமுண்டு*
*சுறு சுறுப்பாய்*
*இருப்பதென்றால்*
*அதற்கு*
*அரசாங்க அனுமதிவேண்டும்*
*இங்கே*
*தாகத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறது*
*தண்ணீர்*
*இவர்கள்*
*ஒவ்வொரு சுதந்திர தினத்திலும்*
*கொடியேற்றும் போது*

தேசத்தின் மானம்
இறங்குவது
அரைவாசி
வேகமாய் ஏறுவதோ
விலைவாசி
அலங்கார விளக்குகள்
அணைந்து
நெடுநாளாயிடுச்சு
அடுப்பு விளக்குகளோ
அணைந்து வெகுநாளாச்சு
சுதந்திரம் சுதந்திரம்
என்று
அடிக்கடி யாரும்
சொல்ல வேண்டாம்
தேசத்தில்
சுதந்திரம் என்கிற
வார்த்தையாவது
சுதந்திரமாய் இருக்கட்டும்".

# அறச்சுடர் அண்ணல்

## சான்றோர் வாழ்க்கை சரியான கை விளக்கு

மனித இனத்தின் சிறந்த ஆசான்கள் உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை முறையாகும். பெயரும் புகழும் பெற்ற பெருமனிதர் களின் வாழ்க்கை அவர்கள் மக்களுக்கு அருளும் வாக்கில் அமைவதில்லை. அவர்களைப் பற்றிச் சரியான முறையில் அறிவிக்க - அறிமுகம் செய்ய அவர்கள் எழுதியுள்ள நூல்களோ அல்லது அவர்கள் ஆற்றியுள்ள நுவலரும் செயல்களோ மிகுதியாகப் பயன்பட முடியும். உழைப்பால் தம்மை மிகுதியும் உயர்த்திக்கொண்ட அப்பெருமக்களின் வாழ்க்கை நிலைகளைப் பற்றி அறியாத ஒவ்வொரு நாளும் அறியாமையிலேயே கழியும். மிகத் தாழ்நிலையில் இருந்து தம் இடைவிடாத செயற்பாட்டினால் தம்மை மிக வளர்ச்சிக்குரிய நிலையை அடைந்துள்ளவர்களின் வாழ்க்கை வழிமுறைகள் பற்றி ஆழமாகத் தெரியவருகின்ற ஒருவனின் தக்க பயன்பாட்டிற்கும் உயிர்ப்பூட்டுதலுக்கும் பயன்படுத்துவதற்கும் கைவிளக்காய் அமைந்து நல்வழி காட்டும். அவற்றைப் பயில்வோரின் சிந்தனை வளம் சிறக்கும்.

## காந்தியடிகளின் வாக்கும் போக்கும்

உலக உயர்விற்கு உறுதுணை செய்யும் வாழ்க்கை முறையைக் கையாண்டு இறுதிமூச்சுவரை அம்முறையில் இருந்து சற்றும் மாற்றிக் கொள்ளாத போற்றுதலுக்குரிய பெருமகனின் அறம் பிறழா வாழ்வே அண்ணல் வாழ்வாகும்.

"என் வாழ்க்கைதான் உங்களுக்கு நான் விட்டுச் செல்லும் செய்தி" என்றார் காந்தி. இப்படியும் ஒருவர் வாழமுடியுமா? என்று

வியக்கும்படி அவர் வாழ்க்கை வாழ்ந்தவர். 1948இல் சனவரி 30ஆம் நாள் இவ்வுலகத்தையே தேம்பி அழச்செய்த துயரச் செய்தி புதுதில்லியில் நிகழ்ந்தது. வழிபாட்டுக் கூட்டம் தொடங்க இருக்கின்றது. கனத்த முகத்துடன் அந்த இளைஞன் கூட்டத்துடன் கலந்து நிற்கிறான். இரண்டு பெண்கள் கைத்தாங்கலாக அழைத்துவர வயதான காந்தி நடந்து வருகிறார். அந்த இளைஞன் அவர் எதிரில் நின்று கைகூப்பி வணங்குகிறான். அவரும் வணங்கக் காலில் விழுந்து வணங்கும் இளைஞன் திடீரென எழுந்து துப்பாக்கியை எடுத்து மூன்றுமுறை அவரை நோக்கிச் சுடுகிறான். 'ஓ கடவுளே' என்று சொன்னவாறு காந்தி சரியக் கூட்டம் அவரைச் சூழ்கின்றது. நாட்டுக்கொடி போர்த்தி மிகப்பெரிய மக்கள் வெள்ளத்தில் இறுதி ஊர்வலம் இராணுவ மரியாதையுடன் செல்கிறது. அவரோ ஒரு தனி மனிதர்; எந்தச் சொத்தும் செல்வாக்கும் இல்லாதவர்; எந்த நாட்டையும் அவர் ஆளவில்லை; எந்த அறிவியல் கண்டு பிடிப்பையும் நிகழ்த்தவில்லை; இடுப்புக்கச்சையுடன் இருந்த சாதாரண மனிதர்; காந்தி-இர்வின் ஒப்பந்தத்திற்காக இர்வின் என்ற வைசிராய் மாளிகைக்குச் சென்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு நாட்டின் மிகப்பெரிய கலவரத்தை அடக்கக் காரணமாக இருந்த அப்பெருமகனாரை அன்றைய இங்கிலாந்தின் தலைமை அமைச்சர் சர்ச்சில் அரை நிர்வாணப் பக்கிரி என ஏளனம் செய்தார். (I cannot comprehend this half naked fakir ascending and descending the steps of Vaisaragal lodge - Vincent Churchil). ஆனால் அவர்தான் தம் தேசத்தின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமையேற்றார். உண்மையாலும் அன்பினாலும் மாமன்னர்களைவிட அவர் வலிமையாக வாழ்ந்தார்.

## அங்கதக் கவிதைகளில் அடிகள்

இச்சூழலில் கவிஞர் மு.மேத்தா எழுதிய "தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகன் அஞ்சலி" என்ற கவிதையில் காணப்படும் அங்கதம் கலந்த அவல வரிகளை அசைபோட்டுப் பார்ப்போம்...

"உன்னுடைய படங்கள்
ஊர்வலம் போகின்றன
நீயே நிலை குலைந்தபடி
நடுத்தெருவில்
நிற்கிறாய்

வெருத்துப் போய் விட்ட
தேசப் படத்துக்கு
பொதுச் சாயம் பூசும்
புண்ணிய தினத்து
புத்திர தேசத்துக்காக நீ
புலம்புவது
என் காதில் விழுகிறது.
எங்கள் தேசப் பிதாவே
அமைதி கொலுவிருக்கும்
உன் சிலைகளைப்
பார்க்கும் போதெல்லாம்
நான்
அழுது விடுகிறேன்
.......................

.......................
சுதேசிய ஆயுதமான
கை ராட்டையைச் சுற்றிய சிலர்
தற்போது
தங்கநூல் நூற்கிறார்கள்
எங்களுக்கோ
வெள்ளியும் தங்கமும்
விழாக்களின் பேரில்தான்
வருகின்றன
ஒரேயொரு விஷயத்தை மட்டும்
இந்த நாட்டு மக்கள்
உன்னை அப்படியே
பின்பற்றுகிறார்கள்
அரைகுறையாகத் தான்
உடுத்துகிறார்கள்
தேசம் போகிற போக்கைப் பார்த்தால்
பிறந்த நாள் உடையே
தேசிய உடையாக ஆகிவிடும் போல்
தெரிகிறது”

ஐநூறு ரூபாயில் காந்தி படத்தைக் காணும் கவிஞர் ஒருவர் பின்வருமாறு அங்கதம் தொனிக்கப் பாடுகிறார்......

*"காந்தியே*
*ஏழையிடம்*
*வராமல்*
*உனக்கும்*
*என்ன சிரிப்பு"*

## உயர்ந்து நிற்கும் உலக மேதைகள்

அமெரிக்கா ஆபிரகாம் லிங்களை நம் நினைவுக்குக் கொண்டு வரும். ஈமண்டி வேலரா என்பார் ஐரிஸ் நாட்டை நினைவு படுத்துவார். இங்கிலாந்து பற்றி நினைப்பார்க்குச் சர்ச்சில் பற்றிய நினைப்பு வராமலிருக்காது. இத்தாலியின் நினைவில் முசோலினி வாழ்கிறார். சீனா மாசேதுங்கை நினைவூட்டும். உருசியா லெனின் பற்றிய சிந்தனையை உண்டாக்கும். செர்மனி ஹிட்லரை நினைவுறுத்தும். பாரதமோ அண்ணல் காந்தியை நினைவுறச் செய்யும். காரணமென்ன? அவர்களுக்குப் பாடுபடத்தான் தெரியும்; பாராட்டுப்பெறத் தெரியாது. அவர்களுக்கு வெற்றிபெறத் தெரியும்; வெற்றிக்காக விழா எடுக்கத் தெரியாது. அவர்களுக்குப் பதுங்கத் தெரியும்; பாயவும் தெரியும்; பயப்படத் தெரியாது. அவர்களுக்கு மன்னர்களையும் அமைச்சர்களையும் தெரியாது; ஆனால் மக்களைத்தான் தெரியும். அவர்களுக்கு வாழத்தான் தெரியுமே தவிர வயிறு வளர்க்கத் தெரியாது. அவர்களுக்கு பாய் தான் தெரியும். பட்டு மெத்தை அவர்கள் கண்களில் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்த ஒன்றெல்லாம் அடக்கம்தான். ஆடம்பரம் அவர்கள் அறியாதது. அவர்களுக்குத் தொண்டனாகத் தேவைப்படுகிற இடத்தில் தலைவனாக நடக்கத் தெரியும்; ஆனால் நடிக்கத் தெரியாது. அவர்களுக்கு எவரோடும் பழகத் தெரியுமே தவிர யாரையும் பகைக்கத் தெரியாது.

## அடிகள் ஆற்றிய அரும்பணி

அன்று மகாத்மா காந்தி; இன்று இலாலுபிரசாத்,அன்று கலைவாணர்; இன்று கவுண்டமணி, அன்று பாரதியார்; இன்று.....

இந்த அறுபது ஆண்டுகளில் இந்தியச் சமூகம் காலத்தின்மீது பதித்துச் செல்லும் சுவடுகளில் எத்தனை மாற்றம்! இது வளர்ச்சியா? இது வீழ்ச்சியா? அரசியலில் யாமறிந்த மனிதரிலே காந்தியைப்போல் நேருவைப்போல் பட்டேலைப் போல் யாங்கணுமே காணவில்லை. இது பக்திக் காலமல்ல. பல சோதனைகளுக்கான காலம். காந்தியைப் போல் ஒரு சத்திய நெருப்பை, நேருவைப் போல் ஒரு தீர்க்கதரிசியைச் சுபாசைப்போல் ஒரு சுத்த வீரனை அரசியலில் இனிப்பார்க்க முடியாது. இந்த அறுபது ஆண்டுகளில் என்ன நடந்திருக்கின்றது? இந்தியர்கள் பணத்தைத் தேடியிருக்கிறார்கள்; ஆனால் மரியாதையைத் தொலைத்திருக்கிறார்கள். அருகம்புல் வாளேந்தி நிற்கிறது. களவுத் தொழிற்சாலையில் காசு ஒன்றே கவனம் எனக் குறுகி நிற்கின்றது. நேர்மை குறைந்துள்ளது. பசி மிகுந்துள்ளது. பிணக்குகள் இருக்கட்டும். நீங்கள் கவலைகொள்ள வேண்டிய தெல்லாம் ஒன்றே ஒன்றைப் பற்றித்தான். நேர்மையான உழைப்பு, நம்பிக்கை நிறைந்த மனங்கள் இவற்றைக் கொண்டே இந்தியா இத்தனை நாள் வெற்றிபெற்றிருக்கின்றது. காந்தியடிகள் நமக்குக் கற்றுத்தந்த பாடமும் அதுவே. இவற்றை இழந்துவிட்டு இனி எதை அது வெற்றிபெறும்?

காந்தி,நேரு ஆகிய பெருந்தலைவர்கள் மக்களின் நல்ல தன்மையில் மிக நம்பிக்கை வைத்தனர். விடுதலை பெற்றபின் நாட்டு மக்களின் உழைக்கும் ஆர்வம் பத்து மடங்காகப் பெருகும் என்று கனவு கண்டனர். அக்கனவை நாம் நிறைவேற்றி உள்ளோமா? நினைப்பே நெருஞ்சியாய்க் குத்துகின்றது. ஆனால் இன்றைய மக்களின் மனநிலையை அன்றே அறிந்தார் நேதாஜி. இந்தியா விடுதலை பெற்றபின் பத்து ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சிதான் நடக்கவேண்டும் என்பது அவரது விருப்பமாகும். அப்போதுதான் மக்கள் மனத்தில் கிடைத்த விடுதலையின் அருமை புரியும். நாட்டுப் பற்றுப் பெருகும். அவர் கூறியது நடக்காததால் மோதல்கள், முரண்பாடுகள் மக்களிடையே நாளும் நடக்கும் நிகழ்வுகளாக வுள்ளன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்களும் வாழ வழிகாட்டியவர் அண்ணல் ஆவார். தனிமனித நலம் சமுதாய நலனில் இருக்கின்றது என்பதைக் கண்டுகொண்ட காந்தியடிகள் தனிமனிதர்களின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் சமுதாயத்தின் உயர்வு இருப்பதனை அறிந்து வலியுறுத்தினார். தமது வாழ்க்கையில் முயன்று ஆன்மீக வழியில் நெறிப்படுத்திக்கொண்டு மகாத்மாவாக

உயர்ந்த அண்ணல் தம்மோடு இருந்தவர்களும் உயரவேண்டும் என எண்ணினார்.

## அடிகள் நடத்திய கூட்டுச் சமுதாய வாழ்வு

தென்னாப்பிரிக்காவில் பொது வாழ்க்கையை மேற்கொண்ட காலத்தில் 'போனிக்ஸ்' குடியிருப்பிலும் டால்ஸ்டாய் பண்ணையிலும் கூட்டுச் சமுதாய வாழ்க்கையை மேற்கொள்ள அவர் முயன்றார்; அங்கு உடன் வாழ்ந்தவர்களிடம் சில வாழ்க்கை நெறிமுறைகளை உருவாக்க எண்ணினார். 1914இல் அடிகள் இந்தியாவிற்குத் திரும்பியபொழுது அவர் புதியதொரு வாழ்க்கை வாழத் தீர்மானித்தார். அவ்வடிப்படையில்தான் 1915இல் மே 15ஆம் நாள் அகமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமத்தைத் தொடங்கினார். ஆசிரமத்தில் வாழ்பவர்கள் பின்பற்றவேண்டிய நெறிமுறைகளை 1915 மே25இல் காந்தியடிகள் வகுத்தளித்தார். அதில், "ஆசிரமத்தின் நோக்கம், ஆசிரமவாசிகள் உலக நலனுக்கு முரண்படாமல் நாட்டிற்குத் தொண்டு செய்யத் தகுதி உடையவர்களாக்கிக் கொள்வதும் அதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்வதுமாகும்" என்கின்றார். அதில் இடம் பெற்றுள்ள குறிக்கோளை அடையக் கீழ்கண்ட நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என அவர் குறிப்பிடுகின்றார். வாழ்க்கையில் தள்ளவேண்டிய தீமைகளை ஏழாகக் காட்டியவர் கொள்ளவேண்டிய நெறிகளாகப் பதினொன்றைச் சுட்டியுள்ளார். அவை:

1. சத்தியம் (Truth) அல்லது வாய்மை
2. அஹிம்சை அல்லது அன்பு (Non-Violence or Love)
3. பிரம்மச்சரியம் (Bramacharya)
4. நாவடக்கம் (Control of the Palate)
5. திருடாமை (Non-Stealing)
6. வறுமையின் உடைமையின்மை (Non-Possesion of Poverty)
7. உடல் உழைப்பு (Bread Labour)
8. சுதேசி (Swadeshi)

9. அஞ்சாமை (Fearlessnes)

10. தீண்டாமை அகற்றுதல் (Removal of Untouchability)

11. சகிப்புத் தன்மை (Tolerance)

உறுதிமொழி என்பதை வடமொழியில் விரதம் அல்லது பிரதிக்ஞை என்கின்றனர். உறுதிமொழி என்பதன் பொருள் எதற்கும் அஞ்சாமல் அறுதியிட்டு உறுதி செய்தலாகும். அது சலனங்களையும் சபலங்களையும் விட்டொழிக்க உதவுகிறது. மனக்கலக்கங்கள் உறுதியைக் குலைக்கும் என்றால் அவ்வுறுதி அர்த்தமற்றது. சிலர் உறுதிமொழி எடுப்பது ஆற்றலின்மையின் அறிகுறி என்று கூறுவதைக் காந்தியடிகள் மறுக்கின்றார். அவர்களுக்கு மறுமொழியாக "வணிகத்துறை முழுவதும் மனிதர்களின் வாக்குறுதிகளைத் தொக்கியே செயல்படுகிறது. நற்குணங்களை வளர்த்துக்கொள்ள அல்லது அகஉணர்வு பெற அத்தகைய வாக்குறுதிகளின் தேவை குறைவானதா? ஆகையால் நம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளவும் ஆன்ம அறிவு பெறவும் உறுதிபெறத் தேவையாகின்றது" என்று கூறுகின்றார். காந்தியடிகள் ஆசிரமவாதிகள் பின்பற்றும் பதினாறு விரதங்களுக்கும் பல இடங்களில் விளக்கம் அளிக்கின்றார். விரதங்களை எப்படிப் பின்பற்றுவது என்பதற்கு அவரது வாழ்க்கையை வழிகாட்டுதல் இலக்கியமாய் உள்ளது.

காந்தியடிகள் ஒரு பெரும் சமுதாயப் புரட்சியாளர். மிக மென்மையாகத் தொடங்கிய அவர் வாழ்க்கை கண்மூடிப் பழக்கங்களை, சமுதாயச் சீர்கேடுகளை, பொருளாதாரச் சிறுமைகளை, அரசியல் அடிமைத் தனங்களை, சமய வேறுபாடுகளை மண்மூடச் செய்கின்ற புரட்சி வாழ்க்கையாக மாறியது. காந்தியடிகள் செய்த புரட்சியே மனித வாழ்க்கையில் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய முழுமையான புரட்சியாகும். மக்களின் நலனுடன் தொடர்புடைய ஒவ்வொரு துறையிலும் மாற்றங்களைக் கொண்டுவந்து எல்லோரும் இன்புற்றிருக்கின்ற சமுதாயத்தை அமைக்க விரும்பினார். எந்த அடிப்படை மாற்றமும் புரட்சியும் மின்னல் வெட்டைப்போல் திடீரென்று நிகழ்வதில்லை. அதற்கான தளத்தைப் படிப்படியாக உருவாக்குகின்றபொழுது சூழல் கனிந்த நிலையில் புரட்சி

நடக்கின்றது. இம்முறையில்தான் காந்தியடிகளும் தம் புரட்சியினை நிகழ்த்தினார். 1919 முதல் 1947 வரை இந்திய விடுதலை வரலாற்றையும் தமது வாழ்க்கை வரலாற்றையும் பிரிக்க முடியாத ஒன்றாக மாற்றிக்கொண்டவர் காந்தியடிகள். உலகத்திற்கு ஒரு முழுமையான அன்பு வழியில் விடுதலை தேடித்தந்து தன்னிகரற்ற தலைவராகத் திகழ்பவர் காந்தியடிகள். பண்டித சவகர்லால் நேரு காந்தியடிகளைப் பற்றிக் "காந்தியடிகளின் செல்வாக்கு அவரது கருத்தை ஏற்பவர்களிடம் மட்டுமோ, தேசியத் தலைவராக ஏற்றுக் கொண்டவர்களின் மட்டுமோ நின்று விடுவதில்லை. அவரோடு ஒத்துப்போகாதவர்களிடமும் குறை கூறுபவர்களிடமும் கூட அவரது செல்வாக்கு இருந்தது. போராட்டக் காலத்தில் எல்லோரும் அவரை விட்டால் வேறு தலைவர் இல்லை என்ற முறையும் ஏற்றுக் கொண்டனர்" என்கின்றார். தீவிரவாதிகளும் மிதவாதிகளும் தங்கள் தலைவராகக் காந்தியடிகளை ஏற்றுக்கொண்டது வரலாறு காணாத ஒன்றாகும்.

"யான் மகாத்மா அல்லன். என் பொருட்டு எதுவும் செய்யாதிரு. பேசா நோன்பின் போதும் எனது தரிசனம் விரும்பப்படுகிறது. தரிசனம் அளிக்க யான் அருகனல்ல. யானும் உங்களைப் போன்ற மனிதன், ஆசை அவாக்களை எழுப்பும் மலப்பாண்டம். இத்தகைய யான் தரிசனம் வழங்குவதற்கு எங்ஙனம் தகுதியுடையவனாவேன்?" என்ற அடிகளின் கூற்றில் பொருந்தியுள்ள எளிமையும் பணிவும் மக்களிடையே அவரை உயர்த்திக்காட்டின.

## அடிகள் பற்றி அண்ணா

காந்தி என்ற பேரருளாளரைப் பற்றி அறிஞர் அண்ணா விடுத்த பொன்மொழிகளுடன் இக்கட்டுரையை நிறைவு செய்வோம்.

"அவர் ஒரு தூயவர், நமது நாட்டின் மாசு துடைத்திடும் மகான்" என்பாரும், அவர் ஒரு விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சாநெஞ்சினர் என்பாரும், அவர் ஒரு வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றிற்குப் புதிய விளக்கம் அளித்தார் என்பாரும், அவர் ஒரு சமதர்மவாதி, ஏழைப் பங்காளி, ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும் அவர் கிராம ராச்சியம் அமைத்திட முனைந்தவர் என்பாரும் இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றைக் கொண்டு அளவிட்டு வியந்து

பாராட்டுவோர் எனப் பல்வேறு வகையினர் உளர். காந்தியடிகள் ஒரு தனிமனிதர் என்ற முறையினில் மட்டும் கவனிக்கவேண்டியவர் அல்லர். அவர் காலத்தின் சின்னம். ஓர் எழுச்சியின் அடையாளம். ஒரு மறுமலர்ச்சியின் உருவகம். அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் நிறைவு அடைய விரும்பினால் அவருடைய அறப்போர் மாண்பினில் மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும். ஆனால் அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றிபெற்று மொத்தத் துறைகளிலே ஈடுபடாமல் இருந்தவர் அல்லர். அவர் அனைத்துத் துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர். அனைத்துத் துறையினரும் "எமக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார்; எமக்காகவே பணிபுரிந்தார்" என்று சொந்தம் கொள்ளத் தக்க வகையினிலே அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

பெரிது எது?

ஔவைப் பெருமாட்டியிடம் பெரிது எது? என வினவியதற்கு இவ்வுலகம் பெரியது என்றாள். அதைவிடப் பெரியவள் உலகத்தைப் படைத்த நான்முகன் ஆவான். அவனைவிடப் பெரியவள் அவனைத் தம் உந்திக் கமலத்தில் பிறக்கச்செய்த திருமால் ஆவார். அவரைவிடப் பெரியது அவரைத் தாங்கியுள்ள பாற்கடல் ஆகும். அதைவிடப் பெரியவர் அக் கலயத்தினுள் அடக்கிவைத்த குறுமுனி அகத்தியர் ஆவார். அக்கலயமோ மண்ணின் ஒரு சிறு துளியாகும். மண்ணைவிடப் பெரியவன் அதனைத் தாங்கி நிற்கும் ஆதிசேடன் ஆவான். அவ்வாதிசேடன் அம்மையின் விரல் மோதிரத்துக்குள் அடங்கியவர். அம்மையோ அப்பனின் உள்ளத்திற்கு அடிமையாவாள். அப்பனோ தொண்டர்களுக்கு அடிமையாவார். எனவே தொண்டர் தம் பெருமை பேசவும் ஒல்லாததாகும். வாழ்க்கையில் அனைத்துத் துறைகளிலும் அடிகள் ஏற்றிவைத்த அறவிளக்கின் சுடரை மேலும் மிகச் செய்வோமாக.

## ஆற்றவேண்டிய நன்றிக்கடன்

காந்தியடிகள் மறைந்து ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. ஐயாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நம் இந்திய நாடும் இந்திய மக்களும் உள்ளவரை அண்ணலின் பேரும் புகழும்

என்றும் இந்த மண்ணைவிட்டு, மக்கள் மனத்தைவிட்டு நீங்காது நிலைத்திருக்கும். ஏனெனில் வாய்மை அவரது தத்துவம். சமத்துவம் அவரது இலட்சியம். தொண்டு அவரது குறிக்கோள். தியாகம் அவரது கோட்பாடு. காந்தியடிகளுக்கு வெண்கலச்சிலை, பளிங்குச் சிலை, நினைவுத்தூண் போன்ற சின்னங்களை எழுப்ப வேண்டுமெனச் சிலர் சொல்கிறார்கள். இது அவரைப் பழிப்பதாகும். அவர் நமக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றார். அவர் எவ்வாறு வாழ்ந்து எவ்வாறு உயிர்விட வேண்டுமென்பதைக் காட்டிவிட்டுப் போயிருக்கின்றார். அவருக்குத் தகுதியான நினைவுச் சின்னம் அவர் காண்பித்த வழியில் சென்று வாழ்விலும் சாவிலும் பாடுபடுதல் ஆகும். அடித்தளத்தில் நசுக்கப்பட்ட மக்கள் விடுதலையாக வளர்ச்சி பெறச் செய்வதுதான் அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

✿

# அடிகள் அகற்றிய அல்லவை ஏழு

## உயர்திணையும் அஃறிணையும்

மனிதன் தன்னை உயர்திணை என்கிறான், மற்ற உயிரினங்களை அஃறிணை என்கிறான். திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள். மனிதன் மற்ற உயிரினங்களை விட உயர்ந்த ஒழுக்கமுடையவனா? மனிதன் தன்னை ஒத்த மனிதர்களை அடக்குகின்றான்; ஒடுக்குகின்றான்; அடிமைப்படுத்துகின்றான். இவற்றை எல்லாம் மற்ற உயிரினங்கள் செய்வதில்லை. மனிதன் கொள்ளையடிக் கின்றான்; ஊழல் புரிகின்றான்; ஏமாற்றுகின்றான்; வஞ்சகம் புரிகின்றான். இவற்றையெல்லாம் மற்ற உயிரினங்கள் செய்வதில்லை. மனிதன் பொய் சொல்கின்றான்; புறம் பேசுகின்றான்; தகாத வார்த்தைகளால் திட்டுகிறான். இவற்றையெல்லாம் மற்ற உயிரினங்கள் செய்வதில்லை. மனிதன் செய்யும் படுபாதகங்களுக்கு எல்லாம் கரணியம் என்ன தெரியுமா? அவன் பெற்றிருக்கிற விடுதலை உணர்வாகும். இந்த விடுதலை மற்ற உயிரினங்களுக்கு வழங்கப்படவில்லை. அவை எப்படி விதிக்கப்பட்டனவோ அப்படியே விளங்குகின்றன. கதிரவன் குளிர்ந்துபோகாது. மாமரம் நெல்லிக்காயைத் தராது. கழுகு பொய் பேசாது. வான்கோழி மயிலின் தோகையைத் திருடாது. காரணம் மற்ற உயிரினங்களுக்கு அறிவும் வழங்கப்படவில்லை; விடுதலை வாழ்க்கையும் வழங்கப்பட வில்லை. மனிதனுக்கு மட்டுமே அறிவும் விடுதலையும் வழங்கப் பட்டிருக்கின்றன.

## கருமமே கட்டளைக்கல்

எங்கே போகவேண்டுமோ அங்கே விரைந்து செல்ல வானஊர்தி மனிதனிடம் உண்டு; மற்ற உயிரினங்களிடம் இல்லை. அறைக்கு

இருந்தபடி அகிலத்தையே விரல் அசைவில் கொண்டுவரும் கணினி மனிதரிடம் உண்டு; மற்ற உயிரினங்களிடம் இல்லை. கோடிக் கணக்கானவர்களை ஒரு நொடியில் அழிக்கும் வெடிகுண்டு மற்ற உயிரினங்களிடம் இல்லை; மனிதனிடம் தான் உண்டு. மற்ற உயிரினங்கள் படையெடுத்துச் சென்று படுகொலைகள் செய்வதில்லை; மனிதன் செய்கின்றான். மற்ற உயிரினங்களிடம் சாதி, மதம் இல்லை. அதனால் உண்டாகும் மோதல்களும் இல்லை. மனிதனிடம் இவையெல்லாம் உண்டு. மற்ற உயிரினங்களைத் திருத்த இறைவன் இறைத்தூதர் அனுப்பவில்லை. காரணம், தேவைப்படவில்லை. மனிதனுக்குத் தான் இறைவன் இறைத் தூதர்களை அனுப்பினான். ஆனாலும் மனிதனைத் திருத்த முடியவில்லை.

## வரமே சாபம்

எந்த அறிவும் விடுதலையும் மனிதனுக்கு வரங்களாக அருளப் பட்டனவோ அவையே அவனுக்குச் சாபங்களாகவும் ஆகிவிட்டன. நன்மை எது? தீமை எது? என்று காட்டும் பொறுப்பு மட்டும் இறைவன் ஏற்றுக்கொண்டான். அந்த இரண்டில் எது வேண்டுமோ அதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மனிதனுக்கே கொடுத்தான். மனிதனோ மிகுதியும் தீமையையே தேர்ந்தெடுக்கிறான். ஏனெனில் தீமைகள் இன்பவேடம் தரித்துக் கவர்ச்சியாக ஒப்பனை செய்து கொண்டிருக்கின்றன. மனிதன் மிருக நிலைக்கும் தெய்வ நிலைக்குமிடையே இரண்டையும் இணைக்கும் பாலமாகப் படைக்கப்பட்டான். ஆனால் அவன் இரண்டுக்கும் இடையில் ஆடும் ஊஞ்சலாக இருக்கிறான். அவன் தறி நாடாவைப்போல் இரு துருவங்களுக்குமிடையே மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கிறான். புலால் உண்ணும் விலங்குகள் கூடப் பசித்தால்தான் பிற விலங்குகளைக் கொல்லும். மனிதனோ எக்காரணமுமின்றிக் கொலை செய்கிறான். அதில் மகிழ்ச்சி அடைகின்றான். விலங்குகளின் வரலாற்றில் ஒரு கிரோசிமாவை, ஒரு நாகசாகியை நாம் பார்க்க முடியாது. இரு நாடுகளுக்குமிடையே போர் மூண்டால் ஒவ்வொரு நாட்டவரும் எத்தனை பேர் மாண்டனர் என்பதில் ஆர்வமாயிருக்கின்றனர். மாண்டவர் தொகை மிகுதியாக இருந்தால் அவன் மகிழ்கிறான். மனிதன் இறந்த காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் நிகழ்காலத்திற்கு எப்போது வரப்

போகிறான் என்று தெரியவில்லை. சிறந்த மனிதன் என்ற ஞானச் சிகரம் அவனுக்காக காத்திருக்கிறது. அந்தச் சிகரத்தில் ஏறி நிற்கும் போதுதான் அவன் முழுமையடைகிறான்.

## ஐவகை வாழ்க்கை முறை

காந்தியடிகளால் இந்தியாவுக்கு வாய்த்த சிறந்த பொருளாதார நிபுணரான குமரப்பா அவர்கள் இவ்வுலகில் நடைபெறுகின்ற வாழ்க்கை முறைகள், அவற்றி இயைபை ஒட்டி ஐந்து வகையாகப் பிரிக்கின்றார். அவை:

### 1. கொலை வாழ்க்கை

இதற்குப் புலியை எடுத்துக்காட்டாகக் கூறலாம். புலி எதிர்ப்படும் விலங்கை அடித்துக்கொன்று தின்று வாழும். தனக்கு இரையாகும் விலங்கைப் பற்றி அது கவலைப்படுவதில்லை. தன்னலம்தான் அதனை இயக்கும் ஆற்றலாக இருக்கிறது. இதைப் போலவே பிழைசெய்து உயிர்வாழும் புலி வாழ்க்கை நடத்துகின்ற வர்கள் சமுதாயத்தில் இருக்கின்றனர்.

### 2. கொள்ளை வாழ்க்கை

இதற்கு எடுத்துக்காட்டாகக் குரங்கைக் கூறலாம. யாரோ ஒருவர் உழைத்துப் பழத்தோட்டம் ஒன்றை உருவாக்குகின்றார். தோட்டத்தில் கனிகள் குலுங்குவதைக் காணும் குரங்கு வேலி தாண்டிச் செல்கிறது. பழங்களைக் கொள்ளை இடுகிறது. இதே போன்று உழைக்காமல் இருக்கின்ற சிலர் பிறர் உழைப்பைத் திருடி வாழ்வதைச் சமுதாயத்தில் காணலாம். இவர்கள் அடிக்கும் கொள்ளை இருமுறைகளில் நடைபெறும். ஒன்று சட்டத்திற்குப் புறம்பானது. ஒருவர் அயர்ந்திருக்கும் நேரத்தில் அவர் பொருளைத் திருடுவதைச் சான்றாகக் காட்டலாம். இவர்கள் அகப்பட்டுக் கொண்டால் தண்டனை பெறுவர். மற்றொன்று சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுக் கொள்ளையடிப்பதாகும். அதாவது நமக்கு எது உரிமையில்லையோ அதைப் பெறுவதாகும். ஊழலில் ஈடுபடுவது, நியாயமான அளவுக்கு மேல் வட்டி, வாரம்

வாங்குவது ஆகியவற்றைக் கூறலாம். இத்தகைய குரங்கு வாழ்க்கை வாழ்பவர்களும் சமுதாயத்தில் இடம்பெற்றுள்ளனர்.

## 3. முயற்சி வாழ்க்கை

இதற்கு மேற்கோளாகத் தேனீயைக் கூறலாம். தேனீ மலர்களை நாடிச்சென்று மது எடுத்துத் தேனாக மாற்றி வாழ்கின்றது. தனக்கு உணவாகத் தேன் தரும் மலரில் மகரந்தச் சேர்க்கைக்கு வழிசெய்து அதனைத் தாயாக மாற்றும் பணியைத் தேனீ செய்கின்றது. தேனீக்களைப் போல முயற்சியால் வாழ்கின்றவர்கள் சமுதாயத்தில் மிகுதியாக இருக்கின்றனர். இந்த வகை வாழ்க்கை முதலிரண்டு வகைகளைவிடச் சிறந்தது.

## 4. கூட்டு வாழ்க்கை

தேனீக்கள் சமுதாயமாகச் சேர்ந்து வாழ்வதை இதற்கு எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். இவ்வகை வாழ்க்கையில் உழைக்கின்றவர்கள் தங்களுக்கு மட்டும் உழைக்காமல் தங்களைச் சார்ந்தவர்களுக்காகவும் சேர்த்துப் பாடுபடுகின்றனர். ஓரளவு தியாகம் சேர்ந்த வாழ்க்கையாக இது அமைகின்றது. மற்றைய மூன்று நிலைகளைவிட இது சிறந்த வாழ்க்கையாகும்.

## 5. தாய்மை வாழ்க்கை

இதற்கு எடுத்துக்காட்டாகப் பெற்ற தாயைக் குறிப்பிடலாம். தாய் தனது பிள்ளைகளுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் ஒப்படைக்கிறார். தாயின் தன்னல மறுப்பு தொண்டாக மலர்ந்து மணம் பரப்புகின்றது. கைம்மாறாக எதையும் எதிர்பாராது தன்னலம் நீங்கிய வாழ்க்கையை மேற்கொள்கின்றவர்களை அரிதாகவே சமுதாயத்தில் காண முடிகிறது. எல்லாவகை வாழ்க்கை முறைகளிலும் இதுவே சிறந்தது. சமுதாயத்தில் அரிதாகக் காணப்படும் தாய்மை வாழ்க்கையாக எண்ணிக்கையில் பெருக்கிக் காட்டும் பணியையே அடிகள் மேற்கொண்டார். பேய்மை வாழ்க்கை ஒழித்துத் தாய்மை வாழ்க்கையை அடையத்தான் ஒவ்வொருவரும் தள்ள வேண்டியவற்றையும் கொள்ளவேண்டிய வற்றையும் அடிகள் வகுத்துக்கொடுத்தார்.

## தவறுதல் மனித இயல்பு

தவறிழைத்தல் என்பது மனித இயல்புகளுள் ஒன்றாகும். பிறந்ததிலிருந்து இறக்கும்வரை எவரும் முழுத்தூய்மையராக வாழ்ந்திட முடியாது. இறைவனே மனிதத் திருப்பிறப்பு எடுத்தபின் தவறுகளைக் கைவிட முடியவில்லை. காக்கும் கடவுளாகிய பெருமாள் இராமன் என்ற மனிதனாக நடமாடியபொழுது இரு பிழைகள் செய்தான். அவற்றுள் ஒன்று அறியாமையில் நிகழ்ந்தது. மற்றொன்று அறிந்தே நிகழ்த்தியது. கடலாடச் சென்ற இராமன் கைக்கணையைச் செங்குத்தாக மண்ணிலூன்றி நீராடச்சென்றான். நீராடி வெளிவந்தபின் தன் கணையை வெளியில் எடுத்தபொழுது அதில் குருதிக்கறை படிந்திருந்தது. என்னவென்று ஊன்றிய இடத்தை இராமன் உற்றுப்பார்த்த பொழுது இவனது கைக்கணையில் தேரை ஒன்று தாக்கப்பட்டிருந்ததைக் கண்டான். தான்பட்ட துயரைத் தனக்குச் சொல்லியிருக்கலாமே என்று கூறிய இராமனுக்குத் தான் தாக்கப்படும் போதெல்லாம் இராமனின் திருப்பெயரை ஒலித்தே பிழைத்து வந்துள்ளதாகவும் அந்த இராமனின் கணையே தன்னைத் தாக்கியபொழுது யாரிடம் முறையிடுவது என்று தேரை கூறியதாகச் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. இப்பிழை இராமன் அறியாமல் செய்ததாகும்.

சுக்ரீவனின் தமையனான வாலி தவறில்லாதவன் எனத் தெரிந்திருந்தும் நேரிலே போரிட முடியாமல் வாலியைச் சுக்ரீவனுக்காக மறைந்திருந்து இராமன் தாக்கினான். இப்பிழையை இராமன் அறிந்தே செய்தான். இறைவனே மனிதப் பிறப்பெடுக்கும் பொழுது தவறுகளைச் செய்கின்றபோது அவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் தவறு செய்வது இயல்புதானே! “who is a saint?” என்ற வினாவை விவேகானந்தரிடம் எழுப்பியபொழுது “A saint is a transformed sinner” என்றே விடை தந்தார் விவேகானந்தர். அப்படியானால் “who is a sinner?” என்ற வினா எழுப்பப்பட்டபொழுது “A sinner is a potential saint” என்ற பதில் விவேகானந்தரிடமிருந்து வந்தது. உலக அரங்கில் இந்தியாவை மேம்படச் செய்த விவேகானந்தரின் இளமைப்பருவம் கூடக் குற்றம் குறை யுடையதாகத்தான் இருந்தது. இதற்குக் காந்திவாழ்க்கையும் விதிவிலக்கல்ல.

## அடிகளின் நான்கு வகைக் கால வாழ்வு

காந்தியடிகளின் வாழ்வை நான்கு பிரிவுகளாகப் பகுத்து ஆராய்ந்தால் அவர் வாழ்வே ஒரு தத்துவமாக முளைத்து வளர்ந்ததென்பதை அறியலாம். முதலாவது காலக்கட்டமாக அமைவது அவரது இளமைக்காலம் ஆகும். (1869-1888) இக்காலத்தில் குற்றங்களும் குறைகளும் நிறைந்தவராகக் காணப்படுகிறார். ஆனால் அரிச்சந்திரன் நாடகம் தோற்றுவித்த வாய்மை ஈடுபாடு தவறு செய்தபொழுதெல்லாம் மனச்சான்றின் குரலாகவே ஒலிக்கத் தொடங்கியது. தவறை உணர்ந்து ஏற்றுக்கொள்கிற பண்பு அவரது இயல்பாகிறது. தந்தை தந்த நேர்மைப் பண்பும் தாய் வழங்கிய இறைப்பற்றும் தக்க அடிப்படைகளாக அவருக்கு அடிப்படையாக அமைந்தன.

இக்காலத்தைப் பற்றிக் காந்தியடிகளே "ஒன்று மாத்திரம் என்னுள் ஆழ வேரூன்றியது. ஒழுக்கமே எல்லாவற்றிற்கும் அடிப்படை. சத்தியமே ஒழுக்கமும் எல்லாவற்றின் சாரமும் என்று நான் கொண்ட உறுதியும் அது" என்றார்.

அவரது வாழ்வின் இரண்டாம் பகுதி இங்கிலாந்தில் படித்த காலமாகும். இக்காலத்தில் அவரது உள்ளத்தின் திண்மை மேலும் உறுதிப்பட்டது. மூன்றாவது காலக்கட்டம் அவர் தென்னாப்பிரிக் காவில் வாழ்ந்த காலமாகும். தென்னாப்பிரிக்கா பல வழிகளிலும் அண்ணலின் சோதனைக்காலமாக அமைந்தது. இக்காலத்தைப் பற்றிக் கூறுகையில் "அவருடைய வாழ்க்கை பெரும் மாற்றத்திற்குள்ளானது. புறம் ஆனவைகளில் மட்டுமல்ல, அவரது வாழ்க்கைமுறையிலும் புதிய மதிப்புக்களைப் பெறுவதிலும் மாறுதல்கள் ஏற்பட்டன" என்று பி.ஆர்.நந்தா குறிப்பிடுகிறார். அவரது வாழ்வின் நான்காவது காலக்கட்டமாக இந்தியாவில் வாழ்ந்த காலமாகும். இக்காலத்தில் இந்திய வரலாறும் அவரது வாழ்வும் பின்னிப்பிணைந்து நடைபோட்டன. எனவே தவறுதல் என்பது மனித இயல்பு. ஆனால் தவற்றைத் திருத்திக்கொள்வது மனிதப் பண்பாகும். மீண்டும் தவறு செய்வது தப்பிவித்தனமாகும் என்ற உண்மையைக் காந்தியடிகளின் நான்கு வகைக்காலம் நமக்கு உணர்த்துகின்றது.

## பெரிது ஐந்தா! ஆறா!

பொருட்காட்சி ஒன்றில் மூன்று கண்ணாடிப் பெட்டிகள் இடம் பெற்றிருந்தன. ஒரு பெட்டியில் 'இதன் கொடுக்கில் நஞ்சு உள்ளது' என எழுதப்பட்டிருந்தது. பார்த்தால் அது தேளாகும். அடுத்த பெட்டியில் 'இதன் பல்லில் நஞ்சு உள்ளது' என்ற குறிப்பு வைக்கப் பட்டிருந்தது. பார்த்தால் அது அரவமாக இருந்தது. அடுத்த கண்ணாடிப் பெட்டியில் 'உடம்பெல்லாம் நஞ்சு' என்ற குறிப்பு இடம் பெற்றிருந்தது. பார்த்தால் பொருள் எதுவும் இல்லை. பார்க்கும் மனிதனே கண்ணாடியில் தெரிந்தான். தேளின் வாய்ப் பக்கம் போனால் உயிர் மீளலாம். ஆனால் உடம்பெல்லாம் நஞ்சைச் சுமந்து கொண்டிருக்கும் மனிதனிடமிருந்து எவ்வழியிலும் நம்மைக் காப்பாற்ற முடியாது. எனவேதான் கவிஞர் வைரமுத்து தாம் எழுதிய 'ஐந்து பெரிது ஆறு சிறிது' என்ற கவிதையின் நிறைவாக இடம்பெறச் செய்துள்ள வரிகளை நினைத்துப் பார்த்தல் நல்லது.

*"சீ மிருகமே*
*என்று*
*மனிதனைத் திட்டாதே*
*மனிதனே*
*கொஞ்சம் பொறு*
*காட்டுக்குள் என்ன சத்தம்....*
*ஏதோ ஒரு மிருகம்*
*இன்னொரு மிருகத்தை*
*ஏசுகிறது*
*'சீ மனிதனே' "*

## மனத்துக்கண் மாசிலனாதல்

அல்லவை கடிந்து நல்லவை ஏற்கவேண்டுமாயின் மனம் பளிங்கெனத் தூய்மை பெற்றிருக்கவேண்டும். மனத்துக்கண் மாசின்மையை வள்ளுவம் பேரறமாகக் காட்டியது. பொருளால் அறச்செயல்கள் செய்யத் தேவையில்லை மனம் அறவயப் பட்டிருத்தலே பாராட்டத்தக்கது. இம்மனத்தைப் பாழ்படுத்தும் தீயனவாக வள்ளுவர் நான்கைச் சுட்டுகின்றார். அவை

1. அழுக்காறு
2. அவா

3. வெகுளி
4. இன்னாச் சொல்

இந்நான்கு தீயனவும் உள்ளத்தில் இடம்பெறவில்லையானால் மனம் மாசுமறுவற்றதாய் விளங்கும். மனத்தைக் கட்டுப்படுத்துதல் என்பது எளிதான செயலன்று. எண்வகை ஆற்றல் பெற்றதாகப் பெருமைப் படுகின்றவர்கள்கூட மனத்தைக் கட்டுப்படுத்தாதலால் அவர்கள் சந்தித்த சோதனைகள் மிகுதியாகும். மனத்தைக் குரங்காகவும் பேயாகவும் நாயாகவும் உருவகப்படுத்தலாம். குரங்கு கிளைக்குக் கிளை அடிக்கடி இடம் பெயர்வதுபோல் மனிதமனமும் ஒரே செயலில் நிலைப்படுவது இல்லை. வேண்டாத, விரும்பத்தகாத நிகழ்வுகளை எல்லாம் இம்மனம் எண்ணிப்பார்ப்பதால் அதுபேயாக உள்ளது. எலும்புத் துண்டைக் கடிப்பதும் பின்விடுவதும் மீண்டும் பிடிப்பதும் நாயின் இயல்பாக இருப்பதால் மனிதனும் ஒன்றில் பற்றுக்கொள்வதும் அதனைத் துறப்பதும் மீண்டும் அதனைப் பற்றுவதுமாக இருப்பதால் அது நாயாகின்றது. பொதுவாகப் பழக்கம்தான் வழக்கமாகின்றது. தீய பழக்கம் எளிமையில் யாரையும் ஈர்த்துவிடும். அதிலிருந்து மீள்வதுதான் கடினம். ஆற்றில் மிதந்து வந்த மூட்டை ஒன்றை மனிதன் ஒருவன் பணமூட்டை எனக் கருதி அதனைப் பிடிக்க, இப்பொழுது அதன்பிடி இவனை இறுக்கிற்று. ஏனெனில் வந்தது பணமூட்டையல்ல; தலைகவிழ்ந்து வந்த கரடியாகும். இப்படிக் கரடிப் பிடியில் அகப்பட்டு நம்மையும் கெடுத்து இச்சமூகத்தையும் கெடுத்து வரும் தீயர்களைப் பற்றியே அடிகள் மிகவும் அஞ்சினார். அவர்கள் திருந்த வேண்டும் என்று அவர் நாளும் பாடுபட்டார். அவர்களைப் பற்றியிருந்த பொல்லாச் செயல்களைப் போக்குவதே அவரது வாழ்வின் குறிக்கோளாகக் கருதினார்.

## அல்லவை ஏழு

தனி மனிதர்களின் பாவங்களைப் பற்றிச் சமயச் சான்றோர்கள் கவலைப்பட்டனர். ஆனால் காந்தியடிகளோ சமுதாயத்தினைப் பாதிக்கின்ற பாவங்களை எண்ணிப் பார்த்தார். அவற்றைப் போக்காமல் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியாதென்று அவர் கருதினார். காந்தியடிகளின் தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாக அவர் சுட்டிக்காட்டிய ஏழு சமுதாயப் பாவங்கள் எவையெனச் சிந்திப்போம். அவை

## 1. கொள்கையற்ற அரசியல்

அண்ணல் வெறுத்த தலைமைச் சமுதாயப் பாவம் கொள்கையற்ற அரசியலாகும். ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கை உயிர்நாடி. ஒரு கட்சி மற்ற கட்சிகளிலிருந்து வேறுபடுவது அது கொண்டிருக்கும் கொடியினால் அல்ல; கொள்கையினால். ஆனால் பதவியைப் பெறக்கட்சிகள் முயல்கின்றபொழுது களபலியாக்குவது அதன் கொள்கையைத்தான். காந்தியடிகள் இந்தியாவின் விடுதலைக்குப் பாடுபட்ட இந்தியத் தேசியக் காங்கிரசை நாடு விடுதலை பெற்றவுடன் கலைத்துவிடக் கூறியது இதனால்தான்.

## 2. உழைப்பற்ற செல்வம்

காந்தியடிகள் சுட்டிக்காட்டிய இரண்டாவது சமுதாயப்பாவம் உழைக்காமல், வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் செல்வதைச் சேர்ப்பதும் பயன்படுத்துவதும் ஆகும். அண்மைக் காலத்தில் பெரிய அரசு அதிகாரிகள், முதலமைச்சர், அமைச்சர்களாக இருந்தவர்கள், பலரோடு நெருக்கமானவர்கள் ஆகியோரிடம் கோடிக்கணக்கில் செல்வம் குவிந்திருப்பது வெளியில் தெரிய வந்து விட்டது. கோடி கோடியாய் இவர்கள் குவித்திருக்கும் செல்வ மெல்லாம் வாடும் மக்கள் உண்ணாத வயிற்றுச் சோறல்லவா? பகற் கொள்ளை போல இவர்கள் மேற்கொண்ட சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனைப்பேர்?

## 3. நெறியற்ற வாணிபம்

வணிகர்கள் நெறியோடு வணிகம் செய்து அளவான வருமானத்தைப் பெறுவதை ஏற்றுக்கொள்ளலாம். நெறி முறைகளற்ற வாணிகம் இன்று நச்சுச் செடிகளாக வளர்ந்திருப்பதுதான் சிக்கல்.

## 4. பண்பாடற்ற கல்வி

அடுத்துக் காந்தியடிகளின் சிந்தனையில் ஒழுக்கத்தையும் பண் பாட்டையும் கற்றுத்தராத கல்வி இடம் பெற்றிருந்தது. இன்றைய கல்வி நிலையங்களில் ஆதாய நோக்கம் ஊடுருவி விட்டது. மாணவர்களின் ஒழுக்கம், பண்பாடு, ஆளுமை வளர்ச்சி ஆகியவை

பற்றி மிகுதியான கல்வி நிலையங்கள் கவலைப்படுவதில்லை. இன்று நமது சமுதாயத்தில் சூதும் வாதுவும் செய்கின்றவர்களில் மிகுதியானவர்கள் கற்றவர்கள்.

## 5. மனச்சாட்சியற்ற மகிழ்ச்சி

இன்பத்தை, மகிழ்ச்சியை எப்படியும் பெறலாம் என்று தனி மனிதர்கள் முயல்கின்றபொழுது சமுதாய அத்துமீறல்கள் நடை பெறுகின்றன. இவற்றின் விளைவுகளுக்குப் பலர் பலியாகின்றனர். இங்குச் சமுதாயத்தில் போதை மருந்துகள், மதுவகைகள், வன்முறையும் பால் வெறியும் கொண்ட திரைப்படங்கள் போன்றவற்றை மகிழ்ச்சி தரும் கருவிகளாகப் பலர் கருதுகின்றனர். மனச்சாட்சியற்ற மகிழ்ச்சியின் சாபமாகக் கிடைத்து இருப்பதுதான் 'எயிட்ஸ்' நோய்.

## 6. மனிதநேயமற்ற அறிவியல்

இன்றைய அறிவியல் தொழில்நுட்பத்தின் விளைவாய்த் தோன்றியிருக்கும் பெரும் தொழில்களாலும் போக்குவரத்துக் களினாலும் சுற்றுப்புறச்சூழல் பாழ்படுகின்றது. புதுப்புது நோய்கள் வருவதற்குக் காரணமே அறிவியல் கண்டுபிடிப்புக்களைச் சரியான முறையில் பயன்படுத்தாததுதான் என்று அறிவியலார் கருதுகின்றனர்.

## 7. தியாகமற்ற வழிபாடு

சமயங்கள் வலியுறுத்துகின்ற தன்னலமறுப்பையும் மனித இனத் தொண்டையும் மேற்கொண்டு செய்கின்ற வழிபாடுதான் உயர்ந்ததாக இருக்கும். அத்தகைய வழிபாடு செய்கின்ற மக்கள் கூட்டம் பெருகினால் எல்லோரும் இன்புற்று வாழமுடியும். இந்த ஏழு சமுதாயப் பாவங்களையும் காந்தியடிகள் சுட்டிக்காட்டினார் என்பதற்கல்ல. என்றும் மனிதஇனத்தை ஆட்டிப் படைக்கின்ற சமுதாயப் பாவங்கள் இவைதான் என்பதால்தான் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். நிழல்போல நம்மைத் தொடர்கின்ற ஏழு சமுதாயப் பாவங்களை விலக்கினால் புதியதோர் சமுதாயத்தினை உருவாக்கமுடியும். இனி ஒவ்வொரு பாவத்தைப் பற்றியும் விரிவாகக் காண்போம்.

# 1. கொள்கையற்ற அரசியல்

## கொள்கை தழுவிய அரசியல்

அண்ணலுக்கு அரசியல் வாழ்வு என்பது தொண்டாயிற்று; இறைப்பணியாயிற்று. இதனால் வாய்மையும் அன்பும் அவருடைய பொதுவாழ்வின் அடிப்படைகளாயின. அரசியல் இறைப்பணி என்பதால் இறைப்பணிக்கு வேண்டிய தூய்மையும் நேர்மையும் அவருடைய அரசியலுக்குத் தேவையாயின. எனவேதான் கொள்கையற்ற அரசியலை அண்ணல் பாவம் எனக் கூறினார்.

அரசியலில் கொள்கை கொண்டிருக்க வேண்டுமென்பது அண்ணலின் கருத்தாகும். அதாவது ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் ஈடுபடவேண்டும். அந்தக் கருத்தை வைத்து மக்களை அணுகவேண்டும். அரசியலில் தாம் முன்வைக்கும் கொள்கைக்காக வாழவேண்டும். தாம் முன்வைக்கும் கொள்கையில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கவேண்டும். தாம் நம்பாத, தமக்கே உறுதியில்லாத கொள்கையை மக்கள் முன் வைக்கக் கூடாது. அவர்தாம் அறிவிக்கும் கொள்கைக்காகத் தம்மையே பணயம் வைக்கவேண்டும்.

கொள்கையற்ற அரசியல்தான் என்ன? கொள்கையற்ற அரசியல் நடத்துவோரிடமும் ஒரு மாறாத கொள்கை இருக்கும். அதுதான் தன்னலம். அவர்களுடைய இலக்கு செல்வம், பதவி, அதிகாரம் ஆகியனவாகும். மக்கள் நலம் என்பதைப் பற்றி அவர்கள் உண்மையில் அக்கறைகொள்ள மாட்டார்கள்; மக்கள் நலனுக்காகவே அரசியல் தொண்டு செய்வதாக ஏமாற்றுமொழி பேசுவர். தம்மைத் தன்னலநோக்குடன் அவ்வப்போது மாற்றி மாற்றிக் கொள்கைகள் பலவற்றை வெளியிடுவர். கொள்கையற்ற அரசியலில் தங்களின் தன்னல வாழ்வுக்காகக் கொள்கைகள் வகுக்கப்படும்; அறிவிக்கப்படும்; அவை மீறப்படும்; மாற்றப்படும்.

இவ்வகை அரசியல் மக்களைத் துன்பத்தில் ஆழ்த்திக் குழப்பத்தையும் நாட்டின் சீரழிவையும் ஏற்படுத்தும். இந்தக் கொள்கையற்ற அரசியல்தான் இன்று நம்நாட்டை அலைக்கழிக்கும் கொடுமையான நோய்.

## தொலைநோக்கைத் தொலைத்த அரசியல்வாதிகள்

முதல் விடுதலைப் போராட்டத்தில் நூற்றைம்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டுச் செங்கோட்டையில் உரைநிகழ்த்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் இரண்டு கட்சி ஆட்சிமுறைதான் இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவும் எனத் தம் பேச்சில் குறிப்பிட்டார். அப்துல்கலாம் சொன்னபோது குதித்தோடி வந்து விவாதம் செய்தவர்கள்கூட 2020 பற்றிய அவரது கருத்துக்களைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அடுத்த குடியரசுத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிந்திக்கிறார்களே தவிர, இப்போது இருப்பவரின் கனவை நிறைவேற்றும் சாத்தியத்தைச் சிந்திக்கவில்லை. என்ன தைரியம்! இந்தியாவின் எதிர்காலம் பற்றி இப்படியா பேராசைப்படுவது? என்று கண்டித்து அறிக்கைவிடாமல் போனார்களே, அதுவே பெரிய செய்தி. இன்னும் பதின்மூன்று ஆண்டுகள் கழித்து ஆட்சிப் பீடத்தில் நம்கட்சி இருக்குமா இருக்காதா என்று தெரியாமல் எப்போதோ வரப்போகிற 2020 பற்றி இப்போது நம் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டும் என்று அமைதிகாக்கும் அரசியல்வாதிகளின் நேர்மையைப் பாராட்டியே ஆக வேண்டும். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. அடுத்த வேளைச் சோறு பற்றி மட்டுமே சிந்திக்கும் கட்டாயத்தில் இருக்கும் அன்றாடங் காய்ச்சிகளின் சார்பாளர்கள் அல்லவா அவர்கள். தங்களின் அடுத்தவேளைச் சோற்றுக்காகத் தேர்தலுக்காக வாக்குறுதிகளை உருவாக்குவது அவர்களின் முதற்கடமையாக இருக்கும். தொலைநோக்கெல்லாம் அவர்களுக்கு வேண்டாத தொல்லை நோக்குத்தானே! வாழ்க! அவர்களின் உடனடி அக்கறை.

## உண்டால் அம்ம இவ்வுலகம்

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற சங்ககால மன்னன் இந்த உலகம் அழியாமல் இருப்பதற்குரிய அடிப்படைக் காரணியத்தைக் கீழ்வரும் பாடலின் வழிவிளக்குகின்றார்.

"உண்டால் அம்ம இவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலுமிலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

இப்பாடலைப் பாடியவர் புலவரல்லர். மன்னன் ஒருவன் பாடியுள்ளான் என அறிகின்றபொழுது தன் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் எத்தகையராக இருத்தல்வேண்டும் என்பதில் அவன் கொண்டிருந்த அக்கறை நமக்குப் புலனாகின்றது. தன்னலம் என்பது மிகப்பொல்லாதது; கசப்பான விளைவுகளைக் கண்டிப்பாக நிகழ்த்தும். புரட்சிக்கவிஞர் இவ்வுள்ளத்தைச் சின்னதொரு கடுகுள்ளமாகக் காட்டுவார்; கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளத்தைக் காட்டுவார்; தென்னை உள்ளத்தையும் தெரியச் செய்வார்; மாம்பிஞ்சு உள்ளத்தையும் மறக்காமல் சொல்லுவார். ஆனால் தாய்மையுள்ளமே வேண்டப்படுவது என அவர் வலியுறுத்துவதைக் கீழ்வரும் வரிகள் தெள்ளத் தெளிவாக்குகின்றன.

"தூய உள்ளம் அன்புள்ளம் பெரியவுள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை, தன்னலம்தான் தீர்ந்ததாலே"

## ஆளும் பொறுப்பு எளிதல்ல

இங்கு வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. வயது வந்த வாக்காளர்கள் ஆட்சியாளரைத் தேர்தலில் வாக்களித்து உருவாக்குகின்றனர். சந்தர்ப்பவாதமே நிரந்தரமான அரசியல் கொள்கையாக எல்லாக் கட்சிகளுக்கும் ஆகிவிட்டது. இதன் விளைவு ஆட்சியை உருவாக்கும் மக்களுக்கே குடியாட்சியின் நம்பிக்கை தளர்ந்துவிட்டது. அரசியலில் கொள்கை என்ற ஒன்றே இருக்க முடியாது என்று மக்கள் நம்பத்தொடங்கிவிட்டனர். நம்

முன்னோர்கள் கொள்கைகளுக்காக உயிரை விட்டனர் என்ற வரலாற்றைக் கற்பனை என்று எண்ணுகின்றனர். வல்வினை வளைத்த செங்கோலைத் தன் செல்லுயிர் போக்கி நிமிர்த்திய பாண்டியன் வரலாறுகூட அவர்களுக்குக் கட்டுக்கதையாய்ப் போயிற்று. ஆட்சிப் பொறுப்பென்பது எவ்வளவு தொல்லைக்கு உரியது என்பதைச் சிலம்பு கீழ்வருமாறு காட்டும்.

*"பிழை உயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்*
*கொடிபுற உண்டும் கொடுங்கோல் அஞ்சி*
*மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்பமல்லது தொழுதகவு இல்"*

மாநிலம் காவலன் ஆவான் மன்னுயிர் காக்கும் காலைதான் அதற்கு இடையூறு தன்னால், தன் பரிசனத்தால், ஊனது திறத்தால், கள்வரோடு விலங்கு தம்மால் ஆன துயரம் ஐந்தும் தீர்த்து வைப்பவன் ஆவான் எனப்பெரிய புராணம் கூறுகின்றது.

## கொள்கை மாறிகள்

இன்றைய அரசியல் உலகம் பொய்யர்களையும் புரட்டர் களையும் கொண்டதாய் உள்ளது; கட்சி மாறிகள் இடம் பெற்றுள்ளனர். ஏழு மாதத்தில் எட்டுத் தடவை மாறும் சட்டமன்ற உறுப்பினர்தாம் பதவியேற்றுப் பணிபுரியவேண்டிய காலத்தைவிடக் கட்சி மாறுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட மாதங்கள் மிகுதியாகும். நாட்டை முன்னேற்றப் பாதையில் மாற்றவேண்டிய பணியை விடுத்துத் தம்மையே, தம் கொள்கையையே மாற்றிக்கொள்ளும் போலி அரசியல்வாதிகள் எங்கும் ஊடுருவி உள்ளனர். இலக்கியங்கள் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமையைக் காட்டும். இங்குக் கொள்கை நிலையாமை அரசியலில் நிகழ்கின்றது.

*"இன்னும் எழுபது*
*கட்சியிருந்தால்*
*இன்னும் வேகம்*
*காட்டியிருப்பார்*

என்ற வரிகளில் கவிஞர் மீரா கொள்கை மாறிகளை அடையாளம் காட்டுவார்.

மண் பொய் சொல்லுவதில்லை. ஆனால் நாம் அதை மிதிக்கிறோம். மரம் பொய் சொல்லுவதில்லை. ஆனால் நாம் வெட்டுகிறோம். மந்திரி பொய் சொல்லுகிறார். அவருக்கு மாலை போடுகிறோம். இதுதான் இன்றைய அரசியல் நிலையாகும்.

*"சேரிகளில் மட்டுமே நீ*
*யாத்திரை செய்தாய்*
*என்பதைத்*
*தெரிந்துகொண்டதால்*
*உன்னை நேசித்தவர்கள்*
*தேசத்தையே*
*சேரியாய் மாற்றி விட்டார்கள்*
*இந்த*
*மாற்றங்களை நிகழ்த்தி*
*மந்திரவாதிகளின்*
*கழுத்துக்கு*
*நாங்கள்*
*மாலை சூட்டுகிறோம்"*

என்ற மேத்தாவின் நக்கல்கள் நயம் தருவனவாகும்.

## கவலைதரும் கட்சிகளின் பெருக்கம்

பிறநாடுகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறப் பாரதம் மட்டும் பல்துறைகளில் பின்னேறியுள்ளது. பிற நாட்டு நிகழ்வுகளைச் செயல்களைக் கேட்பதற்குப் பெருமிதமாக உள்ளது. நம் நாட்டு நிகழ்வுகளைச் செயல்களைப் பிறநாட்டவர் அறிகின்ற அந்நாட்டவர்க்குத் தலைக்குனிவு ஏற்படுகிறது. செயல்களுக்காக நாம் தலையைத் தொங்கவேண்டியதிருக்க, அங்ஙனம் செய்யாமல் தம்பட்டம் மட்டும் அடித்துக்கொள்கிறோம். பாரதநாட்டுச் சிறுவனும் அந்நியநாட்டுச் சிறுவனும் தத்தம் நாட்டுப் பெருமைகளைப் பேசிக்கொள்வதாக ஒரு கற்பனை உரையாடல்.

தன்னுடைய நாட்டில் நாய்கள், பன்றிகள் பற்பல குட்டிகள் போடும் என்று பாரதச்சிறுவன் சொல்ல, அந்நிய நாட்டுச் சிறுவன் தங்கள் நாட்டிலும் நாயும் பன்றியும் குட்டிகள் போடும் என்றான். பாரதநாட்டில் மட்டும் கட்சிகள் பற்பல குட்டிகள் போடும் என்று

பாரதச் சிறுவன் சொல்ல அந்நிய நாட்டுச் சிறுவன் பதில் கூறாமல், அமைதியாகத் தன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டான். கட்சிகளின் தேவையற்ற பெருக்கம் இது. நாய்க் குட்டிகளுக்கும் பன்றிக் குட்டிகளுக்கும் கட்சிகளின் பல குட்டிகளுக்கும் ஒன்றிற் கொன்று எவ்விதவேறுபாடும் இல்லை. கட்சி ஒன்று இருந்தாலும் உருப்படியாக இருக்கவேண்டும். உருப்படியில்லாத உதிரிக்கட்சிகள் பல இருந்தும் நாட்டிற்குப் பயனில்லை.

## அரசியல் பரமபத ஆட்டம்

விடுதலை அரசியல்வாதிகளால் எங்ஙனம் பாழ்படுத்தப் பட்டுள்ளது என்பதைப் பின்வரும் பாடல் ஒன்று விளக்குகின்றது.

*"விடுதலையே*
*இருட்டில் வந்த உன்னை*
*தேவதை என்று எண்ணி*
*வரவேற்றோம்.*
*விடிந்த பிறகு தான்*
*நீ வெறும் வதை*
*என்பது விளங்கியது*
*சுதந்திரம் - தந்திரம்*
*தேசம் - சேதம்*
*மாவிலை - மாவிலை*
*தோரணம் - ரணம்*
*மாற்றம் - ஏமாற்றம்*
*தாமதம் - மதம்*
*கொடி - கோடி*
*ஊர்வலம் - ஊர் அவலம்*
*தோட்டத்துப் பருத்தி - தொட்டால் சிணுங்கி*
*இசைக்க வேண்டிய சுதந்திர வீணை*
*சுமக்க வேண்டிய சிலுவையாய்ப் போனது"*

*"வழிவிடச் சொல்லி*
*விரல்கள் நடுங்க*
*தாயம் உருட்டுகிறோம்*
*உங்கள் வாயில் விழுந்து*

*வாயில் வழிந்து*
*நேற்றைப் புரட்டுகிறோம்" (சிற்பி)*

இது அரசியல் வாழ்வின் நிகழ்காலத் திறனாய்வாகும். எங்கோ சில சில ஏணிப்படிகளைப் பிடித்து முன்னேறிவிட்டாலும் புறப்பட்ட திசைக்கே விரட்டியடிக்கும் பாம்புகளே அரசியல் பரமபத ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. மேடை மந்திரவாதிகள், ஒலிபெருக்கியின் கள்ளக் காதலர்கள், ஊழலின் குத்தகைக்காரர்கள், வெளிநாட்டு வங்கிகளில் பற்றுவைத்து விட்டு நமக்கு நாட்டுப் பற்றை அறிவுறுத்துகின்றவர்கள், மக்களின் மறதிக் குளத்தில் வாக்குறுதித் தூண்டில் போடும் மீனவர்கள், கின்னசு உலக சாதனைப் புத்தகத்தில் கட்சிமாறும் வேகத்துக்குச் சாதனை படைத்தவர் என்று அதிகார வேட்டை நிகழ்த்துகின்ற அரசியல்வாதிகள் பெருகி வருகின்றனர். இப்போலிகள் அறியாத மக்களால் தவறாகப் பாராட்டப்படுகின்றனர்.

*"பாதகக் கொடும்*
*பாதகப் பாதகர்களுக்கு*
*சப்ர மஞ்சங்கள்*
*பல்லக்கு ஊர்வலங்கள்*
*பட்டங்கள் என்ற*
*பட்டுக் குஞ்சங்கள்" (சிற்பி)*

## சொல்லுதல் யார்க்கும் எளிய!

அரசியல்வாதிகள் ஏன் இத்தகைய தவறுகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொள்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் சொல்லும் செயலும் வேறுபட்டதாய் அமைந்ததாலாகும். சொல்வது ஒன்று, நிகழ்த்துவது ஒன்று என்ற இரட்டைப்போக்கு அரசியல் வாதிகளிடம் மிகுந்துள்ளது. அடிகள் செய்ததையே சொன்னவர்; சொன்னதையே செய்தார். எனவே வாழ்க்கையில் வெற்றி பெற்றார்.

*"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணஞ் செயல்"*

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும். வள்ளுவ நெறியை வாழ்க்கை நெறியாகக் கொள்ளாத அரசியல் தலைவன் ஒருவன் தெருவில் நின்று வறுமை வெளியேற எட்டுமாத முழக்கம்

செய்தான். ஆனால் அவனின் சொல் அவன் நெஞ்சைத் தொட்டதாய்த் தெரியவில்லை. விருந்தொன்றில் கலந்த அவன் நிகழ்த்திய விரும்பத்தகாத செயல் ஒன்றைக் கவிஞர் மீரா கீழ்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

"எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்....
வறுமை,
வேக வேகமாய்
வெளியேறிற்று -
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக"

வறுமையை வெளியேற்றுவதற்குப் பதிலாக வறுமையாளனையே அவன் வெளியேற்றிவிட்டான். நல்ல கொள்கைகள் எழுத்தில் மட்டும் நிற்பது நல்லதல்ல. அவை செயற்பாட்டிற்குரிய தாக்கப்படவேண்டும் என்பதுதான் அடிகளின் நோக்கம் ஆகும். தீய செயல்களின் கொடுமை எழுத்தில் மட்டுமே இடம் பெறலாமே தவிர, அத்தீமையை வாழ்க்கையில் ஏற்றுச்செயல்படுவது பொருந்தத் தக்கதன்று. எழுத்தாளர் ஒருவர் 'சிவப்பு விளக்கு' பகுதி வாழ்க்கையைச் சிறுகதையாய்ப் படைத்து அதன் வழிச்சேர்த்த பணத்தைப் பயன்படுத்திச் சிவப்பு விளக்குத் தெருவில் நின்றாராம். அங்ஙனம் நிற்கும் அவர்க்கும் அரசியலில் சொல்வேறு, செயல்வேறு பட்டார்க்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

## பழந்தொழில் எது?

பாதிரியார், மருத்துவர், அரசியல்வாதி ஆகிய மூவர்க்கும் இடையே தாங்கள் ஆற்றும் தொழில்களுள் பழமையானது எது என்பதுபற்றி விவாதம் எழுந்ததாம். மனிதனின் முதல் செயலே இறைவனை வணங்கி நிற்பதால் தம் தொழிலே பழமையானது என்றார் பாதிரியார். கடவுள் பெண்ணை உருவாக்குவதற்காக ஆணின் உடம்பில் இருந்து ஓர் எலும்பை எடுத்தார். அதுவே முதல் அறுவை மருத்துவமாகும். எனவே தம் தொழில்தான் பழமையானது என மருத்துவர் வலியுறுத்தினார். கடவுள் புரிந்த அறுவை மருத்துவத்திற்கு முன்பு உலகில் கலவரம் மட்டும்தான் இருந்தது.

அந்தக் கலவரத்தை உருவாக்கியது யார்? அரசியல்வாதி இன்றிக் கலவரத்தை உருவாக்குவது கடினமான செயல் என்பதால் அரசியல்வாதி தாம் ஆற்றும் தொழிலே பழந்தொழில் எனச் சாதித்தார்.

## பாழ் செய்யும் பகற்கொள்ளையர்

மத்திய மாநிலத்தைச் சார்ந்த சம்பல் பள்ளத்தாக்கு இரவுக் கொள்ளையர்கள் அம்மாநில முதல்வரிடம் தம்மை ஒப்படைத்துக் கொண்டனர் என்பது நம் நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். கொள்ளையரின் ஒப்படைப்பு பிறிதொரு கருத்தினையும் நினைவிற் கொள்ளச் செய்கிறது. சம்பல் பள்ளத்தாக்குக் கொள்கையர்கள் இரவில் மட்டும் வருகின்றனர். நாடெங்கிலும் தெருவெங்கிலும் பகற் கொள்ளையர்கள் நடமாடுகின்றனர். இரவுக் கொள்ளையரோ ஊரறிந்த கொள்ளையர் ஆவர். பகற்கொள்ளையரோ வெள்ளை வேடம் கொண்டு கொள்ளையடிக்கின்றனர். புறத்தே வெளுத்து, அகத்தே கருத்துள்ள பகற்கொள்ளையர்கள் இதயம் வெளுத்து என்று தம் கொள்ளையை நிறுத்துகின்றனரோ, அன்று தான் மக்கள் மகிழ்வர்.

## தம் குற்றம் தவறாது காண்க

எங்கும் எதிலும் எப்பொழுதும் எளிமை தலைமை இடம் பெற வேண்டும் என்று கருதிய காந்தியடிகளின் கொள்கைக்கு மாறாக ஆடம்பரமும் ஆரவாரமும் இன்றைய அரசியல் உலகில் கொடிகட்டிப் பறக்கின்றன. ஆடம்பரத்தைக் குறைத்துக் கொள்ளாத முதலமைச்சர் ஒருவர் விருந்திற்குச் செல்லுதல், வெளிநாடு போதல், தொலைபேசியில் பேசித்தொலைத்தல், ‘குளு குளு’ காரில் கூட்டங்களுக்குப் போதல் போன்ற ஆடம்பரச் செயல்களை அடியோடு குறைக்க வேண்டுமென்று தமது அமைச்சர்களை அறிவுறுத்த, எதிர்ஒலி ஒன்று அமைச்சரிடம் இருந்து எழுந்ததாம்.

*“பிரியம் மிகுந்த*
*பிரதமரே*
*உமது*
*மந்திரி சபையின்*
*எண்ணிக்கையை*

*நீர்*
*கொஞ்சம் குறைப்பீர்*
*கொஞ்சம்......"*

*"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"*

என்ற வள்ளுவர் கூற்றுக்கு இணங்கப் பிறர் குறையைச் சுட்டும்முன் தம் குறையையும் சிந்தித்துப் பார்த்தல் நல்லதாகும்.

## பிரிவினை அரசியல்

*"செப்புமொழிபதி னெட்டுடையாள் எனிற்*
*சிந்தனை ஒன்றுடையாள்"*

என்ற பாரதியின் சிந்தனைக்கு மாறாகப் பிரிவினை அரசியல் இங்குப் பெரும்பங்கு ஆற்றுகிறது. மாநிலப் பாகுபாடு இன்றி மக்கள் அனைவரும் ஓர் இனத்தர், ஒரு நிறையர் என்ற சிந்தனை மக்களிடையே மலரவேண்டும் என்று பாரதி கருதினார். அப்பொழுதே மாநிலம் ஒவ்வொன்றும் தன்னைப் பற்றிய சிந்தனை ஒன்றையே கொண்டிருக்கும் தவறான சிந்தனை ஆட்சி செய்யத் தொடங்கியது. மராட்டியத்தில் சிவாசி சேனை, வங்கத்தில் துர்க்கை சேனை, அரியானாவில் ஆசாத் சேனை, கர்நாடகத்தில் திப்பு சேனை, கேரளச் சேனை, ஆந்திர சேனை என்று ஒவ்வொரு மாநிலமும் தனெக்கெனத் தனியான சேனை ஒன்றினை அமைத்து மோதல்களில் அவற்றை ஈடுபடச் செய்வதே இவ்அரசியல்வாதிகளின் பணியாகும். ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்குவதை விட்டுவிட்டு உடைந்து போகும் இந்தியாவை இவ்அரசியல்வாதிகள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

(We want peace in India, Not pieces of India என்பது ஆன்றோர் மொழியாகும்.)

## உருக்குலைக்கும் ஊழல் வாழ்க்கை

பொதுவாழ்வில் ஊழல் கூடாது என எல்லாக் கட்சிகளும் பேசுகின்றன. அதனால் எந்தக் கட்சியும் இதைத் தங்களின் நடவடிக்கைகளில் பின்பற்றுவது இல்லை. ஊழல் செய்தவர்கள் என யாரையெல்லாம் ஒரு கட்சி குற்றம் சாட்டியதோ அவர்கள் கட்சி

மாறித் தம்மிடம் வரும்போது மறுக்காது சேர்த்துக் கொள்வதுடன் அவர்களுக்கு உயர்பதவிகள் தருவதும் வழக்கமாகிவிட்டது. ஊழல் ஒழிப்புப்பற்றியும் பொதுவாழ்வில் தூய்மை பற்றியும் தலைவர்கள் பேசும்போது தொண்டர்கள் அதை மேடை அலங்காரம் என்றே எடுத்துக்கொள்கின்றனர். ஊழல் ஒழிப்பு என்பதும் பொது வாழ்வில் தூய்மை என்பதும் அழுத்தமான கொள்கைகளாகப் பின்பற்றப் பட்டிருந்தால் இவ்வளவு ஊழல் மலிந்திருக்காது. ஊழலில் தேடிய பொருள் வளமே அரசியல் தலைவர்களின் வலிமையாக மாறியிருக்காது. ஊழல் சராசரி வாழ்வின் அங்கமாக மாறியிருக்காது. எந்த அரசியல் கட்சியும் இதில் விதிவிலக்கல்ல. நம் பாராளுமன்ற உறுப்பினர்கள் போலிக் கடவுச்சீட்டு (Passport) மூலமாக வெளிநாட்டுக்கு ஆள் கடத்துகின்ற அளவிற்குத் தரம் தாழ்ந்துள்ளது. மக்கள் சிக்கலை மன்றத்தில் பேசுவார்கள் என்று நம்பித்தான் ஒவ்வொரு தேர்தலிலும் நாம் நம் வாக்குரிமையைப் பயன்படுத்தித் தேர்ந்தெடுக்கிறோம். ஆனால் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கே ஊழல் திருவிளையாடலில் ஈடுபடுகிறார்கள். ஊழல் போன்ற தரம் தாழ்ந்த செயல்களைப் பார்த்துப் பார்த்து நமக்குப் பழகிப் போச்சு. அரசியல்வாதிகளுக்குக் கோடிகள் குவிவது எப்படி என்பதே மூடுமந்திரமாக உள்ளது.

## ஊழலால் உயர்ந்த உயர்பொறுப்பினர்

கடந்த மூன்றாண்டுகளில் உ.பி. மாநில இன்றைய முதலமைச்சர் மாயாவதியின் சொத்துக்கள் நானூறு விழுக்காடு மிகுதியாக இருப்பது பலரையும் வியப்படையச் செய்துள்ளது. அஞ்சலக ஊழியர் ஒருவரின் மகளாகப் பிறந்து ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்த மாயாவதி 1980களில் அரசியலில் காலடி எடுத்து வைத்தார். 15 ஆண்டுகளில் அவர் முதல்வராக உயர்ந்தார். உ.பி.யில் மூன்றுமுறை முதல்வர் பதவி வகித்தவர் மாயாவதி ஆவார். இதற்கு முந்தியப் பாராளுமன்றத் தேர்தலின்போது வேட்புமனுத் தாக்கலில் மாயாவதி காட்டிய சொத்துமதிப்பு வெறும் 11 கோடியாகும். தற்போது தேர்தல் வேட்பு மனுவில் அவர் கூறியிருக்கும் சொத்து மதிப்பு பலரையும் வியப்படையச் செய்துள்ளது. இம்மாயம் எப்படி நிகழ்ந்தது? ஆசிரியையாகத் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் இந்த அளவுக்குக் கோடீசுவரியாக மாயாவதி உயர்ந்திருக்க வாய்ப்பு இல்லை. அரசியல்தான் அவரைக் 'குரோர்பதி' யாக மாற்றியுள்ளது.

எனவே அரசியல் என்பது மிகுதியான அளவில் பணம் தேடும் தொழிலா என்ற கேள்வியும் அரசு ஊழியர்களாகப் பதவி வகிக்கும் அரசியல்வாதிகள்தான் கோடீசுவரர் பட்டியலில் இடம்பெற முடியுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளன. சில அரசியல் தலைவர்கள் ஆவணங்களின்படிப் பல கோடிகளுக்குச் சொந்தமான வர்களாக உள்ளனர். ஆனால் உள்ளாய்ந்து பார்த்தால் அவர்கள் கணக்குக் காட்டிய சொத்து மதிப்புக்குப் பலமடங்கு மிகுதியான சொத்துக்கள் கொண்டவர்களாக உள்ளனர்.

பலகோடி மாட்டுத்தீவன வழக்கு உட்படப் பல்வேறு ஊழல் வழக்கில் சிக்கிய மத்திய இரயில்வே அமைச்சர் இலாலுபிரசாத்தின் சொத்துமதிப்பு எவ்வளவு தெரியுமா? வெறும் 23.7 இலட்சம். ஓர் ஆசிரியருக்குக்கூட இந்த அளவுக்குச் சொத்து இருக்க வாய்ப்புள்ளது. அப்படிப்பட்ட நடுத்தரக் குடும்பச் சேர்ந்தவரா இலாலு? அவரது குடும்பத்தில் நடந்த ஆடம்பரத் திருமணத்திற்கே பலகோடி ரூபாய்கள் செலவானதாகச் செய்தி வெளியானது. இவர்களைப் போல்தான் பிற அரசியல் தலைவர்களும் ஆட்சிப் பொறுப்பாளர்களும் பணத்தைப் பெருக்குவதில்தான் குறியாய் இருக்கின்றனர். அப்போதைய தலைவர்கள் பலர்மீது ஊழல் சொத்துக்குவிப்பு, கொலை வழக்குகள் உள்ளன. ஆனால் மத்தியிலும் மாநிலத்திலும் அவர்கள் பதவியில் இருக்கிறார்கள். இதற்குக் கரணியம் இந்திய அரசியல் சட்டப்பிரிவு 14ஆம் பகுதியில் உள்ள 19வது பிரிவுதான். இது ஊழல் தடுப்புச் சட்டம்தான். ஆனாலும் பதவியில் இருப்போர் குறிப்பாக அமைச்சர்கள் முதல்வர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டப்படி வழக்குத் தொடரவேண்டுமானால் அவர்களுக்கு மேல்உள்ளவர்களிடம் அனுமதி வாங்க வேண்டும் என்ற விதி உள்ளது.

வல்லரசாக முன்னேற இந்தியாவின் முதல் தேவை வறுமை ஒழிப்பா? ஊழல் ஒழிப்பா? என்ற வாதச்சிந்தனை நாடெங்கிலும் பரவியுள்ளது. ஊழல் செய்ததில் உலகிலேயே முன்னணியில் இருக்கும் நாடு இந்தோனேசியா ஆகும். நம் நாட்டு அமைச்சர் ஒருவர் அங்கே ஓர் அமைச்சர் வீட்டுக்கு விருந்து உண்ணப்போனார். "இத்தனை அழகான வீட்டை எப்படிக் கட்டினீர்கள்" என்று நம் நாட்டு அமைச்சர் வினவ, "அதோ தெரிகிறதே அந்தப் பாலத்தின் தயவில் தான் கட்டமுடிந்தது" என்று இந்தோனேசியா அமைச்சர்

விடையிறுத்தாராம். இந்தோனேசியா அமைச்சர் இந்தியாவிற்கு வந்து இந்திய அமைச்சர் வீட்டில் விருந்து உண்டார். "வீட்டைக் குட்டித் தாசுமகாலாகவே கட்டிவைத்திருக்கிறீர்களே?" என்று இந்தோனேசிய அமைச்சர் வினவ, "அதோ தெரிகிறதே அந்தப் பாலத்தின் தயவுதான்" என்று நம்நாட்டு அமைச்சர் பதிலிறுத்தார். அவர் காட்டிய இடத்தில் பாலமே கட்டப்படவில்லை. வெட்ட வெளியாகக் காட்சியளித்தது. கட்டாத பாலம், வெட்டாத கிணறு, போடாத சாலை என மொத்தமாய்ச் சுருட்டி விடுகின்ற அரசியல் நம் அரசியலாகும். ஊழல் வாங்கச் சில வழிமுறைகளும் காட்டப் படுகின்றன. அவை:

1.அகப்பட்டதைச் சுருட்டு, 2.ஆதாயம் என்றால் உதவி செய், 3.ஊழல் செய், 4.ஈவு இரக்கம் துறந்து விடு, 5.உண்மையை ஒளித்து வை, 6.ஊர்ப் பணத்தில் உலா வா, 7.எவ்வளவு கிடைக்கும் எனக் கணக்குப் பார், 8.ஏழையிடமும் கை நீட்டு.

## ஊழலே இன்றைய வாழ்க்கை

உண்டியல் குலுக்கும் அரசியல் வாதிகள், அலுவலக மேசைகளில், அதிகாரிகள் கண் சமிக்ஞையில், கல்லூரி அனுமதியில், ஒப்பந்தங்களில், திரைமறைவில், சட்டப்புத்தகச் சதியில், நட்ட நடுத் தெருவில் பட்டப்பகலில் கையூட்டாகப் பெறப்படும் பணம் குலுக்கப்படாத உண்டியலாகும். பிதாமகன் வீடுமன் இன்றைய குஜ்ரால் ஆவார். வர்த்தகக் கழக மாநாட்டில் தம் கட்சியின் தலையாய கடமையை அவர் எடுத்துரைத்துள்ளார். "நாட்டின் பெரிய சாபக்கேடு ஊழலாகும். அதை ஒழிப்பதே எங்கள் சபதம். ஊழலில் பல மட்டங்கள் உள்ளன. மேல் மட்டம், மத்திய மட்டம், கீழ் மட்டம் என்பனவாகும். இதற்கென்றே எனது செயலகத்தின் ஒரு பகுதி தீவிரமாகச் செயல்படும். இதைக் கவனிக்கச் சிறப்பான ஓர் உயர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்". இங்ஙனம் சிறப்பான கொள்கையை எடுத்துக்கூறும் குஜ்ராலின் அச்சிந்தனை ஒவ்வொரு அரசியல் தலைவரிடமும் இடம்பெறவேண்டும். பஞ்சசீலக் கொள்கைகள் பரப்பிவந்த நம் நாட்டில் இன்று இலஞ்ச சீலக் கொள்கை நடத்துவதை என் சொல்ல? முன்னாளில் இலஞ்சம் ஒரு வழிமுறை. இந்நாளில் அதுவே வாழ்க்கை முறையாகி உள்ளது. முன்பெல்லாம் மகப்பேற்று நேரத்தில் குழந்தையில் தலைதான்

முதலில் வரும் எனத் தாய்மார்கள் சொல்லுவார்கள். இன்றெல்லாம் கைதான் முதலில் வரும். காசு தந்தால் மிச்சம் வரும்.

## சீர்மை குன்றாச் சீவா

ஊழலே புரியாமல் அரசியல்வாதி வாழ முடியாதா? என்று வினவுவார்க்குக் கொள்கைத் தலைவர் சீவாவின் வரலாற்றை நினைவில் கொள்ளவேண்டும். சீவாவைப் பார்க்க முடியுமா? நேரில் ஒரு முறையாவது வணங்க மாட்டோமா? என்பது ஒட்டுமொத்த இந்தியாவே மரியாதை செய்த நாட்டுத்தந்தை காந்தியடிகளின் விருப்பமாகும். அவரை அழைத்து வரப்பேராயக் கட்சிக்காரர்கள் புறப்பட அவர்களைத் தடுத்துத் தாமே சென்றுபார்க்க விரும்புவதாக அடிகள் கூறினார். காரைக்குடிக்கு அருகில் உள்ள சிராவயல் என்ற இடத்தில் ஆசிரமத்தை நடத்திக்கொண்டிருந்த சீவாவை அடிகள் சந்தித்தார். ஆசிரமத்தைத் தொடர்ந்து நடத்த நிலையான சொத்துக்கள் இருக்கின்றனவா என்று காந்தி கேட்க இந்த நாடே தம் சொத்துத் தானே என்று சீவா பதிலிறுத்தாராம். நெகிழ்ந்துபோன காந்தி நீங்கள் தான் இந்த நாட்டின் சொத்து என்று சீவாவைப் பாராட்டினார்; இறுதி வரையில் பொதுவுடைமைவாதியாக வாழ்ந்து மண்சுவர் கூட இல்லாமல் ஒழுகும் குடிசையில் வாழ்ந்து மகிழ்ந்தார். ஆனால் இன்றைய அரசியல்வாதிகளோ மாட மாளிகைகளுக்கும் கூட கோபுரங்களுக்கும் சொந்தமானவர். ஊழல் அரசியல்வாதிகளை விட்டு என்றைக்கு இல்லாமல் தொலைகின்றதோ அன்றுதான் அரசியல் உலகின் நன்னாளாகும்.

## தேவையற்ற தேர்தல் கூட்டுக்கள்

தேர்தல் காலங்களில் உருவாக்கப்படும் கூட்டுக்கள் கொள்கையற்ற அரசியல்களின் மொத்த வெளிப்பாடாக இருப்பதை நாம் உணரலாம். பல குருடர்கள் தம் விழிகளை எல்லாம் ஒன்று சேர்த்து வைத்துப்பார்த்தாலும் ஒளி கிடைக்காததுபோல் கொள்கையே இல்லாத கட்சிகள் கூட்டுக்களை உருவாக்குவது எவ்வகைப் பயனும் தராது. கூட்டணி அமைக்கப்படுமானால் கூட்டணிக் கட்சிகள் எல்லாம் பின்பற்றத்தக்க அளவில் பொதுக் கொள்கை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அக்கொள்கையில் இருந்து எந்தச் சூழ்நிலையிலும் தலைமையின் சொல்லை எந்தக்

கட்சியும் மீறக்கூடாது. தாம் இக்கூட்டணியில் இருப்பதால் தான் ஆட்சி நிலைக்கிறது என்றும் தாம் விலகினால் ஆட்சி பறிபோகும் என்று தம்மைத் தாமே பீற்றிக்கொள்ளும் தகாத சிந்தனை எக்கட்சியிடமும் இடம்பெறுதல் கூடாது. கூட்டணி அமைத்ததி லிருந்தே தேர்தல் முடிவு வரையில் கட்சிகளுக்குள் சண்டை சச்சரவுகள் நடப்பது மலிவாகி விட்டது. வெற்றிக்குப் பிறகோ கேட்கத் தேவையில்லை. கூட்டணி என்பது அனைத்துக் கட்சியினரையும் அரவணைக்கவும் ஆதரிக்கவும் பயன்பட வேண்டுமே தவிர அச்சுறுத்தலுக்கும் அழிவிற்கும் அக்கூட்டணி துணை செய்தல் கூடாது.

## சாதனையற்ற சாதிக்கட்சிகள்

புற்றீசல் போன்று சாதிகளின் அடிப்படையில் கட்சிகள் தோன்றி விட்டன. சமூகப் புரட்சியை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் பொதுவுடைமைக் கட்சிகள் கூடச் சாதியத் தலைவர்களுடன் உறவு வைத்துக்கொள்கின்றன. இங்கு உள்ள ஒரு பெரிய கேள்வி சாதிப் பிரிவினைகள். சாதிகள் இருக்கலாமா கூடாதா என்று வினவினால் இதற்குப் பல கட்சிகள் சாதிகள் கூடாது என்றே விடையளிக்கும். ஆனால் நடைமுறையில் சாதிகளை நிலைப்படுத்தி மக்களைப் பிரிக்கும் வழிகளையே கடைப்பிடிக்கின்றனர். இன்று அரசியல் வாதிகளால் சாதிக்கலவரங்கள் பெருகிவிட்டன. சாதிக் கலவரங்களுக்கும் வன்முறைகளுக்கும் அரசியல் வாதிகளே கரணியமாய் இருக்கின்றனர். சாதி அரசியல் பற்றி முடிவான எந்தக் கொள்கையையும் யாரும் வெளிப்படையாகக் கூறவில்லை. குழப்பம் நீடிப்பதையே அனைவரும் விரும்புகின்றனர். இன்று குசரத்தில் நடக்கும் கலவரத்தை விடக் கொடுமையான கலவரம் 1947இல் பீகாரில் நடந்தது. அங்கு அண்ணல் காந்தி போனார். பண்டித நேரு போனார். இராசேந்திரபிரசாத் போனார். தங்கள் உயிரைப் பணயம் வைத்து முகம்மதியர்களைப் பாதுகாத்தனர். அண்ணலின் நவகாளிப் பயணம் உலகப் புகழ் வாய்ந்ததாகும்.

## எங்கும் சாதி! எதிலும் சாதி!

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கின்ற வரை சாதி முறையிலேயே வளர்கிறான்; வாழ்கிறான். இறந்த உடலைப் புதைப்பதற்குக் கூடச் சாதிச் கடுகாடுகளே பயன்படுகின்றன. சாதி அடிப்படையில் தான்

தேர்தலே நடக்கின்றது. சாதியை மறுக்கின்ற கட்சிகள் கூடத் தேர்தலின் போது வேட்பாளர்களைச் சாதியின் அடிப்படையிலே நிறுத்துகின்றன.

*"ஊரெங்கும் ஓர் 'தீ'....*
*ஆம்!*
*அது சாதி எனும் தீய தீ*
*வெள்ளையனை விரட்டியும்*
*சுதந்திரத்தால்*
*முற்றும் எரியாத் தீ*
*நம்மை நாம் எரித்திடவே*
*கட்சிக்காரர்கள்*
*கையிலெடுத்த தீ*
*பாரதமெங்கும் பற்றி எரியும்*
*மதம் எனும் தீ*
*மனித நேயத்தை*
*அடியோடு எரிக்கும் தீ*
*இத்தனை தீமையையும்*
*எரிக்கும் தீயே*
*நீ எங்கு எவரால்*
*தீயிலிடப் பட்டாயோ"* (அ.இரவிச்சந்திரன்)

*சாதித் தீயை அணைத்துச் சாதனைத் தீயை மூளச் செய்வோமாக!*

தேர்தலில் நிற்கும் வேட்பாளர் ஒருவர் வாக்காளப் பெருமக்களைப் பார்த்து,

*"நான் உங்கள் வேட்பாளர்*
*நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தால்*
*சாதிகளை ஒழிப்பேன்*
*வீதிகளில் உள்ள*
*சாதிகளின் பெயர்களை அழிப்பேன்*
*சாதி என்ற வார்த்தை உள்ள பக்கத்தை*
*அகராதியிலிருந்து கிழிப்பேன்*
*நீ அந்த சாதி*
*நான் இந்த சாதி*

என்று
பேசுவோரால் தான்
தேசம் கெட்டு விட்டது
எனவே
சாதியில்லாத
சமூகத்தை அமைக்க
எனக்கே ஓட்டுப் போடுங்கள்"

என்று கூறியவர் பேச்சை முடிக்கும்போது,

"நினைவிருக்கட்டும்
நான் உங்கள் சாதிக்காரன்" (வாலி)

என்று வலுவாகச் சாதியம் பற்றிப் பேசித் தம் பேச்சை நிறைவு செய்தார் என்று கவிஞர் குறிப்பிடும்பொழுது சாதியம் மக்களை எந்தளவிற்குப் பற்றி இருக்கிறது என்பது நாம் உணர்கிறோம். சாதி ஒழிப்பு மாநாடு பற்றிக் கவிஞர் நகைச்சுவையாகப் பாடல் ஒன்றைக் கிழ்வருமாறு பாடுகிறார்.....

"சாதி ஒழிப்பு மாநாடு
கருப்பண்ணா மூப்பனார்
ரெங்கசாமி ரெட்டியார்
முத்துலிங்க முதலியார்
தவஞான கிராமணியார்
பழனிச்சாமி படையாச்சி
அழகப்பச் செட்டியார்
அனைவரும் பங்கு கொள்ளும்
சாதி ஒழிப்பு மாநாடு
நாட்டார் நகரில்
நாயக்கர் தெருவில்
நாளை நடைபெறும்
அனைவரும் வருக" (வேலு)

நம் நாட்டில் அனைத்துச் சாதியும் இருக்கின்றன. இல்லாத ஒரே சாதி மனிதச் சாதி மட்டும்தான். சாதி என்பது சாதனைப் புற்றின் சர்ப்ப விரியன்கள்; கலாச்சாரப் பூமி முகத்தில் அனாசார அம்மை வடுக்கள்; குலதர்மப் பேயின் கோரப்பற்கள்; சாதியச் சர்ப்பங்களுக்கு நாட்டில்

சரியான மரியாதைதான். காலம் காலமாய் அவை கடித்துக் கடித்து நீலம் பாரித்துப் போனது. சாதியக் கிருமிகளின் கொழுப்பை ஒழித்துக்கட்ட இங்கே எந்தப் பென்சிலின் உதவும் என்று வினவுகிறவர் கவிஞர் முத்துராமலிங்கம். சாதிக் கலவரத்தை அரசியலுக்கு வரவாக மாற்றிக் கொள்வது எப்படி என்றே எல்லாக் கட்சிகளும் சிந்திக்கின்றன; செயல்படுகின்றன. எந்த ஒரு நல்ல கொள்கையின் அடிப்படையிலும் அரசியல் நடவடிக்கை இல்லை.

## இட ஒதுக்கீடு

கொள்கையற்ற அரசியலுக்கு மற்றொரு தூண்டுகோலாக இருப்பது இடஒதுக்கீட்டுக் கொள்கையாகும். அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு பதினைந்து ஆண்டுகளுக்கு இருக்கும் என்று அரசியல் சட்டம் இயற்றப்பட்டது. இடஒதுக்கீட்டின் நோக்கம் சாதிப் பிரிவினையால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வைச் சரிக்கட்டிச் சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும். இப்படிப்பட்ட சமத்துவத்தை நாம் முயன்றால் பதினைந்து ஆண்டுகளில் ஏற்படுத்த முடியும்; ஏற்படுத்த வேண்டும் என்பது சட்டத்தை இயற்றிய நம் பெரியோர்களின் எண்ணமாகும். இந்தச் சமூக மாற்றத்தை இதுவரை நாம் கொணர முயலவில்லை. ஒரு தற்காலிக ஏற்பாடாக இருந்த இடஒதுக்கீட்டை நாம் நிலையாக்கிக் கொண்டிருக்கிறோம். அதாவது சாதிப் பிரிவினைகளையும் அவற்றால் ஏற்படும் வெறுப்புணர்ச்சிகளையும் பகைமையையும் நிலைப்படுத்துகிறோம். எந்தக் கொள்கையின் அடிப்படையில்? ஒரே நோக்கம் மக்களை ஏமாற்றி வாக்குகள் பெற்று ஆட்சியைப் பிடிப்பதுதான். இந்தப் போக்கால் இணக்கமான சமூகச் சமத்துவம் ஏற்படும் காலம் வெகு தொலைவிற்குப் போய்விட்டது.

## கேலிக்கூத்தான அரசியல்

ஆட்சியைப் பிடிப்பது தங்களுடைய பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்காகவும் அல்லது அதிகாரம் செலுத்துவதற்காகவும் தான் என்பது கொள்கையாகிவிட்டது. அறிவிக்கப்படும் கொள்கைகளும் செயல்படும் திட்டங்களும் ஆட்சியில் அமர்வதற்கான தந்திரங்களே ஆகும். சராசரி மக்களும் அரசியல் என்பது பணம் சம்பாதிக்கவும் அதிகாரம் பெறவுமான ஒரு தொழில் எனக்

கருதுகின்றனர். அரசியலில் நேர்மையும் தூய்மையும் ஒழுக்கமும் இருக்க முடியாது என மக்கள் நம்புகின்றனர். படித்தவர்களே இந்த எண்ணத்தை வேகமாக வளர்க்கின்றனர். எனவே குடியாட்சி கேலிக் கூத்தாகிவிட்டது.

## சிக்கலுக்குச் சிறப்பான தீர்வு

மாசு, மறு, குற்றம், குறை, கழிவு, கசடு ஆகியவற்றையே பெருக்கிக் காட்டும் இக்கொள்கையற்ற அரசியல் முடிவிற்கு வர வேண்டுமானால் அண்ணல் காந்தியின் அரசியல் அணுகுமுறையைத் தான் நாம் பின்பற்ற வேண்டும். அரசியல் என்பது தூய்மையான இறைப்பணி என்ற எண்ணம் மீண்டும் உருவாக்கப்படவேண்டும். தன்னை வளர்ப்பதற்காகவும் பொருள் குவிப்பதற்காகவும் நிகழ்த்தப் படுகின்ற பதவி வேட்டை தான் அரசியல் என்ற தவறான எண்ணம் களையப்படவேண்டும். தொண்டர்களாகத் தம்மைக் கருதுகின்றவர் களைத் தான் தலைவர்களாக ஏற்கப்படவேண்டும். வெளிப் படையாக அறிவிக்கப்படும் கொள்கைகளின் வெற்றிக்காகத் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொள்பவரே மக்கள் சார்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மக்கள்பணி செய்யப் படித்த இளைஞர்கள் முன்வரவேண்டும். அறிவுமிக்கவர்கள், ஒழுக்கமிக்கவர்கள் அரசியலில் இடம்பெறவேண்டும். வெளியில் நின்று அரசியல் பற்றி வேடிக்கையாகப் பேசுவது வீண்வேலை. அரசியல் சாக்கடை என்று கூறித் தப்பித்துக் கொள்ளும் சோம்பலை விடுத்து அரசியல் தூய்மைப்பணி என்னும் உள்ள உறுதியுடன் அதில் ஈடுபடவேண்டும். கிராமங்களுக்குத் தன்னாட்சி வழங்கவேண்டும் கிராமங்களில் தன்னிறைவிற்குத் தட்டுப்பாடு இருக்கக்கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தன் கிராமச் சட்டமன்றமாகவும் அறமன்றமாகவும் அரசாகவும் செயல்படவேண்டும் என்ற காந்தியின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். வறுமை அகற்றப்பட வேண்டும். வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அரசின் கட்டுப் பாட்டை எதிர்நோக்கி மக்கள் வாழும் நிலை விடுதலை நாட்டில் இருக்குமாயின் அது வருந்தத்தக்கது என்று காந்தி கூறுகின்றார். அரசுக் கட்டுப்பாடுகள் மிகக் குறைவாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே கட்டுப்பாடுகளை வளர்க்க வேண்டும். தன் தன் தொழில் அறத்தைத் தானே வகுத்து நிலை நிறுத்த அரசு ஊக்குவிக்கவேண்டும், மேலிருந்து கீழ்வரும்

அமைப்பை மாற்றிக் கிராமத்தில் இருந்து மேல்நோக்கிச் செல்லும் அதிகார அமைப்பை, ஆளும் அமைப்பை அமைத்தல் வேண்டும். மேலே செல்லச் செல்ல அதிகாரம் குவியக்கூடாது. குறைதல் வேண்டும். சாதி மதச் சார்பை எந்த வடிவிலும் ஊக்குவிக்கக் கூடாது. தண்டனை முறைகள் இந்தியச் சூழலுக்கு ஏற்பவும் பரம்பரைக்கு ஏற்பவும் கடுமையானதாக்கப்படவேண்டும். அப்பாவி தண்டிக்கப் பட்டுவிடக் கூடாது. அதனைவிடக் குற்றவாளி ஒருநாளும் தப்பிவிடக்கூடாது என்பது முன்னிறுத்தப்பட வேண்டும். ஆட்சி செய்பவரின் தகுதிகளாகச் சிலவற்றை எடுத்துக் கூறலாம்.

1. முதன்மை
2. அறிவு
3. துணிவு
4. விருப்பு - வெறுப்பற்ற தன்மை
5. அவாவின்மை
6. ஈகைப் பண்பு
7. அறவழியேற்றல்
8. எளியவர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் காக்கும் திறன்
9. சட்டப்படியும் விதிப்படியும் தலைமை நடத்தல்.

இத்தகைய கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் ஆளும் தலைமைப் பொறுப்பில் அமர்ந்தால் காந்தி விரும்பிய கொள்கை அரசியல் நாட்டில் கொலுவீற்றிருக்கும்.

❧

# 2. உழைப்பற்ற செல்வம்

## செல்வத்தின் இன்றியமையாமை

அண்ணல் காந்தியடிகள் ஒரு கருத்துப் புரட்சியாளர் ஆவார். இன்றைய சமுதாயத்தின் நிறைகுறைகளை நுட்பமாக ஆராய்ந்து குறைகளைப் போக்கும் வழிமுறைகளைக் கூறினார். சமுதாயம், பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய நான்கு துறைகளிலும் ஊருடுவியிருக்கின்ற ஏழு குற்றங்களை - குறைகளை - தவறுகளை அருமையாக ஒவ்வொன்றிற்கும் ஓர் அடைச்சொல்லிட்டுப் பட்டியலிடுகின்றார். அவர் குறிப்பிடுகின்ற ஏழு சமுதாயப் பாவங்களில் இரண்டு பொருளாதாரப் பாவங்களாகும். அவற்றில் ஒன்றான உழைப்பற்ற செல்வம் பற்றிச் சிந்திப்போம். அடிகளின் வாழ்க்கையை மந்திர ஆற்றல் போல மாற்றிய இரஷ்கினின் (Ruskin) 'கடையனுக்கும் கடைத்தேற்றம் (Unt to the Last) என்ற நூலின் ஆதாரக்கருத்து பொருளியல் என்பது கவனிக்கத்தக்கது. இரஷ்கின் தமது நூலில் மேற்கத்தியப் பொருளியல் அறிஞர்கள் செல்வத்துக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் கொடுத்த விளக்கத்தை மாற்றி அதனை அறஞ்சார் பொருளியலாக்க முயன்றார். இந்த விளக்கம்தான் காந்தியடிகளைக் கவர்ந்தது. மண்ணுலக வாழ்க்கைக்குப் பொருள் - செல்வம் வேண்டும். பொருள் இல்லாமல் வாழ முடியாது. பொருளை உழைத்துப் பெறவேண்டும். உழைக்காமல் வருகின்ற, பெறுகின்ற, அடைகின்ற செல்வம் சமுதாயப் பாவம் ஆகின்றது.

> *"பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்*
> *பொருள் அல்லது இல்லை பொருள்"*

> *"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை*
> *எல்லாரும் செய்வர் சிறப்பு"*

என்ற குறட்பாக்கள் செல்வத்தின் இன்றியமையாமையைப் புலப் படுத்துகின்றன. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது வள்ளுவரின் வாய்மொழியாகும். ஆகவேதான்,

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனின் கூரியது இல்"

என்று பொருள் செயல்வகை பற்றி வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கைக்குப் பணம் தேவையே தவிரப் பணமே வாழ்க்கையாகாது. எனவேதான் பொருள் அருளுடன் இணையவேண்டும் என்று உலகப் பொதுமறை அறிஞர் வள்ளுவர் ஆர்வப்பட்டார். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையாதல் போல் அருளில்லார்க்கு மேல் உலகம் கிட்டுவதற்கு அரியது என்ற கருத்தையும் நாயனார் வலியுறுத்தினார்.

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்"

என்ற குறள் உழைக்காத சோம்பேறிகளுக்கு இடப்பட்ட மானச் சூடாகும்.

"தெள்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல்"

என்ற குறள் முயற்சி செய்து உண்ணுமாறு நம்மை வேண்டுகின்றது. ஆனால் பொருள் ஈட்டும் வழி நேரியதாக இருக்கவேண்டும் என்பதில் வள்ளுவர் அழுத்தமாயிருக்கிறார். அறம் தவறிய வழியில் பொருள் சேர்வது அவர்க்கு உடன்பாடில்லை. எனவேதான், வள்ளுவர்,

"அறம் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

என்ற குறள்வழிப் பொருளைப் பெறுதல் முதன்மையன்று. அதனைப் பெறுகின்ற வழிமுறையும் சிறந்ததாக இருக்கவேண்டும் என்று காட்டுவதுடன் அறம் தவறிய வழிச்சேர்த்த செல்வம் எதுபோல என்பதையும் வள்ளுவர் கீழ்வரும் குறளால் எடுத்துக் காட்டுகின்றார்.

"சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று"

வள்ளுவர் வலியுறுத்திய பொருள் செயல் வகையின் தூய்மையே காந்தியடிகளையும் கவர்ந்தது. அடிகளும் நோக்கத்தைப் போன்றே

வழிமுறையும் தூய்மையானதாக இருக்கவேண்டும் எனக் கருதினார். பொருளைச் சேர்க்கின்ற வழிமுறை தூய்மையானதாக, அறம் சார்ந்ததாக இல்லையென்றால் பொருள் சேர்ப்பதிலேயே பாவக்கறை படிந்துவிடுகின்றது என்பது அடிகளின் அழுத்தமான கருத்தாகும்.

## செல்வத்துப் பயன் ஈதலே

*"வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்*
*நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*
*கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்*
*உண்பது நாழி உடுப்பவை இரண்டே*
*பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே*
*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே"*

என்று புறநானூற்றுப் பாடல் சங்கப்புலவன் நக்கீரனின் நேரிய பொருளாதாரச் சிந்தனையைப் புலப்படுத்துகின்றது.

*"செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே"*

என்ற வரிகள் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் தகுதி பெற்றனவாகும். இற்றைப் பொருளாதாரத்திற்கும் ஏற்றவிதமாய் இவ்வரிகள் அமைந்துள்ளன.

*"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்*
*பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீர யாழநின்*
*நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்*
*இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது*
*வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்*
*எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே*
*பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்து வேல் குமணன் நல்கிய வளனே"*

என்ற சங்கப்புலவர் பெருஞ்சித்தனாரின் பாடல் காந்தியடிகள் நிகழ்த்த விரும்பிய பரவல்முறைப் பொருளாதாரத்தை அன்றே பதிவு செய்திருக்கின்றது. வள்ளுவரும்,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு"

என்ற குறளின் வழிச் சிறந்த பொருளாதாரச் சிந்தனையை எழுப்பியுள்ளார். பொருளை இயற்றலாம்; ஈட்டலம்; காக்கலாம்; ஆனால் அவற்றைவிட அதை வகுத்தல்தான் தலையாயது. வகுத்தல் சரியாக நிகழுமானால் பொருளாதார ஏற்றத்தாழ்வு இடம்பெறாது. செல்வர்களை வெறுப்பவர் வள்ளுவர் அல்லர். ஆனால் செல்வர்கள் எத்தகையராய் இருத்தல் வேண்டும் என்பதை அவரே எடுத்துக் காட்டியுள்ளார். ஒரு நாட்டில் இடம்பெற வேண்டியவர்கள் 'தாழ்விலாச் செல்வர்கள்' என்று காட்டுவதிலிருந்து மேடுபள்ளமான சமுதாயத்தை உருவாக்க ஒருபோதும் தாழ்விலாச் செல்வர் உடன்படார் என்பது அவரது கருத்தாகும்.

## ஆசையே துன்பத்தின் அடிப்படை

அனைத்துத் தீமைகளுக்கும் அடிப்படையாக அமைவது 'ஆசை' யாகும். ஆசை கூடாது என்பதல்ல. அது அளவு கடக்கும் பொழுது அளவிலாத தீமைகளை அது உண்டாக்குகின்றது. எனவே தான் "ஈசனோடாயினும் ஆசையறு மின்" என்று திருமூலர் ஆசையின்மைக்கு வழிகாட்டுகிறார். மனிதனின் அடிப்படைத் தேவையை நிறைவேற்றச் செல்வம் தேவை என்பதை யாரும் மறார். ஆனால் உடனடியாக மிகுதியான செல்வத்திற்கு உரியராதல் வேண்டும் என்ற பேராசைதான் பிறர் உடைமைகளையும் பறித்துத் தமதாக்கிக்கொள்ள நம்மைத் தூண்டுகின்றது. மந்திரத்தால் மாங்காய் விழுவதில்லை. உழைத்துத்தான் செல்வத்தைச் சேர்க்கவும் வேண்டும்; சேமிக்கவும் வேண்டும்.

## செல்வ நிலையாமை

> "கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
> போக்கும் அது விளிந்தற்று"

என்ற குறள் செல்வ நிலையாமையைத் தக்க உவமையுடன் விளக்கியுள்ளது. பிறக்கும்போது எதையும் கொண்டு வந்ததில்லை. இறக்கும்போதும் எதையும் கொண்டு போவதில்லை. நாம் ஆற்றிய நல்வினை, தீவினையின் பயனே சாவிலும் நம்மைத் தொடர்கின்றது.

நிலையற்ற செல்வத்தை நிலையற்ற வழிகளில் நாம் தேட முயற்சிக்கிறோம். உழைத்து உண்ணுதலே உயரிய கொள்கை என்பதை அற்றைத் தமிழனும் உணர்ந்திருந்தான். "வினையே ஆடவர்க்கு உயிரே" என்று மொழிந்தவனும் பண்டைத் தமிழனே. அன்று மணம் செய்யவேண்டுமெனில் பெண்ணுக்குத்தான் பொருள்தர வேண்டும். அப்படிப்பொருள் தருவதற்காகக் களவில் ஈடுபட்டிருந்த தலைவன் தலைவியைச் சின்னாள் பிரிந்து செல்வம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடுவான். இதனை 'வரை இடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' என்று அகப்பொருள் இலக்கணம் அறிமுகம் செய்கின்றது.

## ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தியது எது?

உடைமையின் அடிப்படையில் செல்வத்தைத் (1) தனியாள் செல்வம், (2) சமுதாயச் செல்வம், (3) நாட்டுச் செல்வம், (4) உலகச் செல்வம் என்று பிரிக்கலாம். அடிகள் உழைக்காமல் பெற்ற செல்வம் சமுதாயப் பாவம் என்கின்றபொழுது தனிமனிதனின் சொத்துக் களையே கூறுகின்றார். செல்வம் எப்படி உருவானது என்பதற்கும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்ட முறைக்கும் 'இரஷ்கின்' கூறுகின்ற எடுத்துக்காட்டை எடுத்துக்காட்டுவோம்.

நடுக்கடலில் ஒரு கப்பல் உடைகின்றது. அதிலிருந்து தப்பிய இரு மாலுமிகள் ஆளே இல்லாத ஒரு தீவில் கரையேறுகின்றனர். உயிர்வாழ உழைத்து உணவு உற்பத்தி செய்கின்றனர். உழைப்பின் மூலம் ஒரு வயல் உருவாகின்றது. குடியிருக்க ஒரு வீடு கட்டிக் கொள்கின்றனர்; விளைச்சலில் ஒரு பகுதியை மிச்சப்படுத்தி வைக்கின்றனர். இப்படி உழைப்பால் வீடு, வயல், விளைபொருள் என்ற செல்வத்தை உருவாக்கிக் கொள்கின்றனர்.

இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு வர வீட்டையும் காட்டையும் சேமிப்பையும் இரண்டாகப் பிரித்துக் கொள்கின்றனர். இருவரும் தனித்தனியே உழைக்கின்றனர்.

இருவரில் ஒருவன் காய்ச்சலில் தொல்லைப்படுகிறான்; உழைக்க முடியவில்லை; மற்றவன் உதவியை நாடுகின்றான்; தான் மற்றவனின் நிலத்தில் உழைக்கின்ற அளவிற்குப் பின்னால் தனது

வயலில் மற்றவன் உழைக்க வேண்டுமென்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் உழைக்கின்றான். ஆனால் காய்ச்சலாய்ப் படுத்தவன் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டதால், அடுத்தவனுக்கு மிகுந்த அளவு உழைப்புக் கடன்படுகின்றான். நோய் குணமான பிறகு, கடனைத் தீர்க்க மற்றவனின் வயலில் உழைக்கின்றான். தனக்காக உழைக்காத நிலையில், மற்றவனிடம் உணவுப் பொருள்களைக் கடனாக வளங்குகின்றான், கடன் சுமை கூடுகின்றது.

கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் தனக்குச் சொந்தமான நிலத்தைக் கொடுத்துத் தீர்க்கக் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இப்பொழுது நிரந்தரக் கூலியாகின்றான்.

## சுரண்டல் பொருளாதாரம்

நில உடைமையாளர்கள் உழைப்பவர்களுக்கு வாழும் அளவிற்குக் கூலி கொடுத்துவிட்டு மீதியைத் தமதாக்கிக் கொள்கின்றனர். இதனைக் 'காரல் மார்க்ஸ்' எச்சமதிப்புக் கோட்பாட்டின் (Surplus theory of wages) மூலம் விளக்கினார். உழைப்பாளர்களின் உழைப்பால் கிடைத்ததை அவர்களுக்குக் கொடுக்காமல் வைத்துக்கொள்வது சுரண்டலாகின்றது. இச்சுரண்டலின் மூலம் செல்வம் சேர்கின்றது என்பது காரல்மார்க்ஸ் தரும் விளக்கமாகும். வேளாண்மைப் பொருளாதாரத்தில் உருவாகத் தொடங்கிய செல்வம் வாணிபப் பொருளாதாரத்தில் பல்கிப் பெருகியது. பணம் பழக்கத்திற்கு வந்து பணத்தின் மூலம் கூலி கொடுக்கவும் வாணிபம் செய்யவும் தொடங்கிய பிறகு திறமை வாய்ந்த சிலரிடம் மிகுதியான செல்வம் சேர்ந்தது.

ஒரு சமுதாயத்தில் ஆற்று நீர் போல வருவாய் ஓடிக் கொண்டிருக்கின்றது. ஓடும் நிலநீர் அமைப்பால் பள்ளமுள்ள இடங்கள் - குளங்கள் - கேணிகள் - கண்மாய்கள் போன்றவற்றில் தேங்குவதைப் போலச் சமுதாயத்தில் பொருள் உற்பத்தியால், தொண்டுப் பணிகளால் கிடைக்கின்ற வருவாய் சிலரிடம் தேங்குகின்றது, பெருகின்றது. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில்,

> "அணைக்கட்டுக்களின்
> திறக்கப்படும் தண்ணீர்

*பள்ளங்களை ஏமாற்றி விட்டு*
*மேட்டை நோக்கியே*
*பாய்கிறது*

என்று கவிஞர் மேத்தா பாடியுள்ளதன் பொருத்தத்தை நம்மால் உணரமுடிகின்றது. இனி இத்தகைய மேடு பள்ளமான பொருளாதார அமைப்பிற்குத் துணைபோகும் தீயவழிகள் பற்றிச் சிந்திப்போம்.

## முதலாளித்துவ அமைப்பு முறை

செல்வக் குவிப்பிற்கு முதலாளித்துவ அமைப்பு முறை வழிவகுக்கின்றது. பணம் வெறும் மாற்று மையமாக மட்டுமல்லாமல் சேமிப்புக் கலனாகவும் கணக்கு அலகாகவும் மதிப்பளவாகவும் இருப்பதால் சுரண்டல் கருவியாகின்றது. மதிப்பு மாறுதலும் ஆதாயமும் பணப் பொருளாதாரத்தில்தான் கிடைக்கும். பண்டமாற்றத்தில் இவ்வாறு நடக்காது. ஆதலால்தான் காரல்மார்க்ஸ் பணத்தைச் சுரண்டல் கருவி என்கின்றார். பலரின் கூட்டுழைப்பில் பயன்படுத்தியதுபோக உருவெடுத்த செல்வத்தை அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பு, சட்ட-திட்டங்களின்படி வருவாய் அமைப்பு, சொத்துரிமை மாற்றங்கள் நிகழ்கின்றன. இருந்தும் செல்வம் சேரும் சிலரிடம் மட்டும் சேர்ந்து குவிகின்றது என்பதை எண்ணிப் பார்ப்போம்.

## வதை செய்யும் வட்டிக் கொடுமை

முதலாவதாக ஒருவர் உழைத்துப் பெறும் வருவாயில் சேமித்துச் செல்வத்தை உருவாக்கலாம். இவ்வழியில் பொருளை ஈட்டுவது என்பது அறக்கேடாகாது. ஆனால் இங்ஙனம் உருவாகும் செல்வம் மெதுவாக வளரும். இரண்டாவதாகப் பணத்தை வட்டிக்குக் கொடுத்தும் வாணிபத்தில் ஆதாயமாகவும் பெறுகின்ற வருவாயில் விரைந்து செல்வத்தை உருவாக்கலாம். இப்படி உருவாகின்ற செல்வம் எல்லாம் உழைப்பால் உருவானதென்று கூறமுடியாது. அன்றாடம் காய்ச்சிகள், ஏழைகள் சமுதாயத்தின் அடித்தட்டில் உள்ள மக்கள் ஆகியோர்க்கெல்லாம் அச்சத்தை விளைவித்துக் கொண்டிருப்பது வட்டி முறையாகும்.இவ்வட்டியைக் கந்துவட்டி எனவும் அழைக்கின்றனர். வட்டியைப் பெறுகின்றவர்களின்

செல்வம் பெருகுகின்றது என்பதைவிட இவ்வட்டிக்காரர்களின் ஈவு இரக்கமற்ற கொடுமையான செயல்களால் வட்டிக்குப் பணம் பெற்றவர்கள் படும்பாடு பேசமுடியாதது. தேவைக்குரிய பணத்தைப் பெறுகின்றபொழுதே அவர்கள் செலுத்தவேண்டிய முதல் தவணையான வட்டித்தொகையைக் கழித்துக்கொண்டுதான் பணம் தருகிறார்கள்.

வட்டியைப் பெறச் செல்வர்கள் பயன்படுத்தும் முறைகள் அறம் திறம்பியவை ஆகும். அடியாள்களைத் துணையாகக்கொண்டு வட்டியை வசூல்செய்கின்ற அவலம் இன்றும் நாட்டைவிட்டு அகலவில்லை. கந்துவட்டிக்காரர்கள் பணம் பெற்றவர்களின் பார்வையில் பாசக்கயிறுடன் திரியும்கால தூதர்களாகவே காட்சியளிக்கிறார்கள். வாய்த்தகராறில் தொடங்கிக் கை கலப்பாக வளர்ந்து கொலை வரைக்கும் இக்கந்துவட்டி ஒரு மனிதனை இழுத்துச் சென்றுவிடுகிறது. தேவைக்குக் கூடுதலாக வாங்குவதே கொடுமை என்றால் அதைவிடக் கொடுமையானது அதனை வசூலிக்கும் முறையாகும். அதனால்தான் ‘கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்’ என்று அன்றே கடன் விளைவிக்கும் கொடுமை பற்றிக் கம்பன் பேசினான். சில வேளைகளில் வட்டிக் கொடுமைகள் அறிந்திருந்தும் படித்தவர்களே தம்மை இன்னும் மீட்டுக் கொள்ளாது இருப்பது வேதனைக்குரியது ஆகும். குறிப்பாகத் திரைப்பட உலகத்தினர் இவ்வட்டி முறையினால் படும்பாடு சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வாங்கும் பணம் உயிரையே பறிப்பதற்குத் துணை போவதை என் சொல்வது? வட்டிக்குப் பணம் தரும் செல்வர்கள் இருவகைப் பாவங்களை ஆற்றுகின்றனர். ஒன்று கூடுதலாக வட்டி பெறுதலாகும். மற்றொன்று பணம் வாங்கியவர்களைத் தகாத முறையில் கண்டிப்பதாகும்.

## வருமான வரியில் தில்லு முல்லு

கலப்படம் நிகழ்த்துவதின் மூலமும் உரியதொகைக்கு மேலே வணிகர்கள் பெரும்பங்கு சேர்க்கின்றனர். கறுப்புப்பணம் வைத்திருப்போரும் ஒரு வகையில் உழைக்காமல் பொருள் சேர்க்கின்றவர்களே. வரி ஏமாற்றும் இவ்வகையைச் சார்ந்ததே ஆகும். வரிகட்டவேண்டிய நிலையைப் பெற்றவுடன் தாமாக

முன்வந்து வரியைக் கட்டுவது என்பது நற்குடிமகனின் கடமையாகும். மாறாகப் பொய்யான வருவாயைக் காட்டி வரிவிலக்குப் பெறுகின்றவர்கள் அல்லது ஒட்டுமொத்தமாக வரி கட்டாமல் கிடப்பில் போடுகின்றவர்கள் ஆகியோரும் உழைக்காமல் பொருள் ஈட்டும் தாழ்தரத்தினர் ஆவார். விற்கப்படும் பொருளுக்குரிய அடிப்படை விலையைவிடக் கூடுதலாக இலாபம் தரும் வகையில் விலையை நிர்ணயித்துப் பொருளை விற்கின்றவர் களும் இவ்வகையினரே.

## வழக்காடுதல், மருத்துவக் கட்டணக் கொள்ளை

வழக்குரைஞர்கள், மருத்துவர்கள் போன்றவர்கள் தங்கள் தொழிலுக்காகக் கட்டணம் பெறுவது முழுக்க உழைப்பிற்கென்று கூறமுடியாது. இவ்வளவு என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையில் எவ்வளவும் வாங்கலாம் என்ற சூழ்நிலை இருக்கின்றது. வருகின்றவர்களின் இக்கட்டான நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கூடுதலாக இவர்கள் பெறுகின்றனர். இதுவும் ஒருவகைக் கொள்ளையே. வழக்குரைஞரிடமும் மருத்துவரிடமும் மாட்டிக் கொள்கின்றவர்களின் பாடு பரிதாபத்திற்குரியது. வீடு, மாடு, மனை, காடு இவற்றையெல்லாம் விற்றுக்கொடுத்தாலும்கூட அவர்கள் கேட்கின்ற கட்டணத்தை முழுமையாகக் கட்டமுடிவதில்லை. வழக்குகள் எல்லாம் வெற்றியாவதில்லை. மருத்துவம் எல்லாம் உயிர் காப்பதில்லை. இருந்தாலும் கட்டணம் என்ற பெயரால் பகற் கொள்ளையை இவர்கள் நிகழ்த்துகின்றனர்.

## ஊறித்திளைத்த ஊழல் பேய்

நான்காவதாக அதிகாரத்தில் உள்ளவர்கள், அரசியல்வாதிகள் பெறுகின்ற இலஞ்சத்தைக் கூறலாம். ஊதியத்துக்கு மேல் இவர்கள் பெறுகின்ற பணம் உழைக்காமல் வருவதால் இவர்கள் உருவாக்குகின்ற செல்வம் எல்லாம் உழைப்பின்றிப் பெறும் செல்வம் ஆகும். அரசியல்வாதிகள் எங்ஙனம் உள்ளனரோ அங்ஙனம்தான் அவர்களால் ஆளப்படுகின்ற அரசு நிர்வாகத்தினரும் அமைந்திருப்பர் இலஞ்சப்பேய், சுரண்டல்பேய் எனும் நிசப் பேய்களை நிராகரித்து விட்டுக் கற்பனைப் பேய்களுக்குக் கடை விரித்துக் காட்டுகின்றது இற்றைத் தொலைக்காட்சிகள்.

பணி செய்யப் பணியாளன் ஊதியம் பெறுகின்றான். அலுவலக நிர்வாகத்தில் கையூட்டு இன்று பெரும்பங்கு வகிக்கின்றது. கையூட்டு வாங்குகின்றவன் மேல் குற்றம் இல்லை; கொடுக்கின்றவன் மேல் குற்றம். கையூட்டு வாங்குதல் கூடாது என்று அறிவுறுத்துவதைவிடக் கையூட்டுத் தருதல் கூடாது என்ற வைராக்கிய உணர்வு ஒவ்வொருவருக்கும் வருதல் வேண்டும். அமைச்சர் ஒருவர் உழவராக மாறுவேடம் அணிந்து ஆட்சித் தலைவர் அலவலக ஊழியரிடம் இரண்டு தாளை எடுத்துநீட்டி விவரம் ஏதோ கேட்டாராம். மாட்டேன் என மறுத்தாராம் ஊழியர். தம் துறை ஊழியரின் நேர்மையை நினைத்து அமைச்சர் மகிழ்ந்தாராம். நெஞ்சு குளிர்ந்து அவர் வெளியே சென்றதும் ஊழியர் திருவாய் மலர்ந்து சொல்லியதாகக் கவிஞர் குறிப்பிடும் செய்தி நகைச்சுவையை வரவழைக்கின்றது.

*"பத்து ரூபாய்க்காக*
*பார்த்துச் சொல்வேன்*
*அவ்வளவு எளிதாய்?*
*அலைய விட்டு நான்*
*அப்புறம் கறப்பேன்*
*அறுபது எழுபது.........."   (மீரா)*

இப்பாடலில் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல அமைச்சரையே பதம் பார்க்கும் ஊழியரின் உதவாப்போக்கும் உழவன் உறுதுயரமும் காட்டப்பட்டுள்ளன.

## உழைப்பை மிஞ்சி ஊதியம் பெறுவோர்

தனித்திறமை பெற்றவர்கள் பெறுகின்ற பெருமளவான ஊதியம், அன்பளிப்புக்கள் ஆகியவையும் செல்வமாகின்றன. உலகப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் பெறுகின்ற வருவாயையும் கூறலாம். இதில் அவர்கள் உழைப்புக்கு மேல் கிடைப்பது குறிப்பிடத்தக்க அளவில் இருக்கும்.

## இயற்கை வளச் சுரண்டல்

இயற்கை வளங்களைச் சுரண்டிப் பெறுகின்ற செல்வமும் உழைப்பற்ற செல்வமே. ஆற்று மணல், மலைக் கற்கள், இயற்கைச்

செல்வமான காடுகள், சுரங்கங்களில் கிடைப்பவை இவை யெல்லாம் உழைக்காமல் பெறுபவையாகும். ஆற்று மணல் திருட்டு நாளும் நடத்தும் திருவிளையாடல்கள் நம் நெஞ்சை உருக்குகின்றன. உரிமம் பெறாமலே ஆற்றுமணல் கொள்ளை நடப்பது அன்றாட நிகழ்வாகிவிட்டது. இதனால் ஏற்படும் குழப்பம், கொந்தளிப்பு, அடிதடி, ஆவி பறித்தல் போன்ற கொடுஞ் செயல்களைக் கொண்டிராத செய்தித்தாள் எதுவும் இராது. இதுபோல் காடுகளில் மரங்களை வெட்டுதல், சந்தனக் கடத்தல் என்பனவும் உழையாமல் பொருள் சேர்க்க உறுதுணையாகின்றன. யானைத் தந்தங்கள் திருடப்பட்டு விலைபேசப்படுகின்றன. காட்டு விலங்குகளின் தோல்கள் பிறர் அறியாத நிலையில் விற்பனையாகின்றன.

## போதைப் பொருள்களின் பொல்லாங்கு

சட்டத்துக்கு முழுவதும் புறம்பான கள்ளக் கடத்தல், திருட்டு, கொள்ளை, போதைப் பொருள்கள் விற்பனை என்று செல்வத்தைக் குவித்து வைத்திருப்பவர்களும் உள்ளனர். கள்ளக்கடத்தல் நடவாத நாள் இல்லை. விமான நிலையங்களில், சொந்தச் சொகுசு வண்டிகளில், சரக்கு உந்துகளில் பிடிபடும் கள்ளக்கடத்தல் காரர்கள் நாளும் எண்ணிக்கையில் மிகுதியாகின்றனர். திருட்டும் கொள்ளையும் இரவில் மட்டுமல்லாமல் பகலிலேயே நடை பெறுகின்றன. போதைப் பொருள்களின் விற்பனை பற்றிப்பேசத் தேவை இல்லை. அந்த அளவிற்குப் பெருமளவில் போதைப் பொருள்கள் விற்கப்படுகின்றன. குறிப்பாகக் கஞ்சா, அபின், ஹெராயின் போன்றவை நடமாடாத இடமே இல்லை. பாதுகாப்புத் தரவேண்டிய சிறைச்சாலைகளிலேயே இக்கடத்தல் மிகச் செழிப்பாக நடக்கின்றது.

பட்டுக்கோட்டையில் இருந்து பதினைந்துகிலோ மீட்டர் தொலைவில் இருப்பது கிழத்தோட்டம் நாடியம்மாள்புரம் என்னும் சிற்றூர் ஆகும். இவ்வூரில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் சாராயப்பாட்டிலில்தான் முகத்தைக் கழுவுகின்றனர். இறால்களைப் பிடிப்பதுதான் இந்தக் கிராம மக்களின் பகுதி நேரத்தொழிலாகும். மற்ற நேரங்களில் சாராயம் குடித்துவிட்டு அவ்வூரினர் சீட்டாடுகின்றனர். பலரது விடியல் சாராயப் பாட்டிலில்தான் நிகழ்கிறது. காப்பி, தேநீர் போன்ற தற்காலிகப் போதைகளுக்குப்

பழக்கப்படாத இம்மக்கள் ஆண், பெண் வேறுபாடின்றி நிலையான போதைதரும் சாராயம் குடிக்கிறார்கள். குழந்தைகளும் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிப்போனதுதான் கொடுமையிலும் கொடுமை. நாடியம்மாள்புரத்தில் வீட்டுக்கு வீடு பீர்பாட்டில்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றில் எழுதியிருப்பதோ 'குடி குடியைக் கெடுக்கும்' என்பதாகும். பாவம் அங்கு யாருக்கும் படிக்கத் தெரியாது. இத்தகைய போதைக் கிராமங்கள் எண்ணிக்கையில் பெருகுமானால் இந்தியா தன் ஆன்மாவைத் தொலைத்துவிட்டு அழவேண்டியதிருக்கும். செல்வத்தைச் சேர்க்கும் வழிமுறைகள் பற்றிய இந்தப் பட்டியல் முற்றுப்பெற்றதல்ல. நமது சட்டமுறைப்படி வாரிசுதாரர்கள் பெறுகின்ற சொத்தும் செல்வமும் உழைக்காமல் வருவன. சமுதாய அமைப்பில் வரதட்சணை, அன்பளிப்பு போன்ற முறைகளாலும் சொத்துக்கள் சேரலாம். மொத்தத்தில் இன்றைய அமைப்பு முறையில் இருக்கின்றவனுக்கு மேலும் மேலும் கிடைப்பதும் இல்லாதவனிடமிருந்து இருப்பதையும் இருப்பவர்கள் எடுத்துக்கொள்ளுதல் இயல்பாகி விட்டதையும் காணலாம். உழைக்காமல் செல்வம் சேர்க்கின்ற முறைகளில் அறமும் சமுதாய நீதியும் இல்லை. அதனால் உழைப்பற்று வரும் செல்வம் பாவமாகின்றது.

## பணமே பாவத்தின் நிலைக்களன்

செல்வத்தைச் சேர்த்துப் பின்பற்றும் முறைகளில் எவ்வளவு சமுதாயச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்பதை எண்ணிப் பார்த்தால் தலை சுற்றும். குடும்ப மகிழ்ச்சி கொள்ளை போகின்ற வரதட்சிணைக் கொடுமை முதல் நகைக்காகப் பணத்திற்காகக் குழந்தைகளையும் பெண்களையும் வயதானவர்களையும் கொலை செய்கின்ற வரை நாளும் கொடுமைகள் நடைபெறுகின்றன. செல்வத்தின் விளைவுகள் இன்னும் கொடூரமாக இருக்கின்றன. செல்வர்களைப் பார்த்து நடுத்தர வகுப்பினர் நாகரிகம் என்ற பெயரால் செய்கின்ற செலவுகள், செல்வர்கள் இன்பத்தைத் தேடுவதாக எண்ணிக்கொண்டு மது, மாது, சூது இன்னும் வளர்கின்ற தீமைகள், அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றச் செல்வத்தைப் பயன்படுத்தித் தேர்தலையே கேலிக்கூத்தாக்குதல் என அடுக்கிக்கொண்டே போகலாம். நீதியை விலைகொடுத்து வாங்குவதில்கூடச் செல்வம் கருவியாகின்றது. பணம் எத்தனை

வகையான பாவச் செயல்களுக்கு நிலைக்களனாக இருக்கின்றது என்பதை நடைமுறையில் காணலாம். வைக்கோலில் செய்த கன்றுக் குட்டியைக் காட்டிப் பால் கறப்பது முதல் எதிலும் கலப்படம் செய்வது, கற்பை விற்பது வரை எல்லாவற்றிற்கும் அடிப்படையாய் இருப்பது பணமாகும். பணம் அரசியலில் நுழைந்து விலை மதிப்பற்ற வாக்குச் சீட்டுக்கும் விலைபேசி மக்களாட்சியைத் தோல்வி அடையச் செய்கின்றது; சமயத்தில் நுழைந்து சடங்குகளைப் பெருக்குகின்றது. சமுதாயத்தில் அன்பால் நடைபெறவேண்டிய திருமணம் போன்ற மனித உறவுகளிலும் பணம் ஊடுருவி நிற்கின்றது. பணம் மனித உள்ளத்தைப் பாலைவனமாக்குகின்றது.

## சமத்துவப் பொருளாதாரம்

இன்று நமது நாட்டிலும் கொலைமிகுதியான நாடுகளிலும் மேற்கத்தியப் பொருளாதார முறையே செல்வாக்குப் பெற்றுப் பரவியுள்ளது. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டபோது முதலாளித்துவம் புதிய ஆற்றலுடன் வளர்ச்சி பெற்றது. மேற்கத்தியப் பொருளாதார அமைப்பு வழியாக இப்பொழுது முதலாளித்துவம் கொடிகட்டிப் பறக்கின்றது. இம்முறையில் செயல்படுவதில் தொடங்கியுள்ள தீமைகளை உணர்ந்து கொண்டால் அவற்றை எப்படி நீக்கிவிட்டுப் பொருளாதாரச் சமத்துவ அமைப்பினைக் கொண்டு வரமுடியும் என்பதனை ஆராயலாம். முதலாளித்துவத்தில் முதலாவது இடத்தைப் பெறுவது பணமாகும். பணத்தை முதலில் பொருள்களை வாங்கி விற்கும் கருவியாகப் பயன்படுத்தினர். பின்னால் அது கொடுக்கல் வாங்கலில் கணக்கலகாகப் பயன்பட்டது. பணம் அது செய்யவேண்டும் என்று எதிர்பார்த்த பணிகளை மட்டும் செய்துகொண்டு இருக்கவில்லை. அது தனக்கென்று தனி ஒரு ஆற்றலைத் தேடிக்கொண்டிருக்கின்றது. மனிதர்களை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் அதனிடம் உள்ளது. அதனைப் படைத்த மனிதனால் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வதில்லை. மூளை படைத்தவர்கள் பண மதிப்பில் ஏற்படுகின்ற மாறுதலினாலே கோடி கோடியாகப் பணத்தைக் குவிக்க முடிகின்றது. வழி முறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் பணம் குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றவர்களால் பல பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதைப் பார்க்கின்றோம். பணப்

பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மற்றொரு சீர்கேடு ஏற்றத் தாழ்வாகும். சிலரிடம் செல்வம் குவிகின்றது. சிலர் வறுமையில் வாடுகின்றனர். இதனால் இருப்பவர், இல்லாதவர் எனும் இரண்டு இனங்கள் தோன்றின. செல்வர்கள் மீது ஏழைகளின் வெறுப்பு வளர்கின்றது. இத்தகைய வெறுப்பால் சமுதாயத்தில் வன்முறை தலை தூக்குகின்றது.

சமத்துவப் பொருளாதார முறை என்றால் என்ன? அதன் சிறப்புக் கூறுகளைப் பின்வருமாறு சுட்டிக் காட்டலாம்.

## 1. எளிய வாழ்க்கை

பொருளாதார வாழ்வில் சமத்துவம் நிலவ ஒவ்வொருவரும் தங்களது தேவைக்கு மேல் எதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. தேவைகள் மனிதனுக்கு மனிதர் வேறுபடலாம். ஆனால் தேவைகளின் பெருக்கம் மனிதனின் ஆன்மாவை அரித்துவிடும். ஆதலால்தான் அடிகள், "உண்மையான நாகரிகம் தேவைகளின் பெருக்கத்தில் இல்லை. ஆனால் நாமே விரும்பித் தேவைகளைக் குறைத்துக் கொள்வதில் இருக்கின்றது" என்று கூறுகிறார். எளிமையான வாழ்க்கையில் விருப்பங்களின் துறவு இருக்கும். எவை இன்றியமையாத தேவைகளோ அவற்றை மட்டும் பயன்படுத்துவர். புற ஆரவார வாழ்க்கைக்குரிய வீணான ஆடம்பரப் பொருள்களைப் பயன்படுத்தமாட்டார்கள். இதனால் மக்களின் வாழ்க்கை முறையில் சமத்துவம் இருக்கும்.

## 2. உடைமையின்மை

இம்முறையில் தனி உடைமைக்கு இடமில்லை. தனி உடைமையாக அமைகின்ற பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒருவகை தனி வாழ்விற்குரிய இனிறியமையாத உணவு, உடை, இருப்பிடம் போன்ற தனிப்பொருள்கள். இவற்றைத் தனி மனிதன் சொந்தமாக வைத்துக்கொள்ள அனுமதிக்கலாம். ஆனால் இரண்டாம் வகையான உற்பத்திச் சாதனங்கள் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்திவிட்டன. நிலம், பணம், தொழிற்சாலைகள் போன்றவை இவற்றில் அடங்கும். ஆதலால் உற்பத்திச் சாதனங்க ளெல்லாம் சமுதாயத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டுமென்பதே இப்பொருளாதார அமைப்பின் உயிர்க்கொள்கையாகும்.

### 3. உடல் உழைப்பு

*இம்முறையில் அனைவரும் உடல் உழைப்பை மேற்கொள்வர். ஒவ்வொருவரும் உடல் உழைப்பின் மூலம் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வர். உழைக்காமல் வீணில் உண்டு வாழ்பவருக்குப் பொருளாதார அமைப்பில் இடமிருக்காது.*

### 4. தொண்டுப் பொருளாதாரம்

*காந்தியப் பொருளியல் அறிஞரான ஜே.சி. குமரப்பா (1) உயிரைக் கொன்று வாழும் கொலை வாழ்க்கை, தேனீயைப் போல் வாழும் முயற்சி வாழ்க்கை, தேனீக்களைப் போல் இணைந்து வாழும் கூட்டு வாழ்க்கை, தனக்கென்று வாழாமல் குடும்பத்திற்காக வாழும் தாயைப்போல் இருக்கின்ற தண்ணளி வாழ்க்கை என ஐவகை வாழ்க்கை முறைகளைக் கூறுகின்றார். இவற்றில் சிறந்ததான தாய்மை வாழ்க்கையில் முறையான தொண்டு வாழ்க்கை இருக்கின்றது. முதலாளித்துவ அமைப்பில் கொலை வாழ்க்கை, கொள்ளை வாழ்க்கை, முயற்சி வாழ்க்கை ஆகிய முறைகள் உள்ளன. பொதுவுடைமையில் வளர்ச்சி நிலையாகக் கூட்டுவாழ்க்கை இருக்கின்றது. இதனால் காந்தியப் பொருளாதார முறையில் தொண்டு வாழ்க்கைமுறை இருக்கும். ஒவ்வொருவரும் தாங்கள் வாழ்வதோடு மற்றவர்களும் வளமாகவும் நலமாகவும் வாழத்துணை செய்யும்.*

### 5. சுதேசி

*மக்கள் எல்லோரும் தங்களது ஊரில், வட்டாரத்தில் செய்த பொருள்களையே பயன்படுத்துவார்கள். சமுதாயத்திற்கு வெளியில் செய்த பொருள்களை வாங்கிப் பயன்படுத்த மாட்டார்கள். இதனால் சமுதாயத்தில் எல்லோர்க்கும் வேலை கிடைக்கும்.*

### 6. கூட்டுறவு அமைப்பு முறை

*காந்தியப் பொருளாதாரம் கூட்டுறவுக் கொள்கையின் அமைப்பு முறையையும் ஏற்றுக் கொள்கின்றது. ஒருவர் அனைவருக்காகவும் அனைவரும் ஒருவருக்காகவும் என்ற முறையில் பொருளாதார நடவடிக்கைகள் அமையும். இதனால் சமத்துவமாக அனைவரும் வழழ்வார்கள். எனவே காந்தியப் பொருளாதாரம் ஏற்றத்தாழ்வும்*

சுரண்டலும் அற்றநிலையில் தனிமனித, சமுதாய வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள சமத்துவச் சமுதாயம் அமையத் துணைநிற்கும்.

## அண்ணலின் அறங்காவலர் தத்துவம்

காந்தியடிகள் அறங்காவலர் தத்துவத்தை மிக எளிமையாகக் கடைப்பிடிக்குமாறு மக்களை வேண்டினார். வாரிசு உரிமை மூலமாகவும் வாணிபம், தொழில் மூலமாகவும் ஒருவனுக்குக் கணிசமான சொத்துக் கிடைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம், அந்தச் செல்வம் முழுவதும் தனக்குச் சொந்தமானதல்ல என்பதை அவன் உணரவேண்டும். இலட்சக்கணக்கான மற்றவர்களைப் போல் நாணயமான வாழ்க்கை நடத்துவதற்குத் தான் தனக்கும் உரிமை உண்டு என்பதை அவன் உணரவேண்டும். மீதம் உள்ள அவன் செல்வம் முழுவதும் சமுதாயத்திற்குச் சொந்தமானது. சமுதாயத்தின் நலன்களுக்காகவே அதைச் செலவிடவேண்டும் என்று அவர் விளக்குகின்றார். அடிகளின் கொள்கையைச் செல்வர்கள் மனம் மாறித் தங்களை உயர்த்திக்கொள்ளும் ஒரு வழிமுறையாகக் கூறுகின்றார். சிலர் கூறுவதைப்போல முதலாளித்துவத்தைக் காப்பாற்ற ஒரு ஏமாற்று முறையாக இதனை எண்ணவுமில்லை; எடுத்துக் கூறவுமில்லை. ஆதலால்தான் முதலாளிகள் அறங்காவலர்களாக மாறாவிட்டால் என்ன ஏற்படும் என்பதையும் எச்சரிக்கையாகவும் அவர் கூறினார்.

அவர் "முதலாளிகளுக்கு இரண்டேவழிகள் இருக்கின்றன. ஒன்று தம்மிடமுள்ள தேவைக்கதிகமாக உடைமைகளைத் தாமாகவே விட்டுக்கொடுத்து அதன்மூலம் இன்புற்று இருப்பதாகும். மற்றொன்று முதலாளிகள் உரிய சமயத்தில் விழிப்படையாவிடில் விழிப்படைந்த ஆனால் செய்தி ஞானமில்லாத இலட்சக்கணக்கான ஏழைகள் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடுவார்கள். வலிமை வாய்ந்த ஓர் அரசின் ஆயுதபலம்கூட அதைத் தவிர்க்க முடியாது" என்று கூறியுள்ளதை நினைவுகூர்வோம்.

அறங்காவலர் தத்துவத்தின் மூலக் கருத்தை வான்புகழ் கொண்ட வள்ளுவர் 'ஒப்புரவு அறிதல்' என்று குறிப்பிடுகிறார். அண்ணலின் அறங்காவலர் தத்துவத்திற்கு அரண் செய்கின்ற மூன்று திருக்குறள்களைச் சுட்டிக்காட்டலாம்.

"ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"
"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"
"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

## அமைதிச் சமுதாயம் அமைப்போம்

அடிகளே பொருள் பற்றற்ற வாழ்க்கையை நடத்தத் தொடங்கினார். ஆதலால்தான் தென்னாப்பிரிக்காவில் இருந்து ஒருமுறை இந்தியா திரும்புகையில் அங்கு உள்ளவர்கள் அளித்த விலை மதிப்பற்ற பொருள்களை எல்லாம் எடுத்துக்கொள்ளாமல் அவர்களுக்கே பயன்படும் வகையில் அறக்கட்டளையாக உருவாக்கினார். அவர் தென்னாப்பிரிக்காவில் உருவாக்கிய 'போனிக்ஸ்' குடியிருப்பு, டால்ஸ்டாய் பண்ணை, இந்தியா திரும்பிய பிறகு மேற்கொண்ட ஆசிரம வாழ்க்கை ஆகியவை கூட்டு வாழ்க்கையில் அவர் மேற்கொண்ட சோதனை. தனக்கென்று செல்வத்தைச் சேர்க்காதவர்க்கு உலகமே சொந்தமாகிவிடும் என்பதற்குக் காந்தியடிகளின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டாகும். நாம் நமது வாழ்வியல் தரத்தை உயர்த்த அவர் எண்ணினார். செல்வத்தைத் தேடுவதைப் பற்றியும் பயன்படுத்துவதைப் பற்றியும் தெளிவுபெறவேண்டும். செல்வம் நமக்குச் சுமையாக உள்ளது; கரை சேர்க்கும் தோணியாக வேண்டும். வள்ளலார் கூறியதுபோல 'வாடிய பயிரைக் கண்டபோது வாடவேண்டும். வீடுதோறும் இரந்தும் பசியோடு இருக்கின்ற வெற்றர்களைக் கண்டு உள்ளம் பதைக்க வேண்டும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பாமை ஒருவனைக் கொலை செய்ததற்கு ஒப்பாகும் என வள்ளுவர் கருதியதால் தான் அக்குறளைக் 'கொல்லாமை' எனும் அதிகாரத்தில் இடம்பெறச் செய்தார்.

ஒவ்வொருவரும் தங்களிடம் இருக்கும் பொருட் செல்வத்தை இயல்பறிந்து இல்லாதவர்க்கு இயன்ற அளவு உதவி வாழ்கின்ற பொழுது ஒரு புதிய சமுதாயம் தோன்றும். இன்றுள்ள இருப்ப வர்கள், இல்லாதவர்கள் போராடுகின்ற நிலை மறையும். எல்லோரும் இன்புற்று வாழ்கின்ற நல்ல அமைதிச் சமுதாயம் தோன்றும்.

ஃ

# 3. நெறியற்ற வணிகம்

## பண்டைத் தமிழரின் நெறியான வணிகம்

பொருளாதாரப் பாவங்களுள் ஒன்றாகிய உழைப்பற்ற செல்வம் பற்றி விரிவாகக் கண்டோம். பொருளாதாரப் பாவங்களுள் மற்றொன்றான அறமற்ற வணிகம் பற்றி ஆராய்வோம். “கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைவுபடாது” என்ற பட்டினப்பாலை அடிகள் அன்று நிகழ்ந்த நெறியான வணிகத்தை நம் கருத்தில் பதியச் செய்கின்றன.

> “வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோல் செயின்”

என்பது வணிகம் பற்றி வள்ளுவர் வகுத்துள்ள அறநெறியாகும். ‘குன்றயச் சொல்லி நிறைய அள’ என்பது வணிகம் பற்றி எழுந்த பழமொழியாகும். உலகநாடுகள் வணிகத்தைத் தொடங்குமுன் அதனை முதலில் தொடங்கிவைத்த பெருமை தமிழகத்தையே சாரும். தமிழர்கள் என்றும் கடலுக்கு அஞ்சியதில்லை. நால்வகைப் பட்ட நிலங்களுள் ஒன்று கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். அது நெய்தல் என அழைக்கப்பட்டது; மீன்பிடித் தொழிலே முதன்மைத் தொழிலாகும் உப்புக்காய்ச்சலும் தொடர்ந்தது. அன்றைய வணிகர்கள் வாக்குத் தவறாதவர்கள். அறம் பிறழாத நிலையில் வணிகத்தை நடத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். நம் நாட்டுப் பொருள்களுள் ‘முத்திற்கு’ உலகஅளவில் மதிப்பு இருந்தது. குறிப்பாக உரோமாபுரியில் பாண்டி நாட்டு முத்து தனிப்பெருமை பெற்றிருந்தது. அந்நாட்டு மகளிர் முத்தினைத் தம் காலணியில் பொருத்தி அழகு பார்த்தனர். பண்டமாற்றமே தொடக்கத்தில், வணிகத்தில் இடம்பெற்றிருந்தது. பின்புதான் பணப்புழக்கம் படிப்படியாக ஏற்பட்டது. தமிழ்நாட்டிற்கு எங்கிருந்தெல்லாம் பொருள்கள் வந்திறங்கின என்பதைப் பட்டினப்பாலை கீழ்வரும் வரிகளில் விளக்குகின்றது.

*"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,*
*காலின் வந்த கருங் கறி மூடையும்,*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,*
*தென்கடல் முத்தும், குண கடற் துகிரும்,*
*கங்கை வாரியும் காவிரிப் பயனும்,*
*ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,*
*அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி".*

## பாழ்படுத்தும் பணத்தாசை

பணப்புழக்கம் என்று ஆட்சிசெய்யத் தொடங்கியதோ, அன்றே வணிகமும் தன் அறச்சூழ்நிலையிலிருந்து படிப்படியாக விடுவித்துக் கொண்டது. இந்த நூற்றாண்டில் கணினி செய்யும் விந்தைகளுக்கு அளவில்லை. கணினி போல் உலகை ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்ற மற்றொன்று நுகர்வுக் கலாச்சாரம் ஆகும். (Consumerism) நுகர்வு இல்லையேல் வாழ்வு இல்லை. ஆனால் இங்கு நுகர்வே வாழ்வாகி உள்ளது. இதன் கேடு மனிதனை, மக்களைப் பொருள்களுக்காகவே வாழவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளியிருப்பதாகும். இத்தகைய நுகர்வுக் கலாச்சாரத்தில் ஆணிவேர் வணிகம் ஆகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் அறமற்ற, நெறியற்ற வாணிபம்தான் நுகர்வுக் கலாச்சாரத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றது. நம் முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்தியது பேராசையை வெறுத்து ஒதுக்கவேண்டும் என்பதாகும். ஆசைக்கோர் அளவில்லை. அகிலமெல்லாம் கட்டி ஆண்டாலும் அதன் மேலும் தன் ஆணையைப் பிறப்பிக்க ஆசை கொள்வான் என்பது தாயுமானவர் கருத்தாகும். முதலில் வேலை கிடைக்கவில்லையே என மனிதன் ஏங்குகிறான். வேலை கிடைத்தவுடன் வாங்கும் ஊதியம் போதவில்லையே என வருந்துகிறான். குறுக்கு வழியில் விரைவில் செல்வனாக ஆசைப்படுகிறான். பேராசைப்படுகிறான். அதன் விளைவு அவனே பண நோட்டுக்களை உருவாக்கத்தொடங்கி விடுகிறான். நடந்துபோகும் வழியில் நாணயம் ஒன்றை ஒருவன் கண்டு விடுவானானால் வீடுபோகின்ற வரையில் மேலும் கிடைக்காதா என்ற பேராசையுடன் மிக விழிப்புடன் நடந்து செல்கிறான். இதுதான் சாதாரண மனிதனின் மனநிலையாகும். புத்தர் தம் இளவயதில் அரண்மனை இன்பத்தை, மனைவி தரும்

பேரின்பத்தை, பிள்ளை தரும் பெருஞ்செல்வத்தை தம் இளமைக் காலத்திலேயே துறக்கவில்லையா? அவரால் எப்படி முடித்தது? பெரும் வணிகராய் வாழ்க்கை நடத்திப் பெரும் பொருள் ஈட்டிய பட்டினத்தடிகள் 'காதற்ற ஊசியும் கடைவழி வராது காண்' என்று எழுதிவைத்துவிட்டு அளப்பருஞ் செல்வத்தையும் அவாவிலிருந்து பட்டினத்தட்டிகள் நீக்கியது எவ்வாறு? வள்ளலார் தமக்குக் கிடைத்த காசுகளையெல்லாம் குளத்திலும் மேட்டிலும் கிணற்றிலும் எறிந்ததாகக் குறிப்பிடுகின்றார். அவரால் மட்டும் எப்படி முடிந்தது? சிந்தித்துப் பார்த்தோமா. சிந்தித்தவர்கள் 'அனுபவிக்கத் தெரியாத அப்பாவிகள்' என்று இகழ்ந்து கூறினார்கள்.

'மைதாஸ்' என்ற மன்னனின் பேராசை பற்றி அனைவரும் அறிவர். தான் எதைத் தொட்டாலும் தங்கமாக மாறவேண்டும் என்று இறைவனிடம் வரம்பெற்றானாம். தொட்டதெல்லாம் தங்கமாக வேண்டும் எனக்கேட்டதால் அவன் தொட்ட தண்ணீர் குடிக்க முடியாமல் தங்கமாக ஆயிற்று. அவன் உண்ணும் உணவு அவன் பசியைப் போக்காமல் தங்கமாக ஒளிபெற்றது. ஏன்? அவன் மனைவியைத் தொட்டான். அவளும் தங்கப்பதுமையானாள். அவன் கேட்டவரமே அவனுக்குச் சாபமாயிற்று. பின்னர் தன் தவறை உணர்ந்து தெளிந்தான். இவ்வரக்கேடு நமக்குத் தேவையா என்பதை ஆழமாகச் சிந்திப்போம்.

## முற்றிலும் மாசுபட்ட சுற்றுப்புறச் சூழல்

மனிதர்களின் பேராசைகளும் சபலங்களும் தன்னல எண்ணங்களும் நெறியற்ற வாணிபத்தை உண்டாக்கிச் செயற்பட வைத்ததன் காரணமாக இப்பூவுலகத்தில் குறிப்பாக மண்ணையும் நீரையும் காற்றையும் சுற்றுச்சூழலையும் தூய்மைக் கேடாக்கி உள்ளனர் நமது தலைமுறையினர். பொறுமைக்குச் சான்றாக வள்ளுவர் காட்டிய நிலமே நம்மை விரைவில் விழுங்கிவிடும் போலும். நம் பாட்டன் நிலத்தைத் தோண்டும்பொழுது மண்ணெண்ணெய் கிடைத்ததாம். நம் தந்தை அதே மண்ணைத் தோண்டும்பொழுது நிலக்கரி கிடைத்தது. நாம் இன்று அதைத் தோண்டும்பொழுது ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் வெளி வருகின்றனவாம். என்ன கொடுமை? அளவற்ற கொடுமையினால் நம்மைச் சூழ்ந்துள்ள காற்று நச்சுத்தன்மை பெற்று நம்மையழிக்

கின்றது. குடி தண்ணீரைப் பற்றிக் கூறவே வேண்டாம். பல இடங்களில் நிலத்தடி நீர் இல்லாமையால் குடிதண்ணீரே கிடைப்பதில்லை. மீறிக் கிடைத்தால் கண்டவற்றையெல்லாம் கலப்படமாக்கிக் கொண்டு தண்ணீர் கிடைக்கின்றது. சுற்றுச்சூழல் தூய்மையற்றுப்போய் நெடுநாளாகி விட்டது. நெறியற்ற வணிகத்தினால் விளைந்ததுதான் முதல் இரு உலகப்போர்கள் என்றால் மிகையாகாது. 1945 ஆம் ஆண்டிலிருந்து 1992ஆம் ஆண்டு வரையிலுள்ள 47 ஆண்டுகளில் உள்நாட்டுப் போர்களும் நாடுகளுக்கிடையே மூண்ட யுத்தங்களும் 149 என்ற ஐ.நா. அறிக்கையே சான்று பகரும். "பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல் பொருள்களின் மீது மனிதன் வைக்கின்ற பேராசையே போர்களுக்கான அடிப்படைக் காரணம்" என்ற குமரப்பாவின் கூற்று சிந்திக்கத்தக்கது.

## தன்னலம் விளைவிக்கும் தவறுகள்

நெறியற்ற வணிகத்தின் நோக்கம் மிகப்பெரும் வருவாயாகும். அதுவும் குறைந்த காலத்தில் மிகுதியான வருவாயை அடைய வேண்டும் என்ற பேராசை நம்மைப் பற்றியிருக்கின்றது. எனவே உழைக்கவேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் அறவே எழுவதில்லை. 'இப்படித்தான் வாழவேண்டும்' என்ற நெறிமுறை யில்லாமல் 'எப்படியும் வாழலாம்' என்ற எண்ணத்தில் பொருள் தேடும் வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் பொருள் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயற்படும் வணிகமாக உள்ளது. இவ்வணிக முறையில் அறநெறிகளைக் காண்பது அரிதாக உள்ளது. இதனால்தான் கலப்படம் செய்தல், பதுக்கல், கள்ளக்கடத்தல், நற்பேற்றுச்சீட்டு (இலாட்டரிச்சீட்டு) போன்ற சூதாட்டங்களில் ஈடுபடுதல், திருட்டுத்தொழில் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் மிகுதியான வருவாய் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வணிகர்கள் நெறியற்ற வணிகத்தை நிகழ்த்துகின்றார்கள். இவ்வகையான வணிகத்தில் தன்னலம்தான் முக்கியத்துவம் பெறுகின்றது. தன்னலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதால் பிறர் நலச்சிந்தனை எழுவதில்லை; சமுதாய நலச் சிந்தனையோ அறவே கிடையாது. மற்றவன் எக்கேடு கெட்டால் என்ன? தாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று கருதுவதால் மனித நலம் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மனித

நலத்திற்குக் கேடு பயக்கும் பீடி, சிகரெட், மது, அபின், கஞ்சா போன்ற போதைப் பொருள்களையும் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், அணுகுண்டுகள் போன்ற ஆயுதங்களையும் விற்பனை செய்கின்றார்கள்.

## எண்ணம் போல் வாழ்வு

தன்னல நோக்கத்துடன் திரைப்படங்கள், தொலைக்காட்சி, இணைய வலை இவற்றில் கவர்ச்சிகாட்டி ஆபாசமாக நடிப்பது, வன்முறையைக் காட்டி மக்கள் மனத்தில் கொடூரத்தைத் தூண்டுவது, சிறுநீரகம் போன்ற உடலுறுப்புக்களைத் திருடி விற்பது, பணத்திற்காகக் கருவைச் சுமப்பது, குழந்தைகளை விற்பது போன்ற செயல்கள் நடைபெற நெறியற்ற வணிகமே களம் அமைத்துத் தருகின்றது. எண்ணம் போல் வாழ்வு என்பது பழமொழி. அதுபோல், நோக்கத்தை ஒட்டிச் செயல்கள் அமைகின்றன. பொதுவாகத் தீமை என்ற ஒன்று இருப்பதில்லை. நன்மை என்று அளவு கடக்கின்றதோ அதுவேதான் தீமையாகின்றது. எனவே தான் 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்' என்ற ஆன்ற மொழியும் எழுந்தது. இறைவனால் படைக்கப்பட்டுள்ள எந்தப் பொருளும் தீமையுடையதாய் இருப்பதில்லை. அதனைக் கையாளும் மனிதனின் தவறான எண்ணம்தான் அதனைத் தீமைக்குட்படுத்துகின்றது. விளக்கின் உதவியால் குறள் படிக்கலாம். அதே விளக்கின் துணைக் கொண்டு குறளுக்கு எரியூட்டலாம். கத்தி ஒன்றினால் சுவையான மாம்பழத்தைத் துண்டு துண்டாக்கலாம். அதே கத்தியைக் கொண்டு மனிதனையும் துண்டு துண்டாக்கலாம். கயிறுகொண்டு முரட்டுக் காளையை அடக்கலாம். கழுத்திலும் கட்டிக்கொண்டு தொங்கலாம். இத்தீய செயல்களுக்கெல்லாம் விளக்கு, கத்தி, கயிறு காரணியமாகுமா? ஆகாது. ஆனால் அவற்றைக் கையாளுகின்ற மனிதனின் எண்ணங்களுக்கு ஏற்ப அவற்றின் பயன்கள் மாறுபடுகின்றன.

## விலக்கமுடியாத விளம்பரக்கேடுகள்

வணிகத்தில் விளம்பரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. 'குண்டு மல்லிகைக் கடைக்கு விளம்பரமா!' என்பது அன்றைய மொழி. இன்று குண்டு மல்லிகையையும் விலைக்குக் கொண்டு

செல்லத் துணைபுரிவது விளம்பரமாகும். 'விளம்பரம் செய்ய வேண்டுமா? எங்களை நாடுங்கள்' என்று விளம்பரத்திற்கே விளம்பரம் செய்யக்கூடிய காலமிது. மக்களுக்குத் தேவையில்லாத, நலம் விளைவிக்காத பொருள்களை அதிக அளவு உற்பத்தி செய்துவிட்டு அதை விற்பதற்குத் தான் விளம்பரம் தேவைப் படுகின்றது. தேவையற்ற பொருள்களை மக்களை வாங்கவைக்க விளம்பரம் தேவை. நெறியற்ற வணிகத்தில் விளம்பரமே தலைமையிடம் பெறுகின்றது.

விளம்பரத்தால் விளையும் கேடுகள் மிகப்பலவாகும். அவற்றுள் சில காண்போம்.

## ஊட்டச்சத்து

“வளரும் குழந்தைகளுக்கு இருபத்து மூன்று வகையான ஊட்டச் சத்துக்கள் தேவை. போர்ன்விட்டாவில் இந்த இருபத்து மூன்று வகையான ஊட்டச்சத்துக்கள் உள்ளன. உங்களின் நல்ல வளர்ச்சிக்குத் போர்ன்விட்டா பருகுங்கள்”. நுகர்வோரைக் கவர்ந்திழுக்கும் இத்தகைய நெறியற்ற விளம்பரங்களே மிகுதி. இத்தகைய விளம்பரங்கள் வாய்மொழியிலும் படங்கள், செய்கைகள் மூலமும் எழுத்து வடிவிலும் உள்ளன. குறைவான தரம், தன்மை உள்ளவற்றைக்கூட இத்தகைய விளம்பரங்கள் தரமுள்ளதாகவும் தன்மையுள்ளதாகவும் போலித் தோற்றத்தை உருவாக்குகின்றன. “என் குழந்தைக்குச் சரியான அளவில் இன்றியமையாத ஊட்டச்சத்து அளிக்கப்படவேண்டும். அதனால்தான் நான் செரிலாக்கை நம்புகின்றேன். இந்த விளம்பரத்தில் தேவையான ஊட்டச் சத்துக்களைச் சரியான அளவில் குழந்தைகளுக்கு வழங்குவது 'செரிலாக்'தான் என்ற எண்ணத்தை மக்களின் மனதில் ஏற்படுத்தித் 'தாய்ப்பாலை' விடச் சிறந்தது என்ற மாயையும் ஏற்படுத்தித் தங்களது விற்பனையைப் பெருக்கிக்கொள்கின்றனர்.

## உருவமாற்றம்

முன்பே பயன்படுத்தி வேண்டாம் என்று ஒதுக்கிய பொருள்களை உருவத்தை மாற்றம் செய்து புதிய பொருள்களாகக் காட்சியளிக்கச் செய்வதாகும். அழித்துச் செய்யப் பெரிதும் உதவுவது விளம்பரம்தான்.

ஒருபொருள் மக்களுக்குத் தேவைப்படாதபோதும் அப்பொருள் அவசியம் தேவை என்று மக்களை, அதாவது நுகர்வோரை நம்பச் செய்து அப்பொருளை வாங்கச் செய்யும் விளம்பரம் முதன்மை இடத்தைப் பெறுகின்றது.

## ஆற்றலும் அழகும்

"சிவப்பழகு மேனிக்கு பேர் அன் லவ்லி", "என் மேனி அழகுக்கு நான் எப்பொழுதும் பயன்படுத்துவது மைசூர் சாண்டல் சோப்", "ஆண்மை விருத்திக்குச் சிட்டுக்குருவி லேகியம்", "தலைமுடி கருகருவென்று வளரக் கேசவர்த்தினி" இந்த விளம்பரங்கள் நமக்குத் தேவையில்லாத பேர் அன் லவ்லி, சிட்டுக் குருவி லேகியம், கேசவர்த்தினி போன்ற பொருள்களை நாம் பயன்படுத்தினால் முறையே நம் மேனி சிகப்பாகும் என்றும், ஆண்மை விருத்தியடையும் என்றும் நம் முடி கருகருவென்று அடர்த்தியாக வளரும் என்றும் நம்மை நம்பச் செய்கின்றன. இவ்வாறு அவசியமற்ற பொருள்களை நம்மைப் பயன்படுத்த நமது ஆசையைத் தூண்டி நம் பணத்தை வீணாக்குகின்றது.

## வாகனம்

"ஒரு லிட்டருக்கு இவ்வளவு கிலோமீட்டர் செல்லும் - நீடித்த உழைப்பிற்கு உத்திரவாதம் Xmp Scooter நன்றாக உழைப்பது Premier அதற்கு நாங்க உத்திரவாதம்" என்ற விளம்பரங்களைப் பார்த்திருக்கின்றோம். இதில் குறிப்பிட்ட அந்தப் பொருளைச் சோதனைக்குட்படுத்தி அதிக உழைப்புத்திறன், நம்பகத் தன்மையிருப்பதாகச் சான்று அளிக்காமல் போலியாகத் தங்களுக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி உத்திரவாதம் அளிக்கும் தன்மையும் நெறியற்ற வணிகம்தான். சில தனியார் தொலைக்காட்சிகள் விளம்பரப் பணம் பெறுவதை ஒன்றையே நோக்கமாகக்கொண்டு தரமற்ற பொருட்களுக்கு விளம்பரம் தருவதும் நெறியற்ற வணிகம்தான்.

## தள்ளுபடியும் இலவசமும்

'தீபாவளி தள்ளுபடி விற்பனை', ஆடிக் கழிவு விற்பனை, மாபெரும் தள்ளுபடி விற்பனை, இந்த விலைக் குறைப்பு இந்த

மூன்று நாட்களுக்கு மட்டுமே இந்த விலைக்குறைப்பு எங்களிடம் வாங்கும் நகைகளுக்கு - செய்கூலி, சேதாரம், கல்லுக்கு விலையில்லை போன்ற விளம்பரங்கள் அடிக்கடி பார்த்திருப்போம். இவைகளெல்லாம் விற்பனையை மிகுதிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்படும் வணிக நுணுக்கமே ஆகும். ஒரு சேலை வாங்கினால் ஒரு சேலை இலவசம், National Electric குக்கர் வாங்கினால் Vijay அயன்பாக்ஸ் இலவசம் என்று ஒன்றுக்கு ஒன்று இலவசம் என்பதும் நெறிகெட்ட வணிகத்தையே சாரும்.

## பரிசுத் திட்டம்

"எங்கள் கடையின் விற்பனையின் முதல் பரிசு - மாருதிகார், இரண்டாம் பரிசு - ஹோண்டா பைக், மூன்றாம் பரிசு - பிரிட்ஜ்" என்று விளம்பரம் செய்து விற்பனை செய்வது, இல்லையென்றால் அறிவுப் போட்டிகள் நடத்துவது. வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகள் கொடுப்பது இத்தகைய பரிசுத் திட்டங்கள் மூலம் நுகர்வோர்களைக் கவர்ந்து வணிகம் செய்வதும் நெறியற்ற வணிகம்தான்.

"சிறியவர் முதல் பெரியவர் வரை விரும்புவது புகைக்கப் புகைக்க இன்பம் தருவது சிசர்ஸ்" என்ற விளம்பரம் இளையோர் களையும் சிகரெட் புகைக்கத் தூண்டுகிறது. இவைகளைப் பயன் படுத்தினால் மக்களின் உடல்நலத்திற்குத் தீங்கு விளையும் என்பது உறுதி. ஆனால் அதைப்பற்றி விளம்பரப்படுத்தாமல் அல்லது மிகச்சிறிய எழுத்தில் அதைச் சொல்லிவிட்டு மற்ற கவர்ச்சிகரமான வாசகங்களை மிகப்பெரிதாக விளம்பரம் செய்வதும் நெறியற்ற வணிகம்தான்.

## நெறியற்ற வணிக நடவடிக்கைகள்

### கலப்படம்

சத்துணவு சாப்பிட்ட மாணவர்கள் மயங்கி விழுந்தனர். விடுதியில் உணவு உண்ட மாணவர்களுக்கு வாந்தி பேதி. திருமணத்தில் உணவு அருந்தியவர்கள் மயக்கம் என்ற செய்திகள் நாளேடுகளில் மிகச் சாதாரணமாக வெளிவருகின்றன. இதற்குக் கரணியம் இவர்களின் உணவு நஞ்சாக மாறியதுதான். உணவு நஞ்சாக

மாறுவதற்குக் கலப்படம் ஒரு காரணியமாக அமைகிறது. இன்று நமது நாட்டில் நிகழும் இறப்புக்களில் பெரும்பாலானவை இயற்கையானவை அல்ல. இவற்றின் பெரும்பகுதி கலப்பட உணவு உண்டதால் ஏற்பட்டவையே என்கிறார் மருத்துவர் டி.வெங்கடேசு. எதில்தான் கலப்படம் செய்வது என்பதே கிடையாது. பணத்திற்காக உணவுப் பொருள்களில், மருந்துகளில் குறிப்பாக உயிர் காக்கும் மருந்துகளில் கலப்படம் என்று எல்லாவற்றிலும் கலப்படம் செய்கின்றார். வேளாண்மையில் பூச்சிக்கொல்லியை மிகுதியும் பயன்படுத்துகின்றனர். இதிலுள்ள டி.டி.பி காய்கறிகள் தானியங்கள் மூலமாக நமது உடலுக்குள் சென்று தீமை விளைவிக்கின்றன. அரியானா மாநிலத்தில் வாழும் பெண்களின் தாய்ப்பாலில் பத்து இலட்சம் மூலக்கூறுகளில் 26.66 பங்கு என்ற அளவில் டி.டி.பி உள்ளது. அமெரிக்காவில் 0.5 பங்கும், ஆஸ்திரேலியாவில் 0.3 பங்கும் உள்ளது. இது பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் உருவாகத் துணையாய் இருக்கிறது என்ற ஆய்வு நம்மைச் சிந்திக்க வைப்பதாக உள்ளது. ஒருவன் தற்கொலை செய்துகொள்ள நினைத்து நஞ்சு அருந்தினான். ஆனால் சாகவில்லை. நஞ்சால் பக்க விளைவுகள் ஏற்படாமல் இருக்க மருத்துவர் மூலம் மருந்து உண்டான். அந்தோ பரிதாபம்! அவன் இறந்துவிட்டான். உயிரைக் கொல்ல வல்ல நஞ்சில்கூடக் கலப்படம் நிகழ்கிறது என்பது இன்றைய வாழ்வில் கலப்படத்தின் உச்சகட்டத்தைக் காட்டுவதாக இருக்கின்றது. அதாவது சாகவேண்டிய நஞ்சில் உயிர்பிழைத்து, வாழச்செய்ய வேண்டிய மருந்தில் சாகிறான் என்பதுதான் வேதனையான செய்தியாகும்.

"பஜ்ஜின்னா கடையில விற்கிற மாதிரி சிவப்பா இருக்க வேண்டும். நல்ல மஞ்சள் நிறத்தில் உள்ளதுதான் நல்ல பருப்பு.... என்னதான் சொன்னாலும் தேநீர்க் கடையில் போடுகிற தேநீர் மாதிரி கலர் வீட்டில வருவதில்லை....". அன்றாடம் சாப்பிடுகிற உணவு வகைகளைப் பற்றி நம்மில் பலருக்கும் தப்புத் தப்பாகப் பதிந்து போன எண்ணங்கள் தான் இவை. நீங்கள் விரும்பிச் சாப்பிடுகிறசிவப்பு நிறப் பஜ்ஜியில் சேர்க்கப்படுகிற மிளகாய்த் தூளில் 'சூடான் 3' என்ற சாயம் கலக்கப்படுவது தெரியுமா? மஞ்சள் நிறம் தூக்கலாக இருக்க வேண்டும் என்பதற்காகப் பருப்பு வகைகளில் 'மெத்தானில் மஞ்சள்' கலப்படம் செய்யப்படுகிறதாம். சில தேநீர்க் கடைகளில் பயன்படுத்தப்படுகின்ற தேயிலை

ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட பழைய தேத்தூளும் சாயமும் சேர்ந்த கலவை என்பதாவது தெரியுமா?

இப்படிக் கலப்படம் செய்யப்பட்ட உணவுப்பொருள்களை உண்பதால் என்னவாகும்? முடக்குவாதம், சரும நோய்கள், மூளைப் பாதிப்பு எனப் பல நோய்களுக்கு அது சிவப்புக் கம்பளம் விரிக்கின்றது. மிகுதியான நிலையில் புற்றுநோய்கூட வரும் கேடு இருக்கிறது.

## உணவுப் பொருள்களில் கலப்படம்

"எங்க வீட்டுல அந்தப் பிரச்சினையே இல்ல. நாங்க பேக் பண்ற அயிட்டங்களைத்தான் எப்பவும் வாங்குவோம் எனப் பெருமை பேசுகிறவராக இருந்தாலும் இந்தக் கலப்படத் தாக்குதலில் இருந்து தப்பித்ததில்லை".

"தினம் நாம் சாப்பிடுகிற உணவோட ஒரு பகுதி சாப்பிடத் தகுதி இல்லாதது" என அறக்கட்டளை ஒன்றின் இயக்குநரான சந்தானராசன் கூறுகிறார்.

எடுத்துக்காட்டிற்குச் சமையலுக்குப் பயன்படுகின்ற துவரம் பருப்பில் கேசரிப்பருப்பு கலக்கப்படுகிறது. பார்க்கிறதுக்கு கடலைப் பருப்பு துவரம் பருப்போட நகலாக இருக்கிற இது கலப்படம் என்று கண்டுபிடிக்கிறது மிகத் தொல்லையானது. வேறுபாடு தெரியாமல் இந்தப் பருப்பைத் தொடர்ந்து மூன்று மாதம் சாப்பிட்டால் முடக்கு வாதம் வரும். கடுகையும் ஆர்ஜிமோன் விதைகளையும் ஒரு பாட்டிலில் வைத்துப் பார்த்தால் எது கடுகு எது ஆர்ஜிமோன்னு எளிமையாக வேறுபாடு கண்டுபிடிக்க முடியாதாம். கடுகில் கலக்கப் படுகின்ற ஆர்ஜிமோன் விதையில் உள்ள நச்சுப்பொருள் குருட்டுத் தன்மையை உண்டாக்கும். உணவு விடுதியில் கொதிக்கக் கொதிக்கச் சாம்பாரையும் இரசத்தையும் ஊற்றி மடித்துக் கொடுக்கிற பிளாஸ்டிக்கவர் கூடக்கேடுதான். சூடான அந்தச் சாம்பாரில் பிளாஸ்டிக்கில் இருகுகிற கெமிக்கல் சேரும்போது உண்டாகிற விளைவுகள் மிகக் கேடானவை. சப்பாத்தி செய்கின்ற பொழுது இடையிடையே சில இடங்கள் தீஞ்சு கருப்பா மாறும். அப்படிக் கருகின பகுதியைச் சாப்பிட்டால் புற்று நோய்வரும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படி நம்மை அறியாமலேயே நாளும்

*சாப்பாட்டோட சேர்த்து நஞ்சையும் சாப்பிடுகிறோம். ஒரு ரூபாயாக இருந்தாலும் நாம கொடுக்கிற காசுக்கு என்ன வாங்குகிறோம். அதன் தரம் எப்படிப்பட்டது என்பதைக் கூர்மையாகக் கண்டுபிடிக்க வேண்டும். அண்மையில் வெளிவந்த ஆனந்தவிகடன் கலப்படம் பற்றிச் சிந்தனைக்குரிய பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதனை நம் பார்வையில் பதிப்போமாக.*

| உணவு | கலப்படப் பொருள் | பாதிப்பு |
|---|---|---|
| கடலை, துவரம் பருப்புக்கள் | கேசரிப் பருப்பு | கீல் வாதம் |
| கடுகு | ஆர்ஜிமோன் | எபிடைமிக், டிராப்ஸி, தோல் நோய்கள் |
| உணவு எண்ணெய் | மினரல், ஆயில் | புற்றுநோய் |
| மிளகாய்த் தூள் | சுதான் மிமிமி சாயம் | புற்றுநோய் |
| மஞ்சள் தூள் | லெட்குரோமேட் | இரத்தச் சோகை, குறைப் பிரசவம், கை, கால் வாதம், மூளைப் பாதிப்பு |
| வேர்க்கடலை | அஃப்ளா டாக்ஸின்ஸ் | ஈரல் பாதிப்பு, புற்றுநோய் |
| பால் | சுத்தமற்ற தண்ணீர் | வயிற்றுப் போக்கு |
| தேயிலை | முந்திரித்தோல், செயற்கைச் சாயம் | புற்றுநோய், வயிறு எரிச்சல் |
| மிளகு | பப்பாளி விதைகள் | வயிற்று நோய்கள் |
| பானங்கள் இனிப்புகள் | அனுமதிக்கப்படாத சாயங்கள் | புற்றுநோய் |

## பிளாக் டிஸ்க்

*அண்மை நக்கீரன் 'பிளாக் டிஸ்க்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்திகள் சிந்திக்கத் தக்கன. அரசுத்துறைகளுக்குப் பொருள்களை வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான கருப்புப் பட்டியலைக் கடந்த ஆகஃஸ்ட் இரண்டாம் நாள் அரசின் பொதுத்*

துறை வெளியிட்டிருக்கிறது. அது என்ன கருப்புப்பட்டியல்? தரமற்ற பொருள்களையும் பயன்படுத்த முடியாத பொருள்களையும் சந்தடிச் சாக்கில் சில நிறுவனங்கள் அரசின் தலையில் கட்டிவிடுவதுண்டு. அதேபோலக் குறித்த நேரத்திற்குள் குறித்த அளவிற்கு இன்றியமையாத பொருள்களை வழங்குவதில்லை. இவைபோன்ற நிறுவனங்களால் அரசுப்பணிகள் முடங்குவதோடு அரசுக்குப் பெருமளவு இழப்பும் ஏற்படும்.

எனவே வழங்கத் தகுதிபெற்ற நிறுவனங்கள் எவை எவையெனக் கண்டறிந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது நிலையாகவோ வழங்குவதற்குத் தடை விதிக்கின்ற பட்டியல்தான் கருப்புப் பட்டியல். இந்தப் பட்டியல் வெளிவரும்போது நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலமே முடிந்துபோயிருப்பதுதான் வேடிக்கை ஆகும். பொதுத்துறைச் செயலர் மூலம் துறைச் செயலருக்கு அனுப்பப்படும். இந்தக் கருப்பு பட்டியலைக் கோப்பு களுக்குள் பதுக்கிவிட்டுத் தங்களை மிகுதியாகப் பெற்ற நிறுவனங்களிடம் அவற்றின் வேறுபெயர்களில் பொருள்களைத் தொடர்ந்து வழங்கச் செய்யும் முயற்சியும் நெறியற்ற வணிக முறைதான். கருப்புப் பட்டியலை வெளியிடும் அரசு இதைச் சரிவரச் செய்யாத அதிகாரிகளையும் கருப்புப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டும்.

## மதுபானக் கலப்பு

மதுபானக் கடைகளில் நிகழ்வதும் நெறியற்ற வணிகம்தான். அங்கு விற்கப்படும் சரக்குகள் கெட்ட வாடையை வெளிப் படுத்துகின்றன. மதுபானக் கடைகளில் சரக்குகளைச் சோதனை செய்யச் சென்னை கிண்டியிலுள்ள 'கிங்' என்ற நிறுவனத்திற்கு அனுப்புவர். தரம் சரியாக இருக்கிறதா? ஆல்கஹால் கலவை சரியான விகிதத்தில் இருக்கிறதா என ஆய்வு செய்வர். இந்த முடிவை ஒவ்வொரு மதுபானக் கடைகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள அரசு அதிகாரி சரிபார்ப்பார். இதற்குப் பிறகு ஒவ்வொரு வகை மதுபானமும் தயாரிக்கப்பட்டு அந்தக் கலவை சரியாக அமைவதற்குக் குறிப்பிட்ட நேரம் பிடிக்கும். இதன் பிறகுதான் அவை வெளியே அனுப்பப்படவேண்டும். அதற்குள் அனுப்பப் பட்டால் கெட்டவாடை தான் வீசும். மதுபான நிறுவனங்கள் சரக்கை

வழங்கினால் போதும் என அவசரப்படுவதாலும் அவற்றிற்குரிய தேவை அதிகரித்ததாலும் விற்பனைக்கு அவை வந்து மக்கள் உடலுக்குத் தீங்கு செய்யும்.

பாலில் கலப்பு

'ஆரோக்யா' பாலில் மட்டும் கலவை இல்லையா? நல்வாழ்வை எதிர்நோக்கி ஆரோக்யா பாலை விலை கொடுத்து வாங்கி அருந்திக்கொண்டிருப்போர் சற்று விழிப்பாக இருக்க வேண்டும். அப்பாலில் 'ஹைட்ரஜன் டிராக்சைடு' என்ற இரசாயனப் பொருள் கலந்துள்ளது. தொடர்ந்து அதைக் குடித்தால் வாந்தி, காய்ச்சல் குடிப்பவர்களைப் பாதிக்கும்.

பதுக்கல்

ஒரு பொருளின் விலை உயர்வதற்குரிய வாய்ப்பிருக்கும் என வணிகர்கள் கருதினால் உடனே தங்களிடமுள்ள பணத்தால் அப்பொருள்களை வாங்கிப் பதுக்கிவிடுவார்கள். இதன் காரணமாகச் சந்தையில் அப்பொருள் கிடைக்காத நிலை உருவாகும். அல்லது செயற்கையான தட்டுப்பாடு ஏற்படும். பொருள்களை மிகுதியாக விலை கொடுத்து வாங்கும் நுகர்வோர்கள் தயாராக இருப்பதால் தம்மிடம் உள்ள பதுக்கிய பொருள்களை மிகுதி வலை வைத்து விற்பார்கள். இதன் காரணமாகக் குறைவான காலத்தில் மிகுதியான வருவாய் பெறுவார்கள். இயற்கைச் சீரழிவின்போதும் அதாவது பஞ்சம், வெள்ளம், நிலச்சரிவு போன்ற காலக்கட்டத்திலும் இவ்வாறு வணிகர்கள் செயற்பட்டுக் கொள்ளை வருவாய் தேடுவார்கள். ஆனால் இன்று சாதாரணக் காலங்களிலும் மிகச் சாதாரணமாகப் பதுக்கலில் ஈடுபடுகின்ற இழிநிலை உள்ளது.

கள்ளக் கடத்தல்

அண்மைக்காலமாக நுகர்வுக் கலாச்சாரத்தின் தாக்கத்தால் மக்களுக்கு வெளிநாட்டுப் பொருளைப் பயன்படுத்தவேண்டும் என்ற ஆசை அளவுக்கதிகமாக மிகுந்து வருகின்றது. இதை நெறியற்ற வணிகர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். வெளிநாட்டில் தயாராகும் பொருள்களைக் கடத்திவந்து இங்கு வணிகம் செய்கிறார்கள். அவ்வாறு வணிகம் செய்யும்பொழுது

விலை குறைவாக உள்ளது. ஏனென்றால் இவர்கள் அப்பொருளை உற்பத்தி செய்வதில்லை. நம்நாட்டில் அப்பொருளை நியாயமாக விற்றால் அதற்குச் சுங்கவரி கட்டி வணிகம் செய்யவேண்டும். கடத்தி வந்து வணிகம் செய்வதால் சுங்கவரி கட்டவேண்டிய தேவை இல்லை. அதாவது அரசுக்கு வரவேண்டிய வருமானம் வராமல் போய்விடுகிறது. கடத்தலின் காரணமாகக் கடத்தல் தொழிலாக மாறிப் பலர் இத்தொழிலில் ஈடுபடுகின்ற நிலை உருவாகின்றது. இது பெரிய அளவில் கடத்தல் சந்தையை ஏற்படுத்துகின்றது. இது நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லதல்ல. மற்றொரு வகையில் நம் நாட்டில் தயாராகும் இப்பொருளை விற்பனை ஆகாமல் செய்து விடுகின்றது. கள்ளச்சாராயம் காய்ச்சிக் கள்ளக்கடத்தல் செய்து, கள்ள ஓட்டுப்போட்டுக் கள்ளக் காதலியிடம் பெற்ற பிள்ளைக்குக் கள்ளழகன் என்று பெயரிடுவோரின் எண்ணிக்கை நாளும் பெருகுகின்றது.

## இலாட்டரி போன்ற சூதாட்டங்கள்

"நீங்கள் காரில் போகவேண்டுமா? சொந்தமாக வீடு வேண்டுமா? இப்படி எத்தனை நாளுக்கு அன்னக்காவடியாக இருக்கப்போகிறீர்கள்? அதற்கு நீங்கள் செய்யவேண்டியது ஒரு ரூபாய் கொடுத்து ஒரு இலாட்டரிச் சீட்டு வாங்குங்கள். கோடீசுவரராக ஆகுங்கள். என்ன சிந்தனை.... விழுந்தால் உங்களுக்கு விழாவிட்டால் நாட்டுக்கு.." என்ற விளம்பரம் அனைவரையும் காந்தம்போல் கவர்ந்திழுக்கிறது. தொல்லைப் பட்டுத் தேடிய பணத்தைப் பேராசையின் காரணமாக இலாட்டரிச் சீட்டுகள் வாங்கி ஏமாந்த குடும்பம் ஏராளம். தமிழகத்தில் இது தடை செய்யப்பட்டாலும் இதற்கென்று பணியாற்றும் முகவர்கள் கள்ளத் தனமாகப் பிற மாநிலப் பரிசுச்சீட்டுகளை வாங்கி இங்கு விற்பனை செய்கின்றனர். இந்தியாவில் ஒரு நாளைக்கு இரண்டு கோடி மக்கள் பரிசுச் சீட்டுக்கள் வாங்குகின்றனராம். இதில் தமிழ்நாட்டில் இருந்து இருபது இலட்சம் மக்கள் நாளும் பரிசுச்சீட்டு வாங்குகின்றனர். 2002 மார்ச் 29இல் நடைபெற்ற குலுக்கலில் ஏறத்தாழ ஏழாயிரம் கோடிக்கு மேல் பரிசுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி நம்மையெல்லாம் அதிர்ச்சிஅடையச் செய்கின்றது. இந்த அளவிற்கு நெறியற்ற வணிகம் பல்கிப் பெருகியுள்ளது. இதில் வருத்தப்பட வேண்டிய செய்தி என்னவென்றால் மாநில அரசுகளும் மத்திய

அரசுகளும் இவ்வகைப் பரிசுச் சீட்டை நேரடியாக நடத்துகின்றது; அல்லது நடத்துபவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறது என்பதுதான். ஒரு பக்கத்தில் வறுமை ஒழிப்புக்குத் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருவதும் மறுபக்கத்தில் வறுமையை உருவாக்கிவரும் செயல்களையும் ஒருசேர அரசு செய்துவருவது வருந்தத்தக்கதாகும். காந்தியடிகள் இன்று இருந்திருந்தால் உறுதியாக இதை எதிர்த்து மாபெரும் போராட்டம் நடத்தி இதைத் தடுத்திருப்பார்.

## திருட்டு ஆடியோ, வீடியோ, கம்ப்யூட்டர் டிஸ்க் விற்பது

திரைப்படங்களில் சிறப்பான படத்தின் பாட்டுக்களை உரிமம் பெறாமல் பதிவு பண்ணி விற்பனைசெய்து பணம் தேடப்படுகின்றது. அதேபோல் புதிதாக வெளிவந்த திரைப்படங்களை வீடியோ கேசட்டுக்களில் பதிவுபண்ணி விற்பனை செய்வது சி.டி.(C.D)க்களிலும் பதிவு பண்ணித் திருட்டுத்தனமாக வணிகம் செய்வது போன்றவற்றால் திரையரங்கிற்குச் சென்று படம் பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து விடுகின்றது. ஆடியோ, வீடியோ, சி.டி.கேசட் விற்பவர்களுக்குப் பணம் கிடைக்கின்றது. குறைந்த விலைக்கும் கிடைக்கின்றது. அதனால் இதைவாங்க நுகர்வோர் மிகுதியாக ஆர்வம் காட்டுகின்றனர். இங்ஙனம் நிகழ்த்துபவர்களைக் கைது செய்தும் உடைமைகளைப் பறிமுதல் செய்தும் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. என்றாலும் மறைமுகமாக இச்செயல் நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இதுவும் முறையற்ற வணிகம்தான்.

## பீடி, சிகரெட், மது, அபின், கஞ்சா போன்ற பொருள்களை விற்பது

பீடி, சிகரெட், மது போன்ற போதைப் பொருள்கள் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பனவாகும். ஆனால் இவற்றை விற்றால் மிகுதியான வருவாய் கிடைக்கின்றது. மேலும் இவற்றை மிகுதியானவர்கள் பயன்படுத்துகின்றனர் என்ற வணிகநோக்கத்தில், தன்னலத்தில் வணிகம் செய்கின்றார்கள். அபின், கஞ்சா, ஹெராயின் போன்ற போதைப் பொருள்கள் விலை மிகுதி. எனவே இவற்றை விற்றால் மிக வருவாய் கிடைக்கும். எனவே இவற்றைக் கள்ளத் தனமாக விற்பதில் வணிகர்கள் முனைப்புடன் இருக்கின்றனர். பள்ளி, கல்லூரி போன்ற இடங்களில் இவற்றை ஆட்கள்வைத்து

விற்பனை செய்து இளைஞர் சமுதாயத்தைக் கெடுத்துவிடுகின்றனர். அனைத்து மதுக்கடைகளிலும் கண்டிப்பாகப் பார் வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான உரிமத்தை அரசிடம் பெறவேண்டும். இந்த அறிவிப்பு அரசின் முறையற்ற, நெறியற்ற ஆட்சியையே வெளிப்படுத்துகின்றது. கூட்டுறவு மதுக்கடை விலைக்கே இங்கு மதுகிடைக்கும் என்ற விளம்பரத்தைப் பார்த்திருக்கலாம். மதுவைக் கூட்டுறவுக் கடையில் விற்பனை செய்வதே தவறு. நல்ல பொருள்களை, மக்களுக்கு பயனளிக்கக் கூடியவைகளைத்தான் கூட்டுறவு மூலம் விற்பனைசெய்ய வேண்டும். மக்களுக்குத் தீங்கு செய்கின்றவைகளைக் கூட்டுறவு மூலம் விற்கக்கூடாது.

### துப்பாக்கி, வெடிகுண்டு, அணுகுண்டு போன்ற ஆயுதங்கள் விற்பது

விண்வெளி ஆய்விற்கும் ஆயுதங்கள் தயாரிப்பது, அது தொடர்பான ஆய்விற்கும் மிக முதன்மை கொடுத்து மிகுதியான பணத்தைச் செலவழித்ததால் மிகப்பெரிய வல்லரசுகளில் ஒன்றாக இருந்த உருசியா பல நாடுகளாகப் பிரிந்தபொழுது அதன் பொருளாதாரம் சிதைந்து வறுமைநிலை எட்டியதை நாம் பார்த்தோம். துப்பாக்கி, வெடிகுண்டு, ஆயுதங்கள் போன்றவை விற்பதால் பணம் கிடைக்கின்றது என்ற சொன்னாலும் இவை இறுதியில் வன்முறையை ஏற்படுத்தவும் போர் உருவாகவும் அதாவது அழிவிற்கே காரணமாக இருப்பதால் இத்தகைய வணிகம் நெறியற்ற வணிகமே. ஏ.கே.47 போன்ற துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், கண்ணி வெடிகள் போன்றவைகளை எளிதாக வணிகம் செய்வதால் தீவிரவாதிகள் இவற்றை எளிதில் பெற்று வன்முறையில் ஈடுபடுகின்றனர்.

### திரைப்படம், தொலைக்காட்சிகளில் வன்முறை, ஆபாசம் காட்டுவது

தங்களது வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்வதற்காகத் திரைப்படத்தில் வன்முறையையும் கேவலம் பெண்ணின் சதையையும், தொப்புளை மட்டுமே ஆபாசமாக வெளிப்படுத்திக் காட்டும் சிறுமைத்தனம் மிகப்பெரிய கொடுமை. மக்கள் விரும்புவது எதுவோ அதனையே நாங்கள் காட்டுகின்றோம் என்று இவற்றிற்கு உரியவர் சப்பைக் கட்டு கட்டுவது அதனினும்

கொடுமை. வணிக நோக்கத்தோடு ஆபாசமான வார்த்தைகள், வரிகள் இடம்பெறும் பாடல்கள், உரையாடல்கள், காட்சிகள் இடம் பெறுகின்றன. அனைவர் வீட்டிலும் கொலு வீற்றிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளிபரப்பப்படும் நாடகங்கள், பெரும் தொடர்களில் வன்முறை, ஆபாசம் மக்களிடையே நேரிடையான தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன. தொலைக் காட்சியில் காண்பிக்கப்படும் கொலை, கொள்ளையைப் பார்த்துக் கொலை, கொள்ளை செய்கின்றனர். பெண்களிடம் குறும்பு செய்வது, பாலியல் பலாத்காரம் செய்வது போன்ற காட்சிகளைப் பார்த்து உண்மை வாழ்க்கையிலும் இளைஞர்கள் செய்கின்றனர்.

## ஹை-டெக் விபச்சாரம்

“இண்டர்நெட்டில் ஆபாசப் படங்கள் வெளியிட்டது தொடர்பாகச் சென்னையைச் சேர்ந்த மருத்துவர் பிரகாசு கைது” என்பது போன்ற செய்திகள் அனைத்து இதழ்களிலும் நாளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தூய்மையான தொழில் செய்யும் மருத்துவர் விரைவாகப் பணம்தேட இத்தகைய குறுக்குவழியை நாடுவார் என்றால் மற்றவர்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்? இளம் பெண்களை வீடியோ, கேமரா மூலம் படம் எடுத்துத் தற்கால அறிவியல் வளர்ச்சியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கணினிமூலம் இணைய தளத்தில் ஆபாசப் படங்களை வெளியிட்டுக் கோடி கோடியாகப் பணம் சேர்த்த செயலும் நெறியற்ற வணிகத்தைச் சார்ந்ததுதான். இணைய தளத்தில் வரும் சிறப்பான செய்திகளை விடப் பாலியல் தொடர்பானவற்றைத்தான் மிகுதியானவர்கள் நாளும் பார்க்கின்றார்கள். குறிப்பாக இளைஞர்கள் இவற்றைத்தான் பார்க்கின்றனர் என்று ஒருபுள்ளி விவரம் கூறுகின்றது.

சிறுநீரகம் போன்ற உடல் உறுப்புக்களைத் திருடி விற்பது, பணத்திற்காகக் குழந்தைகளை விற்பது, பணத்திற்காகக் கரு சுமப்பது இவையெல்லாம் நெறியற்ற வணிகத்தையே சாரும். மேற்கூறிய பாதிப்புக்களை நெறியற்ற வணிகம் ஏற்படுத்துவதால் குறிப்பாக நுகர்வுக் கலாச்சாரத்தின் தாக்கத்தால் மக்கள் வன்முறைக் கலாச் சாரத்திற்கு மாறிவிடுகின்றனர். இதன் காரணமாக உலக அமைதிக்குக் கேடு ஏற்படுகின்றது. இதனால்தான் காந்தியப் பொருள்தார நிபுணர் குமரப்பா, “வாணிகம் என்பது பொருள்களை வாங்குவதில்

தொடங்கி அதற்குப் பணம் கொடுப்பதோடு முடிவதல்ல; அத்துடன் நமது சக மனிதர்களுக்காக நமது கடமையாற்றுவதும் உள்ளது" என்று தெளிவாகக் கூறியுள்ளார். நமது கடமையை நாம் எவ்வாறு ஆற்ற வேண்டும் என்று நுகர்வோரின் கடமைகளாகக் கீழ்க்கண்டவற்றைத் தெரிவிக்கின்றார்.

(1) நாம் வாங்கும் பொருள் எங்குத் தயார் செய்யப்பட்டது? வெளிநாட்டிலிருந்து நாம் பெறும் பொருள் நம் நாட்டிலேயே தயார் செய்யப்பட்டால் வெளிநாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது.

(2) அப்பொருளை யார் தயார் செய்தது? சமூகப் பகைவர்கள் தயார் செய்த பொருள்களாக இருந்தாலும் பெரிய பெரிய தொழிற் சாலைகளில் தயார் செய்யப்பட்டவைகளாக இருந்தாலும் அப்பொருள்களை நாம் தயார் செய்யமுடியும் என்றால் அவற்றை நாம் வாங்கக்கூடாது.

(3) அப்பொருள் எதனால் தயார் செய்யப்பட்டது? நாம் வாங்கும் பொருள் வெளிநாட்டில் கிடைக்கும் பொருள்களை மூலப் பொருள்களாகக் கொண்டு தயார் செய்யப்பட்டிருந்தால், நம் நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டு அதே பொருளைத் தயார் செய்யமுடியும் என்றால் நாம் அப்பொருளை வாங்கக்கூடாது.

(4) அப்பொருளைத் தயார் செய்யும் தொழிலாளர்கள் எச் சூழ்நிலையில் வேலை செய்கின்றார்கள், வாழ்க்கை நடத்துகின்றார்கள்? நாம் வாங்க நினைக்கும் பொருள் அடிப்படைத் தொழிலாளர்களால் தயார் செய்ததாக இருந்தாலும் தொழிலாளர் களை வஞ்சித்துச் சுரண்டித் தயார் செய்வதாக இருந்தாலும் அப்பொருளை நாம் வாங்கக்கூடாது.

(5) அப்பொருளைத் தயார் செய்யும் தொழிலாளர்களின் கூலி, பொருளின் விலையில் எவ்வளவு விழுக்காடு? நாம் வாங்க நினைக்கும் பொருளில் தொழிலாளர்களின் கூலி குறைந்த விழுக் காடாக இருந்தால் அப்பொருள்களை நாம் வாங்கக்கூடாது.

(6) அப்பொருளின் மீதிப் பணம் எவ்வாறு பகிர்ந்து அளிக்கப் படுகின்றது? நாம் வாங்க நினைக்கும் பொருளின் பணத்தை

முதலாளிக்கே மிகுதியான விழுக்காடு வருவாயாகச் சென்றால் அப்பொருளை வாங்கக்கூடாது.

(7) அப்பொருள் எப்படித் தயார் செய்யப்படுகின்றது? நாம் வாங்க நினைக்கும் பொருள் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பைக் குறைக்கும் பொறிகளின் மூலம் தயார் செய்யப் படுவதாக இருந்தால் தொழிலாளர்கள் மிகுதியானவர்கள் வேலை செய்யத் தயாராக இருக்கும்பொழுது அப்பொருளை வாங்கக் கூடாது.

(8) அப்பொருளைத் தயார் செய்யும் தொழிற்சாலை நாட்டுப் பொருளாதாரத்தில் எப்படிப் பங்குபெறுகின்றது? நாம் வாங்க நினைக்கும் பொருளைத் தயார்செய்த தொழிற்சாலை நமது நாட்டுப் பொருளாதாரத்தில் பங்கு பெறவில்லை என்றால் அப்பொருளை வாங்கக்கூடாது.

(9) அப்பொருளுக்கு மற்ற நாட்டினரிடம் உள்ள தொடர்பு என்ன? நாம் வாங்க நினைக்கும் பொருள்ள மற்ற நாட்டு நலத்தைப் பாதிப்பதாக இருந்தால் அப்பொருளை வாங்கக்கூடாது.

## வணிக நேர்மையை வளர்ப்போம்

எனவே நாம் ஒரு பொருளை வாங்குவதற்கு முன் இக்கேள்விகளை மனத்தில் சிந்தித்து நாம் செய்யவேண்டிய கடமையில் தெளிவு பெற்றுச் செயல்பட்டால் நெறியற்ற வணிகர்கள் நெறியற்ற முறையில் செயல்பட்டாலும் நாம் அவ்வணிகத்தை அறநெறியில் அப்பொருளை வாங்காமல் இருந்து அவர்களுடன் அறநெறியற்ற வணிகத்திற்கு ஒத்துழைக்காமல் இருந்தால் நெறியற்ற வணிகத்தைத் தடுத்து நிறுத்த முடியும். இதுதான் காந்தியின் உட்கிடக்கையாகும். இத்துறையில் அவர் ஏற்றிவைத்துள்ள அறச்சுடர் மேலும் ஒளிபெற நாம் முயல்வோமாக.

# 4. பண்பாடற்ற கல்வி

## கல்வி சிறந்த தமிழ்நாடு

சமுதாயம் தவிர்க்க வேண்டிய ஏழு சமுதாயப் பாவங்களை வலியுறுத்திய அடிகள் பண்பற்ற கல்வியைக் கொடிய சமுதாயப் பாவமாகக் கருதுகின்றார். இந்திய நாடு ஞானம் பிறந்த நாடாகும். மிகப்பெரும் ஞானிகள் இந்தியாவையே பிறப்பிடமாகக் கொண்டிருக்கின்றனர் என அறிகின்றபொழுது நம் மகிழ்வு எல்லை மீறுகின்றது. ஞானம் சிறந்து நின்றதைப் போல் ஞானத்தின் தொடக்கமான கல்வியிலும் நம் நாடு அன்று மட்டுமல்ல இன்றும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. பண்டைக் குருகுலங்களில் கல்வியை மட்டும் அல்லாமல் பண்பாடும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது. கல்வி என்றாலே மனத்தைப் பண்படுத்துவதுதான். பண்டாற்ற கல்வியை நாம் நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஒருவனின் கல்விப் பருவத்தில்தான் அவனது பண்பாடு உருவாக்கம் பெறுகின்றது என்பதை அனைவரும் அறிவோம். அப்பொழுது உருவாகும் பண்பாடுதான் அவனது இறுதி மூச்சுவரை தொடரும்.

> *"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
> *பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"*

என்று தொடங்கும் கல்வியைச் சிறப்பிக்கும் பாடல் புலவரால் பாடப் பட்டதன்று. புவியாண்ட மன்னன் ஒருவனால் இக்கவி பாடப் பட்டுள்ளது என்றால் கல்வியில் தன் நாடு சிறந்து விளங்கவேண்டும் என்ற அவனது உள்ளார்வத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. அன்று ஆடவர் மட்டுமின்றி மகளிரும் கல்வி நிலையிலும் கவி புனைவதிலும் வல்லமை பெற்றவராய் விளங்கினர்.

இடைக்காலத்தில் பெண்களின் உரிமை மறுக்கப்பட்டதால் பெண் கல்வி பற்றிப் பேசுவோரே அதற்குத் துணை நிற்பாரோ எவருமில்லாமல் போயினர். புரட்சிக்கவி பாரதியின் காலத்தில் தான்

பெண்ணுரிமை, பெண்கல்வி மீண்டும் தலைதூக்கின. இன்றோ மகளிர் நுழையாத துறையில்லை என்பதற்கேற்ப விண்வெளிச் சாதனையையும் வீராங்கனைகள் நிகழ்த்தி வருகின்றனர். கல்வி பெறுவோரின் விழுக்காடு மிகக்கூடியுள்ளது என்று பெருமைப் பட்டாலும் கல்விதரவேண்டிய பண்பாட்டினைக் கல்வி கற்போர் பெற்றுவருகின்றனரா என்பது பெரும் ஐயப்பாட்டிற்குரியதாகும். உடம்பெல்லாம் வீங்கி உள்ளம் சுருங்கிக் கிடப்பதைப் போன்று புறத்தில் கல்வி வளர்ச்சி மிகுந்திருந்தாலும் சுருங்கிய உள்ளத்தைப் போல் பண்பாடு மிகவும் சுருங்கி விட்டது.

## சிலுவையில் மாட்டிக்கொண்ட குழந்தை ஏசுக்கள்

நாளைய தலைவராக உருவாக வேண்டிய இளம் தளிர்கள் எத்தகைய கல்வி முறையைப் பெற்று வருகின்றனர் என எண்ணிப் பார்த்தல் ஏற்புடையதாகும். மிதிவண்டிச் சக்கரத்தில் மாட்டிய துணிபோல் பெற்றோர்கள் எனும் அரக்க இராட்டினத்தில் குழந்தைகள் சிக்கிச் சிதறி வருகின்றனர். ‘டாடி’ என்ற ‘டிராக்டர்’, ‘மம்மி’ என்ற புல்டோசரும் சேர்ந்து குழந்தைப் பருவம் என்ற அழகிய குடிலை இடித்துத் தள்ளுகின்றனர். சச்சின் கிரிக்கெட்டில் சதம் அடித்துவிட்டால் தம் நாலு வயதுப் பையனும் அதுபோல் ஆகவேண்டும் என்று மட்டையைக் கொடுத்து மைதானத்திற்கு விரட்டுகிறார்கள். அவன் வீட்டுக்காரரின் வீட்டுக்கண்ணாடியை உடைத்துவிட்டு ‘ரன்’ எடுக்கிறான்.

குற்றாலீசுவரன் இங்கிலீசு கால்வாயை நீந்திக் கடந்தால், தொலைந்தார்கள் நம் சிறார்கள். காலையில் ‘ஹார்லிக்ஸ்’ கொடுத்து நண்பகல் வரைக்கும் சட்டியுடன் தண்ணீரில் தள்ளி வேடிக்கை பார்க்கிறார்கள். நீச்சல் வருமோ, இல்லையோ, உறுதியாகக் காய்ச்சல் வரும். பால்க்காரன் எழும்பொழுதே பள்ளிக்கூடம் போகச் சிறார்கள் தயாராகி விடுகின்றார்கள். “சனியனே, சட்டையைப் போட்டாயா? ஷூவுக்குப் பாலீஷ் போட்டாயா? சடை பின்னும் பொழுது தலையை அசைக்கக்கூடாது என்று எத்தனை தடவை சொல்ல, இன்னொரு தடவை அந்தப் பார்முலாவைச் சொல்லு” இவைதான் காலையில் ஒவ்வொரு இல்லத்தில் கேட்கும் சுப்பிரபாதம்.

எவரெஸ்ட் ஏறின டென்சிங்கே அதிர்ச்சி அடைகிற அளவுக்குத் தளிர்களின் முதுகில் புத்தகச் சுமை. ஐம்பதில் வளைய வேண்டியது

ஐந்திலே வளைந்துவிட்டது. வளைந்தால் பரவாயில்லை; ஒடிந்தால்? ‘சிட்டி’ என்னும் ‘கான்கிரிட்’ காட்டில் ‘தட்டாமாலை’, ‘சாட்பூட் திரி’, ‘பாண்டி’, ‘கிச்சு கிச்சுத் தாம்பாளம்’, ‘பச்சைக் குதிரை’ போன்றவற்றை விளையாட வாய்ப்பில்லை. பள்ளிவிட்டு வீட்டிற்கு வந்தாலும் பிள்ளைகளுக்கு நிறைவா? இசை வகுப்பு, சமக்கிருத வகுப்பு, ‘கீ போர்டு’ வகுப்பு என்று அடுத்தடுத்த தொல்லைகள் தொடர்கின்றன. ‘மெட்டி ஒலி’க்கு இடையில் காட்டப்படும் கார்ட்டூன்களைப் பார்த்து மகிழும் குழந்தைகளுக்கு முதியவர்களின் அர்ச்சனை முறையே நிகழ்கின்றது. பிள்ளைகள் ‘ஓவர்கெட் டேங்க்’ ஆவர். உங்க வசதிக்கு வாயைத் திறக்கும் நகரவைத் தண்ணீராக அவர்களை ஆக்காதீர். அறிவை ஆறுபோல் அவர்கள் போக்கில் விட்டு விடுங்கள். இந்தியாவின் முதல் தலைமை அமைச்சர் நேருவிலிருந்து முதல் குடிமகனாக இருந்த அப்துல் கலாம் வரை பெரியவர்கள் குழந்தையை நேசிக்கிறார்கள். “குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் பரலோக இராச்சியம் அவர்களுடையது” என்றார் ஏசுபிரான். நாம் இன்னமும் எத்தனை நாளைக்குத்தான் குழந்தை ஏசுக்களைச் சிலுவையில் அறைந்து கொண்டிருக்கப் போகிறோம்?

## கல்வி எனும் சுமைக்கடிகாரம்

இற்றைக் காலக் குழந்தைகள் எளிமையானவர்களாகவும் இல்லை; வளமையானவர்களாகவும் இல்லை. இந்நாட்டுக் குழந்தையாக நேர்வது எத்தனைப் பெரிய துயரம்? கார்ட்டூன் படங்களைப் போலக் கனவுகள் தரும் குழந்தைகள் மனங்களைக் கல்வி எனும் சுமைக்கடிகாரங்களைப் போன்ற பொறியாக மாற்றியுள்ளது. வளர்ந்த மனிதர்களைப் போல் வருங்காலத்தைப் பற்றிய கவலைகள் அவர்களை எந்நேரமும் மொய்த்து நிற்கின்றன. போட்டி என்னும் பிசாசு பிடரியைப் பிடித்து உந்தித் தள்ளும்போது வேறேதும் வழிகளில்லை. எலிகளின் ஓட்டப்பந்தயத்தில் இளைப்பாற நேரமில்லை. எனவே கவிதை ஆறுகளைக் கருக்கொண்ட கற்கண்டுச் சுவைகளை இவர்கள் கண்டதில்லை. சிகரங்களை உடைத்துச் சில்லரைக்கு விலைபேசும் கருங்கல் குவாரிகளே இவர்களுக்குக் காத்திருக்கின்றன. நறுமலர்கள் நடமிடும் நந்தவனம் இவர்களுக்கு இல்லை; நாற்றாகிப் பயிராகும்

சேற்று வெளிகளே இருக்கின்றன. மலர்களோடும் மண்ணோடும் அவர்களுக்கு உறவு இல்லை.

பாடப்புத்தகங்களோடும் தேர்வுக் கேள்விகளோடும் அவர்கள பந்தப்பட்டு இருக்கிறார்கள். உள்ளங்கை படும்போது உயிர் சிலுப்பித் துள்ளிக் குதித்தோடும் கன்றுக் குட்டிகளை அவர்கள் கண்டிருக்க மாட்டார்கள். விரல்படும் போது விழித்துக் கொள்கின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளே அவர்களின் தோழர்கள். இறக்கைகளில் வரையப்பட் கோலங்களைவிட அரசியல் கொடிக் கம்பங்களில் அலைகிற வண்ணக் கொடிகளையே அவர்கள் மிகுதியும் அறிவார்கள். மழைக்காலத்துத் தட்டான்களோ வெயில் காலத்துப் பனை நுங்குகளோ அவர்களுக்குப் பழக்கம் இல்லை. இந்நாட்டில் குழந்தையாக இருக்க நேர்வது எத்தனை பெரிய சாபம்? இவர்களை வளர்க்கும் பண்பாடு எது? மணத்தைக் குடைந்து கொண்டிருந்த இந்தக் கேள்விக்கு மழலையர் பள்ளி ஒன்றில் விடை கிடைத்தது.

## இசைகெட்ட ஆட்டத்தில் இளஞ்சிறார்கள்

உரத்த குரலெடுத்து ஒலிநாடா முழக்கமிட இசைகெட்ட திரைப்பாடலுக்கு அந்தச் சின்னக் குழந்தைகள் ஆடின. அந்தப் பாடல்களுக்கு ஓர் அர்த்தமும் புரியாமல் அது ஆடித் தீர்த்தன. இடையை ஒடித்து, இதழைச் சுழித்துக் காலை அகட்டிக் கண்ணைச் சிமிட்டிச் சின்னத்திரையில் நாம் பார்க்கும் வெள்ளித்திரைத் துண்டுகளைப் போல் அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் ஆடிக்காட்டின. இதுதான் நடனம் என்று இக்குழந்தைகளுக்குச் சொல்லிவைத்தால் இங்கே என்ன மரம் முளைக்கும்? எந்தக் கனி சுவைக்கும்? கல்விச் சுமை முதுகில்; பண்பாட்டுச் சுமை நெஞ்சில். இன்று இந்நாட்டில் குழந்தைகளாக இருக்க நேர்வது எத்தனை கடினம்? அவர்கள் பின்பற்றத் தகுந்த தலைவர்கள் அரசியலில் இன்று இல்லை. எழுச்சி பெறும் இலக்கியச் சித்தர்கள் எழுத்துலகில் இல்லை. அறிவு விழியைத் திறந்துவைக்கும் ஆசான்கள் இல்லை. ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டுச் சொல்ல ஒருவர்கூட இல்லை. அறிஞர்களையும் கலைஞர்களையும் தொலைத்துவிட்டு வணிகர்களையும் கோமாளி களையும் வளர்த்துவரும் இந்நாட்டில் குழந்தையாக நேர்வது எத்தனைப் பெரிய சோகம்!

## பெற்றோர் ஆற்றவேண்டிய பெரும் பொறுப்பு

குழந்தைகள் தவறு செய்துவிட்டால் அவர்களைக் குற்றவாளியாகப் பார்க்கிறோம். இதற்கு அவர்கள் மட்டும் காரணம் ஆகார். பெற்றோரும் ஒருவகையில் கரணியம் ஆவர். குழந்தைகளிடம் இளம் பருவத்தில் மிகுதியாகக் குழப்பங்கள் இருக்கும். இதைப் புரிந்து அவர்களைப் பெற்றோர் வழிநடத்த வேண்டும்; அவர்களிடம் மனம் விட்டுப்பேசவேண்டும். உணர்வுச் சிக்கலில் இருந்து வெளிவரத் தெரியாத குழந்தைகளுக்குப் பின் விளைவுகளைச் சிந்திக்கத் தெரியாது; எனவே போதை, திருட்டு, கொலை, தற்கொலை, பாலியல் வன்முறை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். பழிவாங்கும் எண்ணம்கூட இப்படித்தான் வருகிறது. அவன் வைத்திருக்கும் பொருள் நமக்கும் வேண்டும். அல்லது அதைத் திருடுவது, பறிப்பது, உடைத்து எறிவது இப்படி ஏதாவது செய்யும் மனநிலைக்குக் குழந்தைகள் தள்ளப்படுகின்றனர். ஒரு நட்பான சூழல் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. புத்தகங்களையும் தாண்டி அவர்கள் தங்களை பற்றிப்பேச அனுமதிக்க வேண்டும். குழந்தைகள் நல்லவர்களா? கெட்டவர்களா? என்ற கேள்விக்கே இடமில்லை. அவர்கள் நல்லவர்களாக வாழத்தகுந்த சூழலை உருவாக்கவேண்டிய பொறுப்பு நம் கையில் தான் இருக்கிறது.

## நம்பிக்கையற்ற இந்திய இளைஞர்கள்

இன்று நடைமுறையில் இருக்கும் கல்வித்திட்டம் அன்று ஆங்கிலேயன் மெக்காலேவால் நடைமுறைப்படுத்தப்பட்டது ஆகும். ஆங்கிலேயர்கள் நாட்டைவிட்டு வெளியேறி அறுபது ஆண்டுகள் ஆன பின்பும் மெக்காலேவின் கல்வித் திட்டத்தில் நம் மண்ணின் மரபிற்கேற்ப எந்த மாற்றமும் இதுவரை நிகழ்த்தப்படவில்லை. நமக்கு வழிமுறைகளாக அமைந்து நாம் இடும் ஏவல்களை மட்டும் நிறைவேற்றக்கூடிய நிலையில் இக்கல்வித் திட்டம் அமைந்திருப்பதால் படிக்கின்றவர்களிடம், படித்தவர்களிடம் நம்பிக்கையில்லாமல் போயிற்று.

இன்றைய யுகம் இளைஞர் யுகமாகும். இன்றைய சமுதாயத்தைச் சரியான முறையில், சரியான திசையில் நடத்திச்

செல்லும் திறமை இன்றைய இளைஞர்களுக்கு உண்டு. பெரியவர்கள் தம்மை வழிநடத்திச் சென்றது ஒரு காலம். அனுபவம் வாய்ந்த நடுத்தர வயதினரும் ஆற்றல் மிகுந்த பெண்களும் நம்மை வழிநடத்திச் சென்றிருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்போது ஒதுங்கி நின்று இளைஞர்களுக்கு வழிவிட வேண்டியநேரம் வந்து விட்டது.

## வளரும் அமெரிக்க இளைஞனும் தளரும் இந்திய இளைஞனும்

அமெரிக்க இளைஞர்கள் தறிகெட்ட வாழ்க்கை நடத்து கின்றார்கள். குடும்பத்தின் அமைப்பு சிதைந்து விடுகின்றது. எந்தக் கட்டுப்பாடும் அவர்களுக்கு இல்லை. அஞ்சத்தக்க குழப்பம் அவர்களை ஆட்கொண்டு விடுகின்றது. ஆனால் அவர்களிடம் இருக்கும் நம்பிக்கை வியப்பூட்டுவதாய் உள்ளது. முயற்சி இல்லாத அமெரிக்க இளைஞனைக் காண்பது அரிது. தற்காலத்தில் எப்படிப் பட்டவர்களாக வரவேண்டும்? அதற்கு என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டும் என்ற அறிவுத் தெளிவு இருப்பதாலும் எல்லா வற்றையும்விட நம்பிக்கை இருப்பதால் அவர்கள் கெட்டுப் போவதில்லை. இந்நாட்டிற்குப் பயனுள்ள முறையில் மிகுதியாகச் செய்யமுடியும் என்ற நம்பிக்கை ஒவ்வொரு இளைஞனின் இதயத்திலும் குடிபுகுந்துள்ளது.

நம் இளைஞர்கள் ஒழுக்க நிலையில் குடத்திலிட்ட விளக்காக உள்ளனர். ஒழுக்கம் பற்றி உலக இளைஞர்களுக்குப் பயிற்சி தரத்தக்க அளவில் தகுதியும் தரமும் நம் இளைஞர்களிடம் காணப்படுகின்றன. ஒழுக்கம் மட்டுமே முன்னேற்றம் தராது. அமெரிக்க இளைஞர் களிடம் இருக்கும் நம்பிக்கை, விடாமுயற்சி நம்மிடம் இல்லை.

விடுதலைப் போராட்டக் காலத்தில் இளைஞர்களிடையே இருந்த அறிவுத் தெளிவு, கொள்கை வெறி இன்று இல்லை. பரமகம்சர் விவேகானந்தர் போன்றோரை இன்று உருவாக்க முடிவதில்லை. அந்த அளவிற்கு இளமையின் வீரியம் உணர முடியாத நிலையில் அவர்களின் மூளை மழுங்கிக் கிடக்கின்றது. சிந்தையில் கோணல் மாணலைச் சரி செய்தால் இளைஞர்களிடம்

போய்ச்சேரும். நம் இளைஞர்களிடம் அவநம்பிக்கை மிகுதியாய் உள்ளது. அர்த்தமில்லாத அவநம்பிக்கை மிகுதியாக இவர்களிடம் ஆட்சி செய்கின்றது. மற்றவர்களின் சூழ்நிலையை ஒப்பிடும் பொழுது நம் சூழ்நிலை தேவலை என்று இளைஞர்கள் எண்ண வேண்டும்.

அமெரிக்காவில் நிகழும் போட்டி இங்கு இல்லை. அங்குள்ளதைப் போல் கலை, ஒழுக்கம் சிதையவில்லை. பின் ஏன் அர்த்தமற்ற அவநம்பிக்கை? வாழும் சூழ்நிலையை மாற்றிக் காட்ட வேண்டும் என்ற வெறி இல்லை. தொழில் அதிபராக வரவேண்டும், பெரிய அறிவியல் ஞானியாக வளரவேண்டும் என்ற வெறி நம் இளைஞர்களிடம் காணக்கிடைக்காத ஒன்றாகும்.

இளைஞர் உலகம் அளப்பரிய ஆற்றல் பெற்றது. உலகத்தைக் கடலுக்கு உருவகம் செய்யலாம். கடலுக்கு எவ்வளவு ஆழம்? கடல் அலை ஓய்வதுண்டா? சாய்ந்ததுண்டா? "என்னிடம் பத்து இளைஞர்களைத் தாருங்கள். இந்தியாவையே மாற்றிக் காட்டுவேன்" என்றார் விவேகானந்தர். நாட்டை மாற்றுவது இருக்கட்டும். படிக்கும் கல்வியின் துணைக்கொண்டு முதலில் நம்மை மாற்ற முயலுவோம். குழந்தைப் பருவம் மாற்ற முடியாதது. முதுமையாகிய வருங்காலம் எப்படி இருக்கும் எனத் தெரியாது. இளமைப் பருவம் நிகழ்காலம். தக்கவாறு அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## கல்வி நிறுவனப் பகற் கொள்ளை

இற்றைக் காலக் கல்வி நிறுவனங்கள் கல்விக் கூடங்களாக இல்லாமல் வணிகக்கூடங்களாக மாறி வருகின்றன. வழக்கறிஞர் தவறு செய்தால் ஒரு முழக்கயிற்றுக்குத்தான் இழப்பு. ஒரு மருத்துவர் தவறு செய்தால் ஆறடி நிலத்திற்குத்தான் இழப்பு. ஆனால் ஓர் ஆசிரியரின் தவறு ஒரு தலைமுறையையே இழக்கச் செய்யும். கல்விக் கட்டணம் என்ற பெயரில் வாங்கப்படும் தொகைமிகுதியான பெற்றோருக்குப் பாரமாகப் பளுவாக இருப்பதால் அன்றுபோல் இன்றும் கல்வி மேட்டுக்குடி மக்களுக்குரியதாகவே ஆகின்றது. கல்வி நிறுவனங்களில் நடக்கும் பகற்கொள்ளை பற்றிக் கவிஞர் மேத்தா பின்வருமாறு பேசுகின்றார்.

"பள்ளிக் கூடங்களைக் காட்டிலும்
கொள்ளைக்காரர்கள்
நல்லவர்கள்
நல்லகொள்ளைக் காரர்களில் சிலர்
கொள்ளை அடித்து விட்டு
நன்கொடை கொடுக்கிறார்கள்
நல்ல பள்ளிக்கூடங்களில் சிலர்
நன்கொடை வாங்கி
கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர்" (மேத்தா)

கல்வியின் ஒவ்வொரு வளர்ச்சிப்படிக்கும் தரப்படுகின்ற விலை கடுமையானது.

"பி.யு.சியா
ஒரு நூறு போதும்
பி.எஸ்.சி
பி.எட்
இருநூறு ஆகும்
எம்.எஸ்.சி ஆயிரம்
எம்.பி.பி.எஸ் ஏழாயிரம்"

என்று பட்டியலிட்டுக் காட்டுகின்றவர் கவிஞர் மீரா ஆவார். அவர் வாழ்ந்த காலச்சூழலில் வாங்கப்பட்ட கட்டணங்கள் இவையாகும். இன்று இத்தொகை இரண்டு, மூன்று மடங்கு கூடியுள்ளது. இவ்வளவு வாங்கியும் கல்விக் கூடங்களுக்குச் சிறந்த கட்டிடங்கள் இல்லை. மூங்கில் தட்டியல்களுக்குள் வகுப்புக்கள் இயங்குகின்றன. எனவேதான் கும்பகோணத்து அவலச்செய்தி தொடர்கதையாக நிகழ்கின்றது.

## ஆசிரியர் இல்லா அவலப் பள்ளிகள்

தஞ்சை, திருவாரூர் மாவட்ட எல்லையான அதிராமபட்டினம் அருகே முத்தாக்குறிச்சி என்ற கிராமம் உள்ளது. 1986இல் அங்கு ஓர் அரசு நடுநிலைப்பள்ளி எழுந்தது. இப்பொழுது உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்து உள்ளது. மாணவர்களெல்லாம் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இருந்துவருவதால் அவர்தம் காலில்

செருப்புக்கூட கிடையாது. நாளும் வீட்டிலிருந்து பள்ளிக்கு நடந்தே வருகின்றனர். சிலர் மட்டும் மிதிவண்டியில் வருகின்றனர். பெற்றோர் மிகுதியானவர் படிப்பில்லாக் கூலித் தொழிலாளிகள் ஆவர். தாங்கள் படிக்காவிட்டாலும் தம் பிள்ளைகளாவது படிக்க வேண்டும் என்று ஆர்வப்படுகின்றனர். பள்ளியில் பயிலும் முந்நூறு மாணவர்களுக்கு ஆறு ஆசிரியர்கள்தான் உள்ளனர். பத்தாம் வகுப்பிற்கு இரு ஆசிரியர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். ஆங்கிலம், அறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களுக்கு ஆசிரியரே இல்லை. இதுவரை கல்வித்துறை கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்காதது வேதனைக்கு உரியது. இருப்பினும் காசுகொடுத்துப் படிக்கும் கான்வெண்ட் பள்ளிகளே திக்கித் திணறிக் கொண்டிருக்கும்போது அப்பள்ளி தொடர்ந்து பத்தாம் வகுப்புத்தேர்வில் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற்று விடுகின்றது. அதுவும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக முழு வெற்றிக்குரியதாக இப்பள்ளி உள்ளது. ஆசிரியர்கள் இல்லாத நிலையிலேயே அப்பள்ளி சிறந்து விளங்குமானால் முழுஅளவில் ஆசிரியர்கள் பணியாற்றுவாரானால் மாநில முதன்மை அப்பள்ளிக்குத் தவறாமல் கிடைக்கும்.

## நிர்வாக அலுவலகக் குழறுபடிகள்

பள்ளிக் கூடத்தின் இயக்கம்தான் வருந்தத்தக்கது என்றால் கல்வி நிர்வாக அலுவலகப் பணி பற்றிச் சிந்தித்தால் நம் கண்ணில் நீர் துளிர்க்கும். மேலூர் மாவட்டம் திமிறி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளான வித்யாவும் வனிதாவும் தம் பெற்றோரோடு கல்வி நிர்வாக அலுவலகத்திற்கு வந்திருந்தனர். அவர்கள் கையில் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் இருந்தன. அவற்றுள் வித்யாவிற்கு அறிவியல், சமூகஅறிவியல் பாடங்களுக்கு மதிப்பெண்ணே போடவில்லை. பிறந்தநாளோ, பள்ளியின் பெயரோ, ஊரோ, மதிப்பெண்ணோ எதுவும் இல்லை. வனிதாவிற்குத் தமிழ், ஆங்கிலப் பாடங்களுக்கு மட்டுமே மதிப்பெண் பதிவு செய்யப்பட்டிருந்தது. கணிதம் உட்பட எஞ்சிய மூன்று பாடங்களுக்கு மதிப்பெண் பதிவாகவில்லை.

அத்தனைப் பாடங்களுக்கும் தேர்வு எழுதித் தேர்ச்சியுமான இவ்விரண்டு மாணவிகள் பள்ளியிலிருந்து கிடைத்த அரை குறையான மதிப்பெண் பட்டியல்களைப் பார்த்து அதிர்ச்சியடைந்து

அழுதிருக்கிறார்கள். அவர்களைத் தேற்றிய பெற்றோர்கள் அப்பள்ளியின் தலைமையாசிரியரைப் பார்த்து முறையிட்டு இருக்கிறார்கள். "அய்யா.... நீங்க பார்த்து மார்க் சீட்டைத் திருத்த ஏற்பாடு பண்ணுங்க" என்று கெஞ்சியிருக்கிறார்கள். அதற்கு அவர் "உங்களுக்கு கொஞ்சமாச்சும் அறிவு இருக்கா? இது உங்க பிள்ளைங்களோட சர்ட்டிபிகேட். நான் தபால் அனுப்பி அவங்க சரிபண்ணி அது திரும்ப வர்ரதுக்குக் குறைந்தது ஆறுமாசமாகும். சமயத்தில் காணாமற்கூடப் போயிடும். முதல்வேலையா மெட்ராஸ் போயி கையோட திருத்தி வாங்கிட்டு வாங்க" என்று பொறுப்பாகப் பேசியிருக்கிறார்.

பிறகு தான் தங்கள் மகள்களை அழைத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள். ஒரு பெண்ணின் தந்தை முனுசாமி தப்பா சர்ட்டிபிகேட் கொடுத்திருக்கு கவர்மெண்ட். அதுக்கு எங்களைத் திட்டுறாரு எச்.எம். இப்பப் பாருங்க ஒருநாள் வேலையும் கூலியும் போயி ரெண்டு பேருக்குப் பஸ் செலவு அது இதுன்னு ரொம்ப செலவாயிருச்சு. எட்டு நாள் வேகாத வெயிலில் நான் மம்பட்டி பிடிச்சாத்தான் இந்தப் பணத்தைப் பார்க்க முடியும். யார் செஞ்ச தப்புக்கு யாரு தண்டம் அழுவறது என்றார் பரிதாபமாக. இதே நிலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொன்னார்கள்.

மதிப்பெண் பட்டியல் திருத்தத்திற்காகத் தொலை தூரத்திலிருந்து வந்திருந்தார் ஒரு பள்ளியின் மேலாளர். அவரோடு சென்னை மேனிலைப்பள்ளி ஆசிரியர் ஒருவரும் சேர்ந்துகொண்டு கீழ்வருமாறு பேசினர்....

"சர்ட்டிபிகேட்ல எங்க ஸ்கூல் பேரைத் தப்பாப்போடுறாங்க. ஊரு பேரைத் தப்பா போடுறாங்க. நாலஞ்சு வருஷமா இதே தப்பு திரும்பத் திரும்ப நடக்குது. எத்தனையோ லெட்டர் குடுத்திருக்கோம். சரி பண்ணமாட்டேன்றாங்க. ஒவ்வொரு வருஷமும் வேலையைப் போட்டுட்டு வரவேண்டியதிருக்கு. இவங்க திருந்தமாட்டாங்க. இவங்களைத் திருத்தவும் மாட்டாங்க" என்றார் சோகமாக.

இன்னொருவரோ "ஒவ்வொரு மாணவனும் காலம் காலமாகப் பாதுகாக்கவேண்டிய சர்ட்டிபிகேட் இது. இவங்கபாட்டுக்கு

அடிச்சித் திருத்திக் குடுக்கிறாங்க. இந்த அடித்தல் - திருத்தல் சர்ட்டிபிகேட்டை இன்னொரு ஸ்டேட்ல கொண்டுபோய் காட்டுனா அவங்களுக்குத் தேவையில்லாத சந்தேகமெல்லாம் வரும். அவங்க கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லி ஆகணும். ஸ்டூடன்ஸோட ஃப்யூச்சர் பாதிக்குமுனு இவங்களுக்குத் தெரியாதா?" என்றார் கோபமாக. பயிரைக் காக்க வேண்டிய வேலி பயிரையே மேய்ந்தால் என்ன சொல்லுவது?

## பேணுதல் இல்லாக்குழந்தைகளின் பெருங்கேடு

பிள்ளையின் தாய், தகப்பன் இருவரும் பணியாற்றுகின்றனர். காலைப் பரபரப்பு இருவரையும் அழுத்துகின்றது. தகப்பன் பரபரப்பாகக் காலையில் இயங்கி அலுவலகம் செல்கின்றார். தாய் பரபரப்பாக இயங்கிப் பணியிடம் செல்கிறார். இரவு இருவரும் நேரம் கழித்து இல்லம் வருகின்றனர். மூன்றாம் வகுப்புப் படிக்கும் இவர்களின் பெண்ணிற்கு ஒரு பையனால் நிரந்தரத் தொல்லை நிகழ்கின்றது. தந்தையாலும் தாயாலும் கேட்கமுடியவில்லை. எனவே இந்தப் பெண்தானே முடிவு எடுக்கிறாள். புத்தகத்திற்கு இடையே காய்கறி நறுக்கும் கத்தியைப் பத்திரப்படுத்திப் பள்ளி செல்கிறாள். பையனோ அடங்காத குறம்பினனாக அவளிடம் நடந்து கொள்கிறான். அப்பையன், "பையில் துப்பாக்கி வைத்து இருக்கிறேன்; சுட்டு விடுவேன்" என்று அச்சுறுத்துகின்றான். அவளோ தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அவனை அச்சுறுத்துகின்றாள். செய்தி அறிந்த தலைமையாசிரியர் கண்டிக்கிறார். எனவே வீட்டிற்கு வர இவள் அச்சப்படுகின்றாள். ஆட்டோவில் இவள் திரும்பி வருகிறபொழுது அம்மா வாசலில் நின்று வரவேற்றாள். நாளையில் இருந்து காலையில் தான் அவளைப் பள்ளியில் கொண்டு விடுவதாகவும் மாலையில் பிள்ளையின் அப்பா அழைத்துவருவதாகவும் அம்மா கூறுகின்றாள். பாப்பாவிற்கு இனம் புரியாத மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

## பயனற்ற பட்டதாரிகள்

கல்வியைப் பயின்ற பட்டதாரிகளின் நிலை மேலும் பரிதாபத்திற்குரியதாகும். இன்றைய பல்கலைக்கழகப் பட்டங்கள் வாழ்விற்குப் பயன்படாதன. இன்றைய பட்டங்கள் அறிவையும் வளர்ப்பதில்லை; வாழும் வகையையும் கற்றுத் தருவதில்லை.

அப்படி என்றால் பல்கலைக்கழகம் தரும் பட்டத்திற்கும் காற்றில் பறக்கவிடும் பட்டத்திற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? காற்றில் பறக்கும் பட்டத்தைப் பறக்கவிடுவதில் நாம் மகிழ்வுறு கின்றோம். உண்மையில் இருந்த இடத்திலிருந்து உயர அது எழுந்து பறக்கின்றது. ஆனால் பல்கலைக்கழகப் பட்டம் அதனைத் தாங்கிய வனுக்கு மகிழ்வைத் தருவதில்லை; நிறைவை வழங்குவதில்லை; அவன் நிலை உயர்வது இல்லை.

கல்விக் கூடங்களை அன்றிருந்தோர் 'சிந்தனை நந்தவனம்' என நம்பியிருந்தனர். ஆனால் இன்றைய நிலைமை வேறு. ஆசிரியர்கள் விறகு வெட்டிகள்; மாணவர்கள் விறகுத் தலையர்கள். அவர்களுக் கேற்றாற்போல் ஆமை முதுகில்தான் இறகு பறிப்போம் என மாணவர்களும் உள்ளனர். ஆய்வு என்ற பெயரில் ஆரவாரம் ஆராய்ச்சிச் சாலைகளில் மிகுதியாக உள்ளது. வால் இல்லாத, நூல் இல்லாத பட்டம் எப்பயனையும் தராதோ, அதுபோல் மாணவர்களின் பட்டமும் ஆராய்ச்சியும் புதிய சமூக மாற்ற மொன்றை ஏற்படுத்திவிடவில்லை.....

*"பல்கலைக் கழகங்களிலிருந்து*
*ஓ! பறந்து வருகின்றது*
*ஞான ரதங்களா!*
*போட்டி போட்டுக் கொண்டு*
*வாலில்லாத நூலில்லாத*
*பட்டங்கள்"* *(சிற்பி)*

கலைக் கல்லூரிகள் கணக்கற்றவையாகப் பெருகுவதைவிடத் தொழிற்பட்டறைகளின் பெருக்கம் மாணவர்களை வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து விடுவிக்கும் ஆற்றல் பெற்றது என்னும் கருத்துப்படக் கவிஞர் சிற்பியின் பாடல் கீழ்வருமாறு அமைந்துள்ளது......

*"பத்தாண்டு காலம்*
*பல்கலைக் கழகங்களுக்கு விடுமுறை*
*கலைக் கல்லூரிகள் - இனித்*
*தொழிற்பட்டறைகள்*
*தெருவில் திரிந்தது போதும்*

*திருகுகள், மரைகள்*
*செய்வது லாபம்".*

## மாணவர்களின் ஒழுங்கீனம்

*பின்காணும் முதன்மைக் கரணியங்களினால் ஒழுங்கு தோற்று விக்கப்படுகின்றது.*

*(1) மானுடம் ஒரு சமுதாயமாக வாழ*

*(2) மானுடத்தின் விலங்கியல்பை நெறிப்படுத்த*

*(3) மானுடம் மகிழ்வோடு வாழ*

*ஒழுங்கை நடைமுறைப்படுத்த வேண்டியவர்கள் (1) மூத்த மக்கள், (2) சான்றோர், (3) சமய நிறுவனர், (4) சமயச் சாத்திர வல்லார், (5) அரசு, (6) அரசின் சட்ட வரலாறு. இன்று இவர்களுள் எவரும் ஒழுங்கை நிலைநிறுத்துவதில்லை. மக்கள் அறியாதபோதும் மக்கள் நம்பாதபோதும் மக்கள் அனைவரிடமும் நடைமுறையாகாத போதும் ஒழுங்கு தோற்றுப்போகின்றது. பின் மாணவர்களிடம் எங்ஙனம் ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும்? பள்ளிச் சிறுவன் ஒருவன் பெட்டிக்கடை மறைவில் ஒளிந்தபடி கன்னிப்புகை கிளப்புகின்றான். தம்மினும் தம் மக்கள் அறிவுடையராகக் காட்சியளிக்கின்றபோதுதான் குழந்தைப் பேற்றின் உயரிய குறிக்கோள் நிறைவேறுகின்றது. இத்தகைய சிறப்பான சிந்தனையைப் பண்டைத் தமிழகம் கொண்டிருந்தது. இன்று இங்கு குழந்தைகள் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றனர். பங்கீட்டுக் கடையில் விற்கப்படும் பொருள்களை வாங்குவதற்காக வரிசையில் நிற்பதற்கே அவர்கள் பயன்படுகின்றனர். அன்று அறிஞர்களின் வரிசையில் இடம்பெற்ற இவர்கள் இன்று அரிசி வாங்கும் வரிசையில் காத்துக் கிடக்கின்றனர். இந்தளவுடன் மாணவர்களின் ஒழுங்கீனம் நிற்பதில்லை. அவர்களின் பண்பாட்டினைச் சிதைக்கும் இழி செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.*

## அறிவியல் வழிப் பண்பாட்டுச் சிதைவுகள்

*இன்றைய அறிவியல் வளர்ச்சி பாராட்டத்தக்கது என்றாலும்*

உலகத்தையே ஒரு சிறிய கிராம அளவில் உருவாக்குவதில் அது வெற்றி பெற்றிருந்தாலும் இன்றைய அறிவியல் சாதனங்கள் மாணவர்களிடையே ஒழுக்கக்கேட்டையும் பரப்பத் தவறுவ தில்லை. கௌஷாம்பி என்பவள் ஜார்க்கண்ட் மாநிலம் தும்காவைச் சேர்ந்த இளம்பெண்ணாவாள். கடந்த மே 16 இல் மும்பையில் அவள் கொலை செய்யப்பட்டாள். கொலைகாரன் மேற்கு வங்க வாலிபனான மனிஷ் தாகூர் ஆவான். அவன் கைது செய்யப் படுகின்றான். ஜார்க்கண்ட் இளம் பெண்ணுக்கும் மேற்கு வங்க இளைஞனுக்கும் என்ன தொடர்பு? இணையதளம் மூலம் அறிமுகமாகிய மனிஷ் 24 வயதான கௌசாம்பியின் வாழ்க்கை முடியக்காரணமாக இருக்கின்றான். இவர்கள் சந்தித்துக்கொண்ட கடைசி இடம் மும்பையில் உள்ள ஓர் உணவு விடுதியாகும். அங்குத்தான் கௌசாம்பியை மனிஷ் சுட்டுக்கொன்று விட்டான். இப்போது இணையதளத்தைப் பயன்படுத்துகின்றவர்களால் இச்செய்தி பரபரப்பாகப் பேசப்படுகின்றது. கூகுள் நிறுவனத்தின் ஓர் அங்கமான 'ஆர்குட்' விளைவிக்கும் தீமை இதுவாகும். பள்ளி மாணவ மாணவியர்களிடமிருந்து கல்லூரி இளசுகள் வரை குறைந்தது ஐந்து இலட்சம் பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஆர்க்குட்டின் கேடு தமிழகத்தையும் விட்டு வைக்கவில்லை.

நுங்கம்பாக்கத்தைச் சார்ந்த கல்லூரி மாணவி ஆர்குட் மூலம் நண்பர்களைத் தேடிய பெண்தான். அப்படிக் கிடைத்த நண்பர்களில் ஒருவன்தான் சதீஷ் என்பவனாவான். நல்ல நண்பன் என்று அவனிடம் பழகியிருக்கின்றாள். அவன் நடவடிக்கை சரியில்லை என்று அறிந்தபொழுது அவனின் தொடர்பிலிருந்து அவள் விலக முயன்றாள். ஆர்க்குட்டில் பழகிய மற்ற பெண் தோழியருக்கும் இச்செய்தியை அனுப்பியிருக்கிறாள். இதனால் சதீஷ் அக்கல்லூரிப் பெண் நிழற்படத்தைப்போட்டு அவளுடைய செல்போன் எண்ணையும் குறிப்பிட்டு ஒரு செய்தியை உருவாக்கி வெளியிட்டிருக்கிறான். அதில் தான் ஒரு 'கால் கேர்ள்' என்றும் எப்போது அழைத்தாலும் விருந்துவைக்கத் தயார் என்ற தகவலைப் போட்டிருக்கிறான். இதனால் பலரும் அந்தப் பெண்ணுக்குத் தொலைபேசியில் அழைத்து இருக்கிறார்கள். ஆச்சாரமான நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த இப்பெண் இச்செய்தியைப் பார்த்து நடுங்கி விட்டாள். அவளுடைய வீட்டிற்குச் செய்தி எதுவும் தெரியாது.

ஆர்க்குட்டுகள் ஆராய்ச்சியாளர்களுக்கு மிகப் பயனுள்ளவை. அவற்றின் வழி அரிய தகவல்கள் கிடைக்கும். அண்மை வளர்ச்சி பற்றிய செய்திகளை உடனே அறிந்து கொள்ளமுடியும். இவை எல்லாம் நன்மைகள் என்றால் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. தகவல் களஞ்சியங்களாகப் பல பிரிவுகள் ஆர்க்குட்டில் இருக்கும். அதே வேளையில் ஆபாசச் செய்திகளும் இடம் பெற்றிருக்கும். மனவளர்ச்சி இல்லாத இளம் பருவத்தினர் ஆர்க்குட்டில் இணையும்பொழுது தங்களுக்கான பாதை எது என்பதைத் தெளிவாகப் புரிந்து வைத்துக்கொள்ளவேண்டும். பெற்றோர்கள் இன்னும் கவனமாகச் செயல்படவேண்டும். ஆர்க்குட் போன்ற இணைய தளங்களைப் பயன்படுத்தும் இளசுகள் அதிலுள்ள கேட்டையும் புரிந்துகொள்ளுதல் நல்லது. இப்படி நாளும் செய்திகள் நாளிதழில் இடம்பெறுகின்றன. புலனடக்கம் இல்லாமையே இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

## ஐம்புல அடக்கத்தின் அருமைப்பாடு

அலெக்சாண்டர் டயோசினிசிடம் மக்கள் தன்னைவிட அவரை மதிப்பது ஏன் எனக்கேட்டான். “நீ மண்ணை வென்றவன். நான் என்னை வென்றவன்” என்றார் டயோசினிசும். புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே, வீரம் என்று அவ்வை கூறுகின்றாள். இன்றைய இளைஞர்கள் சின்னஞ்சிறு வயதிலேயே சிற்றின்பச் சிலந்தி வலையில் சிக்குகின்றனர். கல்லூரிச் சிட்டுகளைச் சீண்டுவது பேரின்பம். இளம் பருவத்தில் புலனடக்கம் இல்லாமல் போனால் வாழ்க்கை முழுவதும் வருந்தவேண்டிய சூழல் ஏற்படும். தாளைத் தொட்டால் என்ன உணர்ச்சி இருக்குமோ அதேபோன்றுதான் ஒரு பெண்ணைத் தொடும்போது இருக்கவேண்டும்.

பரமகம்சர் தம் மனைவி சாரதா தேவியைத் தாம் வணங்கும் பராசக்தியின் வடிவமாகப் பார்க்கிறார். “இல்லற உறவிற்காக நீங்கள் இருக்கும் இடம் தேடி நான்வரவில்லை, உங்கள் ஆன்மீகப் பயணத்தில் துணைநின்று தொண்டுசெய்யவே வந்தேன்” என்றார் சாரதா தேவியார். ஒரே அறையில் இரவுப்பொழுது மனைவியுடன் ஆறு மாதம் ஒன்றாகவே துயின்றார். இருவரது மனத்திலும் ஒருநொடிகூட உடலின்பம் பற்றிய சிந்தனை எழவில்லை.

விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்தபொழுது ஒரு பெண் "உங்களை மணக்க விரும்புகிறேன்" என்று கூறினார். ஏன் என்றுகேட்ட விவேகானந்தருக்கு அறிஞராகிய தங்கள் வழியாக அறிவிற் சிறந்த குழந்தையை அடைய விரும்புவதாக அப்பெண் கூறினார். அறிவார்ந்த பிள்ளையைப் பெறுவதுதான் ஆசை என்றால் இப்பொழுதே தம்மை மகனாக ஏற்றுக்கொள்ளும்படி விவேகானந்தர் கூறினார்.

காந்தியடிகள் காமக்கணையால் காயப்படுத்தப்பட்டார். தந்தை இறப்புப் படுக்கையில் இருந்தபோதுகூட மனைவியிடம் இன்ப உறவு கொண்டிருந்தார். பின்னாளில் முழுமையான பிரம்மச்சரியத்தைப் பின்பற்றினார். மனைவியையும் கடைப் பிடிக்குமாறு அவர் செய்தார்.

பதினாறு வயதில் செயப்பிரகாச நாராயணன் பிரபாவதியுடன் திருமணம் நிகழ்ந்தது. படிப்பிற்காகக் கணவர் அமெரிக்கா சென்றார். மனைவி வார்தா ஆசிரமத்தில் தங்கித் தொண்டு செய்தார். படிப்பு முடிந்தவுடன் ஆசிரமத்தில் மனைவியைச் செயப்பிரகாசர் சந்தித்தார். பிரம்மச்சரியம் பற்றிச் செயப்பிரகாசரிடம் அவர் மனைவி பேசினார். முதலில் செயப்பிரகாசருக்குத் தயக்கமிருந்தாலும் பின் இசைவினைத் தெரிவித்தார். உடலின்பத்தை உதறிய அவர் இறுதிவரை அதை நாடவில்லை. இவர் போலப் பிறர்வாழ முடியாது. சிவன் காமனை அழித்தானோ இல்லையோ, பரமகம்சரும் நாராயணனும் மனைவியை அருகில் வைத்துக் காமனை எரித்தார்கள்.

இன்றைய இளைஞர்களை இவர்களைப்போல் இருக்கச் சொல்லவில்லை. வாழ்க்கையில் கால் ஊன்றும் வரை வெற்றிக்கான இலக்குகளைத் தொடும்வரை புலனடக்கம் பேணுவது நல்லது. புலனடக்கம் பெற்றோர் எதையும் எளிதில் சாதிப்பர். வெளிப் பகைகளை வெல்வதல்ல வெற்றி. நம் உள்ளத்தை உருக்குலைக்கும் காமம் போன்ற உட்பகையை முறியடிப்பது தான் உண்மையான வெற்றி. நாகரிகம் என்ற பெயரில் 'டேட்டிங்', 'அவுட்டிங்', 'ஆண் பெண் பேதமின்றி ஆடை', 'பாப் இசைக்குத் தாளம்', 'போதைப் பொருள் மயக்கம்', 'சபலம்', 'சலனம்' இவற்றிற்குத் தீனிபோடும் கவர்ச்சிச் சாதனங்கள் ஆகியவற்றை வெல்ல ஒரே மருந்து புலனடக்கம். ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் மனச்சான்றின்

நல்லொழுக்கத்தின் குரல் ஒலிக்கின்றது. அதை நன்றாக உற்றுக் கேட்டால் யாருக்கும் தவறு செய்யத் தோன்றாது. பாற்கடல் கடைந்தபொழுது முதலில் ஆலகால நஞ்சுதான் எழுந்தது. அதன் பின்பே உயிர் காக்கும் அமுது தோன்றியது. படிக்கும்பொழுது அவசரப்பட்டு ஆலகால நஞ்சை அருந்துவதைவிடப் புலனடக்கம் காத்துப் பின் பொறுமையாக இளைஞர்கள் அமுதம் பருகலாமே! இத்தகைய புலனடக்கத்தைக் கற்றுத்தராத கல்வியை உண்மையான கல்வி என்று காந்தியடிகள் ஏற்றதில்லை. எனவேதான் சமய வகுப்புக்களை அவர் நடத்தினார்.

## மாணவர்களின் நல்ல நண்பர்கள்

நல்ல நண்பர்களிலேயே எப்பொழுதும் நம்முடன் இருந்து நமக்கு நல்ல அறிவுரைகளை வழங்குவது நூல்களாகும். மாணவர்களைச் சீர்ப்படுத்தி மேம்படுத்துவதில் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களைவிட முன்னிலையில் நிற்பன நூல்களாகும். நூல்கள் இல்லாத வீடு சன்னல் இல்லாத அறையாகும். விரிவான சன்னல் இருக்கிற அறை கதிரவ வெளிச்சத்தையும் காற்றையும் தந்து நாளும் நம் உடல்நலத்தைப் பேணுதல்போலத் தரமான, தெளிவான, சிந்தனை வளத்தை நூல்கள் தரும். அத்தகைய நூல்களை வாங்கவேண்டும். ஒரு நாளைக்குக் குறைந்தது ஒருமணி நேரமாவது படிக்கவேண்டும். நம் சிந்தனையைவிட வளமான சிந்தனையிடமிருந்து உணர்வைப் பெறுவதற்குப் பயன்படுவது படிப்பாகும். நூல்களைப் படிப்பதுடன் நில்லாமல் படித்தவற்றைக் குறிப்பெடுத்துப் பழகவேண்டும். நூல் ஈடுபாடு கொண்டு படிப்பது தான் வாழச்சிறந்த வழிகாட்டி. கையில் ஒருநூல் அலமாரியில் உள்ள நூறு நூல்களுக்குச் சமமானது. இன்றைய மாணவப்பருவத்தில் திரைச் சுவைஞர்கள் உண்டு; உல்லாசப் பிரியர்கள் உண்டு; ஆனால் மாணவர்கள் மட்டும் இல்லை. கவர்ச்சி அவனைக் கிளர்ந்தெழச் செய்கின்றது; மோகம் அவனை மயங்கச் செய்கின்றது. பணம் அவனைப் பாடாய்ப் படுத்துகின்றது. இவர்கள் எல்லாம் வாழ்க்கையில் திருந்த வேண்டுமானால் நல்ல நூல்கள்தான் துணை நிற்க முடியும். அடிகளின் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தை எழுப்பியது ஒரு நூல்தான். அந்நூல் இரஷ்கின் எழுதிய ‘கடையனுக்கும் கடைத்தேற்றம்’ என்பதாகும்.

## ஆசிரியர்களின் அவலங்கள்

கல்வி நிலைதான் கருத்தற்றுக் கிடக்குதென்றால் அதனைக் கற்றுக்கொடுக்கும் நல்லாசிரியர்களும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றனர். 'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்று புகழ்வதாலே அப்புகழ்மொழி ஆசிரியர் வயிற்றை நிறைவுசெய்யாது. தம் தேவையை அறிவிக்கக்கூடிய அடிப்படை உரிமைகூட அவர்களுக்கு இல்லை. பள்ளிக்கு அனுப்பப்படும் தம் குழந்தைகள் ஆசிரியர்களிடம் பாடம் பயிலுகிறார்கள் என்றுதான் பெற்றோர் நம்பி வருகின்றனர். அந்நம்பிக்கை தவறானதாகும். பள்ளிகளில் ஆசிரியர்கள் பாடங்கள் நடத்துவதில்லை என்பது ஓரளவு உண்மை என்றாலும் அஃது மட்டும் உண்மையாகாது; பாடங்கள் நடத்த அவர்களை விடுவதில்லை. பின் பள்ளியில் எது கருதி உள்ளனர்?

வாழ்வில் தொடக்கம் உண்டு. அதற்கு ஒரு முடிவு உண்டு. இடையில் இருப்பதுதான் இடைவெளியாகும். அதுபோல பள்ளித் திறப்புத்தான் தொடக்கமாகும். தொடக்கத்தில் மட்டும் 'அ' என்னும் எழுத்தை ஆசிரியர் அறிவிக்கிறார். ஆண்டின் இறுதிதான் பள்ளியின் முடிவாகும். அப்பொழுது 'ஃ' என்ற எழுத்தை மட்டும் சொல்லி முடித்தாராம். இடையில் உள்ள எழுத்துக்களைச் சொல்லிக்கொடுக்க முடியாதவாறு பல்வேறு பணிகளில் அவர்களை அரசு ஈடுபடச் செய்கின்றது. என்னென்ன பணிகள்? அறுவைச் சிகிச்சைக்கு ஆளைப் பிடிக்கச் சீனி அட்டையைத் தெருத்தெருவாக வழங்க, வாக்குப் போடும் மன்னர் தொகையைக் கணக்கெடுக்கச் செல்வார்கள்.

## ஆசிரியர் எவ்வழி மாணவர் அவ்வழி

ஆசிரியர்கள் படும் தொல்லை பரிதாபத்திற்குரியது என்றாலும் இன்றைய ஆசிரியர்களிடம் போலித்தனமும் கபடமும் ஒழுக்கக் கேடும் வெளிப்படுகின்றன. வறுமை நெருப்பில் வெந்து கருகும் ஏழைத்தாயின் இயல்பான ஆசை வஞ்சிக்கப்படுகின்றது. ஆசிரியரின் ஒழுக்கக்கேட்டினால் நிகழ்ந்த அவர்களுடைய அப்பாவி மக்களின் அநியாயமான சாவு சமுதாயத்தைக் கேவலமாக்குகின்றது. இன்று பள்ளியில் பயிலும் மாணவியர்களின் கற்பைச் சூறையாடுதல் ஆசிரியர்களுக்கும் பள்ளி நடத்துகின்றவர்களுக்கும் பொழுது போக்காகிவிட்டது. இதனால் மனச்சிதைவு அடையும் மகளிர்,

மானம் காக்கத் தன்னையே மாய்த்துக்கொள்ளும் மகளிர் நாளும் எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர். அப்பொழுதுதான் காந்தியடிகள் வலியுறுத்திய பண்பாடு பொருந்திய கல்வியின் அருமையை உணர்கிறோம்.

சிறந்த பண்புள்ள முழுமையான மனிதனை உருவாக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமுதாயம் ஆகிய மூன்றும் முதன்மையான கரணிகள் ஆகும். அரசு இம்மூன்றினையும் ஒருங்கிணைக்கின்ற ஆற்றலாகும். அரசு கல்விக்கு மிக முதன்மை தரவேண்டும். மேலும் காந்தியச் சிந்தனை மாணவர்களின் பண்புகளை வளர்க்கும் ஒரு சிறந்த கருவியாகும். ஆதலால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் காந்தியச் சிந்தனையைக் கற்றுக் கொடுத்தால் சாதி, சமய பிணக்கற்ற இளைஞர் சமுதாயத்தைப் பண்புள்ள கல்வியாளர்களை உருவாக்கும்.

## 5. மனச்சாட்சியற்ற மகிழ்ச்சி

### மனச்சாட்சியின் மாட்சி

அடிகளின் கல்லறையில் பதிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு மணிமொழிகளுள் ஏழுவகைச் சமுதாயப் பாவங்களில் ஒன்றான மனச்சாட்சியற்ற மகிழ்ச்சியும் ஒன்றாகும். மனம் படைத்தவன் மனிதன். மனம் படைத்தமையால் தான் மாண்புறு மனிதனாகின்றான். எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தபின் எழுந்த பிறப்பே மானுடப் பிறப்பாகும். எனவேதான் மானிடப் பிறவி அரிதினும் அரிது என்று பாராட்டப்படுகின்றது. இயற்கையை ஓர்ந்து இயற்கையுடன் ஒன்றி நின்று உயர்நிலைக்கு வளர்ந்துள்ளவன் மனிதனாவான். அவன் இயற்கையுடன் போராடிய நிலையில் பெற்ற அனுபவத் திரட்சியே, முதிர்ச்சியே நாகரிகம், பண்பாடு, கலை போன்றனவாகும்.

மனிதனின் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய பேருணர்வுகளில் ஒன்றுதான் மனச்சான்றாகும். மனிதனின் உள்ளுணர்வாய் - அகவுணர்வாய் - பொய்யா விளக்காய் ஒளி பாய்ச்சுவது மனச்சான்றாகும். இந்த உள்ளுணர்வின் ஒளியில் வழிநடந்த போதெல்லாம் மனிதன் மாட்சிமை பெற்றுள்ளான். மனச் சான்றை ஒதுக்கிவிட்டு வாழ்வமைக்க முயன்ற போதெல்லாம் மனிதனின் தனி வாழ்விலும் பொதுவாழ்விலும் சரிவும் வீழ்ச்சியும் ஏற்பட்டுவிடுகின்றன. மனச்சான்றின் குரலுக்குச் செவி சாய்த்து மீண்டும் வாழ்வை நெறிப்படுத்திச் சரிபடுத்த முயன்றபோது வீழ்ச்சியிலிருந்து மீட்சியும் புதிய எழுச்சியும் ஏற்பட்டுள்ளன.

மனத்தை அடிப்படையாகக் கொண்டு வள்ளுவப் பெருமகனார் பல குறட்பாக்களைத் தந்துள்ளார் என்றாலும் அவற்றுள் மணியாகத் திகழும் குறள்,

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்பதாகும். இறைவன் வந்து உதவ முடியாதென்பதால் அவன் சார்பில் ஒரு பெண்ணைத் தாயாக அனுப்பியுள்ளான் என்பதுபோல் ஒவ்வொரு தனிமனிதனையும் நெறிப்படுத்த முடியாதென்பதால் தன் சார்பாக மனச்சான்றை மனிதனுக்கு வழங்கியுள்ளான். பிழை செய்கின்றவர்கள் பொலிவும் வலிவும் பெற்றவராக நம் கண்ணுக்கு விருந்தாகலாம். ஆனால் அவன் அமைதியில்லாமல் மகிழ்வைத் தொலைத்துத் துன்பக்கடலுள் இரவுப்பொழுது வீழ்ந்து இருப்பான். மக்களால் தட்டிக்கேட்க முடியாதவற்றை மனச்சான்று அவனைத் தட்டிக் கேட்கும் ஆற்றல் பெற்றதாகும். நிறைவையும் நிம்மதியையும் இழந்து சொல்லொணாத் துன்பத்தில் அவனது இரவுப்பொழுது கழியும். புற உலகில் ஆடம்பரமாகவும் ஆரவாரமாகவும் காணப்படுகின்ற அவன் அகஉலகில் அடையும் துன்பத்தை யெல்லாம் எடுத்துக்கூற இயலாது.

## மனச்சான்றில்லார்க்கு மரணமே பரிசு

மனச்சான்று எழுகின்ற போதெல்லாம் அதன் கழுத்தை நெறித்துக் குரலை ஒடுக்கியவர்கள் வாழ்ந்ததாகப் புராணங்கள் கூடச் சான்றாக யாரையும் காட்டவில்லை. அறுபடை வீடுகளின் தலைவனான ஆறுமுகப் பெருமானை அசுரர்களின் தலைவன் சூரபதுமன் நேருக்கு நேர் நின்று அமர் விளைவித்தான். அப்பொழுது அவன் மனச்சான்று வந்திருக்கின்றவன் எல்லாம் வல்ல இறைவன் முருகன் என்றும் அவனுடன் போரிடுவது அழிவிற்கு வழி வகுக்கும் என்றும் தக்கவாறு சூரபதுமனை அறிவுறுத்தியும் அக்குரலுக்குச் செவிசாய்க்காமல் தொடர்ந்து போரிட்ட அவனை முருகன் அழித்தான். அதுபோல் இலங்கைவேந்தன் இராவணன் அயோத்தி வேந்தன் இராமனுடன் போரிட்டபொழுது இராவணனின் மனச்சான்று இராமனின் பேராற்றலை உணர்த்தியதோடு அல்லாமல் அவனுக்கு நிகழஉள்ள பேரழிவையும் சுட்டிக்காட்டினாலும் மனச் சான்றைப் புறக்கணித்துப் போராடிய எல்லாம் வல்ல இராவணன் இராமனின் கணைக்கு இரையானான். ஒருவனிடமிருந்து அவன் அறியாமல் அவனது பொருளைக் களவாடுவது மட்டும் களவாகாது. களவாடலாமா என்று உள்ளத்தளவில் நினைத்தாலும் அதுவும்

களவாடுதலுக்கு ஒப்பாகும் என்பது பொய்யாமொழிப் புலவரின் மெய்யான கருத்தாகும்.

## மனச் சான்றும் மன மகிழ்வும்

மனச் சான்று என்பது என்ன? "மனச்சான்று என்பது பல்வேறுபட்ட உணர்வுகளை உள்ளடக்கியது. கண்டுபிடிக்கப்பட்டு விடுவாயோ என்ற பயத்தின் அடிப்படையில் பிறக்கும் மெல்லிய உணர்வு" என்று மனச்சான்றை வரையறுத்துக் காட்டுகின்றவர் அறிஞர் பெட்ரண்ட் ரசல் ஆவார். "அது மனிதனின் உள்ளத்தின் உள்ளேயே இருந்து எழும் அமைதியான ஆழ்ந்த மெல்லிய குரல்" என்பார் அடிகள். "தனது ஆழ்ந்த அமைதியான மெல்லிய குரலில் இறைவன் எல்லோர் உள்ளும் பேசித் தன்னை உணர்த்துகிறான். ஆனால் அந்த ஆழ்மனத் தெய்வக் குரலுக்கு நாம் செவிசாய்ப்பது இல்லை" என்று அண்ணல் மேலும் பேசுவார்.

அனைத்தும் இன்பமயம் என்று உலகைப் பார்ப்பது ஒரு பார்வை. இன்பப் பார்வை மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். இந்த இன்பத்தைத் துய்ப்பதால் முகிழ்ப்பது மகிழ்ச்சியாகும். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்பது பாரதிப்புலவன் மணிமொழிகளில் ஒன்றாகும்.

"பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டுகள், மரங்கள்,
யாவுமென் வினையால் இடும்பைத் தீர்த்தே
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே
செய்தல் வேண்டும்"

என்பது இன்பம் பற்றிப் பாரதி பார்வையில் பதிந்த உலகளாவிய சிந்தனையாகும். இதனைத்தான் அடிகளும் வலியுறுத்தினார். "மகிழ்ச்சி என்பது எதிர்மறையாகத் தோன்றும் ஒவ்வொன்றிலும் உடன்பாடு காணும் திறமை, தோல்வியைச் சவலாக ஏற்றுக் கொள்ளும் சாதுரியம், கிட்டாததை வெட்டெனமறந்து, கிட்டியதில் மற்றற்ற மகிழ்ச்சி அடைவது" என்று விளக்குவார் வின் பீட்டர்சு என்ற

ஆங்கில அறிஞர். ஆங்கிலத்தில் 'குருட்டுப் பையன்' என்ற சிறிய கவிதை உள்ளது. பகலுக்கும் இரவுக்கும் வேறுபாடு தெரிகிறதா என்று அவனிடம் கேட்டபோது தனக்கு இரண்டுமே ஒன்றாகும் என்றான். எப்பொழுதெல்லாம் தூக்கம் நிகழ்கின்றதோ அப்பொழுதெல்லாம் தனக்கு இரவு என்றும் எப்பொழுதெல்லாம் விழிப்பு நிகழ்கின்றதோ அப்பொழுது எல்லாம் தனக்குப் பகல் என்றும் அவன் கூறினான். மகிழ்ச்சியுடன் இருக்க முடிகின்றதா என்று எழுப்பிய வினாவிற்கு மன்னனைவிடத் தான் மிக மகிழ்வாக இருப்பதாக அவனிடமிருந்து விடை வந்தது. அது எப்படி இயலுகின்றது என்று கேட்டதற்கு வாழ்க்கையில் அடைய முடியாது என்று தெளிவாக உணர்ந்தபின் அதனைப் பெறத்தான் முயற்சிப்பதில்லை என்றும் இருப்பதைக் கொண்டு நிறைவையும் மகிழ்வையும் பெற்று வாழ்வதாகப் பார்வையில் குருடனாக இருந்தாலும் பகுத்தறிவாய்ந்த அப்பையன் இன்பம் கொள்ளவேண்டிய நெறிமுறையை நமக்கு நன்கு விளக்கியுள்ளான். களிப்பு வேறு, மகிழ்வு வேறு. களிப்பு என்பது போகக் களிப்பாகும்.

## மனச் சான்றை மறுத்த மகிழ்ச்சி

இன்பத்தை நாடித் தேடி வாழ்வது உயிரினங்களின் இயல்பாகும். ஆனால் இன்பத்தை எப்படித் தேடிக்கொள்ள வேண்டும்? அதற்கு நெறிமுறை இல்லையா? நெறியற்ற முறையில், கட்டற்ற முறையில் மட்டற்ற மகிழ்ச்சிபெற முயற்சி மேற்கொள்ளும்போது தீய விளைவுகளே உருவாகின்றன. "அவலக் கவலை கையாறு அழுங்கல் தவலா உள்ளம் தன்பாலுடையது மக்கள் யாக்கை" என்று சீத்தலைச் சாத்தன் சிந்தை நொந்து பா வடித்தற்குரிய கரணியமென்ன? மக்களை வாட்டி வதைக்கும் துன்ப நிலைக்குக் கரணியமென்ன?

மனிதர்களின் மகிழ்ச்சி சிதைவதற்கான கரணியங்களுள் ஒன்று அவர்கள் அமைத்துக்கொண்டுள்ள அரசியல், பொருளாதாரச் சமுதாய அமைப்புக்களில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளாகும். அடுத்துத் தனிமனித ஒளிப்பாங்கில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளாகும் என்று அறிஞன் பெட்ரண்ட் ரசல் கருதுகிறார். மனிதர்கள் தமது முன்னேற்றம் கருதிப் பல்வேறுபட்ட அரசியல், பொருளாதாரச் சமூக அமைப்புக்களை உருவாக்கிக் கொண்டுள்ளனர். ஆயினும் அவை ஒட்டை உடைசல் ஆயின், மனித சமுதாய உயர்விற்கு - உய்விற்கு

உகந்ததாக இல்லாததாகி விடுகின்றன. ஏன்? மனிதர்கள் தமது மனச்சான்றின் ஒளியில் வழிநடக்கத் தவறும்போதே பொய்யும் வழுவும் புரையோடிப்போகும் சமுதாயமாகச் சீர்கெட்டு விடுகின்றன. மனச்சான்று குன்றும்போது மனிதச் சமுதாய அமைப்புக்கள் குன்றிவிடுகின்றன; கோணி விடுகின்றன.

தனி மனிதனின் மனக்கோளாறுகள் - மனக்கோட்டங்கள் உலக இன்னலுக்கேற்ற கரணியங்கள் ஆகிவிடுகின்றன என்ற உண்மையும் மறுக்கற்பாலதன்று. மனத்துடன் பல்லிடங்களில் பல்வேறு வகைகளில் தம் பாட்டில் விசாரணை செய்துள்ளான் தமிழ்ப்புலவன் பாரதி.

*"சிந்தையிற் கள்விரும்பிச் சிவசிவ வென்பதுபோல்*
*வந்தே மாதர மென்பார்! - கிளியே!*
*மனத்தி லதனைக் கொள்ளார்"*

என்று கள்ள மனம் பற்றிப் பாடுகின்றார் கவிஞர். தன்னைக் கட்டுதல் பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல் இவற்றைக் கடமையாகக்கொள்ள வேண்டுமென்று பாரதி வலியுறுத்துகிறார்.

*"மேவி மேவித் துயரில் வீழ்வார்*
*எத்தனைக் கூறியும் விடுதலைக்கிசையாய்*
*பாவி நெஞ்சே! பார் மிசை நின்னை*
*இன்புறச் செய்தேன்; எதற்கு மினி அஞ்சேல்"*

என்று பாழ்மனத்தைக் கடிந்து கொள்கிறார் பாரதி.

*"துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து*
*மாரியம்மா, எங்கள் முத்து மாரி!*
*தேல்வெளுக்கச் சாம்பலுண்டு - எங்கள் முத்து*
*மாரியம்மா, எங்கள் முத்து மாரி!*
*மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து*
*மாரியம்மா, எங்க முத்து மாரி!"*

என்று மனத்தை நன்மையின் கண் நிலைநிறுத்துதல் அவ்வளவு எளிதல்ல என்பதைப் பாரதியின் இப்பா வரிகள் பாடம்போல் கற்றுத் தருகின்றன.

## மனச்சான்றின்மை விளைக்கும் தீமைகள்

மனச்சான்றைப் புறத்தே ஒதுக்கிவைத்துவிட்டு மனம் போன போக்கில் செயல்படத் துவங்கும் பொழுது மனம் பாழ்படுகின்றது; தாழ்வுறுகின்றது. அங்குத் துன்பத்தின் சுழற்சியில் மாட்டிக் கொள்கிறான் மனிதன். மனச்சான்று அற்ற மகிழ்ச்சியினால் நிகழ்ந்து கொண்டிருக்கும் தீமைகளைக் கீழ்வரும் பட்டியல் எடுத்துக் காட்டுகின்றது...

சுற்றுச் சூழல் கேட்டால் உலகில் இருபத்தைந்து மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டு அகதிகளாக அல்லல் உறுகின்றனர். தன்னலங்கொண்டு சோலை வளங்களை அழிக்கப் பாலை நிலங்களாகும் பாழ்நிலை; மண்ணரிப்பு, வறட்சி, பாலைவனப் பரவலில் அதன் கொடிய கைகளின் வீச்சில் சிக்கித் தவிப்போர் அவனியில் நூற்றி முப்பத்தைந்து மில்லியன் மக்களாவார். தண்ணீர்ப் பற்றாக்குறையால் தவிப்போர் ஐநூற்றி ஐம்பது மில்லியன் மக்களாவார். இயற்கைச் சீற்றத்தில் சிக்குண்டு இடம் பெயர்ந்துள்ளோர் இருநூறு மில்லியன் மக்களாவார். இவை தவிர அரசியல் அடாவடித் தனத்தால், பொருளாதாரச் சுரண்டலால், சமூகக் குழப்பங்களால், மோதலால், சட்டச் சிக்கலால் வாழ்விழந்து விடுவோர் ஏறத்தாழத் தொள்ளாயிரம் மில்லியன் மக்களாவார். இத்தகைய சிதைவிற்கும் சீர்குலைவிற்கும் கரணியம் என்ன?

மனிதர் அடிகள் வற்புறுத்தியபடி மனச்சாட்சியின் அமைதிக் குரலுக்குச் செவிசாய்க்காது "கொண்டதே கோலம் கண்டதே காட்சி" என்று தமது அரசியல் நடவடிக்கைகளைப் பொருளாதார வாழ்வைச் சமுதாய நடைமுறைகளைத் தான்தோன்றித் தனமாகக் கட்டிக்காக்க முற்படுகின்றனர். முரண்பாடு, மோதல், சீர்கேடுகள் ஆகியவையே இவற்றின் தீயவிளைவுகளாகும்.

## குணம்நாடிக் குற்றமும் நாடுக

வாழ்ந்து வழிகாட்டிய சான்றோர் வடிவமைத்துக்கொடுத்து வாழ்க்கை முறையில் வாழ்வை அமைத்துக்கொண்டால் சிக்கல் ஏதுமில்லை. எனவேதான் வள்ளுவர் 'சிற்றினம் சேராமை'யை வலியுறுத்தியதுடன் 'பெரியாரைத் துணைக் கோடலை'யும் தம் நூலில் விரித்துப் பேசுகின்றார். வாழ்க்கையைத் தவறின்றி,

ஒழுக்கத்துடன் நடப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு ஞானாசிரியர் கிடைத்தல் வேண்டும். பரமகம்சருக்கு விவேகானந்தர் போல், விவேகானந்தருக்கு அன்னை நிவேதிதா போல், அன்னை நிவேதிதாவுக்குப் பாரதி போல், பாரதிக்குப் புரட்சிக் கவிஞர் போல், அடிகளுக்கு வினோபாவைப் போல் மக்களுக்கு நல்ல தலைவர்கள் - வழிகாட்டிகள் கிடைப்பாராகில் வாழ்க்கை குற்றம் குறையிலிருந்து நீங்கித் தெளிவு பெறும்.

மனிதன் முப்பெரும் உண்மைகளைத் தெளிந்து கடைப்பிடித்து வாழ்ந்து வந்தால் அவன் வாழ்க்கை நேராகவும் சீராகவும் அமையும். அம்முப்பெரும் உண்மைகள் யாவை? மனிதன் தனது நிறைவு எதுவென்று தெரிந்திருக்க வேண்டும். அதே சமயத்தில் தனது குறைவு எதுவென்றும் தெரிந்திருக்க வேண்டும். குற்றமும் குணமும் கலந்ததுதான் வாழ்க்கை என்பதை உணர்ந்த வள்ளுவர்,

> *"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
> *மிகைநாடி மிக்க கொளல்"*

(Man is a rare combination of good and evil - Nehru) குற்றத்தைப் படிப்படியாகக் களைந்து நெறிப்படி வாழ்வதே அற வாழ்வாகும். இவ்வாழ்க்கையையே அடிகளும் விழைந்தார்.

## டால்ஸ்டாயின் ஐவகை நெறிகள்

வாழும் மண்ணிலேயே கற்பனையில் பேசப்படும் துறக்க உலகத்தைக் காண ஐந்து நெறிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பார் அருள் ஞானியும் அடிகளுக்கு முன்னோடியாய் வாழ்ந்தவருமான டால்ஸ்டாய் என்னும் பேரறிஞர் ஆவார்...

(1) எவர்மீதும் சினம் கொள்ளக் கூடாது. ஒரு மனிதனுக்குப் புறப்பகையைவிட உட்பகையே பொல்லாததை விரைவில் விளைவித்து விடுகின்றது. எனவேதான் வள்ளுவர்,

> *"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்*
> *தன்னையே கொல்லும் சினம்"*

என்ற குறளை இக்குவலயத்தாருக்கு அருட்கொடையாக வழங்கியுள்ளார். எவரையும் எதற்காகவும் கொலை செய்தல் கூடாது.

வன்முறைகளுள் மிகக்கேடு வாய்ந்தது கொல்லுதலாகும். வள்ளுவர் இதனைத் தம் மனத்திற்கொண்டுதான் 'கொல்லாமை' எனும் அதிகாரத்தைப் படைத்துள்ளார். இவ்வதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்னும் குறள் மனிதர் வாழ்வில் நடைமுறையானால் இம்மண்ணில் போர் ஏது? பூசல் ஏது? அமைதிப் பூங்காவாக இவ்வுலகம் இயங்கும். எவரையும் கடையன், தாழ்வானவன், கீழ்மையானவன் என்று எண்ணுதல் கூடாது. இறைவன் படைத்த படைப்பில் அனைவரும் சமமே என்ற எண்ணம் நமக்குப் புரியவேண்டும். ஒரு மனிதனுக்குச் சிறப்புச் சேர்ப்பது அவன் தோற்றப் பொலிவல்ல. அவனுடைய நல்லொழுக்கமும் பழுதுபடாத பண்பாடுமே அவனுக்குப் பெருமை தர வல்லனவாகும்.

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்ற வள்ளுவத்தில் விளைந்த இம்முத்தான குறள் மனிதன் பிறர் பற்றிக் கொண்டிருக்கும் இகழ்வு மனப்பான்மையை அறவே அகற்றும்.

கணை பார்வைக்கு நல்விருந்தாகும். ஆனால் அது நிகழ்த்துவதோ கொடிய செயலாகும். யாழின் கோடு அல்லுருவ அமைப்பைப் பெற்றதாகும். ஆனால் அதிலிருந்து நாம் பெறுவதோ செவியையும் சிந்தையையும் நிறைக்கும் இன்னோசையாகும். இதனைக் கருத்தில் கொண்ட வள்ளுவர்

"கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கனை
வினைபடு பாலால் கொலை"

என்ற அரும்பாவை இயற்றியுள்ளார்.

(2) பிறன் மனை நோக்காத பேராண்மை பேணல் வேண்டும். பண்டு கையில் கருவியேந்திக் களம் சென்று களிறு எறிதலையே வீரம் என்று மக்கள் கருதினர். வள்ளுவர் காலத்திலேயே வீரத்திற்குப் புதிய விளக்கம் கிடைத்தது. எனவேதான்,

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்ற குறட்பாவும் எழுந்தது. எவராலும் அழிக்க முடியாத பேராற்றல் பெற்றவன் இலங்கை வேந்தன் இராவணன் ஆவான். சிவன் வழங்கிய வில் அவன் கையிலிருந்தது. விண்ணும் மண்ணும் அவனைக் கண்டு அஞ்சின. கடவுள்கள் கூட அஞ்சக்கூடிய பேராற்றலைக் கொண்ட அவன் வீழ்ந்தது பிறன்மனை நோக்கிய பேரிழிவால்தான். மண்ணால் கெட்டவர் கௌரவர் ஆவர். பெண்ணால் கெட்டவன் பெருவேந்தன் இராவணன் ஆவான். எனவேதான் மண்ணாசை, பெண்ணாசை இவற்றைத் துறக்கவேண்டுமென்று அற்றைச் சான்றோர் வலியுறுத்தினர்.

(3) 'கண்ணுக்குக் கண்' என்ற கடுமை கூடாது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டும் ஏசுவின் மனத்திண்மை நமக்கு வேண்டும். நம்மைக் காயப்படுத்தியவர்களையும் மன்னிக்க வேண்டும். அடக்கமாக அதனைப் பொறுக்கவேண்டும்.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்"

என்ற வள்ளுவரின் வாய்மொழி ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மலரவேண்டும். நிறைவுடைமை நம்மைவிட்டு நீங்கக்கூடாது என விரும்பினால் பொறையுடைமையைப் போற்றி ஒழுகவேண்டும். வன்முறைக்கு வன்முறை தீர்வாகாது. நன்முறை தான் வன்முறையைப் போக்கும் மாமருந்தாகும். ("Love begets Love. Hatred begets Hatred") என்பார் அடிகள்.

(4) தன்னைக் கட்டுப்படுத்தும் சபதம் எதுவும் எடுத்துக் கொள்ளக்கூடாது. வேண்டாத ஒன்றில் மனத்தை நிலைநிறுத்தித் தம் போக்கை எப்பொழுதும் சூழலுக்கேற்றவாறு மாற்றிக்கொள்ள வேண்டிய அளவில் மனிதன் நெகிழ்ச்சியுடையவனாக இருத்தல் வேண்டும்.

(5) பகைவரை வெறுக்கவே கூடாது. அவர்களுடன் போரிடுவது கூடாது. அவர்களையும் விரும்ப வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டும்.

"இணர்எரி தோய்வன்ன இன்னா செய்யினும்
புணரின் வெகுளாமை நன்று"

என்ற குறள் நடைமுறையானால் மண்ணிலேயே விண்ணின்பம் பெற முடியும்.

## மனச்சான்றை மதியாத வணிக அரசியல் சூழல்கள்

இன்று மனச்சான்றின் குரலுக்குச் செவி சாய்க்காது மேற்கொள்ளப்படும் அரசியல் ஆதிக்கங்கள், பொருளாதாரச் சுரண்டல்கள், சமுதாயச் சீர்கேடுகள் எத்தனை எத்தனை? உலகமய மாக்கல், தாராளமயமாக்கல் எனும் இனிப்புத் தடவிய நச்சு மாத்திரைகள் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன? அவற்றின் அடி நாடி என்ன? மனச்சான்றை ஓரங்கட்டிவிட்டுப் பொருள் ஈட்டல் என்ற ஒரே மூச்சான தன்னலச் செயல்பாடுகளின் வெளிப்பாடுதானே இன்றைய வளர்ந்த நாடுகளின் வாணிபக்கொள்கை. பன்னாட்டு வணிகர்கள் மனச்சான்றை அடிமை வைத்துவிட்டுப் புதிய புதிய மாயமான கொள்கைகளை உயர்ந்த கோட்பாடுகள் போல் காட்டி உலகை மயக்கி வருவதையே காண்கிறோம். இன்று உலக வல்லரசுகள் மனச்சான்றினை ஒதுக்கிவைத்துவிட்டு மேற்கொள்ளும் அரசியல் சட்டாம்பிள்ளைத் தனங்கள் எத்தனை எத்தனை. ஆப்கானிஸ்தான் சிக்கலாயினும் இசுரேல் சிக்கலாயினும் காசுமீர் சிக்கலாயினும் அவற்றைத் தூண்டிவிட்டுப் பெரும் நெருப்பாக எரிய விட்டுக் கூரையைப் பிடிங்கிக் குளிர் காண்கின்ற கொடுஞ் செயலையே காண்கிறோம். அச்சமின்மை, இன்னா செய்யாமை, துறவுள்ளம், சீரிய இந்தியப் பண்பாட்டுக் கூறுகள் பொதுவாழ்வின் அங்கமாக அமைந்து வழிகாட்ட வேண்டும். வாழ்க்கை நெறியாக நடக்க வேண்டுமெனில் அதற்கு மனச்சான்றே தக்கவாறு வழிகாட்ட முடியும்.

## எளிமையில் ஏற்றம்

கிரேக்க ஞானி சாக்ரடீசு தமக்கென எளிமையான சிறிய வீடு கட்டிக்கொண்டிருந்தார். வழிப்போக்கன் அவரிடம் ஒருவன் தங்கள் தகுதிக்கேற்ப ஏன் பெரிய வீடாகக் கட்டிக்கொள்ளக்கூடாது என்று கேட்டான். வீடு தமக்குப் போதுமானதா என்பதே முதன்மையானது. சிறிய வீட்டிற்கே சீரிய நண்பர்கள் வருவார்கள் என்று

விடையளித்தார் சாக்ரடீசு. அப்படி அவரால் வாழ்ந்திருக்க முடியுமா என்று வினவுவார்க்கு அண்மையில் குடியரசுத் தலைவர் பொறுப்பிலிருந்து சிறப்பாகப் பணியாற்றிப் பணி நிறைவு செய்த மதிப்பிற்குரிய அப்துல்கலாம் வாழ்வே சான்றாகும்.

அடிகள் மூன்று குரங்குப் பொம்மைகளைத் தம்முன் வைத்துக் கொண்டு ஐம்புலன் வாழ்வை நெறிப்படுத்த அவைகளைப் பயன் படுத்தியதை அறிவோம். ஒன்று கண்களைப் பொத்திக்கொண்ட குரங்கு; செவிகளை மூடிக்கொண்ட ஒரு குரங்கு; அடுத்தது வாயை மூடிக்கொண்ட குரங்கு. அக்குரங்குகள் அடிகளுக்கு உணர்த்தியது எது? மனம்போன போக்கில் மனச்சான்றை ஒதுக்கிவைத்துவிட்டு வாழ்வமைத்தால் சிக்கல் ஆகும் என்பதை உணர்த்துவதே அந்தப் பொம்மைக் காட்சியாகும். அவை மெய்ம்மையை உணர்த்தும் மெய்க்காட்சியாகும். இதனைத் திருமூலர்,

> "பார்ப்பான் அகத்தில் பாற்பசு ஐந்துண்டு
> மேய்ப்பாரின்றி வெறித் தோடித் திரிவன
> மேய்ப்பாரும் உண்டாகில் வெறியும் அடங்கினால்
> பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்று பாங்குறப் பகர்கின்றார்.

## அமரநிலை பெற்றிடுவோம்

உலக மக்களின் நன்னெறி வாழ்விற்கு மனச்சான்றின் குரலுக்கு மதிப்பளித்து வாழ்ந்து உலகமக்கள் உள்ளத்தில் இன்றும் காந்தி குடிகொண்டுள்ளார். மனச்சான்றின் குரல் நெறிப்படி வாழ்வாங்கு வாழ்தலாகும் என வலியுறுத்தியதுடன் அவர் வாழ்ந்தும் காட்டினார்.

> "மண்ணுலகின் மீதினிலே எக்காலும்
> அமரரைப் போல் மடிவில் லாமல்
> திண்ணமுற வாழ்ந்திடலாம். அதற்குரிய
> உபாயமிங்கு செப்பக் கேளீர்!
> நண்ணியெல்லாப் பொருளினிலும் உட்பொருளாய்ச்
> செய்கையெலாம் நடத்தும் வீறாய்த்
> திண்ணியநல் லறிவொளியாய்த் திகழுமொரு
> பரம்பொருளை அகத்தில் சேர்த்து,

'செய்கையெலாம் அதன் செய்கை, நினைவெல்லாம்
அதன் நினைவு, தெய்வமே நாம்
உய்கையுற நாமாகி நமக்குள்ளே
யொளிர்வ' தென உறுதி கொண்டு,
பொய், கயமை, சினம், சோம்பர், கவலை, மயல்,
வீண் விருப்பம், புழுக்கம், அச்சம்,
ஐயமெனும் பேயையெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி
எப்போதும் ஆனந்தச்சுடர் நிலையில்
வாழ்ந்துயிர்கட் கினிது செய்வோர்,
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை
பெற்றிடுவார்"

என்ற முண்டாசுக் கவிஞனின் திருப்பாடலும்,

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

"உள்ளத்தான் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற குட்பாக்களும் ஒவ்வொருவரின் மனச்சான்றிலும் ஒலி எழுப்புமாறு செய்திடுக. வெற்றி பெற்றால் மனச்சான்று கலந்த மகிழ்ச்சி இம்மண்ணை நிறைவிக்கும்.

# 6. மனிதநேயமற்ற அறிவியல்

## அறிவியலின் ஆதிக்கம்

அடிகள் ஏழு சமுதாயப் பாவங்களென்று சிலவகைப் பாவங்களை வரையறை செய்திருக்கிறார். அத்தகைய பாவங்களுள் ஒன்றாக மனிதநேயமற்ற அறிவியல் என்பதையும் சேர்த்திருந்தார். அடிகள் சமயம் பற்றிய சிந்தனைகளிலும் செய்முறைகளிலும் ஊறித் திளைத்தவர். எனவே பாவம், புண்ணியம் பற்றிய கோட்பாடுகளில் அவருக்கு நம்பிக்கை இருந்ததில் வியப்பில்லை. ஆனால் அத்தகைய பாவங்கள் குறித்த அவரது புதிய கண்ணோட்டம் நமக்கும் நமது சமுதாய வாழ்வுக்கும் என்றைக்கும் வழிகாட்டுவதாகும்.

கடந்த நானூறு ஆண்டுகள் 'அறிவியல் ஆண்டுகள்' என்றே சொல்லலாம். இன்று அறிவியல் என்பது புதிய சமயமாக உருவெடுத்துள்ளது. அறிவியல் கருத்துக்களின் தாக்கமில்லாத தனி மனிதனோ சமூகமுமோ இல்லை என்கிற அளவு அறிவியலின் ஆதிக்கம் வளர்ந்துள்ளது. இன்றைய நிலையில் அறிவியலின் தொடர்பில்லாமல் எதையும் செய்யமுடியாது என்ற நிலை தோன்றியுள்ளது. சமயவாதிகள்கூடத் தங்களது சமயக் கருத்துக்கள் எவ்வாறு அறிவியலின்பால் பட்டதை இங்கு விளக்கமாகக் கூறுகிற நிலை வந்துவிட்டது. ஒருகாலத்தில் அறிவியல் வாதிகளுக்கும் அவர்களது கருத்துக்களுக்கும் சமயவாதிகளின் ஒப்புதல் தேவைப் பட்ட நிலை குறிப்பாக ஐரோப்பாவில் இருந்தது. நம் நாட்டுப் பாரம்பரிய முறைகளான 'யோகா', 'தியானம்' போன்றவைகூட இன்று புதுப்பிக்கப்பட்ட அறிவியலாகத்தான் உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றன.

இற்றைநாள் உலகம் அறிவியல் உலகமாகும். கல்வி உலகம் அறிவியல் வரவை ஏற்றிப் போற்றுகின்றது. அறிவியல் கலவாத கல்வி ஆளுமைக் கல்வியாக அமையமுடியாது. மண்ணில் உள்ளோர் அறிவியலின் அற்புதப் படைப்புக்களைப் பெற்று

மகிழ்வதோடல்லாமல் விண்ணிலும் வியத்தகு சாதனைகளை நிகழ்த்தும் அளவுக்கு வளர்ந்தோங்கியுள்ளது. அண்மையில் அமெரிக்காவில் வாழ்ந்தாலும் இந்திய நாட்டிற்குச் சொந்தமான வீரமகள் சுனிதா வில்லியம்சு விண்ணில் சாதனை நிகழ்த்தி வெற்றியுடன் மண்ணிற்குத் திரும்பியதை உலகமே பாராட்டியது. "உலகெங்கிலும் பரவிக்கிடந்த மனித இனம் கற்காலம் தொட்டு, உலகப் பொருள்கள் பற்றிய உண்மைகளைத் தேட முற்பட்டு, அவற்றைப் பற்றிய அறிவை வளர்த்துவரத் தலைப்பட்டது. உலகம் என்பதில் வானம், விண்மீன்கள் மற்றும் அண்டசராசரம் யாவும் அடங்கும். அந்த உலகப் பொருள்கள் உள்ளடங்கிய அண்ட சராசரத்தின் உண்மைகளின் தொகுப்பே அறிவியலாக மலர்ந்தது." (ஆ.ஞானம்)

தொழிற்புரட்சிக்குப் பின் தொழில் நுட்பங்கள் அறிவியலின் வளர்ச்சியின் அடிப்படையில் பலவாறாக வளர்ந்தன. கி.பி.1800 இலிருந்து இன்று வரை அறிவியல் ஒரு பெரும் இயக்கமாகப் பெரும் மூலதனத்துடன் அரசு மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியாக வளர்ந்துள்ளது. அறிவியல் முன்னேற்றத்தில் தமிழ்நாடு விரைவில் தலைநிமிரும்.

## ஆக்க அறிவியல்

நிலவில் முதன்முதலில் மனிதன் காலடி எடுத்துவைத்த நாள் 1969 சூலை 21 ஆகும். அந்நாளில் உலகமே மகிழ்வுடன் இருந்தது. அதனைத் தம் கவிதை வரிகளில்,

> "ஜூலை இருபத்தொன்று!
> சோதிப் பெருக்கெடுத்த
> காலைக் கதிரில்
> கனகமணி சிதறியதாம்
> தன் வயிற்றுப் பிள்ளையைப் போய்த்
> தழுவும் கதை கேட்டு
> அன்னைப் பசுங்கடலும்
> ஆடிக் குதித்ததுவாம்"

என்று பாராட்டிச் சிற்பி மகிழ்கின்றார். சந்திரனில் கால்வைத்த மனிதனான 'ஆம்ஸ்ட்ராங்' கிற்குக் 'கை வலுத்த மனிதன்' எனத்

தமிழ்ப் பெயர் தந்து மகிழ்கின்றார். அவரைச் சிற்பி,

> "கை வலுத்த ஒரு மனிதன்
> கால்வைத்த வெற்றியினை
> பொய் வலுத்த இவ்வுலகம்
> போற்றியது"

என்று பாராட்டுகின்றார். கோள் சொல்லிப் பிறர் குற்றம் குறைகளைக் கூறிவந்த மனிதர் இன்று விண்ணின் கோள்நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டனர்.

இந்நூற்றாண்டின் அரிய கண்டுபிடிப்புக்களில் ஒன்று இயந்திர மனிதன் ஆகும். அஃது இல்லையெனில் அறிவியலின் பெரும் பான்மையான இடம் நிரப்பப்படாமல் இருக்கும். இக்கண்டு பிடிப்பால் மனிதன் அரிய, பெரிய சாதனைகளைச் செய்ய முடிகின்றது. அத்தகைய இயந்திர மனிதனின் உருவ அமைப்பைக் கவிஞர் சிற்பியின் கீழ்க்கண்ட வரிகள் காட்டுகின்றன.

> "நீல மின்விளக்கு விழிகள்
> பளிச்சிடப் பளிச்சிட
> உருக்குக் கவச உடுப்பு
> நலுங்காமல் நடந்து
> அலுமினிய விரல்களால்
> காலை வணக்கம் செய்து
> ரசாயன ரப்பர் உதடுகள்
> இறுகமுடிக்
> கட்டளைக்குக்
> காத்திருந்தது
> இயந்திர மனிதன்
> (பூதம்)"

## அழிவைத்தரும் அறிவியல்

### போக்க முடியாப் பேரச்சம்

இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் துறையில் மிகப்பெரிய சாதனை புரிந்த ஐன்ஸ்டீன் தமது கண்டுபிடிப்புக்களால் மனித இனம்

அழிந்துவிடக் கூடுமோ என்ற ஐயப்பாட்டையும் அச்சத்தையும் கொண்டிருந்தார். இரு உலகப்போர்கள் முற்றுப்பெற்று மூன்றாவது உலகப் போர் மூளுமோ என்ற அச்ச உணர்வு அகிலத்தையே ஆட்டிப் படைக்கின்றது. இரு உலகப்போர்கள் விளைவித்துள்ள கேடுகள் இம்மண்ணை விட்டு அகலும்முன் மூன்றாவது உலகப்போர் மூளுமானால் அதன் விளைவாக உள்ள உலகக்கேடுகளைக் கற்பனை செய்தும் பார்க்கமுடியாது. எனவேதான் போர் மேகம் சூழ்ந்த உலகைச் சிற்பி தம் கவிதை வரிகளில் காட்டுகின்றார்.

*"யுத்த பேரிகை அதிர்வுகள்!*
*உலவும் அக்கினி ஓடைகள்!*
*நித்தம் விழிகளில் மாகடல்!*
*நெஞ்சில் வஞ்சனைப் பூ மடல்!*

உலகத்தில் அமைதியைக் காண்பது அல்லது அமைதியை நிலை நாட்டுவது என்பதெல்லாம் வெற்றுக்கனவே. அமைதித்தேவதை மண்ணில் காலூன்றவில்லையே என்று அனைவரும் கவலைப் படுகின்றனர். அமைதித் தேவதை தற்போது 'கார்ட்டூன்'களில் மட்டுமே காட்சி தருகின்றாள். போர் வெறியாகிய இலையுதிர்க் காலத்தை உதிர்த்துவிட்டு அமைதியாகிய வசந்தகால வரவை அனைவரும் எதிர்பார்க்கின்றனர். போர்க்கப்பல்கள் மலர்களைச் சுமந்து வரட்டும். நிலவறையில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள இராக்கெட்டுகள் தானியக் களஞ்சியங்களாக மாறட்டும் பீரங்கிகளின் வாய்களில் புறாக்கள் கூடுகட்டட்டும். அடிகள் கருதியவாறு பாகுபாடின்றிச் சமன்பாட்டுடன் மானுடம் எந்நாளில் மலர்கின்றதோ அந்நாளில்தான் போரின் அச்சுறுத்தல் நீங்கி அமைதியின் புன்சிரிப்பு நாட்டில் தவழும்.

*"காற்றுக் குமிழியில் விஷ நிறம் பூசி*
*நீரில் நச்சு ஊசிகள் தூவி*
*விரிகிறது இன்னும்*
*விரிகிறது இன்னும்*
*ராட்சத நாய்க்குடைக்*
*காளான்"*

என்று போரின் அச்சுறுத்தலைக் கவிஞர் சிற்பி சுட்டுகின்றார்.

"இந்த அறிவியல் வளர்ச்சி மனிதகுலத்துக்குப் பேரழிவைத் தந்த அனுபவம் கிரோசிமா, நாகசாகித் தளங்களில் இன்னும் உலராமல் இருக்கிறது. வல்லரசுகள் ஆதிக்கப்போட்டியின் அடிப்படையில் ஏங்கிப் பூமிக்கோளத்தையே நாசமாக்கிவிடும் அபாயத்தை மிகுந்த பதட்டத்துடன் எதிர்நோக்கியுள்ளது மனித குலம். அறிவியல் மனிதகுலத்தின் நன்மைக்காக மட்டுமே பயன் படும் பொழுதுதான் இந்தப் பூமி பிழைக்கும்" (சி.ஆர்.ரவீந்திரன்).

## மனித நேயமற்ற அறிவியல்

விண்ணுலகை நோக்கி மனிதன் பயணித்தாலும் மண்ணுலக மக்கள் கண்ணீர் வற்றாமல் துயரக்கடலில் மூழ்குவதையும் பசியில் அழுவதையும் யாராலும் தாங்கிக்கொள்ள முடியாது. மனிதத் துயரத்தையும் பசியையும் தடுக்க வழியில்லையாயின் புறவழியில் மனிதன் சுற்றுவதால் பயனில்லை. எனவே மனித இனத்தின் துயரம் நீங்கிய உலகம் தான் அவனுடைய உலகம் என்றும் அதனை அமைப்பதுதான் சாதனை என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். இக்கருத்தை மனத்தில் பதித்துக்கொண்ட கவிஞர் மீரா,

> "விண்ணுக்கு மனிதன் விரையட்டும்; அதற்குமுன்
> கண்ணுக்கெதிரில் காணும் கயமையை
> விரட்டி அடித்து வீழ்த்த வரட்டும்
> செயற்கை மழை பெயச் செய்யட்டும்; அதற்கு முன்
> துன்பக் கிணற்றை தூர்க்க வரட்டும்
> அணுவில் தாண்டவம் ஆடட்டும்; அதற்குமுன்
> மனிதனை மனிதனாய் மாற்றவரட்டும்"

என்று பாடுவதன் வாயிலாக மனிதநேயமற்ற அறிவியல் பயன்தராது என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்த்தியுள்ளார்.

## அல்லற்படுத்தும் அணு ஆயுதங்கள்

நவீன அறிவியல் உலகில் வாழும் மனிதனின் போர்க்கருவிகள் அணு ஆயுதங்கள் ஆகும். கற்கால மனிதனின் போர்க்கருவிகள் ஒரு சிலரை மட்டுமே அழிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தன. ஆனால் நவீன மனிதனின் அணு ஆயுதம் ஒரே நொடியில் இலட்சக்கணக்கான

மனிதர்களையும் வளமான இயற்கைச் செல்வங்களையும் அழித்து விடக்கூடியனவாகும். அவனுடையே அறிவியலே அவனை அழிக்கும் ஆற்றலாகும். இதைத் தமது கருத்தில் ஆழமாக அசை போட்ட கவிஞர் சிற்பி, அணு ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்தும் நிலையில் 'நாய்க்குடை'க் கவிதையை வடிவமைத்திருக்கின்றார். இவ் அரக்கத்தன்மை வாய்ந்த நாய்க்குடைக் காளான் காற்றையும் கெடுத்து, நீரையும் பாழாக்கி விடுகின்றது. இதனைச் சிற்பி,

*"விரிகிறது இன்னும்*
*விரிகிறது இன்னும்*
*ராட்சத நாய்க்குடைக்*
*காளான்"*

என்ற வரிகளில் விளக்கம் செய்கிறார். குழந்தைகள் நீலமாய்ப் பிறக்கும்முன், புல் இதழில் நச்சு முத்துக்கள் வியர்க்கும் முன், செல்வப் பசுமடியில் சாவு சுரக்கும்முன், அரும்பு உதடு பிரிக்கும்முன், பச்சை மண்ணாகிய குழந்தையின் முற்றத்தில் கரிக்கோலமிடும் அணுகுண்டைப் பயன்படுத்தி உலக அழிவை உருவாக்க இன்றைய மனித நேயமற்ற அறிவியல் முயல்கின்றது.

மானிடப்பிறப்பு இயற்கை விதிகளின் ஊடே நிகழ்கிறது. ஆனால் அவனுக்குரிய ஆற்றலைக் காட்டிலும் மிகுந்த ஆற்றலுள்ள இயந்திர மனிதனை அவன் படைக்கின்றான். அதற்கு உயிரோ, சதையோ, குருதியோ கிடையாது. அது வெறும் இயந்திரம் தான். அதற்கு உணர்ச்சிகள் இல்லை. நாம் இடுகின்ற கட்டளைகளைத் தயங்காமலும் தளராமலும் செய்துகொண்டே இருக்கும். இவன் அதைப் படைத்துவிட்ட பெருமிதத்தில் மனம் பூரிக்கின்றான். அனைத்தும் அறிவியல் மயமாகிவிட்ட வாழ்க்கைச் சூழலில் வாழும் அறிவியல் மேதையின் குழந்தை கணநேரக் கவனக்குறைவால் தானியங்கிக் கதவுகளுக்கு இடையில் சிக்கி மடிகிறது. அளவில்லாத சோகம் அறிவியல் மேதையைத் துடிதுடிக்க வைக்கின்றது; கண் கலங்கி அழச் செய்கின்றது. இச்சூழலில் தனக்கு மேலும் கட்டளையிடும்படி அவரை இயந்திரமனிதன் வற்புறுத்துகின்றது. அறிவியல் மேதை கூவுகிறான். மனிதன் படைத்த அறிவியல் பொருளை அவனது அழிவிற்கு இங்ஙனம் காரணமாவதைச் சிற்பி கீழ்க்காணும் வரிகளில் காட்டுகின்றார்.

"ம்.... போ.... பிசாசே
அழு.... அழு....
அழு.... போ....
ஓய்ந்து போய்
ஒன்றும் விளங்காமல்
நின்றது அழத்தெரியாத
இயந்திர மனிதன்"

## அறிவியலின் நால்வகைத் தன்மைகள்

இன்றைய அறிவியலை நான்கு தன்மையான கண்ணோட்டத்தில் பார்க்கலாம். அவை:

1. அறிவியல் - ஓர் உண்மை
2. அறிவியல் - ஒரு சாத்தியம்
3. அறிவியல் - ஒரு நம்பிக்கை
4. அறிவியல் - ஒரு சிக்கல்

## 1. அறிவியல் - ஓர் உண்மை

அறிவியலிடம் உண்மைகளை வெளிப்படுத்தும் ஆற்றல் உள்ளது. அதற்கு மூளை மட்டுமே உண்டு; இதயம் இல்லை. அறிவியல் உண்மைகள் அறிவியல் விதிகளாக உருவெடுக்கின்றன. அறிவியல் எப்படி என்ற வினாவை மட்டுமே எழுப்பும். வெறும் விவரங்களைத் தருவதுதான் அறிவியல் என்ற நிலை மனித உணர்ச்சிகளுக்கு வறட்சியை ஏற்படுத்துகிறது. எனவேதான் அறிவியலுடன் ஆன்மீகம் இணையவேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஆன்மீகமற்ற அறிவியல் நொண்டியைப் போன்றது. அறிவியலற்ற சமயம் குருட்டைப் போன்றது என்று ஐன்ஸ்டீன் கூறினார். கடவுள், மனிதன், அறிவியல் இவை மூன்றும் சமபக்க முக்கோணமாகும்.

## 2. அறிவியல் - ஒரு சாத்தியம்

அறிவியலின் சிறப்பான கூறு என்னவென்றால் அது பல கடினமான நிகழ்வுகளைச் சாத்தியமாக்கியுள்ளது என்பதுதான். ஒரு பொழுது பிள்ளைகளின் விளையாட்டுப் பொருளாக இருந்த

நிலவுக்கே சென்று மண் எடுத்து வந்துள்ளது இன்றைய அறிவியல். குறிப்பாக அணு ஆற்றல், விண்வெளி, தகவல் தொடர்பு, உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் நடந்துள்ள புரட்சிகள் மறுக்க முடியாதவை. அணுவைப் பிளக்கவும் அதனால் மிகப்பெரும் ஆற்றலைப் பெறவுமான அறிவியல் மலைக்கவைக்கும் அளவு வளர்ந்துவிட்டது. அணுவை அழிவுச் செயலுக்கே மிகுதியும் பயன்படுத்தி ஆராய்ச்சிகள் நடந்தாலும் ஆக்க வேலைகள் பற்றிய முயற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதும் உண்மையே. இன்று கணினியில் நான்காவது தலைமுறைக் கணினி வந்துவிட்டது. அண்மைக் காலத்தின் அறிவியலின் சிறப்பான வளர்ச்சி மருத்துவத் துறையில் ஆகும்.

## 3. அறிவியல் - ஒரு நம்பிக்கை

தொடர்ந்து நானூறு ஆண்டுகளாக வளர்ந்துவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மனித இனத்தின் நம்பிக்கையும் பெற்றுள்ளது. இனி வரப்போகும் ஆண்டுகளிலும் அறிவியல் மிக விரைவாக வளரும் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது. மருத்துவத் துறையில் மேலும் மேலும் புதிய மருந்துகளும் கருவிகளும் உருவாகும். 'எய்ட்ஸ்' நோய்க்கும் மருந்தும் வரும். மனிதனின் வயது கூடுவதைத் தடுக்க வழிவகைகள் ஏற்படும். ஜீன் தொழில் நுட்பம் பெருமளவில் வளர்ந்து பிறவியிலேயே மேதைகள் உருவாக வழி ஏற்படும். சராசரி ஆயுள் கூடும். செவ்வாய்க் கோளிற்கும் சுற்றுலா சென்றுவர முடியும். புதிய பொருள்களின் கண்டுபிடிப்பால் வாழ்க்கை வசதிகள் மிகும். விண்வெளியில் ஒரு விமானநிலையம் கூட அமையலாம். இப்படி அறிவியல் ஒரு மாபெரும் நம்பிக்கையாக உருவெடுத்துள்ளது.

## 4. அறிவியல் - ஒரு சிக்கல்

குறிக்கோள் அற்றநிலை, தவறான தத்துவம், சுற்றுச்சூழல் சீர்கேடு, ஆயுதப் பெருக்கம், வேலையின்மையும் சுரண்டலும் இவையெல்லாம் இன்றைய மனித நேயமற்ற அறிவியல் உருவாக்கி வரும் கேடுகளாகும். இப்போதுள்ள அறிவியலுக்கு ஓர் இலட்சியம் இல்லாத நிலை உள்ளது. குறியற்ற, நெறியற்ற அறிவியல் வளர்ச்சி என்பது மனிதப் பேரழிவிற்கே இழுத்துச்செல்லும். "யாரும்

இன்றுள்ள மிகச்சிறந்த விஞ்ஞானியும்கூட அறிவியல் நம்மை எங்கே இட்டுச் செல்கிறது என்பதை அறியமாட்டார்கள். நாம் மிக விரைந்து செல்லும் இரயிலில் உள்ளோம். அந்த இரயிலின் வேகம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆனால் 'என்ஜின்' அறையில் ஒரு விஞ்ஞானிகூட இல்லை. அந்த மின்விசைகளோ அரக்கர் கைகளில் இருக்கின்றன. சமுதாயம் பின்னால் உள்ள பெட்டிகளில் அமர்ந்து பின்னோக்கிப் பார்த்தவாறு உள்ளது" என்று இராப் லாப் என்ற அறிஞர் கூறுகின்றார். இன்றைய அறிவியலை நகைச்சுவையாக ஒருவர், "அறிவியல் மனிதனை இயந்திரம்போல் இயங்கச் செய்து விட்டது. இயந்திரத்தை மனிதனைப் போல் இயங்க வைக்கின்றது" என்று அறிவியலை நகைச்சுவையாகக் குறிப்பிடுவார்.

இந்தப் பூமியை நவீன அறிவியல் இயந்திரமாகப் பார்க்கின்றது. மனித நலத்திற்கும் இயற்கைக்கும் இடைவிடாத போராட்டம் நடக்கின்றது; வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபடுகின்றது. அதில் வலிமை உள்ளதே வாழும். அதில் மனித வலிமை உள்ளதே வாழும். போட்டியை வளர்க்கின்ற நவீன அறிவியல் கேட்டினை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதாகும். இயற்கை அன்னையை ஒரு பால் தரும் பசுவாக நம் முன்னோர் பாவித்தனர். நமது மரபுப்படிப் பூமித்தாய் உயிருள்ளவள். ஆனால் நவீன அறிவியல் அப்படி நினைப்பதில்லை. இயற்கையை வெல்லும் அளவிற்கு வெற்றி கிடைக்கும் என்ற கோட்பாடு இங்கே உண்டு. 'எல்லாம் எனக்கு' என்ற எண்ணம் மனிதன் தனக்குப் பின்னால் வாழும் தலைமுறையினருக்கு விட்டுச்செல்லாமல் சுரண்டி விடுகின்ற மனப் போக்கை வளர்த்துவிடும்.

## ஆயுதப் பெருக்கம்

நவீனத் தொழிற்நுட்பத்தின் உடனடி விளைவு மிகுதியான வர்கள் வேலை இழப்பதாகும். அறிவியல் என்பது விவரம் என்ற நிலை மனித இனத்திற்கு நன்மை செய்யாது. அதையும் தாண்டிக் கடவுளை நோக்கி மேலேயும் மனிதனை நோக்கிக் கீழேயும் அறிவியல் வரும்போதுதான் அது முழுமை பெறும்.

விண்வெளி அறிவியல் நம் நாட்டையே பெரும் உயரத்திற்கு எடுத்துச் சென்றது. விண்வெளி ஆராய்ச்சியில் தனது முத்திரையைப் பதித்துள்ளது. அடுத்தடுத்து விடப்படும் செயற்கைக் கோள்கள்,

இராக்கெட்டுகள், விண்வெளி ஓடங்கள் போன்றவை பூமியின் பல்வேறு வகையான வளங்களையும் காலச் சுழற்சியையும் தெளிவாகப் படம்பிடித்து நமக்கு அனுப்புகின்றன. வானமே எல்லை என்று வளர்ந்துவிட்ட விண்வெளி அறிவியல் தகவல் தொடர்புச் சாதனங்களையும் பெருமளவு வளர்த்துவிட்டது. இன்று இந்தியா போன்ற வளரும் நாடுகளிடையே தொலைபேசி, செல்போன்கள், பேக்ஸ், இண்டர்நெட் போன்றவை வேகமாக வளர்ச்சி பெற்று விட்டன. தூரம் என்பது நமக்கும் நம் செல்போனுக்குமுள்ள தூரம் தான் என்ற விளம்பர வரிகள் இந்தப் பூமி ஒரு சிறிய பந்தைப்போல் சுருங்கிவிட்டதைக் குறிக்கின்றது. நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் நோக்கமே ‘வெல்வது’ என்ற வெறிதான். முதன்முதலில் தொழில்நுட்பம் தோன்றியது அழிவிற்கான ஆராய்ச்சியில்தான். சிறு சிறு ஆயுதங்கள் தோன்றி இன்று மிகப்பெரிய அணுகுண்டுகள் வரை தொழில் நுட்பம் ஆயுதப் பெருக்கத்திலேயே கவனம் செய்கிறது. இன்று நாம் இருப்பதுபோல் சுமார் இருபது உலகங்களை அழிக்கவல்ல அணு ஆயுதங்கள் பலநாடுகளின் இருப்பில் உள்ளதாகத் தெரிகின்றது. இந்தியா தன் பல்வேறு சிக்கல்களுக் கிடையேயும் பாதுகாப்புச் செலவாகப் பதினான்கு விழுக்காடு ஒதுக்குகின்றது. (ஏறத்தாழ அறுபத்தையாயிரம் கோடி ரூபாய்). இவ்வாறு எல்லா நாடுகளும் போட்டி போட்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து அழிவைத்தேடி வழிசெய்வதுதான் இன்றைய மனித நேயமற்ற அறிவியல் ஆகும். எனவே நவீன அறிவியல் தொழில் நுட்பமும் ஆயுதப் பெருக்கத்திற்கு வழிசெய்யும் வகையில் அதன் மற்றைய பலன்கள் எல்லாம் நிலை நிற்காது என்பது தெளிவு.

## அறிவியலும் தனிமனிதச் சிக்கல்களும்

தனிமனிதச் சிக்கல்களிலும் அறிவியல் தொழில் நுட்பத்திற்குப் பெரும் பங்குண்டு. அவை (1) நுகர்வு வரி, (2) தனிமையாக்கம், (3) புலனடக்கமின்மை, (4) மதிப்பீடுகளை மாறச் செய்தல், (5) எல்லாமும் தனக்கு மட்டும்தான் என்ற எண்ணம், (6) ஏமாற்றம், விரக்தி, வேகமான வாழ்க்கை முறை.

சுருங்கக் கூறின் ஆன்மாவை இழந்துகொண்டு இருக்கின்ற ஒரு நாகரிகத்தைச் சமைத்திருக்கின்றது இன்றைய அறிவியல் தொழில் நுட்பம்.

## காந்திய மாற்று

இப்போதைய அறிவியல் தொழில்நுட்பம் மூன்றுவிதத்தில் குறைபாடுகள் உடையதாக இருக்கிறது என்று ஆல்வின் டாப்ளர் கூறுகிறார். முதலாவதாக இது பொருளாதாரத்தை மட்டுமே மையமாகக் கொண்டு உள்ளது. இரண்டாவதாகக் குறுகிய நோக்கம் உள்ளது. மூன்றாவதாக எந்த வகையான எதிர்காலம் தங்களுக்கு வேண்டும் என்று கலந்துபேசி அறிவியலால் எதுவும் செய்வதில்லை என்பதால் இந்தியா உண்மைக் குடியரசு ஆகாது. அறிவியல் தொழில் நுட்பம் காந்திய மாற்று முறைகளினால் மட்டுமே தீர்வாகும். காந்தியம் மட்டுமே மானிடத்திற்கு முக்கியத்துவம் தருகின்றது. உலகத்தை ஒருங்கிணைத்துப் பார்க்கின்றது. இலாப நோக்கு இல்லாமல் தொண்டு நோக்கு உறுதி செய்யப்படுகின்றது. அனைவரின் நலனும் அன்பும் உறுதி செய்யப்படுகின்றன. இத்தகைய அறிவியல் மலருவதற்கான சிந்தனைகள் உலகின் பல பகுதிகளில் தோன்ற அறிவியலார் முயற்சி செய்கிறார்கள். ஆனால் அறிவியலால் மட்டுமே இதைச் செய்துவிட முடியாது. அரசியல் வாதிகள், நிர்வாகிகள், இதழ்கள் என்ற பல கோணங்களிலும் நீண்டகாலத் திட்டத்தில் முயற்சி செய்தால் மட்டுமே அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆக்கம் பெறும்; உலகம் அமைதி பெறும். ஆக்கமும் அமைதியும் ஏற்படும் நிலையில் அறிவியலை மனித நேயத்துடன் வளர்க்க முனைவோமாக. மேலை நாட்டு அறிஞர் எஸ்.பிரைட்டு என்பார் இறப்பை வெல்ல எளிய வழிகளாகச் சிலவற்றைக் கூறியுள்ளார். அவை....

1. நேரிய சீரிய எளிய வாழ்வு வாழ்தல்

2. சான்றோரிடமும் இறைவனிடமும் கொடுத்த வாக்குறுதியைத் தவறாது காத்தல்

3. வேண்டாதார் தொடர்பு விலக்கல்

4. யோகம் பயிலுதல்

5. ‘வாழு, வாழவிடு’ என்ற கொள்கையினைக் கடைப்பிடித்தல்

6. தனிமையில் இனிமை காணப் பழகுதல்

7. எல்லா மருந்துகளையும் தவிர்த்தல்

8. இறப்பச்சத்தை இதயத்திலிருந்து களையெடுத்தல்

மேலே கூறியவை மேலை நாட்டுச் சிந்தனை மட்டுமல்ல, மேன்மை புகட்டும் சிந்தனையும் ஆகும். நம் நாட்டு ஆன்றோர்களும் ஐம்பொறி ஆட்சி கொண்டு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிந்துவாழும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் வாழ்வைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். மனச்சான்றை வாழ்வின் அடிப்படை, ஆதார ஆற்றலாகக் கொண்டு ஒழுக வேண்டுமென்பதை அறிவுறுத்தாத அறநூல்களே இல்லை எனலாம். மனச்சான்றின் குரல் நெறிப்படி வாழ்வதுவே வாழ்வாங்கு வாழ்வதாகும் என நம் முன்னோர் வலியுறுத்தி வாழ்ந்து காட்டினர். மனச்சான்றை ஏற்போம். மாசற்ற பெருமகிழ்வுப் பெருவாழ்வைப் பெறுவோம்.

## காந்திய அணுகல் முறை

அறிவியலின் ஆழத்தையும் அர்த்தத்தையும் புரிந்துகொள்ளும் முன்பாக அடிகளின் தத்துவத்தின் ஆழத்தையும் அர்த்தத்தையும் புரிந்துகொண்டால் மட்டுமே இன்றைய சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடியும். அடிகளின் தத்துவச் சிறப்புத்தான் என்ன?

அடிகள் இராம அரசு என்றும் பொற்காலம் என்றும் காலம் காலமாய்க் கனவுகண்ட ஒரு சமுதாயத்தைச் சமைக்க வழி சொன்னார். "சர்வோதயம்" என்பதுதான் அந்தத் தத்துவமாகும். அனைவரின் நலன், அதிலும் குறிப்பாகக் 'கடையவரின் நலன்' அதில் சிறப்பானதாகும். காந்தியடிகளின் குறிக்கோளாக உண்மையும் அதை அடையும் வழியாக அன்பும் இருந்தன என்பது உலகறிந்த செய்தியாகும். அன்பும் உண்மையும் இல்லாத எதுவுமே காந்தியத்திற்கு உகந்ததல்ல என்பதும் எல்லோரும் அறிந்த உண்மையாகும். 'அனைவரின் நலன்' என்ற தொடரில்கூட மனித இனத்தின் நலன் மட்டுமே உள்ளடங்கியுள்ளது. ஆனால் அடிகள் மனிதஇனம் மட்டுமல்ல இயற்கை, தாவரங்கள், விலங்குகள் என அனைத்திலும் அக்கறை கொண்டவர்.

அடிகள் பழமையில் தோய்ந்தவர். புதுமை அவர் உள்ளம் புகாது. அறிவியலை அற்பமாக எண்ணுவார். இவை போன்ற அவதூறுகளை அண்ணலின் மேல் ஏவிவிட்டவர்கள் உண்டு. ஆனால் அடிகளோ, "நாகரிகம் என்பது மானிடரைக் கொல்வதும் பொருட்களை அழிப்பதும் போர்கள் புரிவதும் அன்று. ஒருவரை ஒருவர் மதிப்பதே நாகரிகம் ஆகும்" என்ற சப்பானியப் புத்தமதத் துறவியான ஒருவர் கூறின கருத்துக்களுக்கு முன்னோடியாகச் செயல்பட்டவர். இத்தகைய அறிவியலைத் தான் அடிகள் கனவு கண்டார். இந்த அறிவியலுக்கு மானுடம் மையமாக இருக்கும். 'மானுடம் வென்றதம்மா' என்ற கம்பனின் இலக்கிய வரிகளுக்கு இலக்கணமாக இருக்கும் அறிவியல்தான் காந்தி வலியுறுத்திய அறிவியலாகும்.

# 7. தியாகமற்ற வழிபாடு

## சமயமே சமுதாய அடிப்படையாகும்

எதைப் பெற்றால் எல்லாம் பெற்றதாகுமோ, எதை இழந்தால் எல்லாமே இழந்ததாகுமோ அதுவே ஞானம் என்பது தத்துவ விசாரணையின் தீர்வாகும். அதன் அடிஒற்றி எதைப்பெற்றால் மானுடம் எல்லாம் பெற்றதாகுமோ, எதை இழந்தால் அது அனைத்தையும் இழந்ததாகுமோ அதுவே சமயம் ஆகும். இச்சமயமே சமுதாயச் சிறப்புக்களுக்கும் ஆதாரமாகும். எனவே இதன் செம்மை மிக மிக அடிப்படையானது. எல்லாச் சமயங்களும் மனிதனின் ஆன்ம நாகரிகத்திற்குத் தீர்வாக வந்தவையே. தான் யார், படைப்புலகின் படைப்பாளி யார்? என்ற வினாக்கள் எழுந்து அவற்றிற்கு விடை காணும் முயற்சியில் தக்க அனுபவங்கள் சமயமாயிற்று எனச் சமயத் தோற்றத்திற்கு வரலாறு கூறுகிறார்கள். தத்துவ நுட்பங்களை ஒதுக்கி விட்டு மனிதனின் இணைப்பிற்குச் சமுதாய மலர்ச்சிக்கு, அக்கூட்டு வாழ்விலே ஏற்பட்ட பண்புப் பயிர்களுக்கும் பண்புப் பதிவுகளுக்கும் கரணியமும் காரியமும் ஆனதே சமயம். இதன் அடித்தளமாக அமைவது அன்பாகும். அன்பே வாழ்வு - அன்பே இன்பம் - அன்பே உண்மையான பாதுகாப்பு.

## வாழ்வாங்கு வாழும் வாழ்வு

மனிதனுக்குட்பட்ட படைப்புலகம் இறைவனின் தூய வடிவமாகும். கடல் நீரில் இருந்து கடல் அலைகள் தோன்றிப் பின் கடல் நீரிலேயே கடல் நீராய் முடிகின்றன. அதைப் போல் இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் இறை அம்சமானவன் ஆவான். அவன் உண்மை ஞானம் பெற்றுச் சரியான சாதனைத் தேற்றத்தால் இறை நிலை எய்தலே பிறவி நோக்கமாகும். அதற்கு

மனிதனைத் தன்னலம் துறந்து பொதுநலம் பேணி நிறை வாழ்விற்கு உந்துவது சமயமாகும். அந்த நிறை வாழ்வுதான் வாழ்வாங்கு வாழும் வாழ்வாகும்; விழுமியமாகும்; வேண்டப்படுவதாகும். அதன் வழித்தான் தியாகம். இதனைத் தான் காந்தியடிகள் 'சர்வோதயம்' என்றார்.

## சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பண்பின் தவப்பிழம்புகளாய்த் திகழ்ந்தவர்களே சமயத் தலைவராக விளங்கினர். அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மனித சமுதாயத்தின் அற உணர்வுகளை எழுப்பத் துணை நின்றது. மனித இனமும் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு இடங்களில் தோன்றிய சமயப் பெரியோரைப் பின்பற்றியே படிப்படியாக அந்தந்தச் சமயப் பெரியவர்களின் பேரிலோ அல்லது அப்பெரியோர்கள் உருவாக்கிய பேரிலோ வேறு வேறு பெயர்களில் சமயக் கூட்டங்கள் ஆயின. புதிய புதிய பெயர்களில் சமயங்கள் பிறந்தன. சில மணி நேரத்தில் உலகின் கோடிகளுக்கே நேரடியாகச் சென்று பார்க்க வழிசெய்யும் தற்காலத்து நிறைவான போக்குவரத்து வசதிகளும் உலகின் எந்தக் கோடியையும் நம் அறைக்குள்ளே கொண்டுவந்து நிறுத்தும் செய்தித் தொடர்பு வசதிகளும் இல்லாத காலக் கட்டங்களிலேயே இச்சமயங்கள் தோன்றின. எனவே இவை அந்தந்தப் பகுதிகளுக்கான சமயங்களாகவே நீண்டகாலம் இருந்து வந்தன. நாகரிகச் சமுதாய உறவுகளில் இருந்து துண்டிக்கப்பட்டு அடர்ந்த காடுகளுக்கும் எட்டமுடியாத மலைப்பகுதிகளிலும் வாழ்ந்த மனிதக் கூட்டத்தாரால் பின்பற்றப்பட்ட சமயப் பகுப்புக்களுமிருந்தன. இவை பல நாகரிகச்சமயங்கள் பலவற்றாலும் சிதைக்கப்பட்டு அழித்துத் துடைத்தெறியப்பட்டன. ஆயினும் அவற்றின் தடயங்களாகச் சிறு சிறு சமயக் கூட்டத்தார் இன்றும் உலகின் எல்லாக் கண்டங்களிலும் உள்ளனர். மனித இனத்தை, வேறுபாடுகளை மறந்து அன்பின் அடிப்படையில், ஆன்ம நேயத்தின் அடிப்படையில் இணைக்கத் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களே மனிதரிடத்தில் சச்சரவுகளுக்கும் சண்டைகளுக்கும் இன்னும் பெரியஅளவில் போர்களுக்குக் கூடக் கரணியமாயின. சமயங்கள் ஏற்படுத்திய வடுக்கள், வன்மங்களைக் கண்டபின் சமயங்களே வேண்டாமென்ற கருத்தும் தீவிரமாகத் தொடங்கியது.

## இறைவாழ்வே இறவாச் சமயம்

பேறுகளில் தலையாயது மனிதப் பிறப்பே. பிற உயிர்கட்கு இல்லாத பகுத்தறிவு இவனுக்குள்ளதால் மனிதன் படைப்புலகின் சிகரம் எனப்படுகின்றான். இச்சிறப்பிற்குத் தகுந்தாற்போல் வாழுதல் மனிதனின் குறிக்கோளாகி விடுகிறது. இக்குறிக்கோளை அடைந்தவன் அவனைப் படைத்த இறைவனுக்கு இணையாகி விடுகின்றான் என்பது இந்நாட்டின் கோட்பாடாகும். எனவேதான் வள்ளுவர்,

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்"

என்றார். இறைவாழ்வும் வாழ்வாங்கு வாழ்தலும் ஒன்றே. இக்குறள் உணர்த்தும் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன.

அ) மனிதன் இயல்பாகவே சிறப்புடையவன்.

ஆ) நிறைவாழ்வு அல்லது வாழ்வாங்கு வாழ்தல் அவனைச் சிறப்புடையோன் ஆக்குகின்றது.

இ) இதற்கான தூண்டலும் துடிப்பும் செயலாக்கமும் இயல்பாகவே ஒவ்வொருவரிடத்தும் உள்ளன.

ஈ) என்றாலும் எல்லேர்ரும் இம்மேலான நிலையை அடைந்து விடுவதில்லை. சிலரே சாதனையாளர் ஆகின்றனர்.

உ) சாதனைக்கும் தாழ்விற்கும் அவரவர் முயற்சியின் பாங்கால் தாமே தமக்குக் கரணியம் ஆகின்றனர். இந்த நிறைவாழ்வே வகுப்பதும் வாழவைப்பதும் தான் சமுதாயம்.

### கூடிவாழச் செய்யும் சமுதாயப்புலம்

மனிதன் கூடிவாழப் பிறந்தவன். அவன் எண்ணற்ற திறன்களுக்கும் எல்லையற்ற படைப்பாற்றலுக்கும் சான்றாக உள்ளான் என்றாலும் அவன் திறன்களும் படைப்பாற்றலும் பல்கிப்

பெருக வேண்டுமானால் அவன் கூடிவாழ வேண்டும். சமுதாயப் புலம் அவனுக்கு இன்றியமையாத ஒன்று. தனிமனித நலவாழ்வு என்பது சமூகநல வாழ்வுடன் பிணைக்கப்பட்டுள்ளது. தனி மனிதனின் சமுதாயப்புலம் குடும்பம் என்ற வித்தில் தொடங்கியது. பின் குடும்பங்களின் தொகுப்புக் குடும்பங்களாகிக் குடும்பங்கள் சமூகக் குழுக்களாகி முடிவில் சமுதாயமாக வளர்ந்தோங்கியது. கூறுபட்டுக்கிடக்கும் மனிதக் கூட்டங்களை வேறுபாடு மறந்து இணைத்துப் பிணைக்கும் சூத்திரம் முடிவில் 'ஆன்மநேயம்' என்பதைத் தேர்ந்தான். இதன் அடிப்படை அன்பு, அன்பு முதிர்ந்த அருள், அருள் பழுத்த தியாகம் என்ற பரிணாமத்தில் அவன் பரிணமிக்கத் தொடங்கிவிட்டான். இதன் உடனடித் தாக்கம் 'நான்' என்பது 'நாம்' ஆகியது. 'எனக்கு' என்பது 'நமக்கு' என்றாகியது.

## அடிகளின் சமயவாழ்வு

இதற்குரிய முதல் தகுதி அனைத்து உயிர்களையும் தன்னிலும் தன்னை எல்லா உயிர்களிலும் காணும் மனப்பக்குவம் ஆகும். இது ஏற்பட்டால் எந்த உயிர்க்கும் எச்சமயத்திலும் தீங்குசெய்ய முற்பட மாட்டார்.

காந்தியடிகள் தமது பிறப்பு முதலாகப் பலசமயச் சூழலில் வளர்ந்துள்ளார். பல சமய நல்லிணக்கத்திற்காகவும் இந்து - முகமதிய ஒற்றுமைக்காகவும் உறுதுணையாகவும் அவர் விளங்கினார். 1929க்குப் பின்னர் 'உண்மையே கடவுள்' என்ற நிலைப்பாட்டை அவர் கொண்டிருந்தார். அடிகள் கோயில்களை 'ஆன்மீக மருத்துவ மனைகள்' எனக்குறிப்பிட்டுள்ளார். மேலும் கடவுளைப் பற்றி அவர் கூறியதாவது.

"கடவுள் உண்டு என்பது பற்றி ஐயப்படுவதற்கு இல்லை. நாம் இருப்பது உண்மையானால் நம் பெற்றோர்களும் அவர்களைப் பெற்றவர்களும் உண்மையானால் பிரபஞ்சத்தைப் படைத்த கடவுளும் உண்மை. அவன் இல்லாமல் நாமும் இல்லை. இதனாலேயே உலகத்தில் அனைவரும் ஒரு கடவுளைப் பல பெயர்கள் இட்டு வழிபாடு செய்து வருகின்றனர். ஆண்டவனுக்கு நாமங்கள் ஆயிரம் மட்டுமல்ல. உலகத்தில் எத்தனை உயிர்கள் உள்ளனவோ அத்தனை உயிர்களின் கடவுளின் பெயர்கள் ஆகும்.

தன்னை ஒரு தூசியாக நினைத்துப் பிரார்த்திக்க வேண்டும். அருள் மார்க்கத்தினால் அடக்கம் தானாக வரும். தன்னைத் தூசியாகப் பாவித்துக்கொண்டு பூச்சியமாக ஆகிவிட்டால் தான் ஆண்டவனை நேருக்கு நேர் காணமுடியும். இல்லாவிட்டால் ஆண்டவனை ஒரு போதும் காண இயலாது. எந்தச் சிறந்த கர்மயோகியும் பூசையையும் பக்தி செலுத்துவதையும் விடுவதில்லை. பிறருக்குச் சேவை செய்வதே பூசையாகும்".

ஆண்டவனுக்கு வழிபாடு செய்ய நேரம், காலம் என்று திட்டம் வேண்டியதில்லை. அப்படித் திட்டம் போடவும் முடியாது. அவரவருடைய உள்ளத்தின் இயல்பைப் பொருத்தது. ஒவ்வொரு நாளின் திட்டத்திலும் வழிபாட்டு நேரம் முக்கியமான பகுதியாகும். உள்ளத்தில் உள்ள அழுக்குகள் நீங்குவதற்கு வேண்டிய செயல் முறையாகும்; அடக்கம் தரும் சாதனமாகும். இதுதான் அடிகள் கண்ட சமயமாகும்.

## சமயத் தீமைகள்

### 1. சமயச் சமபாவம் இல்லை

இங்கு உலகெங்கும் காணப்பெறும் சமயத் தீவிரவாதத்திற்கு மூலக் கரணியம் 'என் மதமே உயர்ந்தது' என்ற மனத்திரிபுதான். சமயச் சமபாவத்தை அன்றாட அனுபவமாய், வழிபாடாய்க் கொள்ளாத போது மதவாதக் கேடு சமுதாயக்கேடாக ஆகிவிடுகின்றது. மழைநீர் ஆறுகள் பலவாகி முடிவில் ஒரே கடலை அடைவதுபோல் எத்தெய்வ வழிபாடும் இறைவனின் வழிபாடாகவே ஆகிறது.

> "பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
> புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
> கங்குகரை காணாத கடலே"

என்றார் வள்ளலார். உலகிலுள்ள சமயம் அனைத்தும் இங்கு உண்டு. இங்கு உள்ள சமயங்கள் உலகில் இல்லை என்ற தனிப்புகழுக்குரிய நாடாக நம் நாடு விளங்குகின்றது.

### 2. தீமை விளைவிக்கும் தீரா மதமாற்றம்

சமயத்தின் தேவையை ஐயப்பாட்டிற்கு உட்படுத்துவது

மதமாற்றமும் அதனால் ஏற்படும் சமுதாய மோதல்களும்தான். ஒரு சமயநாடாயினும் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ள மேலை நாடுகள் கணிசமான அளவில் பணஉதவி, பொருளாதார உதவி என்ற சலுகைகளைப் பொழிந்து ஆசிய நாடுகளில் மத மாற்றத்திற்குக் கரணியமாகிக் கொண்டிருக்கின்றன. ஆசிய நாடுகளிலுள்ள வறுமை நிலைமை மதமாற்றத்திற்கு உறுதுணையாக இருக்கின்றது. சாதிப்பாகுபாடுகள், தீண்டாமைக் கொடுமை, வறுமையோடு சேர்ந்து மதமாற்றத்தைச் செழிப்பாக்கி வளர்க்கின்றன. மதமாற்றம் ஏற்படுவதால் குடும்பப் பிளவு, பண்பாட்டுச் சிதைவு அதனால் சமுதாய மோதல்கள் எழுகின்றன. அடிகள் மதமாற்றத்தை அறவே வெறுத்தவர் ஆவார். தமக்குத் தகுந்த அதிகாரம் கிட்டுமேயானால் மதமாற்றக் குழுக்களை வெளியேற்ற ஆணை பிறப்பிக்கப் போவதாகவும் கூறினார்.

## 3. தீண்டத்தகாத தீண்டாமை

இந்து சமயத்தின் பல நிறைகளை மழுங்கடிக்கும் தீமையாகத் தீண்டாமை - சாதிப் பகுப்புக்கள் உள்ளன. இவை எண்ணற்ற சீர்திருத்த முயற்சிகளை எல்லாம் தோற்கடிக்கச் செய்கின்றன. சாதிப் பழக்கங்கள், தீண்டாமை எல்லாம் இடையில் நுழைந்துவிட்ட அல்லது நுழைக்கப்பட்ட நச்சு அமைப்புக்கள் ஆகும். தீண்டாதோர் இறைவனின் மக்கள் என உயர்வு சாற்றி அவர்களை 'அரிசன்' என்று அடிகள் அழைத்தார். நாளிதழின் பெயரையே அப்பெயருக்கு மாற்றினார். தீண்டாதோருக்குத் திறக்காத கோயிலுக்கு அவர் போவதில்லை. தம் துணைவியாருக்கு ஒரு பெண் பிள்ளை இல்லாக் குறையைப் போக்க ஓர் அரிசனக் குழந்தையை அவர் தத்தெடுத்து வளர்த்தார். தம் ஆசிரமத்தில் அரிசன ஊழியர்களைத் தயக்கமின்றி இணைத்துக் கொண்டார். விடுதலை இந்திய அரசு தீண்டாமை தண்டனைக்குரிய குற்றம் எனச் சட்டமாக்கியதற்கு அவரே உணர்வூட்டமாய் இருந்தார்.

## 4. தொண்டே தவம்

இறைவன் எங்கும் எதிலும் எப்போதும் நீக்கமற நிறைந்துள்ளான் என்பதைச் சமயங்கள் ஒரேபான்மைத் தாய்

உரைக்கின்றன. எனவே காணும் உயிர் அனைத்தும் இறைவனின் வடிவமே ஆகும். பிற உயிருக்குச் செய்யும் தொண்டு இறை வணக்கம் ஆகின்றது. எனவே அது இறை வழிபாடு ஆகின்றது. திருமூலர் இறைவன் உறையும் இடங்களை இரண்டு வகைப்படுத்துகிறார்.

அ. படமாடும் கோயில்

ஆ. நடமாடும் கோயில்

இரண்டு இடங்களிலும் வழிபாடு நடைபெறலாம். ஆனால் படமாடும் கோயில்களில் செய்யப்படும் வழிபாட்டுப் பலன் அங்கேயே முடங்கி விடுகின்றது. ஆனால் நடமாடும் கோயில்களான மனிதருக்கும் உயிர்த்தொகுப்பிற்கும் செய்யப்படும் வழிபாடு அவர்களுக்கும் ஆகிப் படமாடும் கோயிலுக்கும் பயனாகின்றது என்கிறார் மூலர். தொண்டின் மேன்மையை இவ்வளவு அழகாகவும் அழுத்தமாகவும் சொல்லும் வரிகள் இதோ.

*"படமாடுங்கோயில் பரமர்க்கொன்று ஈயில்*
*நடுமாடுங் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா*
*நடமாடுங் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்*
*படமாடுங் கோயில் பரமர்க்கும் ஆமே"*

அடிகள் முதலில் தன் வாழ்வின் குறிக்கோள் 'இறைவனை நேருக்கு நேராகக் காணல்' என்றவர் பின்னால் தன் வாழ்வின் குறிக்கோள் 'துயரக் கண்ணீர் ஒவ்வொன்றையும் துடைத்துச் சுகமாக்கலே' என்றார். தியாகமும் தொண்டும் எங்குத் தோன்றிச் செயல்வடிவம் பெற்றாலும் அது இறைப்பணியாகவே, வழிபாடாகவே ஐயமற உணர்ந்தவர்; மற்றவர்க்கும் உணர்த்தினார்.

## பிறர்க்கென வாழும் பெருந்தகையர்

தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர்கள் இருக்கிறார்களா? அப்படி இருக்க முடியுமா? இருந்து இருக்கிறார்கள் - இருக்கின்றார்கள் - இருப்பார்கள். அவர்களால் தான் உலகம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. வரலாறு அத்தகைய விந்தை மனிதர்களைக் காட்டுகின்றது. இறந்த பிறகு புத்தர்

துறக்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். வாயிற்காவலன், தங்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன், தங்களைப் போன்றவர்களின் வருகையால் துறக்கம் பெருமை அடையும், உள்ளே செல்லுங்கள் எனப் புத்தரை வேண்டினார். ஆனால் புத்தரோ உள்ளே நுழையவில்லை. வாயிலுக்கு வெளியே அவர் நின்று விட்டார். "ஏன், வெளியில் நின்று விட்டீர்கள்" என்று வாயிற் காவலன் கேட்கப்புத்தன், "இந்தச் செல்வம் கிடைக்காதா என்று பலர் ஏங்குவது எனக்குத் தெரியும். அந்தத் துறக்கம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அதற்குள்ளே செல்ல என் மனம் இடம் தரவில்லை. மனிதர்களில் பலர் நரகத்திற்குச் செல்ல இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நரகத்தில் துன்பத்தை அனுபவிக்க, நான் துறக்கத்தில் இன்பத்தை அனுபவிப்பதா? என்னால் முடியாது. மனிதர் அனைவரும் துறக்கத்தில் நுழையாத வரை நான் நுழையப் போவதில்லை. கடைசி மனிதன் உள்ளே போன பிறகுதான் நான் உள்ளே போவேன் என்று விடை வழங்கி மனிதனுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும் என்ற பேருண்மையை விளக்கினார்.

இராமானுசர் திருக்கோட்டியூர்க் கோயிலின் கோபுர வாசலுக்குச் சென்றார். அங்கு வருவோர், போவோர் எல்லோரையும் பார்த்துத் "தயவுசெய்து கோயிலுக்கு அருகில் வாருங்கள். நான் உங்களுக்கு விலை மதிப்பற்ற இரத்தினம் ஒன்று தருகிறேன்" என்றார். மக்கள் பெருந்திரளாகக் கூடினர். கோபுர உச்சியில் ஏறி, "உடன் பிறப்புக்களே! நீங்கள் இந்த உலகத்தின் துயரங்களில் இருந்து விடுபட்டு முக்தியைப் பெறவேண்டும் என்று விரும்புகிறேன். அந்த முக்தியைக் கொடுக்கும் மந்திரத்தை உங்களுக்கு அறிவிக்கப் போகிறேன். அதை மூன்று முறை உச்சரியுங்கள்". 'ஓம் நமோ நாராயண' என்ற எட்டெழுத்து மந்திரத்தை அவர் உரக்கக் கூறினார். கூடியிருந்த அனைவரும் அந்த மந்திரத்தை முழங்கினர். திருக்கோட்டியூர் நம்பி அதிர்ச்சியாகி, அடங்காச்சினம் கொண்டார். இராமனுசர் வந்த பொழுது, "கொடியவர்களின் கொடியவனே! தூர விலகிப்போ. என் வார்த்தைகளை மீறித் தகுதியற்றவர்களுக் கெல்லாம் அறிவித்து விட்டாயே. நீ நரகத்திற்குத் தான் போவாய்" என்றார் "பெரியீர்! இந்த மந்திரத்தைக் கேட்ட எவனும் பிறவித் துயரங்களில் இருந்து விடுபட்டுப் பேரின்பத்தை அடைவான் என்று

கூறினீர்கள். பிறவித் துன்பத்தில் சிக்கித் துன்புறும் மனிதர் மீது எனக்கு இரக்கம் பிறந்தது. அவர்களைத் துன்பங்களில் இருந்து மீட்கவே மந்திரத்தை அறிவித்தேன். என்னால் ஆயிரம் ஆயிரம் மனிதர் துன்பச் சூழலில் இருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைவார்கள் என்றால் நான் நரகம் செல்லவும் தயாராக இருக்கிறேன். அந்நரகமே எனக்குச் சொர்க்கமாகும்" என்று இராமானுசர் கூறினார்.

தூய அன்னை தெரசா ஒருநாள் கண்ட கனவில் இறைவன் திருமுன் நிற்கிறார். "தெரசா! உன் பணிகளைப் பாராட்டி அதற்குப் பரிசாகச் சொர்க்கத்தை அளிக்கிறேன். சொர்க்கத்திற்குப் போ" என்றார் இறைவன். "இறைவா! சொர்க்கத்தில் ஏழைகள் உண்டா? நோயாளிகள் உண்டா? எனத் தெரசா கேட்டார். "தெரசா! சொர்க்கம் கலப்பற்ற பேரின்பத்தை அனுபவிக்கும் இடம். அங்கே வறுமைக்கும் நோய்க்கும் இடம் ஏது" என்றான் இறைவன். "அப்படி என்றால் அங்கே எனக்கு வேலை இல்லை. பூமியில் கோடிக் கணக்கான மக்கள் வறுமையிலும் நோயிலும் துடித்துக் கொண்டிருக்க நான் சொர்க்கத்தில் இன்பம் அனுபவிப்பதா? அது என்னால் முடியாது. இரக்கம் பிறக்கவே இடம் இல்லை என்றால் அந்தச் சொர்க்கம் எனக்கு நரகம்" எனப் பதிலளித்தார் தெரசா. நீ என்ன விரும்புகிறாய்?" என்று கேட்டான் இறைவன். "மறுபடியும் பூமிக்கு அனுப்பிவிடு. கல்கத்தாவின் இரண்டு வீதிகளின் ஓரத்தில் சாக்கடை களுக்குப் பக்கத்தில் வறுமையிலும் நோயிலும் வாழும் மக்கள் அனாதையாகக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு என் சேவை தேவை. அந்த இடத்தைப் பார்ப்பவர்கள் நரகம் என்பார்கள். அந்த நரகமே என் சொர்க்கம். ஏனென்றால் பாவப்பட்டவர்களின் துன்பத்தைத் துடைப்பதில் பேரின்பம் காண்கின்றேன்" என்று தெரசா விடை வழங்கினார்.

## கனவில் கடவுளுடன் பேட்டி

ஒரு பெண் கடவுளிடம் கனவில் பேட்டி கண்டாள். "மனிதனிடம் வியப்படையச் செய்வது யாது? குழந்தைப் பருவத்தில் வேகமாய் வளர ஆசைப்படும் மனிதன் உடல்நலத்தை மறந்து செல்வம் பின் ஓடுகிறான். உடல் நலம் மீண்டும் பெறச் செல்வத்தை எல்லாம் செலவழிக்கிறான். நிகழ்காலத்தில் எதிர்காலம் பற்றிய சிந்தனை. எதிர்காலத்தில் நேற்றைய காலத்திற்கான ஏக்கம்.

எதிர்காலம், நிகழ்காலம் இரண்டையும் இழக்கிறான். "ஒரு தாயால் என் குழந்தைக்கு என்ன சொல்லவேண்டும்? கற்றுக்கொடு என்று அப்பெண் இறைவனிடம் வேண்டினாள். அவர்களுக்கு அன்பைக் கொடுத்துக் கற்றுக்கொடுக்கவில்லையானால் அன்பைப்பெற முடியாது. யாருடனும் தன்னையோ அல்லது தன்னுடன் அடுத்த வர்களையோ ஒப்பிட்டுப் பார்க்கவேண்டாம். மன்னிக்கக் கற்றுக் கொடு. அப்பொழுதுதான் பிறரால் மன்னிக்கப்படுவார்" என்று கடவுள்கூற, "வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்று அப்பெண் கேட்க, "நான் எப்பொழுதும் உன்னுடன் இருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள்வாயாக" என்றான் இறைவன்.

## பயன்படுத்தத் தெரியாப் பக்குவமின்மை

ஓர் இளைஞன். அவனிடம் சில வைரக்கற்கள். மதிப்புத் தெரியவில்லை அவனுக்கு. சரி விற்று விலை பெறலாம் என்று முடிவெடுத்தான். துணிவணிகன் மூணு கசம் துணி தருவதாகக் கூறினான். பருப்பு வணிகன் இரண்டு மூடையும் சர்க்கரை வணிகன் மூன்று மூடையும் தருவதாகக் கூறினர். அலுத்துச் சலித்துப்போன அவனைப் பெரியார் ஒருவர் சந்தித்தார். நகைக் கடைக்கு அவர் கை காட்டினார். நகை வணிகர் அவனை ஆரத்தழுவிக் கூத்தாடினார். அதுபோல் நம் கையில் இருப்பதும் வைர வாழ்க்கையே. உள்ளுக்குள் ஒளிவிடும் இறைமைத் தன்மையை அது கொண்டது. சரியான பாதையில் அதைச் செலுத்தாமல் எங்கெங்கோ விலை பேசுகிறோம். ஹோமப் பறவை உயரப் பறக்கும். பறக்கும்போதே அது முட்டை இடும். முட்டை கீழே வரும். பாதிவழியில் முட்டை பொறித்துப் பறவைக் குஞ்சு வெளிவரும். இன்னும் கீழே வரக் கண்கள் திறக்கும். உடனே ஒளியை அடையாளம் கண்டு கொள்ளும். இன்னும் கீழே அது பூமியைப் பார்க்கும். தன் தலையைத் திருப்பி இங்கும் அங்கு அது பறக்கும். மேலே பறக்கும் தாய்ப் பறவையை அறிந்து மேலே பறக்கும். அதைப் போன்று தாயால் இறைமை அடைய எல்லா உயிரும் உயரவேண்டும்.

## ஆசையை அறுமின்

மனிதனால் அடக்க முடியாதது ஆசையாகும். ஒரு சர்ச்சுக்குப் புதிய பாதிரியார் நியமிக்கப்பட்டார். அவர் தன் முதல் பொழிவைத்

தொடங்கினார். "நகர மக்களுக்குத் தேவையான 'பிரிட்ஜ், வாஷிங் மெஷின், நல்ல பார்ட்னர்' அனைத்தையும் இறைவன் தரவேண்டும் என்று வழிபாடு செய்தார். பொழிவு முடிந்தவுடன் ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் புதுப்பாதிரியாரின் பொழிவு எப்படியிருந்தது என்று கேட்க, "அருமையாக இருந்தது. இதற்கு முன்பு இருந்த பாதிரியார் விபரம் இல்லாதவர். 'பார்ட்டனர், பிரிட்ஜ், கார்' போன்றவற்றைக்கூடக் கடவுளிடம் கேட்டுப் பெறமுடியும் என்பதை அறியாமல் 'சொர்க்கம், நரகம், அது, இது' என்று அவர் உளறிக்கொண்டிருப்பார்" என்று கூறினாராம்.

## அன்பே அழியாச் சமயம்

"அன்பு செலுத்துங்கள். காலம் குறைவாக இருக்கிறது என்று தேவாலயச் சுவரில் இருந்த வாசகம் அவளைச் சிந்திக்கவைத்தது. அச்சமயம் அவளைத் திருமணம் முடிக்க உயர்ந்த குடும்பத்தில் இருந்து ஒரு மணமகன் வந்தான். ஆனால், "என் மனத்தில் ஒருவிதை விழுந்திருக்கிறது. அதற்கு விடை கிடைத்த பின்னரே திருமணம்" என்று மறுத்து விட்டார். அதன்பின் ஒரு மருத்துவமனைக்குச் சென்ற அவள் அங்கு நோயாளிகளின் பரிதாப நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். "அன்பு செலுத்து" என்ற வாசகத்துக்கு அர்த்தம் உணர்ந்தாள். உடனே எவ்வித வெறுப்பும் இன்றி நோயாளிகளைத் தொட்டுத் தூக்கித் துடைத்துச் சுத்தம் செய்தாள். நடந்ததைக் கேள்விப்பட்ட அவளது பெற்றோர் கடும்கோபம் அடைந்தனர். "உனக்குத் தொற்றுநோய் வந்துவிடும். ஏன் இப்படி குடும்ப மானம் போகும்படி நடந்து கொள்கிறாய். திருமணம் செய்துகொள்" எனக்கூறி வற்புறுத்தினர். ஆனால் "ஆதரவற்றுத் துணையின்றி நிற்கும் நோயாளிகளுக்கு அன்பு செலத்தி அவர்கள் மனத்தில் இடம்பிடிக்கப் போகிறேன். எனக்கு வழிவிடுங்கள். அன்பு செலுத்தக் காலம் குறைவாகவே இருக்கிறது" என்று பதில் சொல்லிவிட்டு மருத்துவ மனைக்கு ஓடினாள். அவர்தான் 'விளக்கேந்திய சீமாட்டியான பிளாரன்ஸ் நைட்டிங்கேல்' ஆவார்.

## ஏழையின் சிரிப்பில் இறைவன்

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'. எல்லாச் சமயம் சொல்வதும் இதுதான். பக்தன் ஒருவன் இறைவன் இரவு

விருந்திற்குத் தன் வீட்டிற்கு வரவேண்டும் என்று வேண்டினான். இறைவனும் சம்மதித்தான். பக்தன் வீட்டில் விருந்து ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தன. இறைவன் வெகுநேரமாகியும் வரவில்லை. பக்தன் ஆவலுடன் காத்திருக்கும்பொழுது வாசலில் பிச்சைக்காரன் ஒருவனின் ஈனமான குரல் கேட்டது. ஆவேசமான பக்தன், "இறைவன் வரும் நேரத்தில் உன் தொல்லை வேறு. உடனே கிளம்பு" என்று திட்டி அனுப்பினான். ஆனால் அன்று இரவு வீட்டிற்கு இறைவன் வரவே இல்லை. மறுநாள் இறைவனிடம் இதுபற்றிக் கேட்டான். "வாக்குக் கொடுத்தபடி நேற்று நான் வந்தேன். நீதான் விரட்டி விட்டாய்" என்றான். பக்தன் அதிர்ச்சியுடன் பார்க்கும்பொழுது "நான்தான் பிச்சைக்காரனாக வந்தேன். மனிதனுக்குச் செய்யும்தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு" என இறைவன் சொன்னான்.

"என்ன புண்ணியமோ
வாசலில் கை ஏந்தும்
குருடனைக் கடந்து போய்
கோயில் உண்டியலில்
போடும் பணத்தால்" (சத்தியமூர்த்தி)

ஆலய உண்டியல்களை நிரப்புகிறோம். அத்துடன் ஏழைகளின் வயிற்றையும் சற்று நிரப்பலாமே. உதவி செய்யத் தேவை பணம் இல்லை; மனமே. இருப்பதைக் கொடுப்போம் இல்லாதவர்க்கு. இக்கலியுகத்தில் ஏழை வடிவத்தில் தான் இறைவன் வருகிறான். இறைவன்களாகிய ஏழைக்கு நம் மனத்தில் சிவப்புக் கம்பளம் விரிக்கலாமே!

## இற்றைச் சமயநிலை

இற்றைச் சமயம் பற்றிப் பொன்னம்பல அடிகளார் கூறிய கருத்துக்கள் சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும் உரியனவாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வ நிலைக்கு உயர்தல் மனிதப் பிறவியின் நோக்கமாகும். தன்னை நெறிப்படுத்தி, வாழும் உயர்நிலைக்கு முயலத்தான் சமயம் உதவுகின்றது. மனிதன் விலங்குணர்வை அகற்றி மனித உணர்வை

வளர்த்து இறைநிலைக்கு உயர்த்துவது சமயத்தின் பணியாகும். அரசியல் உலகம்தான் அழுக்குப் படர்ந்ததாய் அமைந்துள்ளது எனின் அப்பழுக்கில்லாத ஆன்மீக உலகத்தையும் அழுக்குப் பற்றிப் படர்ந்துள்ளது. இந்தச் சமயம் எங்கே இருக்கின்றது? இன்று வருத்தத்திற்குரிய செய்தியாகும். இன்று சமயம் மக்களுக்கு வேண்டியதை - மக்கள் விரும்புவதைப் பெறச்செய்யும் அலாவுதீன் அற்புதவிளக்கு என்ற மனநிலை வளர்ந்துவிட்டது. அதனால்தான் இன்று ஆண்டவன் பணக்காரன். ஏழை என்று பாகுபடுத்தப்பட்டு விட்டான். திருப்பதி ஆண்டவனும் பழநி முருகனும் உலக வங்கிக்கு நிதியுதவி செய்யலாம். ஆனால் தெருக்கோடியில் இருக்கும் விநாயகரோ நாள் பூசைக்குத் தடுமாறுகின்றார். ஏன்? எந்த ஆண்டவன் பணம் அள்ளித் தருவார் என்ற நம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்கினாரோ அவர் பணக்காரராக மாறி வருகின்றார். இதுதான் இன்றைய சமயநிலை".

## கோயில்களின் இன்றைய நிலை

அடிக்கப்படாமல் மழுங்கிக் கிடக்கும் கோயில் மணி. எண்ணெய் இல்லாமல் தேம்பும் தீபங்கள், கோயிலைச் சுற்றித் தேங்கியுள்ள சாக்கடைகள், அவற்றைக் கண்டுகொள்ளாமல் விழாக்களில் வரும் தேர்கள் எனச் சரியாகப் பராமரிக்கப்படாத நிலையில்தான் மிகுதியான கோயில்கள் உள்ளன.

"பால் காவடி
பன்னீர்க் காவடி
பரவசத்தில் காவடி
ஒரு பதற்றம்
ஆட்டத்தில் ஒரு குழப்பம்
அய்யய்யோ
ஜேப்படி
காவடிக் கூட்டத்தில்
ஜேப்படி" (சிற்பி)

என விழா நேரத்திருடர்களைக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்.

## அதிசயச் சித்தர்கள்

காசின் மேல் குறியாக இருக்கும் சித்தர் கூட்டம், நாவில் வேல் குத்தும் போலிப் பக்தர் கூட்டம், சடைமுடி தரித்துச் சீவன் முக்தர் என்று கூறிக்கொள்ளும் முக்தர் கூட்டம் சமய உலகில் பரவியும் விரவியும் உள்ளனர். இவர்களுள் அதிசயச் சித்தர்கள் நிகழ்த்தும் தவறுகள் அளவில்லாதவை. வீதிக்கு ஓர் அதிசயச் சித்தர் இருப்பாரானால் ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு நாளும் விரல்களை ஒரு கணம் அந்தரத்தில் சுழற்றி வீட்டிற்கு உரியவற்றை எல்லாம் நொடியில் கைப்பிடியில் இவர்கள் படைத்துத் தருவர். அங்ஙனம் நடக்குமாயின் ஆலைகள், தொழிற்காலைகள், மருத்துவ மனைகள், மளிகைக் கடைகள், மருந்துக் கடைகள், அமைச்சரவைகள், அரசாங்கம் அனைத்தையும் இழுத்துமூடி அவற்றுக்குப் பூட்டுப் போடலாம். மேற்சுட்டியவாறு அதிசயச் சித்தர்கள் செய்ய மறுத்து விபூதி, குங்குமம், சாமி சிலை இவற்றை மட்டுமே தருவதாகச் சொன்னால் அவர்களை இன்னும் உயிருடன் உலவ விட்டிருக்கின்ற மனிதனின் கருணை மகத்தானதாகும். அதிசயச் சித்தர்களிடம் மயங்கிக் கிடக்கும் மக்களின் சித்தம் தெளிவாகின்ற வரையில் இத்தகைய பித்தலாட்டங்கள் தொடரும். நாட்டின் சமயம் தனது உயிர்ப்புத் தன்மையை இழந்து போலித் தனத்துடனும் சடங்குத் தன்மையுடனும் கேவலமான நிலையிலும் செயற்படுகின்றது.

## உண்டியல் படும் பாடு

கோயில் உண்டியல் படும்பாடு சொல்லமுடியாதது. கோபுரம் இல்லாத கோயில் இருக்கலாம். ஆனால் உண்டியல் இல்லாத கோயில் இருக்கவே முடியாது. விக்கிரகங்கள் இருக்கும் இடத்தைக் ‘கருப்பக்கிரகம்’ என்று தவறாகக் கூறுகிறார்கள். வசூல் கொண்டு அடிக்கடி கோயில் உண்டியல் ‘கர்ப்பிணி’ ஆவதால் அவ்வுண்டியலே கோயிலின் மெய்யான கருப்பக்கிரகம் ஆகும். இதனால்தான் உண்டியலுக்குப் ‘பிரசவம்’ பார்க்கப்பலருக்கு ஆசை எழுகின்றதாம். சிலர் ‘ஆயுதக்கேசாக’வும் அதனை ஆக்கி விடுகிறார்கள். தெய்வ ‘சந்நிதி’யைவிட உண்டியலின் நிதிக்குத் தான் மதிப்பு மிகுதி. கீழ்வரும் கவிஞர் சிற்பியின் வரிகளில் கோயில் உண்டியல்களின் புலம்பல்கள் நமக்குத் தெளிவாகப் புரிகின்றன.

*"என் வாரிசுகள்*
*என்னை மிஞ்சி விட்டார்கள்*
*நானாவது*
*எங்கும் இருக்கும்*
*ஆண்டவன் பெயரால்*
*வாங்கித் தொலைக்கிறேன்*
*இவர்கள்*
*அன்று இருக்கும்*
*ஆளுபவன் பெயரால்*
*அஞ்சாமல் வாங்குகிறார்கள்*
*அது மட்டுமா?*
*வாங்கியதில் கொஞ்சம்*
*என் வாயிலும் வீசி*
*கடவுளைச் சும்மா*
*கிட என்கிறார்கள்"*

## சமய உலகின் அநாகரிகச் செயல்கள்

கோயிலில் தங்கும் அன்னக்காவடிச் சாமியார்கள் தம் எண்ணத்தை இறைவன் பால் செலுத்துவதில்லை; தியானத்திலும் மூழ்குவதில்லை; ஆனால் ஏந்திழைகள் பற்றிய தியானத்தில் அவர்கள் மூழ்கிக் கிடக்கிறார்கள். கோயிலில் நிகழும் தருமச் செயல்களுக்கெல்லாம் தருமகர்த்தாவாக இருக்க வேண்டியவரே ஒழுக்கக்கேடாகக் கருதப்படுகின்ற அதர்மச் செயல்களுக்கும் அவர்கள் காரணியமாக விளங்குகிறார்கள். கோயில் என்று தெரிவதற்கு நியான் விளக்கு; ஓம் என்று உச்சரிக்கும் எழுத்துக்கள் ஒளிர்கின்றன. அதற்குக் கீழ் உள்ள சத்திரத்தில் கோயில் தருமகர்த்தாவின் காம லீலைகள் நிகழ்கின்றன. கோயிற் சிலைகளே திருடப்பட்டு அயல்நாடுகள் வரை அனுப்பப்படுகின்றன. மக்களின் அறியாமை என்று விலகுகின்றதோ அன்றுதான் சமயத்துறை நன்னெறியில் நடைபோடும். எனவேதான்,

*"கடவுளை வளர்த்தே ஏய்க்கும்*
*கயவரை ஓட்ட வேண்டும்*
*கடவுளின் பெயரைச் சொல்லிக்*
*காசுகள் பெறுகின்றோரை*

*கடவுளின் கோயி லுள்ளே*
*கடுஞ்சிறை யாக்க வேண்டும்*
*கடவுளே தடுத்தா லும்என்*
*கருத்தினைக் கூறவேண்டும்*

என்று உதயை வீரய்யன் சமயத் துறைப் போலிகளை வெளிச்ச மாக்கியுள்ளார்.

## அகற்ற முடியாத ஆணவக் கிழங்கு

விவிலியம் ஒரு கிறித்துவனை அல்ல, குரான் ஓர் இசுலாமியனை அல்ல, கீதை ஓர் இந்துவை அல்ல, மூன்றும் ஒன்று சேர்ந்து ஒரு மனிதனை உருவாக்க வேண்டும். மனிதனின் சிக்கலுக்கு அடிப்படைக் கரணியம் அவனைப் பற்றியுள்ள 'தான்' என்னும் நினைப்பும் முனைப்புமேயாகும். உலகச் சிக்கலுக்கு அடிப்படையாய் அமைவது ஆணவமே. ஆணவத்தை நீக்க வேண்டும் என்று அனைத்துச் சமயங்களும் அறிவுறுத்துகின்றன. சிவபெருமான் சின்முத்திரையுடன் காட்சியளிக்கிறான். அஃதாவது ஆன்மா ஆணவத்தில் இருந்து விடுதலையாகும் பொழுது அது இறைவனுடன் இரண்டற ஐக்கியமாகிறது.

தீப்பெட்டியும் தீக்குச்சியும் இவ்வாறு பேசிக்கொள்கின்றன. தீக்குச்சி தீப்பெட்டியைப் பார்த்து, "நாம் இருவரும் தானே உரசுகிறோம். நான் மட்டும் பற்றி எரியக் காரணம் என்ன?" என்று கேட்க, "அதற்குக் காரணம் உன் மண்டைக் கனம்" என விடை பகர்ந்ததாம். பாதுகாக்கின்றவனையே அழிக்கத் தொடங்கியவனே அழிவான். ஏசு மரித்த சிலுவையைப் பாருங்கள். குறுக்குக் கட்டையை நீக்கிப் பார்த்தால் செங்குத்துமரம் ஆங்கில எழுத்தாகிய 'I' யுடன் ஒத்துப்போகிறது. 'I' என்பதுதான் ஆணவம். அதனை அடித்தற் கோடாகக் குறுக்கு மரத்துண்டு இணைக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் ஏசு இறப்பதற்குமுன் தாங்கள் இன்னதென்று அறியாமல் செய்யும் பிழையை மன்னிக்கவேண்டினாராம்.

நபிகள் நாயகம் நாளும் வழியில் செல்கிற பொழுது மூதாட்டி ஒருத்தி குப்பையை அவர் தலையில் கொட்டி மகிழ்வாளாம். ஒருநாள் குப்பை தன் தலைமீது விழவில்லை எனத் தெரிந்த நபிகள் நாயகம்

அம்மூதாட்டி பற்றிக் கேட்கத் தொடங்கினார். மூதாட்டிக்குக் காய்ச்சல் என்ற செய்தி கேட்ட நபிகள் நாயகம் அம்மூதாட்டியை நேரில் சந்தித்து இன்று தன் தலைமீது குப்பையைக் கொட்டித் தங்களால் மகிழமுடியவில்லை என வருந்தி அவள் விரைவில் நலம்பெறுமாறு இறைவனை வேண்டினாராம். வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி. கதை அல்ல, கற்பனை அல்ல.

அஞ்சல்காரர் ஒருவர் சமயநெறியால் இசுலாமியர் தமக்கு இருக்கின்ற வேலைப்பளுவின் காரணமாக வீடுகளில் சன்னல் வழியாக அஞ்சல்களை வீசி எறிந்து செல்வது அவர் வழக்கம். ஒருநாள் ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். அவர் வழக்கமாகச் செய்வதைச் செய்யாமல் இன்று புதிதாகச் செய்த காரணத்தைக் கேட்டார். "மற்ற நாள் எல்லாம் வந்தது சாதாரண அஞ்சல். ஆனால் இன்று வந்திருப்பதோ இறை அமுதமாகும். இதை எறியலாமா? - கேட்டவர் இசுலாமியர். மரியாதை தருவது இந்துச் சமய நெறியே. இந்தப் பக்குவத்தை அரசியலோ, திரைப்படமோ, இலக்கியமோ தராது. சமயம் மட்டுமே தரும். கோயில்களிலும் மடங்களிலும் குவிந்துள்ள செல்வக் குவியலில் பத்தில் ஒரு பங்கை நாம் பயன் படுத்தினால் நம் நாட்டிற்குரிய உலகக்கடனைத் தீர்த்துவிட முடியும். ஏழை மடங்களை யாரும் பாரார். சொத்தென்றாலே குழப்பத்தில் தொடங்கிக் கொலைச் சதி வரை நீள்கிறது. பணம் கொடுத்தவருக்குப் பத்தடி தூரத்தில் வழிபாடு. கொடாதவருக்கு நூறடி தூரத்தில் வழிபாடு என்ற இடைவெளிப் பாகுபாட்டை இறைவன் உருவாக்க வில்லை. மனிதனே உருவாக்கி இருக்கிறான்.

## நெறியற்ற சமயவெறி

சமயங்கள் துறக்கத்திற்கு வழிகாட்டுகின்றன என்கிறோம். ஆனால் அவையே மண்ணில் நரகங்களை உருவாக்குகின்றன. ஆடைகளை அவிழ்த்து அவிழ்த்துப் பார்த்து யூதர்களைக் கொன்ற நாசிக்குகளைப் போலக் குசரத்தில் அண்மை நிகழ்ச்சி நிகழ்ந்துள்ளது. இதற்கெல்லாம் யார் பொறுப்பு? விடுதலை பெற்ற காலத்தேர்தல் களங்களில் விடுதலை வரலாற்றைச் சொல்லி ஓட்டுக் கேட்டனர். இன்றோ சாதியையும் சமயத்தையும் சொல்லியும் அவற்றைத் தூண்டி விட்டு ஓட்டுக்கேட்கிறோம். சிவில் துறைப் பொறியியல் வல்லுநர் ஒருவரை உலகம் தேடிக்கொண்டிருக்கிறது. அவருடைய நுட்ப

அறிவைப் பயன்படுத்தி வியத்தகு கட்டிடங்களையும் விண்பார்க்கச் செய்யும் நினைவிடங்களையும் கட்டமுடியும். அவர்தான் ஒசாமா பின்லேடன். அவரை ஆக்கப்பாதையில் இருந்து அழிவுப் பாதைக்கு இழுத்துச் சென்றதே அவர் கொண்டிருக்கும் சமய வெறியே. உலகம் அறிந்த இருவர். ஒருவர் அல் உம்மா பாட்சா; இன்னொருவர் அப்துல்கலாம். இருவரும் இசுலாமியத்தைச் சார்ந்தவர்கள். ஒருவரின் இதயத்தில் மதவெறி நுழைந்ததால் வன்முறைக்குப் பலியானார். இன்னொருவரோ 2020க்குள் இந்தியாவை வன்மை நாடாக்கவேண்டும் என்று கூறுகிறார். "உன் மதமா என் மதமா ஆண்டவன் எம்மதம்" என்று கேட்கிறான். சமயம் என்பது வெள்ளை ரோசா. கருப்புக் கண்ணாடி அணிந்து பார்த்தால் அது கருப்பு ரோசா. எனவே சமயங்கள் சரியாகத்தான் இருக்கின்றன.

## அடிகள் காட்டும் சமயத் தீர்வு

காந்தியடிகளுக்கு முன் தோன்றிய சீர்திருத்தவாதிகள் மானுடச் சமுதாயத்தின் குறைகளைக் களைய ஒரு துறைச் சிந்தனையாளர் களாகவே இருந்துவிட்டனர். மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள் சமுதாயக் கோணல்களுக்குப் பொருளியல் அடிப்படையிலேதான் சிந்தித்துத் தீர்வு காண முற்பட்டனர். பொருளாதாரம் என்று வந்து விட்டால் அதில் வருவாய்தான் குறிக்கோள்; வழிமுறைகள் அல்ல. வழிமுறைகளில் நியாய அநியாயச் சிந்தனை பொருளியல் முன்னேற்றத்திற்குத் தேவையற்றது என்பதோடல்லாமல் ஊறுசெய்யக்கூடியது என்றும் கூடப்பேச முடிந்தது. எனவே சமுதாயச் சீர்கேடுகளை அவர்கள் கூறுபோட்டுப் பார்த்துக் குறைபாடுள்ள தீர்வுகளையே கூறிவந்தனர். காந்தியடிகளால் சமுதாயக் கேடுகளுக்கு ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தி உறுதியான, நிரந்தரத் தீர்வுகளைக் கூறமுடிந்தது.

சமுதாயத்தின் தேவை - முதன்மை - அவசியம் நமக்குக் கண்கூடாகத் தெரியாமல் இருக்கலாம், மரத்தின் வேர்களைப் போல. ஆயின் சமயத்தின் ஆதாரமற்ற எந்தச் சீர்திருத்தமும் இயக்கமும் வெற்றி பெறுவதில்லை; சாதனையாக மலர்வதில்லை; மாறாக வேதனையாகின்றது. காந்திய இயக்கங்கள் வலுப்பெற்று ஓங்கியதற்கும் இன்றும் ஏற்புடையதாய் இருப்பதற்கும் அவை சமயப் பண்புகளை ஆதாரமாகக் கொண்டிருப்பதால்தான்.

மனிதனிடையே காணப்படும் நிறை குறைகளைப் பெரிது படுத்தாமல் அவர்களையும் சமத்துவத்துடன் நடத்துவதே மனிதத்துவம் என்பதை எளிதாக ஏற்கும் மனிதர் எங்கும் சமயங்களிடையே காணப்படும் நிறை குறைகளை ஒதுக்கி, நிறை வாழ்வுக்கு வழிகளாக இருக்கும் என்பதால் அனைத்தும் சமமே - உயர்வும் இல்லை தாழ்வும் இல்லை என்பதையும் இயல்பாக ஏற்கவேண்டும். இன்று நடைமுறையில் காணும் சமயங்களின் மோசமான குறைகளை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பல மடங்களும் அவற்றின் நிர்வாகங்களும் சமயத்துக்கே அவமானமாக இருக்கின்றன என்பதில் ஐயமே இல்லை. பல மடங்களுக்குக் கொடுக்கப்படும் பணம் தொண்டின் மூலம் பக்தர்களுக்குத் திரும்பக் கிடைப்பதில்லை. இந்த நிலையை ஒன்று ஒழித்துக்கட்ட வேண்டும் அல்லது சீர்திருத்த வேண்டும் என்ற காந்தியச் சிந்தனை சமய உலகில் நிலவுமானால் தூசு நீங்கிய தூய்மை நிலைமையை சமயங்கள் எய்த வாய்ப்பு உண்டு.

# முடிப்புரை

## விடை தெரியா வினாக்கள்

காட்டுச் செடிகளை விடவும் மிகுதியான கேள்விகள் நமக்குள் மண்டிக் கிடக்கின்றன. இத்தனை ஆண்டாகியும் இன்னும் ஏன் வறுமை இருக்கின்றது? ஏன் இன்னும் பல்லாயிரம் மக்கள் வீடில்லாமல் சாலை ஓரங்களில் வாழ்கின்றார்கள்? எப்படி இவ்வளவு நோய்கள் உருவாகின? குடிநீருக்குக்கூட ஏன் போராட வேண்டியிருக்கின்றது? மனிதனை மனிதன் எதற்காக வஞ்சம் பண்ணுகிறான்? பத்து வயதுச் சிறுவன் கொலை செய்யும் அளவிற்கு வீடுகளில் என்ன நெருக்கடி? ஆண், பெண் உறவில் ஏன் கசப்புக்கள், வன் கொலைகள்? இப்படி ஒவ்வொரு நாளும் செய்தித்தாளை விரித்தவுடன் நீருற்றைப்போல் மனத்தில் கேள்விகள் பொங்கி வழியத் தொடங்கி விடுகின்றன.

ஆனால் இந்தக் கேள்விகளில் எதையும் நாம் பகிர்ந்து கொள்வது கிடையாது. மனத்தில் போட்டு அவற்றைப் பூட்டி விடுகிறோம். கேள்விகளை நமக்குள் புதைத்துக்கொள்வதற்கு ஒரே ஒரு கரணியம்தான் இருக்கின்றது. அது ஓர் ஆளால் என்ன செய்ய முடியும் என்ற ஐயப்பாடாகும். தனிமனித முயற்சிகள் வெற்றி பெறாது. ஓர் ஆளால் எதையும் சாதித்துவிட முடியாது என்ற பொது எண்ணம் நம்மிடையே காலம் காலமாக உள்ளது. ஆனால் இது முழுப்பொய்.

## தனி மனிதச் சாதனை

இங்குள்ள எல்லாச் சாதனைகளும் வளர்ச்சிகளும் ஏதோ ஒரு தனிமனிதனின் ஆசையும் போராட்டமும் உழைப்பும் தந்தவைதான்.

மின்சாரம் கண்டுபிடிப்பதற்கு முன்புவரை அதைப் பற்றிய பேச்சு மிகக் கேலியாக இருந்தது. செல்போன் வருவதற்கு முன்பு அதெல்லாம் எப்படிச் சாத்தியம்? என்று பரிகாரம் செய்தார்கள். ஆனால் ஏதோ ஒரு மனித மனம் தனது விருப்பத்தின் மீது தொடர்ந்து உழைத்து இன்று உலகுக்கே தன் கண்டுபிடிப்பைப் பயன்படுத்தித் தந்திருக்கின்றது.

காந்தியும் ஏசுவும் புத்தனும் தனிமனிதர்கள் தானே. அவர்களால் உலகுக்கு வழிகாட்ட முடிந்திருக்கின்றது. எளிய மக்களின் துயரங்களைப் பங்குபோட்டுக்கொள்ள முடிந்திருக்கின்றது. உலகம் எதிர்பார்ப்பது பேராற்றல் உடையவனை அல்ல; மனிதத் துயரங்களைப் பகிர்ந்து கொள்பவனையே. பாடப்புத்தகங்களில் இவர்களைப் பற்றிப் படிப்பதோடு நம் வேலை முடிந்துவிட்டது என்று விலகிக்கொள்கின்றனர். நமக்குள் உள்ள காந்தியைப் புத்தனை ஏசுவைக் கண்டுகொள்வதில்லை. உலகம் எப்போதுமே பரிகாசத்தையும் கேலியையும் அவமானத்தையும் தான் முன்னோடி மனிதர்களுக்குப் பரிசாகத் தந்திருக்கிறது. ஆனால் அதைப் பற்றிய கவலையின்றித் தனது பாதையில் தொடர்ந்து செல்பவன் வாழும் காலத்திலேயே நாயகனாகின்றான்.

ஓர் ஆளால் என்ன செய்துவிடமுடியும் என்ற கேள்வியைச் சந்திக்கும் போதெல்லாம் ஓர் ஆளால் செய்யமுடியாதது என்ன இருக்கின்றது என்றே தோன்றுகின்றது. ஒரு மனிதன் சந்திரனில் காலடி வைத்திருக்கிறான். இன்னொரு மனிதன் இமயமலையில் ஏறிச் சாதனை புரிந்திருக்கின்றனன். போராளி ஒருவன் கறுப்பின விடுதலைக்காக முன்னின்று போராடி மனித உரிமையை நிலை நாட்டியிருக்கின்றான். அறிவியல் அறிஞர்கள் நோய்களில் இருந்து மனித இனத்தைக் காக்கப்போராடிப் புதிய மருந்துகளைக் கண்டு பிடிக்கின்றார்கள். இப்படிப் பெயர்களைத் தாண்டி மனித விருப்பமும் உழைப்பும் சாதிக்க முடிந்தவை தானே இன்று நாம் காணும் உலகம். தனிமனிதர்களால் முடியாதது எதுவும் இல்லை. ஆனால் தனி மனிதன் தனது செயல்களால் தன்னோடு வாழும் மனிதர்களை ஒன்றிணைக்கவும் கூடிவாழும் மனிதர்கள் மீது அக்கறை கொண்டும் இருந்தால் அவனது செயல்களுக்கு ஆயிரம் கைகள் துணைசெய்யக் காத்திருக்கின்றன.

## திரைப்பட வரலாற்றில் அடிகள்

அடிகள் தான் இப்போது பாலிவுட்டின் புதுக்கதாநாயகன் ஆவார். காந்தியக் கருத்துக்களை மையமாகக் கொண்டு வெளிவந்த 'லகே ரகோ முன்னா பாய்' என்ற படம் பெரும் வசூலைத் தந்தது. அதைத் தொடர்ந்து காந்தியப் புத்தகங்கள், காந்தி படங்கள், காந்தியின் பொன்மொழி வாழ்த்து அட்டைகள் வடஇந்தியா முழுக்கச் சுடச்சுட விற்றுத் தீர்ந்தன. அடுத்துக் 'காந்தி மைஃபாதர்' படம் வெளியாக இருக்கிறது. இதுவரை வெளிவந்திருக்கும் 'காந்தி' குறித்த படங்களான ரிச்சர்டு அட்டன் பரோவின் காந்தி, ஷ்யாம் பெனகலின் 'மேக்கிங் ஆப் காந்தி', நமது கமலின் 'ஹேராம்' போன்ற படங்களெல்லாம் நாட்டுத் தந்தை காந்தியைப் பற்றி மட்டுமே சொல்லிச் சென்றன. ஒரு நாட்டிற்கே தந்தையாக இருந்த காந்தி தன் மகன்களுக்கு எப்படிப்பட்ட தந்தையாக வாழ்ந்தார் என்ற வரலாற்றைச் சொல்ல வருகின்ற படம் தான் 'காந்தி மைஃபாதர்'. இப்படத்தின் இயக்குநர் பெரோஸ் அப்பாஸ் கான். இவர்தான் 'மகாத்மா வெர்சஸ் காந்தி' என்ற புகழ்பெற்ற நாடகத்தை இயக்கியவர் ஆவார். அதே கதைதான் இப்போது காந்தி மைஃபாதர் என்ற திரைப்படமாக உருவாகியிருக்கின்றது.

"அன்புள்ள பாபு! பரிசோதனைகளை மேற்கொள்ளும் உங்கள் ஆய்வகத்தின் ஒரே தவறான விளைவு நான்தான்" - தந்தை காந்திக்கு மகன் ஹாரிலால் எழுதிய கடிதத்தில் கசப்பு வரிகள் இவையாகும். "என் வாழ்க்கையில் என்னால் சரிக்கட்டவே முடியாத இரண்டு நபர்களில் ஒருவர் நண்பர் முகம்மது அலி ஜின்னா, மற்றொருவர் என் மகன் ஹாரிலால்" - காந்தி மனம் வெதும்பிச் சொன்ன வார்த்தைகள் இவை.

காந்திக்கும் ஹாரிலாலுக்கும் இடையிலான உறவு எப்போதும் தகராறாகவே இருந்துவந்தது. காந்திக்கு நேர் எதிர்ப் பண்புகளோடு வளர்ந்தவர் ஹாரிலால். நாட்டையே கட்டுப்படுத்திய காந்தியால் ஹாரிலாலை ஒருபோதும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. குடிப்பழக்கம் மட்டுமின்றித் தன் மனம் போன போக்கில் எல்லாம் நடந்து தனக்குத் தோன்றியதை எல்லாம், யாரைப் பற்றியும் கவலைப்படாமல் செய்தவர் ஹாரிலால். "அவன்

அப்படித்தான். அவனைத் திருத்தவே முடியாது. அவனை நான் கைகழுவிப் பல வருடங்கள் ஆகிவிட்டன" எனக் காந்தியே வெறுத்துக் கூறும் அளவுக்குக் காந்தியின் ஆறாத காயமாகிப் போனவர் ஹரிலால். இப்படி இரண்டு பேரும் மோதிக்கொள்ளும் அளவுக்கு அவர்கள் குடும்பத்தில் அப்படி என்னதான் நடந்தது என்கிற கேள்விக்கு விடையாகத்தான் இந்தப் படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார் பெரோஸ் அப்பாஸ்கான்.

## பிராங்களின் பெருமிதச் சிந்தனை

அறிவியல் மேதை பெஞ்சமின் ஃப்ராங்களினின் வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பார்ப்பவரின் மனத்தில் எழும் மாற்றங்கள் மிகுதியாக இருக்கும். மிக ஏழ்மையான குடும்பத்தில் பதினைந்தாவது குழந்தையாகப் பிறந்தவர் பெஞ்சமின். ஏறக்குறைய மூன்றாண்டுகள் மட்டுமே அவரால் பள்ளிப் படிப்பைப் படிக்க முடிந்தது. இப்படி எல்லா விதங்களிலும் பாதிக்கப்பட்ட அவர் பின்னாளில் மிக அற்புதமான எழுத்தாளராக, நல்ல வெளியீட்டாளராக, மிகச்சிறந்த அறிவியல் மேதையாக, அமெரிக்காவின் விடுதலைப் பிரகடனத்தில் கையெழுத்திட்ட தலைவராக விசுவரூபம் எடுக்க முடிந்தது. இவ்வெற்றியின் சூட்சுமம் என்ன?

தமது இளம் வயதிலேயே மற்றவர்களுக்கு நம்மால் என்ன நல்லது செய்யமுடியும் என்பதில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதற்காக அவர் தமக்குத்தாமே கேள்விகளை எழுப்பிக் கொண்டார்.

நாளும் காலையில் எழுந்ததும் இன்றைக்கு என்னென்ன நல்ல செயல்கள் செய்யமுடியும் என்ற கேள்வியை மனத்திற்குள் அவர் கேட்கத் தொடங்கினார். இரவு படுக்கைக்குச் செல்லும் முன், நான் இன்றைக்கு என்ன என்ன நல்ல செயல்களைச் செய்து முடித்திருக்கிறேன்? என்ற வினாவை அவர் தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார். பெஞ்சமின் ஃப்ராங்ளினைப் பின்பற்ற விரும்புவோர் மூன்று சிந்தனைகளை நம் மனத்தில் எழுப்பிக்கொள்ளவேண்டும்.

1) பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் தமக்குத் தாமே கேட்ட கேள்விகளை நாமும் நாளும் நமக்குள்ளேயே கேட்டிட வேண்டும்.

2) பெஞ்சமின் ஃப்ராங்க்ளினைப் பின்பற்றும்போது நம் அன்றாட வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

3) நாம் என்ன செய்கிறோம் என்பதை நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் சொல்லவேண்டும். அவர்களையும் நம்மைப்போல் பெஞ்சமினின் கேள்விகளைக் கேட்டுச் செயற்படச் செய்திட வேண்டும்.

## சமுதாயப் பாவமா? பாதகமா

அடிகள் அகற்றச் சொன்ன அல்லவை ஏழைச் 'சமுதாயப் பாவங்கள்' என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இவை சமுதாயப் பாவங்கள் அல்ல; சமுதாயப் பாதகங்கள் ஆகும். சில வேளைகளில் அறியாமையால் நிகழ்கின்ற தவறு பாவம் ஆகலாம். அது பாதகம் ஆகாது. ஆனால் அறிந்தே செய்யும் தவறுகள் பாவங்கள் ஆகா. அவை பாதகங்கள் ஆகும்.ஏனென்றால் இவ் அல்லவை ஏழும் அறிந்தே செய்யப்படும் தவறுகளின் விளைவாகும். வள்ளுவர் காலத்தில் இருந்து அருளாளர்கள் அவ்வப்பொழுது தோன்றி அறிவுறுத்தி வந்தாலும் அவ்வறிவுறுத்தலால் எப்பயனும் விளையவில்லை என்பதுதான் வருந்தத்தக்க செய்தியாகும். காந்தியம் இன்றும் பேசப்படும் பொருளாக இருக்கின்றதே தவிர வாழ்க்கை நிலையில் அக்காந்தியம் பின்பற்றப்படுவதில்லை. எனவேதான் கவிஞர் பாலாசி என்பவர்,

> *"என் கைத்தடி*
> *குண்டர்கள் கையில்*
> *என் சிலை*
> *காக்கையின் கழிப்பிடம்*
> *என் கொள்கைகள் காற்று"*

என்று காந்தியம் வாழ்க்கை நடைமுறை ஆகவில்லை என்பதை நயமுடன் சுட்டுகின்றார்.

## அப்பழுக்கற்ற அரசியல் அமைப்போம்

அடிப்படை சரியாக அமைந்தாலன்றி அதன்மேல் எழுப்பப்படும் கட்டிடமும் உறுதியாக நிற்காது. போய்விடும் என்பது அனைவரும் அறிந்த உண்மைதான். அதுபோல் அனைத்து நிர்வாகங்களுக்கும் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற அரசியல் என்னும் அடிப்படை நிர்வாகம் செம்மையாக அமைந்தாலன்றி அதனைச் சார்ந்த நிர்வாக அமைப்புக்களும் சரியாக இயங்காமல் போய்விடும். எனவே அனைத்திற்கும் அடிப்படையாய், ஆதார சுருதியாய் அமைந்துள்ள அரசியல் உலகத்தில் படிந்துள்ள கறைகளைப் போக்குவதில் அக்கறை உடையவராக ஒவ்வொரு குடிமகனும் விளங்கவேண்டும்.

"இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற மனப்போக்கு மாறி நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் மட்டுமில்லாமல் பொதுமக்களும் புத்துணர்வு பெற்று அது செழிக்க அயராது பாடுபடவேண்டும். அரசியல்வாதிகளுக்கு அடிமைப் பட்டவர்களாகிக் கூனிக்குறுகி நிற்பதைவிடக் குற்றம் செய்பவரைத் தட்டிக் கேட்கும் மனத்துணிச்சல் மக்களுக்கு எழவேண்டும். ஊழல் பெருகிவிட்டது என்று வீணாகப் பிதற்றுவதைவிட ஊழல் செய்வதில்லை என்ற மனஉறுதி மக்களிடையே வளரவேண்டும்.

## உழைப்பே உயரிய செல்வம்

உழைப்பின் வழி வராத செல்வத்தை வெறுத்திடும் மனப் பக்குவம் அனைவருக்கும் வாய்க்கவேண்டும். உழைக்கின்றார் ஒரு கோடி எனில் எவ்வழியிலும் உழையாமல் உண்டுவாழ எழுகின்றவர் ஏழு கோடியாவார். உழைப்பு வழிப்படும் செல்வம்தான் நிரந்தரமானது. உடல் உழைப்பற்றவன் நிலத்திற்குப் பொறை ஆவான். உழைக்காமல் செல்வம் ஈட்டுவதைத் தன்மானக் குறைவாகக் கருதவேண்டும். செல்வச் சேர்ப்பில் உழைப்பை முதன்மையாக்க வேண்டும். சோம்பல் வாழ்க்கை சோக வாழ்க்கை யாகும். தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருத்தக் கூலி தரும் என்ற வள்ளுவ வாக்கினை என்றும் நினைத்திடவேண்டும். உழைத்து வாழ்வதையே பெருமையாக எண்ண வேண்டும். வேலை இல்லை, ஊதியம் இல்லை என்பதுபோல் உழைப்பில்லை;

உண்ணும் உரிமையும் இல்லை என்பதனை வாழ்க்கை நெறியாக நாம் வகுத்துக்கொள்ளவேண்டும்.

## நெறிப்பட்ட வணிகம் நிலைத்திட வேண்டும்

நாட்டில் பொருளாதார வசதியை உருவாக்குவதில் வணிகரே பெரும்பங்கு கொள்கின்றனர். அறத்தையே வணிகமாக்குவதில் வல்லமை காட்டிடும் இந்நாளில் வணிகத்தில் அறத்தைப் பேணுதல் என்பது அரிதாகவே உள்ளது. வணிகத்தில் இன்று மிகுதியும் ஊடாடி யுள்ள ஊழல்கள், கள்ளத்தனங்கள், தில்லு முல்லுகள் எல்லாம் நீங்கி, வணிக நேர்மை வளர ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். கூனிக் குறுகச் செய்யும் வணிகக் கலப்படங்கள் இல்லாத நல்லதொரு சூழலை உருவாக்குவதை ஒவ்வொருவரும் கடமையாகக்கொள்ள வேண்டும்.

## ஒழுக்கக் கேடில்லா உயர்கல்வி

இற்றைப் பண்பாட்டுச் சிதைவிற்கெல்லாம் அடிப்படையாய் அமைந்திருப்பது முறையற்ற கல்வி ஆகும். தவறு செய்பவர்களில் படித்தவர்களே மிகுதியானவர்கள் என அறிகின்றபோது நம் வேதனை மிகுதியாக வெளிப்படுகின்றது. புலமைக்கு மட்டு மல்லாமல் மனவலிமைக்கும் துணையாகக் கல்வி அமைதல் வேண்டும். பிறந்த மனிதன் சிறந்து விளங்கக் கல்வி கற்றல் வேண்டும். எப்படிக் கற்கவேண்டும்? கசடக் கற்க வேண்டும். எவற்றைக் கற்க வேண்டும்? கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும். கல்வி கற்கக் கால வரையறை உண்டா? சாகும்வரை கற்கவேண்டும். எதற்குக் கற்க வேண்டும்? கற்றபடி நிற்க ஆற்றலைக் கல்வி தரவேண்டும். கல்வி வெறும் பொருள் ஈட்டுவதற்கு மட்டுமல்ல; பொருள்படி வாழ்தலைக் கல்வி தன் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

## மனச்சான்று பிறழாத மன மகிழ்ச்சி

மகிழ்ச்சியைப் பெறுவதுதான் ஒவ்வொரு உயிரின் ஆர்வமாகும். ஒருவன் மகிழ்ச்சியாக இருக்க முயல்வதில் தவறேதுமில்லை.

ஆனால் நம் மகிழ்ச்சி மற்றவர்களின் துன்பத்திற்கும் துயரத்திற்கும் துணைபோகக் கூடாது. அல்லவை செய்யாமல் நல்லவற்றையே செய்யத்தூண்டும் மனச்சாட்சியை வாழ்க்கையின் வழிகாட்டியாக ஏற்கவேண்டும். மனச்சான்றை மறுக்காத வாழ்வே மாட்சிமைப் பட்ட வாழ்வாகும். மனச்சான்றின் குரலுக்குச் செவி சாய்ப்போரின் தொகை பன்மடங்கு பெருகவேண்டும்.

## மனிதநேயம் மறுக்காத அறிவியல்

உலகத்தையே ஆட்டிப்படைக்க வல்ல இன்றைய அறிவியல் மனித அழிவிற்குத் தான் மிகுதியாகப் பயன்படுகின்றது. மனிதனைச் சிறப்பாக வாழச்செய்வதில்தான் அறிவியல் பெரும்பங்கு ஆற்ற வேண்டியதை அறிவியலார் உணரவேண்டும். எச்சூழலிலும் மனித நேயத்தை மடியச்செய்யாது மனிதஇன மாண்பை வளர்க்குமாறு அறிவியலை இயங்கச் செய்வது அறிவியலாரின் தலையாய கடனாகும்.

அரசியலில் அழுத்தமான கொள்கை குடியேறக் காந்தியம் துணை செய்யட்டும்! உழைப்பை உயரிய செல்வமாகக் கருது வோரிடையே காந்தியம் ஒளி வீசட்டும்! வணிக நேர்மை என்றும் வாழக் காந்தியத்தைப் போற்றட்டும்! பண்பாட்டுக் கல்வி பரவக் காந்தியம் நல்வழி காட்டட்டும்! மனச்சான்றை அழிக்காத மகிழ்ச்சி நிலவக் காந்தியம் உலவட்டும்! மனித நேயம் காக்கும் அறிவியல் காந்தியச் சிந்தனையில் நடைபோடட்டும்! தியாக வழிபாடு நிலைபெறக் காந்தியம் என்றைக்கும் நிலைபெற்றதாக இருக்கட்டும்! அல்லவை அகலட்டும்! நல்லவை நடக்கட்டும்!

# பயன்படுத்தப்பட்ட நூல்கள்


1) ஏழு சமுதாயப் பாவங்கள் - டாக்டர். மா.பா.குருசாமி

2) மகாத்மாவின் மகாவிரதங்கள் - டாக்டர். மா.பா.குருசாமி

3) காந்தியுகம் - டாக்டர். மா.பா.குருசாமி

4) காந்தியச் சிந்தனைகள் - காந்திய! இலக்கியச் சங்க வெளியீடு

5) சர்வோதயம் - டாக்டர். மா.பா.குருசாமி

6) மீராவின் ஊசிகள் - ஆய்வேடு- சிரி.ரெங்கம்மாள்

7) சிற்பியின் கவிதைகளில் சமுதாயப் பார்வை - ஆய்வேடு - அர.கீதா

8) காந்தியர் மூவர் - கவிஞர். மணிமொழி